உ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

நித்தியாநுஸந்தானம்.

முதற் பிரிவு.

திருப்பல்லாண்டு.

இதற்கு

பெரியஜீயர், பெரியவாச்சான் பிள்ளை

முதலானோரருளிச்செய்த வியாக்கியானத்திற் கிணங்க,

பதவுரை, பொழிப்புரை, விசேடவுரையும்,

வித்வான்களான

திருக்குடந்தை, குமாண்டூர், திருமலாசாரியராலும்,

கோலார்,

பிரதிவாதிபயங்கரம், வேங்கடாசாரியராலும்,

பரிசோதித்து

கோலார், ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர்,

மண்டயம், பி. ஸ்ரீநிவாஸய்யங்கார், எம்.ஏ.,

அவர்களால்

சென்னை:

ஸ்ரீநிவாஸ வரதாசாரி அண்டு கம்பெனி

அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1898.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

நித்தியாநுஸந்தாநம்.

𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑍁𑌸𑌂𑌧𑌾𑌨𑌮𑍍.

தனியன்கள்.

1. 𑌶𑍍𑌰𑍀𑌶𑍈𑌲𑍇𑌶𑌦𑌯𑌾𑌪𑌾𑌤𑍍𑌰𑌂
𑌧𑍀𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌗𑍁𑌣𑌾𑌰𑍍𑌣𑌵𑌮𑍍।
𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑍍𑌰𑌵𑌣𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇
𑌰𑌮𑍍𑌯𑌜𑌾𑌮𑌾𑌤𑌰𑌂 𑌮𑍁𑌨𑌿𑌮𑍍॥

1. ஸ்ரீசைலேசதயாபாத்ரம்
தீபக்த்யாதி குணார்ணவம் |
யதீந்த்ரப்ரவணம் வந்தே
ரம்யஜாமாதரம் முனிம் ||

2. 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌦𑌯𑌾𑌪𑌾𑌤𑍍𑌰𑌂
𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌭𑍂𑌷𑌣𑌮𑍍।
𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌨𑌾𑌥𑌾𑌰𑍍𑌯𑌂
𑌵𑌨𑍍𑌦𑍇 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌦𑍇𑌶𑌿𑌕𑌮𑍍॥

2. ராமாநுஜதயாபாத்ரம்
ஞானவைராக்யபூஷணம் |
ஸ்ரீமத்வேங்கடநாதார்யம்
வந்தே வேதாந்த தேசிகம் ||

பொதுத்தனியன்கள்.

ஸ்ரீகூரத்தாழ்வான் அருளிச்செய்தவை.

3. 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑌾𑌥𑌸𑌮𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌂 𑌨𑌾𑌥𑌯𑌾𑌮𑍁𑌨𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌮𑍍।
𑌅𑌸𑍍𑌮𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌗𑍁𑌰𑍁𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾𑌮𑍍॥

3. லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம் |
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தேகுருபரம்பராம் ||

4. 𑌯𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌚𑍍𑌯𑍁𑌤𑌪𑌦𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌯𑍁𑌗𑍍𑌮𑌰𑍁𑌕𑍍𑌮
𑌵𑍍𑌯𑌾𑌮𑍋𑌹𑌤𑌸𑍍𑌤𑌦𑌿𑌤𑌰𑌾𑌣𑌿 𑌤𑍃𑌣𑌾𑌯 𑌮𑍇𑌨𑍇।
𑌅𑌸𑍍𑌮𑌦𑍍𑌗𑍁𑌰𑍋𑌰𑍍𑌭𑌗𑌵𑌤𑍋𑌽𑌸𑍍𑌯 𑌦𑌯𑍈𑌕𑌸𑌿𑌨𑍍𑌧𑍋𑌃
𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌸𑍍𑌯 𑌚𑌰𑌣𑍌 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇॥

4. யோநித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ்ததிதராணி த்ருணாயமேநே |
அஸ்மத்குரோர்பகவதோஸ்ய தயைகஸிந்தோ
ராமாநுஜஸ்யசரணௌசரணம்ப்ரபத்யே ||

ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்தது.

5. [illegible]
[illegible]
[illegible]
[illegible] ||

5. மாதாபிதாயுவதயஸ்தநயா விபூதிஸ்
ஸர்வம்யதேவநியமேநமதந்வயாநாம் |
ஆத்யஸ்யந:குலபதேர்வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம் பிரணமாமி மூர்த்நா ||

பராசரபட்டர் அருளிச்செய்தது.

6. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

6. *பூதம்ஸரஸ்ய மஹதாஹ்வயபட்டநாத
ஸ்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாந் |
பக்தாங்க்ரிரேணு பரகாலயதீந்த்ரமிச்ராந்
ஸ்ரீமத்பராங்குச முநிம்ப்ரணதோஸ்மி நித்யம் ||

---

*"பூதம்ஸரச்ச" என்று பாடாந்தரம்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

நித்தியாநுஸந்தான அவதாரிகை.

ஸ்ரீய:பதியாய் அவாப்த ஸமஸ்தகாமனாய் அகிலமங்கள குண ஸ்வரூபனான ஸர்வேசுவரன் - "यत्र पूर्वे साध्याः सन्ति देवाः [illegible]" என்கிறபடியே நலமந்தமில்லதோர்நாடாகிய பரமபதத்திலே ஆமோதைகார்ணவமான திருமாமணி மண்டபத்திலே உபய விபூதியுந் தொழிலாக வகுப்புண்ட சீரிய சிங்காதனத்திலே நிரவதிக தேஜோரூபமாய் சின்மயமாய் விளங்குகிற கிரீடாதி நூபுராந்தமான திவ்யாபரணதிவ்ய ஸ்ரக்வஸ்த்ர பூஷிதமாய், நிரதிசய சவுந்தரிய, சௌகுமாரிய, லாவண்ய, யவ்வநாதியபரிமித உதார குண கணநிதியான திவ்யமங்கள விக்ரஹ விசிஷ்டனாய், ஸ்ரீ, பூமி, நீளாதேவிகளுடனே வீற்றிருந்து ஸ்ரீவைகுந்தமாநகரிலே திவ்ய போகம்நடவாநிற்கிறது. அச்சேர்த்தியழகைக்கண்டு அநுபவிக்கும் நித்யசூரிகளாலும், அந்தரங்கரான அநந்த முக்த பிருந்தங்களாலும் அநவரதம் பரிசர்யமாண சரணநளினனாய் நிரதிசயாநந்தயுக்தனாய், ஸர்வேசுவரன் அநந்த கருடவிஷ்வக்ஸேன பிரமுகரான நித்யசூரிகளையும் முக்தரையும் ஆநந்திப்பித்துக்கொண்டு போராநிற்க, இவர்களைப்போலவே ஸம்ஸாரிகளும் நம்மையநுபவித்து கைங்கரியமாகிற மஹாஸம்பத்தைப் பெற்று வாழ்கைக்குப் பிராப்தியுண்டாயிருக்க இவர்களிதை யிழந்திருப்பதே! யென்று மிகவும் வியாகுலாந்த:கரணனாய், தயாளுவாய், அகிலாத்மாக்களுக்கும் கரணகளேபரப்பிரதானம் பண்ணியருளினான். அவர்கள்பகவச்சரணஸமாச்ரயணத்துக் குறுப்பாய்க்கொடுத்த சரீரத்தைக்கொண்டு, அவன் நினைவின்படி செய்யாமே, களையெடுக்கக்கொடுத்த கோலைக்கொண்டு கண்ணைக் கிளரிக்கொள்வாரைப்போலே, சப்தாதிவிஷய ப்ராவண்யத்துக்கு உறுப்பாக்கி, கருமபிரவாஹத்தாலே பிறவியென்னும் பெருங்கடலிலேபுக்கு, அநர்த்தப்படுகிறபடியை ஈசுவரன்கண்டு சாஸ்திரப் பிரதானம் பண்ணினான். அதன்படி நடவாதே ஆத்துமாபஹாரத்தைபபண்ணி தீநெறிக்கட்செல்லத் தலைப்பட்டார்கள். அந்த நிலைமையைப்பார்த்து நாமே போய் இவர்களைவாரிப் பிடித்துக்கொண்டு வரவேண்டுமென்று இராம கிருஷ்ணாதி யவதாரமாய் அவதரித்து, ப்படாதனபட்டுத் திருத்தப்பார்த்தவிடத்திலும், "अवजानन्ति मां मूढा मानुषीं तनुमाश्रितम् । परं भावमजानन्तो मम भूतमहेश्वरम् ॥" என்று கண்ணன் ஸ்ரீமத்பகவத் கீதையில் அத். 9, ச்லோ. 11ல், அரு

ளிச்செய்தபடியே அவன் பரமஸ்வரூபத்தையறியாமல் ஸஜாதீய ப்ராதுர்ப்பாவத்தாலே ஆஜ்ஞைபண்ணி அவனைவசத்தில் இட்டவில்லை. அப்பால், மிருகம்பிடிப்பார் தீபகத்தைவிட்டுப் பிடிப்பாரைப்போலே மநுஷ்யஸஜாதியரான ஆழ்வார்களை யிடுவித்து திருத்தியருளவேணுமென்று பார்த்தருளி ஸ்ரீவத்ஸ, கௌஸ்துப, வைஜயந்தீ, வநமாலைகளையும், ஸ்ரீ, பூமி, நீளைகளையும், ஸ்ரீபஞ்சாயுதாழ்வார்களையும், பார்த்து "நீங்கள்போய் லீலாவிபூதியிலே, நாலுவர்ணங்களிலும் அவதரித்து அகிலாதமாக்களையும் உஜ்ஜீவிக்கப்பாருங்கள் என்று நியமித்தருளினன்."

அவர்கள் "கலௌ கலு பவிஷ்யந்தி நாராயணபராயணா:। க்வசித் க்வசிந் மஹாபாகா த்ரமிடேஷு ச பூரிஶ:।" என்றும் தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா பயஸ்விநீ। காவேரீ ச மஹாபாகா ப்ரதீசீ ச மஹாநதீ॥ என்னும்படி இந்நதீதீரங்களின் சமீபத்திலே நாலுவர்ணங்களிலே வந்தவதரித்தனர். ஸர்வேசுரன் ஆழ்வார்களுக்கு மயர்வறமதிநலம் அருளினன். இவ்வாழ்வார்கள் இந்நாவலம்புவியிலுள்ள திருப்பதிகள் நூற்றெட்டிக்கும் எழுந்தருளி அந்தந்ததிவ்விய தேசத்து எம்பெருமான்களைத் திருவடிதொழுது மங்களாசாசனஞ்செய்து வந்தார்கள். 'ரிகாதி நாலுவேதங்களிலும் துவிஜந்மாக்களுக்குமட்டும் அதிகாரம்' என்றிருக்கும் நிர்ப்பந்தமின்றிக்கே, பிள்ளைகளும் பேதைகளுங்கூட எளிதில் அறிந்துகொள்ளும்படி மக்கட்பதையனைத்துக்கும் அதிகாரமான திராவிட வேதரூப திவ்யப்பிரபந்தங்களை ஆழ்வார்கள் பிரகாசிப்பித்தருளினார்கள். அவைகளின் சங்கியை, ஒட்டுப் பாசுரம 4000—எப்படியெனில் :—

1.	பொய்கையாழ்வார்	... ...	பாசுரம் ...	100
2.	பூதத்தாழ்வார்	... ...	,, ...	100
3.	பேயாழ்வார்	... ...	,, ...	100
4.	திருமழிசைப்பிரான்	... ...	,, ...	216
5.	நம்மாழ்வார்	... ...	,, ...	1296
6.	மதுரகவியாழ்வார்*	... ...	,, ...	11
7.	குலசேகராழ்வார்	... ...	,, ...	105
8.	பெரியாழ்வார்	... ...	,, ...	473
9.	ஆண்டாள்	... ...	,, ...	173
10.	தொண்டரடிப்பொடியாழ்வார் ...		,, ...	55
11.	திருப்பாணாழ்வார்	... ...	,, ...	10
12.	திருமங்கையாழ்வார்	... ...	,, ...	1361
			ஆ.	4000

* கிஷ்டாக்கிரமத்தில் இவர் ஆசாரிய கிஷ்டாக்ரகண்ணியர்.

எல்லாப்பாசுரங்களையும் எப்போதும் அநுஸந்திப்பது உசித மாயும் வழக்கமாயிருந்தாலும், இக்காலத்தில் கோயில் முதலான ஸன்னிதிகளில பிரமோத்ஸவங்களில நாலாயிரம ஸேவிப்பதும், திரு ஹூங்களில் திர்த்ததிவஸங்களிலே இந்நாலாயிரம் ஸேவிப்பதும் வழக்கமாயிருக்கிறது. நித்தியப்படி ஸன்னிதிகளிலும் திருவார்ச்சனை வேளைகளிலும் அவசியம் அநுஸந்திக்கவேண்டியதென்று தாற்பரியம்வைத்து பூர்வாசாரியர்கள் இவற்றுள் சில முக்கியமான பிரபந்தங்களைப் பொறுக்கியெடுத்து ஸாரமாய்த்திரட்டி நித்தியாநுசந்தான மென்று பெயரிட்டுவைத்தார்கள்.

1.	திருப்பல்லாண்டு	12
2.	திருப்பள்ளியெழுச்சி	10
3.	திருப்பாவை	30
4.	அமலனாதிபிரான்	10
5.	கண்ணிநுண்சிறுத்தாம்பு	10
6.	கோயில்திருவாய்மொழி	143
7.	இராமாநுசநூற்றந்தாதி	108
		323

அப்பால்

உபதேசரத்தினமாலை	74	இவைகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.
திருவாய்மொழிநூற்றந்தாதி ...	100	
அதிகாரசங்கிரகம்	56	
அடைக்கலபத்து	11	
பிரபந்தசாரம்	18	
பிள்ளை அந்தாதி	20	

இந்நாலாயிரப் பிரபந்தத்தை ஸ்ரீமந்நாதமுநிகள் தம் மருளால் உலகத்தில அனைவரும் முற்காலத்தில யாழிற்சேர்த்து இயலுமிசையுமாக்கிப்பாடுவர்கள். வைஷ்ணவர்கள் இவற்றை திருவார்ச்சனை முதலிய நன்மைகளிலும் மற்றை வேளைகளிலும் அவசியமநுஸந்திக்கத்தக்கதுமன்றி, இவற்றின் பொருள் அறியவேண்டியது ஸ்வரூபமாயும், பரத்துக்கு ஸாக்ஷாத்ஸாதநமாயுமிருப்பதால், இவற்றிற்கு ஒவ்வொரு பாசுரத்திற்கும் பாசுரத்தின் வரிசையாய்ப் பதவுரையும் அதன் கீழ் அந்வயரீதியாய்ப் பொழிப்புரையும் எளிதிற் பொருள்படும்படி யெழுதினுல் உலகத்துக்கு மிக்க உபகாரமாயிருக்குமென்று நினைத்து பூர்வாசாரியர்கள் நிர்வஹித்ததாற்பரியத்தைவிடாமல கூடியமட்டும் அநுஸரித்து எம்முடைய சிற்றறிவு கொண்டு எழுதத்துணிந்தோம்.

பெரியாழ்வார் பிரபாவச்சுருக்கம்.

வேதியர் வாழ்வில்லிபுத்தூரில் பெரியாழ்வார் கலியுகம் 47 வதான குரோதனஹு ஆனிமீ சுக்கிலபக்ஷம் ஏகாதசி ஞாயிற் றுக்கிழமை சுவாதி நக்ஷத்திரத்தில பிராமணோத்தமரான முகுந்தா சாரியர்க்கு பதுமையாரிடத்தில் கருடாம்சராய் அவதரித்தருளி னர். விஷ்ணுவினிடத்தில் இடையறுது பக்திசெய்து வந்தமை யால் இவர்க்கு விஷ்ணுசித்தர் என்று திருநாமமுண்டாயிற்று; பகவத்விஷயத்தில் கிஞ்சித்கரித்து ஸ்வரூபம் நிறம் பெறவேணு மென்று அத்யவஸித்து வடபெருங்கோயிலுடையானுக்கு, நாட்க மழ்பூம் பொழிலான நந்தவனமொன்று செய்தருளி திருமாலைகட் டிசாத்திப் போருகிறகாலத்தில், பாண்டியகுல திலகனுன வல்லப தேவராயன் கூடல் மதுரையில் அரசாளும்போது தேசத்திலுள்ள வித்வாம்ஸரையெல்லாம் திரட்டிவேதாந்த ஸித்தமான பரதத்துவ நிர்ணயம்பண்ண ஆவல்கொண்டு வெகு செல்வத்தை கிழிச்சீரை யில் கிழியாகக்கட்டி, தோரணத்தில் தொடுத்து எங்குமுள்ள கலைஞானிகளை வரவழைத்தான். அந்த சமயத்தில் வில்லிபுத்தூ ரில் நித்தியவாஸஞ்செய்கிற வடபத்ரசாயியான வெம்பெருமான் இந்த பெரியாழ்வாரிடம் ஸ்வப்நத்தில் எழுந்தருளி, " நீர் மதுரைக் குப்போய்ப் பாண்டியன் சபையில் பரதத்துவத்தைப் பிரகாசிப்பித் து அக்கிழியை அறுத்துக்கொண்டு வாரு" மென்று நியமித்தருளி ஞர். அதைக் கேட்டு ஆழ்வாரும் அப்படியே அவ்வரசன் சபைய டைந்து "ஸ்ரீமந்நாராயணனே பராத்பரவஸ்து" வென்றுவேதமுத லிய பிரமாணங்களால் பிரதிபாதித்தருளினர். அரசன் தோரணத் தில் கட்டிவைத்தகிழிப்பொதி இவ்வாழ்வார் திருவடிகளிலே தானே தாழவளைய, அவர் அக்கிழியை யறுத்தருளினர். வேதாந்த விழுப் பொருளை விரித்தருளினரென, பாண்டியராஜன் மிகமெச்சி ஆழ்வா ரை ஆனையின் மேலேறியருளப்பண்ணி திருச்சின்னம்பரிமாறி பிரு துகளைக் கூறிக்கொண்டு நகரிவலம்வரும்போது, அந்த மஹோத்ஸ வத்தைப் பார்க்க ஸர்வேசுவரன் பிராட்டியுடன் திவ்யமங்கள விக் ரஹவிசிஷ்டனுய் பெரிய திருவடிமேல் ஆரூடனுய் அந்திரள் மத் தியில் ஸன்னிஹிதனுனன். நீலமுண்ட மின்னன்ன அவன் திரு மேனியிலுண்டான சவுந்தரிய சவுகுமாரியலாவண்ய யவ்வனுதிக ளைக் கண்ணுர ஆழ்வார் ஸேவித்துப் பரவசராய், இவ்வஸ்து இருள் சேர்ந்த இவ்வையகத்துள் எழுந்தருளத்தக்கதோ! இதனுல் இவ் வஸ்துவுக்கு என்ன தீங்குவருமோ! என்று அன்புபெருகி, அதி சங்கைபண்ணி ஸௌந்தர்யாதிகளுக்கு ஒருதீங்கும் நேரிடாதபடிக்

கு நித்தியமாய்த் தன்டைம செல்லவேணுமே! யென்று கவலைப்பட்டு ஸ்வஸ்வரூபத்தையும் மறந்து "பல்லாண்டு பல்லாண்டு" என்று மங்களாசாஸனம் பண்ணியருளினார். மற்று மங்குள்ளாரையும் மங்களாசாஸன யோக்கியராம்படி அழைத்துக்கொண்டு பதினொரு பாசுரத்தால் மேலே வருகிறபடி திருப்பல்லாண்டு பாடியருளினார். அநந்தரம் ஸ்ரீகிருஷ்ண விருத்தாந்தத்தில் ஆழங்காற்பட்டு அநுபவ ஜநிதப்ரீத்யதிசயத்தாலே, 461 பாசுரமுள்ள திருமொழி யென்ற பிரபந்தத்தையும் அருளிச்செய்தார்; இந்த பெரியாழ்வார் திருமகளாரான ஆண்டாள் ஸ்ரீரங்கநாதனுக்கு மாலையிட்ட நிமித்தம் இவ்வாழ்வாரை ஸ்ரீரங்கநாதனுக்கு ஸாக்ஷாத் மாமனார் என்று சொல்வதுண்டு. ஸ்ரீவில்லிபுத்தூர் மதுரையின் தெற்கு ஏறக்குறைய ஐம்பது மயில் தூரத்திலிருக்கிறது. இவ்வாழ்வார் திருநாமங்கள்.

1. பெரியாழ்வார்.
2. பட்டநாதன்.
3. த்விஜகுலதிலகன்
4. விஷ்ணுசித்தன்.
5. வேதப்பயன் கொள்ளவல்லான்.
6. மெய்ந்நாவன்.
7. புத்தூர்க்கோன்.
8. மறைவாணன்.
9. புதுவைப்பட்டன்.

திருப்பல்லாண்டு.

முகவுரை.

𑌯𑍋 𑌵𑍇𑌦𑌾𑌦𑍌 𑌸𑍍𑌵𑌰𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃। இத்யாதிப்படி வேதத்துக்குப் பிரணவம் எப்படியாதியோ அப்படி மங்களாசாஸனரூபமான இத்திருப்பல்லாண்டானது திராவிடவேதத்துக்கு ஆதியென்று முதலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. பொருள்பற்றி நோக்கும்போது, ஒன்றுமொரு குறைவின்றி ஸர்வநியந்தாவான ஈசுவரனைக்கண்டால், [illegible] என்று நம்முடைய மங்களங்களை அவன்பக்கலிலே பிரார்த்திக்கவேண்டியிருக்க, நாம் அவனுக்கு மங்களங்களை யாசாஸிக்கை அசங்கதமன்றோ? என்றால், பகவத் பரஸாதலபதமானபக்திபரவசராய்க் கொண்டு, பரேமையில் அழுந்தி அவனுடைய ஸர்வரக்ஷகத்வ, சாவசக்தித்வத்தையும் ஸர்வஸம்ருத்தியையும் மறந்து, பகவத்ஸம்ருத்தியே தமக்கு ஸம்ருத்தியாய்ப் பாவித்து அவனை மங்களாசாஸனம் பண்ணுகை சங்கதம்; பகவத்பிரேமம் பிறந்தால்தத்பிராப்திக்கு ஹேதுவாகையொழிய அறிவுகேட்டை யுண்டுபண்ணுமோவென்னில்:—

𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑍋 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌸𑍍𑌤𑌰𑍁𑌣𑍍𑌯𑌶𑍍𑌚 𑌸𑌾𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌤𑌃 𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌾𑌃।
𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌦𑍇𑌵𑌾𑌨𑍍𑌨𑌮𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑍇 𑌯𑌶𑌸𑍍𑌵𑌿𑌨𑌃॥

[இதுக்கர்த்தம்.—அயோத்தியாவாஸி ஜனங்களான, பேதைகளும், கிழவர்களும், இளம் பெண்களும் காலைமாலைகளில் ஏகாக்ரசித்தராய், சக்கரவர்த்தித் திருமகனுடைய மங்களத்தைக் குறித்து தேவர்கள் எல்லாரையும், அநவரதம் சேவிக்கிறார்கள்.] இதுவுமன்றி,

𑌤𑍇 𑌤𑌂 𑌸𑍋𑌮𑌮𑌿𑌵𑍋𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌵𑍈 𑌧𑌰𑍍𑌮𑌚𑌾𑌰𑌿𑌣𑌃।
𑌮𑌙𑍍𑌗𑌳𑌾𑌨𑌿 𑌪𑍍𑌰𑌯𑍁𑌞𑍍𑌜𑌾𑌨𑌾𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑍃𑌹𑍍𑌣𑌨𑍍 𑌦𑍃𑌢𑌵𑍍𑌰𑌤𑌾𑌃॥

[அர்த்தம்.—ஸாதநாநுஷ்டாநம் பண்ணிக்கொண்டிருந்த, தண்டகாரணிய வாஸிகளான ரிஷிகள், பூரணசந்திரனுதயமானாற்போல எழுந்தருளிவந்த சக்கிரவர்த்தித்திருமகனைக்கண்டு அவர் வடிவழகில் துவக்குண்டு, மங்களாசாஸனம் பண்ணிக்கொண்டு அவன் வரவை யுவந்தார்கள்.]

[illegible]
[illegible]

[அர்த்தம்.—வஸுதேவர் " ஸர்வாந்தர்யாமியான ஸ்வாமியே ! நான்கு புஜங்களோடுகூடிய அஸாதாரணவிக்ரகமான, இந்த உமது ஸ்வரூபத்தை, அசுரனை கம்ஸன் அறியாதபடி மறைத்துக்கொள்ளும்] என்றபடியே, அவரவர்கள் தங்கள் அபிமதஸித்தியையும் ஆபந்நிவிருத்தியையும் அவனிடம் பிரார்த்தியாமல் மறந்து அவனை மங்களாசாஸனம் செய்தனர். இது சிஷ்டாசாரம்; இதோர் ஆச்சரியமன்று ஏனெனில்—அற்ப தேஜஸ்ஸுக்களான சந்திராதித்தியர்கள் சன்னிதியிலே அசித்தான பாஷாணங்களே உருகுகின்றனவல்லவா ? அப்படியிருக்க, நிரதிசயாசவுந்தர்யயுக்தனாய், நிரவதிக தேஜோமயனான எம்பெருமானைக்கண்டால், பரம சேதநரான ஆழ்வார் கலங்கச்சொலலவேணுமோ ? ஆகையால் கலிஸாம்ராஜ்யம் பண்ணுகிற வித்தேசத்திலே, இவ்வஸ்துவுக்கு எவ்வழியாய்த் தீங்குவருகிறதோ ! என்று பயப்பட்டுத தத்பரிஹாரார்த்தமாகப் பெரியாழ்வார் திருப்பல்லாண்டு பாடுகிருர். இது பாடுவது உசிதம்.

இவ்வர்த்தத்தை ஸ்ரீமத் பாகவதத்திலும் கண்டுகொள்ளலாம்.

[illegible]

(ஸ்ரீபாக. அ. 2. சுலோ. 39-40.)

இத்திருப்பல்லாண்டில் பிரதிபாதிக்கப்படுகிற வேதாந்த தாற்பரியமாவது—சேஷசேஷிபாவரூபமான ஸம்பந்தரம், சேஷியான ஸர்வேசுவரனுக்கு அதிசயத்தைத் விளைக்குகை, சேஷபூதனுக்கு ஸ்வரூபமாகையாலே, தத்விஷயமாக மங்களாசாஸனம் பண்ணுகை சேதநக்ருத்யம். அந்த சேஷத்வகாஷ்டையாவது—தன்னையழியமாறியேயாகிலும் ஸ்வாமிக்கு ஸம்ருத்தியை ஆசாஸிக்கை. இதில் பாசுரங்கள் 12. அவைகளில் முன்னிரண்டு பாசுரம் மங்களாசாஸனம் பண்ணுதல். 3, 4, 5—இப்பாசுரங்களால் முறையே பகவச் சரணார்த்திகளையும், கேவலரையும், ஐசுவரியார்த்திகளையும் மங்களாசாஸனம் பண்ணுகைக்கு அழைக்கிருர். 6, 7, 8—இப்பாசுரங்களில் ஆஹூதரானவர்கள் இவரோடே சங்கதராகிருர்கள். 9, 10, 11—அவர்களோடே திருப்பல்லாண்டு பாடியருளுகிருர். 12, பலச்ருதி.—இவைகளில் ஒவ்வொரு பாசுரங்களின் அடியில், பாடாந்தரங்களும், அர்த்தாந்தரங்களும், விசேஷார்த்தங்களும், கருத்துக்களும், இலக்கணவிளக்கங்களும் அவசியமானமட்டும் வரையப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

பெரியாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய

திருப்பல்லாண்டு.

தனியன்கள்.[1]

நாதமுனிகள் அருளிச்செய்தது.

(1) குருமுக[2]மநதீத்திய ப்ராஹவேதா ந[3]சேஷாந்
நரபதி பரிக்ல்ப்தம் சுல்கமாதாதுகாம:
ச்வசுர[4]மமரவந்த்யம் ரங்கநாதஸ்யஸாக்ஷாத்
த்விஜகுலதிலகந்தம் [5]விஷ்ணுசித்தம் நமாமி.

(பதவுரை.)

குருமுகம் - குருவின்வழியாய்	சுவசுரம் - மாமனாரான
அநதீத்திய - கற்றுக்கொள்ளாமல்	அமரவந்த்யம் - இமையோர் தொழும்
ப்ராஹ - விரிதது உரைத்தார்	ரங்கநாதஸ்ய - அழகியமணவாளனுடைய
வேதான் அசேஷான் - மறைப்பொருளனைத்தையும்	ஸாக்ஷாத் - நேர்
நரபதிபரிக்ல்ப்தம் - வல்லப தேவராயன் என்ற அரசன் ஏற்படுத்திய	த்விஜகுலதிலகம் - அந்தணரிற் சிறந்தவரான
சுல்கம் - வித்யாசுல்கமான நிதிப்பொதியை	தம்விஷ்ணுசித்தம் - அந்தவிஷ்ணு சித்தன் என்ற பெரியாழ்வாரை
ஆதாதுகாம: - அடைய ஆவலுள்ளவராய்	நமாமி - வணங்குகிறேன்.

(பொழிப்புரை.)

வல்லப தேவராயன்[6] என்ற பாண்டியகுலத்தரசன் வித்யா சுல்கமாக நியமித்த நிதிப்பொதியை அடைய ஆவலுள்ளவராய், எவர் குருவின்வழியாய்க் கற்றுக்கொள்ளாதபடி மறைப்பொருளனைத்தையும் விரித்துரைத்தனரோ, எவர் அழகிய மணவாளப் பெருமானுக்கு நேரே மாமனார் ஆனரோ, அப்படிப்பட்ட அந்தணரிற் சிறப்புற்றோங்கிய, இமையவர்தொழும் விஷ்ணு சித்தன் என்ற பெரியாழ்வாரை வணங்குகிறேன்.

---

[1] ஆழ்வாராதிகளுடைய அருளிச்செயலை அநுஸந்திக்கத் தொடங்கும்போது, முதலில் அவரவர் வைபவத்தைப் பேசி தംவെ-ஞ്ரு உஹிவாஃமெயஃ | என்றபடி ப்ரணிபாத நமஸ்கிருதிகள் செப்பும் தனிப்பாடல்.

[2] பிராகிருத குருக்களின் மூலமாய் வேதங்களை இவர் ஓதாவிடினும், ஸாக்ஷாத் பரமபுருஷனே குருவாய்வந்து மறைகளனைத்தையும் ஓதுவித்துப் பயிற்றுவித்தார் என்று பாவம் இதுக்காதாரம். "எந்தையிராப்பகலோதுவித்தென்னைப் பயிற்றிப்பணிசெயய," பின்னும், பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாகி வந்து, முதலியவை (திருமொழி 5-ம் பத்து பா. 13-18.)

[3] பராத்பரனை ஸாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணனை - என்றர்த்தம். வேடைெஃஶ்ஹுவெஒெ്ரஊமெஉவெவெஃஜீ | (கீதை. அ. 15 ச்லோ. 15) என்றபடி.

[4] அழகிய மணவாளனுக்குத் தமது கன்னிகையான ஆண்டாளை பாணிக்கிரஹணம் பண்ணுவித்தபடியே.

[5] விஷ்ணுசித்தம் - விஷ்ணுவை யெப்போதும் சித்தத்திலேயுடையவர்.

[6] கூடல் மதுரையில் அரசாண்ட வல்லபதேவராயன்.

பாண்டியபட்டர் அருளிச்செய்தது.

(2) மின்னார்[1]தடமதிள்சூழ் வில்லிபுத்தூரென்றொருகால்
சொன்னார்கழற்கமலஞ் சூடினோம்—முன்னாள்
கிழியறுத்தா னென்றுரைத்தோம் கீழ்மையினிற்[2]சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமேவந்து.[3]

(பதவுரை.)

மின் ஆர் - ஒளிபொருந்திய
தடம்மதிள் - பெரியமதிளாலே
சூழ் - சூழப்பட்ட
வில்லிபுத்தூர்என்று - ஸ்ரீவில்லிபுத்தூர் என்றநாமத்தை
ஒருகால் - ஒருமுறை
சொன்னார் - உச்சரித்த ஸ்ரீவைஷ்ணவர்களுடைய
கழற்கமலம் - திருவடித்தாமரைகளை
சூடினோம் - தலையிலேதரித்தோம்
முன்னாள் - முற்காலத்திலே
கிழி அறுத்தான் - வித்யாசுல்கமான நிதிப்பொதியை அறுத்தருளினார்
என்று - என்ற ஆழ்வாருடைய இந்த அற்புதகர்மத்தை
உரைத்தோம் - அநுஸந்தித்தோம்
கீழ்மையினில் - அதஃபதனத்தில் (தாமமார்க்கத்தில்)
சேரும் - போய்அடையும்
வழி - மார்க்கத்தை
அறுத்தோம் - நிரோதித்தோம்
நெஞ்சமே - அநுகூலமானமனமே
வந்து - ஆழ்வாரளவும்வந்து.

(பொழிப்புரை.)

அநுகூலமானமனமே ! ஒளிபொருந்திய பெரியமதிள்சூழ்ந்த [4]ஸ்ரீவில்லிபுத்தூர் என்ற ஆழ்வாருடைய திவ்யதேச நாமத்தை யொருமுறை உச்சரித்த[5] ஸ்ரீவைஷ்ணவர்களுடைய திருவடித் தாமரைகளை சிரோபூஷணமாகத் தரித்தோம்; அன்றியும் முற்காலத்தில் பாண்டியராஜா நியமித்த வித்யாசுலகமான நிதிப்பொதியை, தத்வநிர்ணயம் செய்தறுத்தருளினார் என்று பெரியாழ்வாருடைய இந்த அற்புத கருமத்தை நாவினால் அநுஸந்தித்தோம். ஆதலால் ஆழ்வார் பக்கல் நாம் அடைந்து[6] அதஃபதநஹேதுவான தாமஸமார்க்கங்களை அடைத்துவிட்டோம்.

---

[1] மின் + ஆர் = மின்னார் = "தனிக்குறின்முன்னொற்றுயிர்வரினிரட்டும்" என்ற நன்னூல் சூத்திரப்படி னகரம் இரட்டித்தது.

[2] இனிச்சேரும் - என்று பாடாந்தரம் = (இனிமேல் சேரும்படியான.)

[3] நமக்கு உண்டாயிருக்கும் திருப்தியை மனசுடன் கலந்துசொல்லி உலாவுதல்.

[4] மூன்றக்ஷரங்கூடிய பிரணவம்போல வடபெருங்கோயிலுடையானுக்கும் பெரிய ஆழ்வாருக்கும் ஆண்டாளுக்கும் - (மூவரும்) கூடியிருக்குமிடமாதலால் மாஹாத்மியம். [illegible] । என்றபடி.

[5] வில்லிபுத்தூர், ஜந்மஸ்தாநமும், கிழியறுத்தல் - கருமமும் - ஆகையால் [illegible] । என்றபடியே வழியறுத்தோம் என்கிறார்.

[6] நீ என்வழிவருகையாலே, இவையெல்லாம்பெற்றோம் என்னும் கூறலாம்.

(3) பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்
றீண்டியசங்க[1] மெடுத்தூத[2]—வேண்டிய[3]
வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமு[4]டைய பற்று.[5]

(பதவுரை.)

பாண்டியன் - பாண்டியராஜனான ஸ்ரீவல்லபதேவராயன்
கொண்டாட - மகிழ்ந்துபுகழ
பட்டர்பிரான் - (கவிகளேறு) பெரியாழ்வார்
வந்தானென்று - பரதத்துவநிர்ணயம் பண்ண எழுந்தருளினரென்று
ஈண்டிய - பல்வகைப்பட்ட
சங்கம் - ஜயசங்கங்களை
எடுத்தூத - வாயிலேவைத்தூத
வேண்டிய - ஆவசியகமான (அளவிறந்த)

வேதங்கள் - மறைப்பொருளெல்லாவற்றையும்
ஓதி - எடுத்தப்ரதிபாதித்து
விரைந்து - த்வரித்து
கிழி - தமது திருவடிகளில்தாழ்ந்த நிதிப்பொதியை
அறுத்தான் - அறுத்தவருடைய
பாதங்கள் - கழற்கமலங்கள்
யாம் - நாம்
உடைய - அடையத்தக்க
பற்று - புகல் (ரக்ஷை), தஞ்சம்.

(பொழிப்புரை.)

பரதத்துவநிர்ணயம் பண்ணுவதற்காக நம்ம ‘பட்டர்பிரான்’ (புலவரில்தலைவன்) எழுந்தருளினரென்று பாண்டியராஜனான வல்லபதேவராயன் சொல்லி மிகமகிழ்ந்து ஸேவித்து நிற்க, அப்போது அங்குள்ளார் ஜயசங்கங்களை கெட்டியாய் ஊத, பெரியாழ்வார் வேதாந்தவிழுப்பொருளை சபையில் எடுத்துப் பிரதிபாதித்து விரைவில் தமக்குச சார்ந்த நிதிப்பொதியையறுத்துத் திருவுளம்பற்றினர். அப்படிப்பட்ட கவிசிரேட்டரான பெரியாழ்வாருடைய கழற்கமலங்களே நாம் அடையத்தக்கபுகல் (ரக்ஷை).

---

[1] ஈண்டியசங்கம் எடுத்தூத = என்றபோது (திரண்டிருக்கிற வித்வத்ஸங்கமானது, வாக்கியங்களையெடுத்து உபந்யஸிக்க) என்றர்த்தம்.

[2] அடுத்தூத என்றும் பாடாந்தரம் அப்போது கிட்டியூத என்றர்த்தம்.

[3] வேண்டிய வேதங்கள = ஸர்வெவேதா யத்பதமாமநந்தி। என்றபடி. (ஸ்ரீமந்நாராயணனே பரனென்றுகூறும் - சுருதிகளை).

[4] அவர்க்கு சேஷபூதராயிருக்கிற நம்முடைய.

[5] பற்று = அரண்புகல், உபாயம் - சரண்யம்.

[6] கிழி = ஒரு சீரையில் விசேஷமான தனத்தை முடிந்து ஒரு கம்பத்தோரணத்தை நாட்டி அதிலே அதைத்தொடுத்து, சபையில்வரும் சகலகவிஞானிகளும் பார்க்கும்படி வைத்து, வாதத்தில் ஜயிப்பவர்களுக்கு ஸம்மானமாய்ப் பெற்றுக்கொள்ளும்படி மகாராஜாக்கள் வைக்கும் திரவியமுடிப்பு.

காப்பு.

வெண்செந்துறை.

(4) பல்லாண்டு பல்லாண்டு[1] பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரமும்[2]
மல்லாண்ட திண்டோள்[3] மணிவண்ணா உன்
செவ்வடி[4] செவ்வி திருக்காப்பு.

(பதவுரை.)

பல்லாண்டு - வாழி
பல்லாண்டு - நீடுவாழி
பல்லாயிரத்தாண்டு - அனேகமாயிரம் வருடங்களில்
பலகோடிநூறாயிரமும் - காலதத்துவமுள்ளளவும்
மல் - மல்லவர்க்கத்தை
ஆண்ட - வெற்றிகொண்டு நிரஸித்த
திண் - திடமான
தோள் - திருத்தோள்களையுடைய
மணி - நீலரத்நம்போன்ற
வண்ணா - திருமேனிகாந்தியுடையவனே!
உன் - உன்னுடைய
செம் அடி - சிவந்த திருவடிகளின
செவ்வி - அழகுக்கு
திருக்காப்பு - குறையற்றரக்ஷையுண்டாகவேணும்.

(பொழிப்புரை.)

வாழ்க, தேவரீர்! நீடூழி வாழ்க ஸ்வாமீ! ஒருவராலுமடங்காத சாணூரமுஷ்டிகரென்கிற மல்லர்களை வெற்றிகொண்ட திடமான திருத்தோள்களையுடைய நீலரத்நம்போன்ற காந்தியுள்ள எம்பெருமானே! உனக்கு அநவரதம், மங்களம். அனேகமாயிரம் வருடங்கள், அதாவது காலதத்துவமுள்ளளவும் உனது சிவந்த திருவடிகளின் அழகுக்கு குறைவற்ற ரக்ஷையுண்டாகவேணும்.

---

[1] எம்பெருமானைக் கண்ணுற்றதும் பிரீதயதிசயத்தால் அதிசங்கைபிறந்து சவுந்தரியாதி கல்யாண குணோபேதமான விக்ரஹத்தோடே வகுத்த சாவசேஷியானவுனக்கு இச்செவ்வி மாறாதே நித்யமாய்ச் செல்லவேணும் என்று முதல் முதல் 'மங்களம் மங்களம்' என்று நடுங்கி ஆதராம்பிறந்து இருமுறை சொல்லுகிறார். எப்படியென்றால், பயப்பட்டார் 'நெருப்பு நெருப்பு!' என்று பலமுறை கூறுவதுபோல. பல்லாண்டு பல்லாண்டு - பலவர்ஷங்களிலும் என்று பொருள் கூறுவாருமுளர்.

[2] நூறாயிரம் - என்று பாடாந்தரம்.

[3] திண்தோள் - ஜுடைஷ்ரெணதாநுவா்ாநு என்றபடி சத்துருவர்கநிரஸன ஸாமர்த்தியத்தைக் குறிக்கிறது.

'பல்லாண்டு என்ற சப்தத்தால் - நமஃ சப்தார்த்தத்தைச் சொல்லிற்று.
மல்லாண்டதிண்தோள் - சௌர்யவீர்யாதிகுணயோகத்தை சொல்லிற்று.
மணிவண்ணா - என்றதனால் விக்ரஹயோகத்தைச் சொல்லுகிறது.

[4] சேவடி - யென்று பாடாந்தரம்.

அறுசீர்க்கழி நெடிலாசிரியவிருத்தம்.

அடியோமோடு நின்னோடும் பிரிவின்றி யாயிரம்பல்லாண்டு! (5)
வடிவாய் நின்வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும்[2] பல்லாண்டு!
வடிவார்சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு!
படைபோர்புக்கு முழங்கும்அப்பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே[3]!

(பதவுரை.)

அடியோமோடும் - சேஷபூதரான வெங்களோடும்
நின்னோடும் - சேஷியாணவுன்னோடு முள்ள சம்பந்தம்
பிரிவுஇன்றி - பிரிவில்லாமல்
ஆயிரம் - அநந்தமான
பல்லாண்டு - மங்களம்
வடிவுஆய் - ஆபரணரூபமாய்
நின் - ஸர்வேசுவரனான வுன்னுடைய
வலமார்பினில் - வலது திருமார்பிலே
வாழ்கின்ற - நித்யவாஸஞ்செய்கிற
மங்கையும் - பிராட்டியும்
பல்லாண்டு - நீடுவாழி
வடிவுஆர் - அழகுநிறைந்த
சோதி - தேஜோராசியாய்
வலத்து - உன்வலதுதிருக்கையிலே
உறையும் - வர்த்திக்கிற
சுடர் - பகைவரையெரிக்குமவனான
ஆழியும் - திருவாழியாழ்வானும்
பல்லாண்டு - நீடுவாழி
படை - ஆயுதமாய்
போர் - யுத்தத்தில்
புக்கு - புகுந்து
முழங்கும் - ஒலிக்கும்
அப்பாஞ்சசன்னியமும் - அந்தபாஞ்சஜந்நியாழ்வானும்
பல்லாண்டே - நீடூழி வாழி.

(பொழிப்புரை.)

சேஷபூதரானவெங்களுக்கும் சேஷியான உனக்குமுள்ள சம்பந்தம் எக்காலத்தும் நீக்கமின்றி நிலைநிற்கும்படிக்கு அநந்தமான மங்களம் உண்டாகுக! ஸர்வேசுவரனான உன்னுடைய வலதுதிருமார்பில ஆபரணரூபையாய் நித்தியவாஸஞ்செய்கிற பெரியபிராட்டியும் நீடுவாழி! அழகு நிறைந்த தேஜோராசியாய் உனது வலதுதிருக்கையிலே வர்த்திக்கிற பகைவரை யெரிக்குமவனான திருவாழியாழ்வானும் நீடுவாழி! ஆயுதமாய் யுத்தத்தில் நின்று பேரொலிசெய்யும் அந்த பாஞ்சஜன்னியாழ்வானும் நீடுவாழி!

---

[1] அடியோமோடும் = என்ற பன்மையால் ஸர்வாத்மாக்களுக்கும் சேஷத்வ ந்யோதகமும், இப்பிரபத்தி இவரைப்போல் மற்றவர்க்கில்லையேயாயினும் ஸ்வாமிப்பிராயத்தாலே அவரையும் கூட்டிக்கொள்கிறார் என்பதும வெளிப்படுகிறது. மங்களாசாஸனத்துக்கு தான் அவசியம் வேணுமாதலால் தன்னுடைய நித்யதையையும் கோருகிறார.

[2] உம்மையால் = மஹிஷ்யந்தரங்களையும் சொன்னபடி.

[3] இப்பாட்டில் 'நின்னோடும்' என்பதால் அகாரவாச்சியனான ஸர்வேசுவரனையும், 'அடியோமோடும்' என்பதினால மகாரவாச்சியரான சேதனரையும், 'மங்கையும்' என்பதினால் உகாரவாச்யளாயும் புருஷகார பூதையுமான பிராட்டியையும் குறிப்பதால், பிரணவார்த்தப் பிரதிபாதகமாகிறது.

[ன்

வாழாட்பட்டுநின்றீருள்ளீரேல்[1]வந்து[2]மண்ணுமணமுங்கொண்மின்
கூழாட்பட்டுநின்றீர்களையெங்கள்குழுவினிற்புகுதலொட்டோம்[3]
ஏழாட்காலும் பழிப்பிலோ நாங்களிராக்கதர்வாழிலங்கை
பாழாளா[4]கப்படைபொருதானுக்குப் பல்லாண்டு கூறுதுமே. (6)

(பதவுரை.)

வாழ் ஆள் - கைங்கரிய ரூபமான போகத்துக்கு
பட்டு - பொருந்தி
நின்றீர் - நிலைநின்றவர்களாய்
உள்ளீரேல் - இருப்பீர்களானால்
வந்து - விரைவாகவந்து
மண்ணும் - அங்குரார்ப்பணத்துக்குப் புழுதிமண் சுமக்கையையும்
மணமும் - கல்யாணத்துக்கு அபிமானியாயிருத்தலையும்
கொண்மின் - நீங்கள் ஸ்வீகரியுங்கள்
கூழ் ஆள் பட்டு - சோற்றுக்கடிமை பூண்டு
நின்றீர்களை - திரியும் உங்களை
எங்கள்குழுவினில் - எங்கள் திரளில்
புகுதல் ஒட்டோம் - சேரவொட்டோம்

ஏழ் ஆள் காலும் - முன்னேழ் பின்னேழ் நடுவேழ் ஆகிய இருபத்தொரு தலைமுறையிலும்
பழிப்பு இலோம் - பழிக்கப்படாதவர்கள்
நாங்கள் - அடியோங்கள்
இராக்கதர்வாழ் - அரக்கர்வசிக்கும்
இலங்கை - இலங்கை நகர்
பாழாள் ஆக - ஆள் பாழாம்படியாக
படை - யுத்தத்திலே
பொருதானுக்கு - சண்டைசெய்தவனுக்கு
பல்லாண்டு - மங்களாசாஸநம்
கூறுதும் - பண்ணுவோம்
ஏ - ஈற்றசை.

(பொழிப்புரை.)

வாரீர் ஓ! மகாஜனங்களே! நிரதிசய கைங்கரிய ரூபமான போகத்துக்கு உடன்பட்டு நிலைநின்றவராயிருப்பீர்களாகில், விரைவாகவந்து நம்மஸ்வாமியின் திருக்கல்யாணோத்ஸவத்தின் திருமுளைத் திருநாளுக்குப் புழுதிமண் சுமத்தலையும், அந்தக் கல்யாணத்துக்கு அபிமானியாயிருத்தலையும் நீங்கள் ஸ்வீகரியுங்கள். உங்களுள் வயிற்றுச் சோற்றுக்கே அடிமைபூண்டு திரியுமவரை எங்கள் கூட்டத்தில் சேரவொட்டோம். முன்னேழ் பின்னேழ் நடுவேழாகிய இருபத்தொரு தலைமுறையிலும் நாங்கள் பிரயோஜநாந்தர பரரென்றும் ஸாதநாந்தர பரரென்றும் பழிக்கப்படாதவர்கள். ஆகையால இலங்கை நகர்த்தலைவன் அழிந்து பாழாய்ப் போம்படி யுத்தத்திலே சண்டைசெய்த எம்பெருமானுக்கு மங்களாசாஸநம் பண்ணுவோம்.

---

1 ஏல் என்றவினையெச்சத்தால் இச்சம்சாரத்திலே ஸ மஹாத்மா ஸுதுர்லப: । என்றபடி அநந்யார்ஹரான வைஷ்ணவர் கிடைப்பது அரிது என்று காட்டுகிறது.

2 ஏகஸ் ஸ்வாது ந புஞ்ஜீத (ஒருவனே ருசியான பதார்த்தத்தை சாப்பிடலாகாது) என்ற நியாயத்தாலே இம்மங்களாசாஸநமாகிற ஆனந்தாநுபவத்தை தாமொருவருமே கைக்கொள்ளாமல் எல்லாரும் அநுபவிக்கவேணுமென்று ஆசையால் அழைக்கிறார்.

3 யாரே புகுவார் என்று எதிர் பார்க்கிறவர்களானாலும் யாம் அநந்யப்ரயோஜனராகையால் எங்களுக்கு பிரயோஜநாந்தரபரரோடு ஸஹவாஸம் அஸஹ்யமாயிருப்பது என்று கருத்து.

4 பாழாள் = இலங்கையென்ற மொழியை ஸம்ஸ்கிருதத்தைப்போன்று பெண்பாற்படுத்தி = அதன்வினையான 'பாழாள்' என்றதையும் பெண்பாலிலேயே கூறினதாகவுங் கொள்ளலாம்.

ஏடு[1]நிலத்திலிடுவதன் முன்னம்[2]வந்தெங்கள் குழாம்புகுந்து (7)
கூடுமனமுடையீர்கள்[3] வரம்பொழிவந்தொல்லைக்கூடுமினோ!
நாடுநகரமுநன்[4]கறிய நமோநாராயணாயவென்று
பாடுமனமுடைப்பத்தருள்ளீர்வந்து பலலாண்டு கூறுமினே.

(பதவுரை.)

ஏடு - ஸ்தூலஸூக்ஷ்மரூபமானசரீரம்
நிலத்தில் - ஸ்வகாரணமான மூலப்ரகிருதியில்
இடுவதன்முன்னம் - லயிப்பதற்குமுன்
வந்து - வந்து.
எங்கள்குழாம்-அநந்யபிரயோஜநரான வெங்கள் திரளிலே
புகுந்து - சேர்ந்து
கூடும் மனமுடையீர்கள் - கூடவேணுமென்கிற நினைவுடையவர்களாயின்
வரம்புஒழி - நீர் இட்டுக்கொண்ட வரம்பையொழித்து
வந்து ஒல்லை - விரைவாகவந்து
கூடுமின் ஓ - சேருங்கள்

நாடும் - சிற்றறிவுள்ளவர்களும்
நகரமும் - பேரறிவுள்ளவர்களும்
நன்குஅறிய - நன்றாக அறியும்படி
நமோநாராயணாய - நமோநாராயணாய
என்று - என்பதாக
பாடும் - பாடத்தக்க
மனம்உடை - கருத்துடன்
பத்தர்உள்ளீர் - பிரேமத்தையுடையீராகில்
வந்து - எங்களுடன்வந்து
பல்லாண்டு - மங்களாசாஸநத்தை
கூறுமினே - பாடுங்கள்
ஏ - ஈற்றசை.

(பொழிப்புரை.)

வாரீர் மகாஜனங்காள்! ஸ்தூல ஸூக்ஷ்மரூபமான சரீரமானது ஸ்வகாரணபூதமான மூலபிரகிருதியிலே, தானே லயித்துப்போவதற்கு முன்னே, அநந்யபிரயோஜனரான வெங்கள் திரளிலே வந்துசேர்ந்து கூடவேணுமென்கிற நினைவுடையவர்களாயின், நீரிட்டுக்கொண்ட கைவல்ய சுகானுபவம் என்கிற வரம்பையொழித்து நித்யமான பகவத்குணானுபவ சுகத்தை யனுபவிக்க விரைவாகவந்து சேருங்கள். அறிவுள்ளவர், அறிவில்லாதவருள்பட அனைவரும் நன்றாக அறிந்துய்யும்படி நமோநாராயணாயவென்று பாடும் விஷயத்தில் முழுமனதுடன் அன்புற்றிருபவிரானால், எங்களுடன் வந்து ஸர்வேசுவரனை மங்களாசாஸனம் செய்யுங்கள்.

---

[1] ஏடு = பொல்லாங்கு. ஏடு நிலம் = பொல்லாநிலத்திலி டுவதற்கு முன் என்று அர்த்தாந்தரம்.

[2] அவர்களுடையப்போகும் அநர்த்தத்தை நோக்கி விரைந்து அழைக்கிறார் [illegible] என்று சுருதியும் கூறுகிறது.

[3] இத்திரள் புகுவார்க்கு என்ன அதிகாரம்வேணும் என்றால் கூடும் மனம் - புகுருவோம் என்ற நினைவே வேண்டுவது. ஆனால் இதற்கு புரச்சரணாதிகள் வேண்டாவோ வென்றால, மாதாபிதாக்களை அநுவர்த்திக்கைக்கு இச்சை மட்டுமேவேண்டுவது.

[4] நன்கு = (2-ம் வேற்றுமையானால்) = (தன்ஸ்வரூபத்தையுள்ளபடியறிந்து, ஸ்வரூபாநுரூபமான கைங்கரியத்தைப் பெறவேணும் என்ற) இந்நன்மையை என்று அர்த்தாந்தரம்.

அண்டக்குல[1]த்துக்கதிபதி[2]யாகி யசுரரிராக்கதரை (8)
யிண்[3]டக்குலத்தை யெடுத்துக்களைந்த விருடீகேசன் றனக்குத்
தொண்டக்குலத்திலுள்ளீர்[4]வந்தடிதொழு[5]தாயிரநாமஞ்சொல்லிப்
பண்டைக்குலத்தைத்தவிர்ந்து பல்லாண்டு பல்லாயிரத்தாண்டெ
ன்மினே.)

(பதவுரை.)

அண்டக்குலத்துக்கு - பிரமாண்ட ஸமூகங்களுக்கு
அதிபதி ஆகி - தலைவனாய்
அசுரர் இராக்கதரை - அசுரர் அரக்கர்களின்
இண்டக்குலத்தை - நெருங்கின திரளை
எடுத்து - சேரத்திரட்டி
களைந்த - நிர்மூலமாகப்போக்கின
இருடீகேசன்தனக்கு - (இந்திரியநேதாவான) ஸர்வேசுவரனுக்கு
தொண்டக்குலத்தில் - அடிமை செய்யுங்குலத்திலே
உள்ளீர் - தோன்றிய நீங்கள்
வந்து - எங்களுடன்கூடி
அடி - ஸர்வேசுவரன் திருவடிகளை
தொழுது - வணங்கி
ஆயிரம்நாமம் - அவன் திருநாமங்களையெல்லாம்
சொல்லி - வாயாரவுரைத்து
பண்டைக்குலத்தை - (பகவத் விமுகராயிருந்த காலத்து) பழையஜாதியை
தவிர்ந்து - ('நான்' 'எனக்கு' என்கிற நினைவோடு) விட்டு
பல்லாண்டு - மங்களம், வாழி
பல்லாயிரத்தாண்டு - அனேகமாயிரம் ஸம்வத்ஸரங்கள்.
என்மினே - என்று கூறுங்கள்.

(பொழிப்புரை.)

பிரமாண்ட ஸமூஹத்துக்குத் தலைவனாய், அசுரர் அரக்கர்களின் நெருங்கிய கூட்டங்களைச் சேரத்திரட்டி நிர்மூலமாகத் தொலைத்த ஸர்வேசுவரனுக்கு இடையறாது அடிமை செய்யுங்குலத்திலே சேர்ந்த நீங்கள்! எங்களோடுவந்து ஸர்வேசுவரனுடைய திருநாமங்களையெல்லாம் வாயாரவாழ்த்தி, முன்பு பகவத்விஷய விமுகராய 'நான' 'எனக்கு' என்று சொல்லிக்கொண்டு இருந்த காலத்துள்ள பழைய ஜாதியைவிட்டு, 'உனக்கே நான்' என்கிற நினைவோடு எம்பெருமானை நோக்கி, "அனேகமாயிரம் ஸம்வத்ஸரங்கள் நீ வாழி" யென்று மங்களம் பாடுங்கள்.

---

[1] அண்டக்குலம் = அபேக்ஷித்தார்க்கு அவரிஷ்டப்படி கொடுக்கத்தக்க உடைமையைச் சொல்லி, ஔதார்யத்தையும் சூசிபபிக்கிறது.

[2] அதிபதி, என்றதால் உபயவிபூதிநிர்வாஹனென்கை.

[3] இண்டர் = சண்டாளர், நிஹீநர் என்றும் (பராநர்த்தமே பண்ணுவது ஸ்வபாவமாகையாலே.)

[4] தொண்டக்குலத்தில் உள்ளீர் = அநந்யப்பிரயோஜநரான நீங்கள்.

[5] அடிதொழுது = திருவடிகளே பிரயோஜநமாய் அநுகூல விருத்திகளைப் பண்ணி.

எந்தைதந்தைதந்தைதந்தை தம்மூத்தப்பனேழ்படிகாற்றொடங்கி
வந்துவழிவழி[1]யாட் செய்கின்றோம்[2] திருவோணத்திருவிழவி (9)
லந்தியம்போதி[3] லரி[4]யுருவாகி யரியை யழித்தவனைப்
பந்தனை தீர[5]ப்பல்லாண்டு[6]பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே.

(பதவுரை.)

எந்தை - நானும் என்னப்பனும்
தந்தை - அவனுக்கப்பனும்
தந்தை - அவனுக்கப்பனும்
தந்தை - அவனுக்கப்பனும்
தம் மூத்தப்பன் - அவனுக்கப்பனும் பாட்டனுமாகிய
ஏழ்படிகால் தொடங்கி - ஏழுதலைமுறை முதற்கொண்டு
வந்து - மங்களாசாஸனம் பண்ணுவதற்கு வந்து
வழிவழி - முறைமுறையாக
ஆள் செய்கின்றோம் - தப்பாமே அடிமைசெய்கிறோம்
திருவோணத்திருவிழவில் - திருவோணமென்கிற திருநாளிலே
அந்தியம்போதில் - (அசுரர்க்கு பலம் மிகும்படியான) அந்திப்பொழுதிலே
அரிஉருவாகி - நரஸிம்ஹரூபமாய்
அரியை - ஆச்ரிதனை பிரஹ்லாதாழ்வானுக்குப்பகைவனை இரணியனை
அழித்தவனை - உருவழித்தவனுக்கு (உண்டான)
பந்தனைதீர - அனுக்கம் திரும்படி
பல்லாண்டு - (நீ) வாழி
பல்லாயிரத்தாண்டு - அனேக ஆயிரம் வருஷம்
என்று - என
பாடுதுமே - மங்களாசாஸநம் பண்ணுவோம்.

(பொழிப்புரை.)

வாரீர் மகாஜனங்களே! எமது ஆறும்பாட்டனார்முதல் அடியேனுள்பட ஏழுதலைமுறையாய் எம்பெருமானை மங்களாசாஸனம் பண்ணுவதற்கு யோக்கியமான ஸமயங்களில் வந்துவந்து முறைமுறையாய்த்தப்பாமே அடிமைசெய்து வருகின்றோம். திருவோணமாகிய திருநாளிலே, நாஸிம்ஹாவதாரஞ் செய்தருளி அந்திப்பொழுதினில ஸ்வாச்ரித பரமபாகவதனை பிரஹ்லாதாழ்வானுக்குப் பகைமைகொண்டிருந்த இரணியனை, மார்பங்கீண்டு உருவழித்த ஸர்வசக்தனை வெம்பெருமானுக்கு அனுக்கந்திரும்படி “அனேகம் ஆயிரம் வருஷம் நீவாழி” என்று அநவரதம் மங்களாசாஸநம் பண்ணுவோம்.

---

[1] வழிவழி - அவிச்சின்னமாய் - யாஞ்ஞிகஸந்தானத்துக்கு திரிபுருஷவிச்சித்தியாலே, அப்ராம்ஹண்யஞ் சொல்லுமாப்போலே, வைஷ்ணவர்க்கு, மங்களாசாஸனவிச்சித்தியாலே வைஷ்ணவஹாநிவரும். ஆகையால் அப்படி வராமல் ‘முறைமுறையாய்’ என்கிறார்.

[2] ஆள்செய்கின்றோம் - திருப்பல்லாண்டு பாடுகிறோம்.

[3] தேவர்களுக்கு பலம் க்ஷீணமாய், அசுரர்களுக்கு பலம் விருத்தியாகும் ஸமயத்திலே,

[4] அரி - சிங்கம், நரங்கலந்த சிங்கமாய் என்று சொல்லக்கடவது.

[5] பந்தனைதீர - நம்முடைய பிறவித்தளை நீங்க என்றுஞ்சொல்லலாம்.

[6] பல்லாண்டு - வர்ஷஶதம் ; ஶாஷிஶாஷிஶாஷி ; என்பதுபோல மங்களாசாஸனம் பண்ணவேணும்.

தீயிற்[1]பொலிகின்றசெஞ்சுடர்[2]ஆழிதிகழ்திருச்சக்கரத்தின் (10)
கோயிற்பொறியாலேயொற்றுண்டு[3]நின்றுகுடிகுடியாட்செய்கின்
மாயப்பொருபடை[4]வாணனையாயிரந்தோளும்பொழிகுருதி[றோம்
பாயச்சுழற்றிய[5]வாழிவல்லானுக்குப்பல்லாண்டுகூறுதுமே.

(பதவுரை.)

தீயில் - சந்திராதித்ய அக்னிகளைக் காட்டிலும்
பொலிகின்ற - மிகவிளங்காநின்ற
செம் - சிவந்த
சுடர் - ஜ்யோதிஸ்ஸையுடைத்தாய்
ஆழி - மண்டலாகாரமான
திகழ் - ப்ரகாசியா நின்றுள்ள
திருச்சக்கரத்தின் கோயில் - திருவாழி யாழ்வானெழுந்தருளி யிருக்கிற கோயிலாய்
பொறியாலே - சின்ஹத்தாலே
ஒற்றுண்டு நின்று - சின்ஹிதராய் நின்று
குடிகுடி - எங்கள் ஸந்தானமெல்லாம்
ஆள்செய்கின்றோம் - அடிமை செய்வோமாய்வந்தோம்

மாயம் - வஞ்சனையாய்
பொரு - போர் செய்யும்
படைவாணனை - சேனையுடைத்தான பாணாஸுரனுடைய
ஆயிரம் தோளும் - ஆயிரங்கைகளினின்றும்
பொழிகுருதிபாய - இரத்தமானது புறப்பட்டு மதகுதிறந்தாற்போலோடும்படி
சுழற்றிய - சுற்றியெறிந்த
ஆழி - திருவாழி யாழ்வானை நியமிப்பதில்
வல்லானுக்கு - ஸமர்த்தனானவனுக்கு
பல்லாண்டு - திருப்பல்லாண்டு
கூறுதுமே பாடுவோம்.

(பொழிப்புரை.)

சந்திராதித்யாக்னிகளைக் காட்டிலும் மிக விளங்காநின்ற சிவந்த ஜோதிஸ்ஸையுடைத்தாய்ப் பிரகாசியா நின்றுள்ள, திருவாழி யாழ்வானெழுந்தருளியிருக்கிற கோயிலாய் மண்டலாகாரமான சின்ஹத்தாலே சின்ஹிதராய் நின்று, எங்கள் ஸந்தானத்துள்ள எல்லாரும் நம்பெருமானுக்குத்தொன்று தொட்டு அடிமை செய்துகொண்டு வாராநின்றோம். மாயங்கள்கொண்டு சண்டைசெய்த சேனைகளையுடையனான பாணாஸுரனுடைய ஆயிரந்தோளையுந்துண்டித்து அவைகளினின்றும் இரத்தமானது மதகுதிறந்தாற்போல் புறப்பட்டோடும்படி சுழற்றித் திருவாழியாழ்வானை நியமிப்பதில் ஸமர்த்தனான கண்ணபிரானுக்குத் திருப்பல்லாண்டு பாடுவோம்.

---

[1] தீயிற்பொலிகின்ற - வைஷ்ணவகோஷ்டியிலே புரப்பண்ணின உபகாரஸ்மிருதியாலே கொண்டாடுவது.

[2] சுடர் சக்கரத்தின் - காளமேக நிபச்யாமமான அவன் வடிவுக்கு இருட்டறையில் விளக்கேற்றினாற்போல் - ப்ரகாசத்தைக்கொடுக்கத்தக்க.

[3] ஒற்றுண்டு நின்று - ஒருவன் திருவிலச்சினைதரித்த பின்புதானே ஜன்மாந்திரத்திற்புகாமல் இருப்பதும், மோக்ஷாந்திரத்திற்போகாதே, அந்தமில் நலத்தைப்பெறலாவதும்; அன்றிக்கே, பகவதங்கீகாரமும் இத்தாலன்றோ உண்டாவது. "ஸகுராங்கிதாஸ்ரு மெவஷ வ்ருாயாவஹா ஜூநஂ௨௨ ।" என்று பரமபதநாதன்-நியமித்தபடியே; மற்றும் இதுயமாதிகளுக்கும் அஞ்சும்படியாயிருப்பது.

[4] படை - ஆயுதங்கள், என்னுமாம்.

[5] சுழற்றிய - என்றதால் - திருவாழியாழ்வானை விடவேண்டிய அவசியமின்றிக்கே, திருக்கையிலிருந்த படிக்கே அசைத்த மாத்திரத்தில்.

நெய்யிடை நல்லதோர்[1] சோறு நியதமு மத்தாணிச் சேவகமுங்
கையடைக்காயுங் கழுத்துக்குப்பூணொடு[2] காதுக்குக் குண்டலமும்
மெய்யிட நல்லதோர் சாந்தமு[3]ந்தந்தென்னை[4]வெள்ளுயி[5]ராக்கவல்ல
பையுடை நாகப்பகைக்கொடியானுக்குப்பல்லாண்டுகூறுவனே.(11)

(பதவுரை.)

நெய் - நெய்யோடுகூட்டிய	மெய்இட - உடம்பில் பூசத்தக்க
இடை - ஒத்தநிறையான	நல்லதோர் - நல்ல ஒப்பற்ற
நல்லது - நல்லதாய்	சாந்தமும் - சந்தணமும்
ஓர் - இனியரஸத்தையுடைய	தந்து - கொடுத்து
சோறும் - ப்ரஸாதத்தையும்	என்னை - அடியேனை
நியதமும் - எப்போதும்	வெள் உயிர் - சுத்தஸ்வபாவனாக
அத்தாணி - பெருமானுடைய ஆஸ்தானத்தை	ஆக்கவல்ல - செய்யவல்லனாய்
சேவகமும் - பிரியாத ஸேவையையும்	பைஉடை - படத்தையுடைய
கைஅடைக்காயும் - திருக்கையாலேயிட்ட வெற்றிலைபாக்கையும்	நாகப்பகை - ஸர்ப்பத்துக்கு விரோதியான கருடனை
கழுத்துக்குப்பூண்ஒடு - கழுத்துக்கிடும் ஆபரணமான கண்டிகையையும்	கொடியானுக்கு - துவசத்திலுடையவனுக்கு
காதுக்கு குண்டலமும் - செவிக்கிடத்தக்க குண்டலத்தையும்	பல்லாண்டு - மங்களாசாஸனம்
	கூறுவனே - பண்ணுகிறேன்.

(பொழிப்புரை.)

ஜகத்ரக்ஷகனான ஸர்வேசுவரன் அடியேனுக்கு நாடோறும் ஒத்த நிறையான நெய்யோடு கூட்டிய நல்ல இனியரஸத்தையுடைய ப்ரஸாதத்தையும், எப்போதும் எம்பெருமானுடைய ஆஸ்தானத்தை விட்டுப்பிரியாத ஸேவையையும், திருக்கையாலேயிட்ட வெற்றிலை பாக்கையும், கழுத்துக்கிடும் ஆபரணமான கண்டிகையையும, செவிக்கிடும்படியான குண்டலங்களையும், உடம்பில் பூசிக்கொள்ள யோக்கியமான ஒப்பற்ற சந்தணத்தையும், கொடுத்து அடியேனைப்பரிசுத்த சுவபாவனாகச் செய்யவல்லனாய், ஸர்ப்பத்துக்குப்பகைவனான கருடனை துவஜத்திலுயர்த்திய ஸர்வேசுவரனுக்கு மங்களாசாஸனம் பண்ணுகிறேன்.

---

[1] நல்லது ஓர் சோறும் - இவ்வுலகத்தில் அயலாரகத்தில் உண்டவன், இதுக்கென்ன கைம்மாறு செய்வோம் என்றிருப்பன், அப்படியிராதே, தாய் சோறிட, புத்திரன் உண்ணுமாப்போலே, ஆவதுவே சோற்றுக்குநன்மை.

[2] கழுத்துக்குப்பூண், காதுக்கு குண்டலமும் -"ஹ்ரீமஹ...ஸ்ருஸா" என்று பட்டாபிஷேகசமயத்தில ஸ்ரீ ராமன் பிராட்டியைப்பார்த்துச் சொன்னாற்போல, இது கழுத்துக்காம், இது காதுக்காம், என்று பிராட்டியுந் தாமுமாயிருந்துதங்கள் திருக்கையாலே பூட்டின ஆபரணமும்.

[3] நல்லதோர் சாந்தமும் - குப்ஜையானவள் ஆதரத்தோடு சாத்தின சாந்தை தம் திருக்கையாலே என்னுடம்பிலே பூசும்படியாயிற்று.

[4] என்னை - "...." என்றபடி ஸம்ஸாரியாய்ப்போந்தவென்னை.

[5] வெள்ளுயிர் ஆக்க - முன்பு க்ஷேத்ரஜ்ஞப்போந்தான் என்ற சுவடே தோற்றாதே ஸ்வபாவமாகவே அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரி யென்னலாமப்படி அந்து வந்தரமாக்கத்தக்க.

உடுத்துக்களைந்தநின்பீதகவாடை[1]யுடுத்துக்கலத்ததுண்டு[2] (12)
தொடுத்ததுழாய்மலர்சூடிக்களைந்தனசூடுமித்தொண்டர்களோம்[3]
விடுத்ததிசைக்கருமந்திருத்தித்[4]திருவோணத்திருவிழவில்
படுத்த பைந்நாகணைப்பள்ளிகொண்டானுக்குப்பல்லாண்டுகூறு
[துமே.

(பதவுரை.)

உடுத்து - திருவரையிலே சாத்திக் கொண்டு
களைந்த - கழித்த
நின் - உன்னுடைய
பீதக ஆடை - திருப்பீதாம்பரத்தை
உடுத்து - உடுத்திக்கொண்டும்
கலத்தது - அமுதுசெய்த கலத்தில் மிகுந்திருப்பதை
உண்டு - ஸ்வீகரித்தும்
தொடுத்த - மாலையாகக்கட்டிய
துழாய்மலர் - திருத்துழாய்மலர்களை
சூடிக்களைந்தன - முடித்துக்கழற்றிய
சூடும் - தலையில் தரிக்கிற
இதொண்டர்களோம் - இந்த அடியோம்
விடுத்த - ஏவின
திசைக்கருமம் - திக்கிலுள்ள காரியங்களை
திருத்தி - நன்றாகச்செய்து
திருவோணத்திருவிழவில் - திருவோணமாகிறதிருநாளிலே
படுத்த - படுக்கையாய் விரித்த
பைநாகணை - படங்களையுடைய திருவனந்தாழ்வானாகிய படுக்கையிலே
பள்ளிகொண்டானுக்கு - கண்வளர்ந்தருளுமுனக்கு
பல்லாண்டு - மங்களாசாஸநம்
கூறுதுமே - பண்ணுவோம்.

(பொழிப்புரை.)

ஸர்வலோக சரண்யனான புருஷோத்தமனே! உன்னுடைய திருவரையிலே சாத்திக்கொண்டு கழித்த திருப்பீதாம்பரத்தை உன்னுடைய பிரஸாதமென்று உடுத்திக்கொண்டும், நீ அமுது செய்த தளிகையில் மிகுந்திருப்பதை ஸ்வீகரித்தும், நீ சூட்டிக் கழித்ததிருத்துழாய் மாலையைப் பிரஸாதமாக தலைமீதுகொள்ளும், அன்புகூர்ந்த தொண்டராய் அடியோம், நீ நியமித்த திக்கிலுள்ள காரியங்களையெல்லாம் நன்றாக நிறைவேற்றிக்கொண்டுவந்து, விரிந்த படங்களையுடைய திருவனந்தாழ்வானாகிய படுக்கையிலே திருக்கண்வளர்ந்தருளுமுனக்கு இடைவிடாது மங்களாசாஸனம் பண்ணுவோம்.

---

[1] பீதகவாடை - "ஸ்ருக்வஸ்த்ராபரணைர்யுக்தம் ஸ்வாநுரூபைரநூபமை: | சிந்மயை: ஸ்வப்ரகாசைச்ச அந்யோந்யருசிரஞ்ஜகை:" என்று பீதாம்பரமும் சேதநகோடியில் சேர்ந்தது.

[2] கலத்ததுண்டு - "த்வதீயபுக்தோஜ்ஜிதசேஷபோஜிநா" என்று ஆளவந்தாரருளிச்செய்தபடி உனது பிரஸாதமே தாரகமாயிருக்கும் நாங்கள் ஸ்வீகரித்து.

[3] இத்தொண்டர்களோம் - எமக்கென்று உடுத்தல், ஜீவித்தல், சூடுதல் செய்யுமவர்களன்றிக்கே, அவன் கழித்தவைகொண்டு தேஹயாத்ரைசெய்யும் நாங்கள்.

[4] திசைக்கருமம் திருத்தி- "காலே காலே ச ஸந்தேஷ்டா யோ வை ஸந்நிஹிதோ நரை: | கார்யாணாம் கர்த்தா ..." -என்றபடி - திக்கிலுண்டான காரியங்களையெல்லாம் முடித்து.

எந்நாளெம் பெருமானுன்றனக் கடியோமென் றெழுத்துப்பட்ட[1]
அந்நாளே[2]யடியோங்களடிக்குடில்[3]வீடுபெற்றுய்ந்ததுகாண்[4] (13)
செந்நிறோற்றித் திருமதுரையுட்சிலை குனித்தைந்தலைய
பைந்நாகந்தலைப்பாயந்தவனே யுன்னைப் பல்லாண்டு கூறுதுமே.

(பதவுரை.)

எந்நாள் - எந்தநாள்
எம்பெருமான் - எமமஸவாமியே
உன்றனக்கு - ஸர்வசேஷியான உனக்கு
அடியோம் என்று - சேஷபூதரென்று
எழுத்துப்பட்ட - அடிமைச்சீட்டு எழுதிக்கொடுததநாள்
அந்நாளே - அன்றையதினமே
அடியோங்கள் - தொண்டரான நாஙகளும்
அடிக்குடில் - கிரஹங்களிலுள்ள புத்திரபவுத்திராதிகளும்
வீடுபெற்று - விடப்பெற்று
உய்ந்ததுகாண் - ஈடேறினோம்
செந்நாள் - நல்ல ரோஹிணீ நக்ஷத்திரத்திலே
தோற்றி - திருவவதரித்து
திருமதுரையுள் - ஸ்ரீவடமதுரையிலே
சிலைகுனிதது - வில்வளைத்து நரகஜராஸந்தாதிகளோடுபொருது
ஐந்தலைய - ஐந்துதலைகளையுடையவனாய்
பைந்நாகம் - படங்கள்விரிந்த காளியன் என்னும் பாம்பின்
தலைப்பாய்ந்தவனே - தலையிலேகுதித்தவனே
உன்னை - உனக்கு
பல்லாண்டு - மங்களாசாஸனம்
கூறுதுமே - பண்ணுவோம்.

(பொழிப்புரை.)

எம்ம ஸ்வாமியே! ஸர்வசேஷியான உன்றனக்கு யாங்கள் சேஷபூதரென்று அடிமைசசீட்டு எழுதிக்கொடுத்தநாள், எந்த நாளோ, அன்றையதினமே தொண்டரான நாங்களும் எங்கள் கிரகங்களிலுள்ள புத்திரபவுத்திராதிகளும், அகங்காரத்தையும் அகங்காரகாரயமான ஐசுவரிய கைவலியங்களையும் விட்டு ஈடேறினோம். நலலநாளான ரோஹிணீ நக்ஷத்திரத்திலே ஸ்ரீவடமதுரையில் திருவவதாரஞ்செயது, வந்தெதிர்க்த சத்துருக்களாகிய நரகஜராஸந்தாதிகளை விலவளைததுப பொருது தொலைததும, ஐந்து விரிந்த படங்களையுடைய காளியனென்னும கொடியபாம்பினை அதன் தலையிற்குதித்து அழித்தருளின் கண்ணனே! உனக்கு இடைவிடாது மஙகளாசாஸனம் பண்ணுவோம் யாம்.

---

[1] எழுத்துப்படட - இச்சம்சாரததிலே தாஸ்யப்பிரகாசம் ஆவது துர்லபம் - எனறு காட்டுகிறது.

[2] அந்நாள் - அதற்குமுன்பு எங்களிடம் யாதொரு ஆநுகூல்ய லேசமும் உண்டாயிருக்க வில்லையென்கிறார்.

[3] அடிக்குடில் - "நல்லபதத்தால் மனைவாழ்வார்" என்றாற்போல, புத்ரபவுத்திராதிகளளவும் ஸ்வரூப ஞானம்பிறந்தபடி சொல்லிற்று; அது எப்படி என்றால் முத்துப்பட்ட துறையைக் காவலிடுமவன் அசல் துறையையுங்காவலிடுமாப்போலே, ஸ்வஸம்பந்த ஸம்பந்திகளளவும் எம்பெருமான் விஷயீகரித்தான் என்பது தோற்றுகிறது.

[4] உய்ந்ததுகாண் - என்று அறியாதார்க்கு அறிவிப்பதுபோலச் சொல்லவேணுமோவென்றால், உபகரித்து விஸ்மரித்துப்போவது உனது ஸ்வபாவம். அவ்வுபகாரத்தைப்பெற்ற அடியோம் மறவாதிருப்பது எமது கடமை என்று ஆழ்வார் அறிவிப்பதாயிற்று.

அல்வழக்கொன்றுமில்லாவணிகோட்டியாகோனபிமானதுங்கன
செல்வனைப்போலத்திருமாலே நானுமுனக்குப்பழவடியேன்
நல்வகையால்நமோநாராயணவென்றுநாமம்பலபரவிப்
பல்வகையாலும்பவித்திரனேயுன்னைப்பல்லாண்டுகூறுவனே. (14)

(பதவுரை.)

அல்வழக்கு - தப்பான வழக்குகள்
ஒன்றும் - யாதொன்றும்
இல்லா - இல்லாத
அணி - அழகான
கோட்டியர் - திருக்கோட்டியூர் உள்ளாரக்கு
கோன் - தலைவராய்
அபிமான துங்கன் - அபிமாநத்தாலுயர்ந்தவரான
செல்வனைப்போல - செல்வநம்பியைப்போல
திருமாலே - ச்ரிய: பதியான ஸ்வாமியே
நானும் - சேஷபூதனான அடியேனும்
உனக்கு - சேஷியானவுனக்கு
பழ அடியேன் - பழையவடியேனாகையாலே
நலவகையால் - நல்ல உபாயத்தால்
நமோ - நானெனக்குரியேனல்லேன்
நாராயணா என்று - ஸர்வஸாமியே என்று
நாமம் பலபரவி - உன் திருநாமங்களைச்சொல்லி
பல்வகையாலும் - ஸர்வப்ரகாரத்தாலும்
பவித்திரனே - பரிசுத்தனானவனே
உன்னை - உனக்கு
பல்லாண்டு - மங்களாசாஸனம்
கூறுவன் - பண்ணுகிறேன்
ஏ - அசை.

(பொழிப்புரை.)

சரியஃபதியான ஸ்வாமியே! தப்பான வழக்குகள் யாதொன்றுமில்லாத அழகமைந்த திருக்கோட்டியூர் நகருள்ளாரக்குத் தலைவராய் 'தான் எம்பெருமானுக்கே அடியன்' என்ற அபிமானத்தாலுயர்ந்தவரான செல்வ நம்பியைப்போல, சேஷபூதனான அடியேனும் சேஷியானவுனக்குத் தொன்றுதொட்டு அடிமைபூண்டவன். ஆதலால் விலக்ஷணமான இவ்விதத்தால, 'நான் எனக்கு உரியேனல்லேன்; ஸர்வஸ்வாமியே'! ஸர்வவிதத்தாலும் பரிசுத்தனானவனே! என்று உன்திருநாமங்களையெல்லாம் வாயார வாழ்த்தியுனக்கு மங்களாசாஸனம் பண்ணுகிறேன்.

---

[1] அல்வழக்கு - வழக்கு அல்லாதன—அவையாவன.

1. தேகத்தில் ஆத்துமபுத்திபண்ணுகை.
2. ஆத்மவஸ்துவை ஸ்வதந்திரனென்று அநுஸந்திப்பது.
3. தேவதாந்தரங்களில் பரத்வபுத்திபண்ணுகை.
4. பகவத்பஜநத்துக்கு பலம் பிரயோஜநாந்திரம் என்றிருக்கை.
5. பகவதநுபவத்தை 'மமேதம்' என்றிருக்கை—இவைவழக்கல்ல.

[2] செல்வன்-ஸ்வரூப பிராப்தமான ஐசுவரியத்தால் குறைவற்றிருப்பவன்.

[3] பழவடியேன் - பழமையாவது உனக்கு சேஷித்வம் அநாதியானாற்போல எனக்கும் சேஷத்வம் அநாதி யென்கை.

[4] நல்வழியால்நமோ நாராயணவென்று- "நமோ நாராயணாயேதி மந்த்ர: ஸர்வார்த்தஸாதக: |" என்று.

[5] கூறுவனே - என்ற ஒருமையால் கீழ்ச்சொன்ன புருஷார்த்திகள் மூவராலும் - தாமே திருப்பல்லாண்டு பாடுகிறார். மூவராவது - பகவச்சரணார்த்திகளும், கேவலரும், ஐசுவரியார்த்திகளும்.

*பல்லாண்டென்றுபவித்திரனைப்[1]பரமேட்டியைச்சார்ங்கமென்னும்
வில்லாண்டான்றன்னைவில்லிபுத்தூர்விட்டுசித்தன்விரும்பியசொல் ।
நல்லாண்டென்று[2] நவின்றுரைப்பார் நமோநாராயணாயவென்று,
பல்லாண்டும்[3] பரமாத்மனைச்[4]சூழ்ந்திருந்தேத்துவர்[5]பல்லாண்டே.)
(15)*

(பதவுரை.)

- பல்லாண்டு என்று - 'பல்லாண்டு' என்பதாக
- பவித்திரனை - பரிசுத்தனாய்
- பரமேட்டியை - பரமபதவாஸியாய்
- சார்ங்கமென்னும் - ஸ்ரீசார்ங்கமென்கிற
- வில் ஆண்டான் தன்னை - வில்லைத்திருக்கையில்தரித்திருக்கிற ஸர்வேசுவரனை
- வில்லிபுத்தூர் - ஸ்ரீவில்லிபுத்தூரிலவதரித்த
- விட்டுசித்தன் - பெரியாழ்வார்
- விரும்பிய - அன்பாலருளிச்செய்த
- சொல் - பாட்டுகளை
- நல்லாண்டு என்று - நல்லஸமயமென்று
- நவின்று - பொருளறிந்து
- உரைப்பார் - சொல்லுபவர்
- நமோநாராயணாயவென்று - 'நமோநாராயணாய' வென்பதாக
- பல்லாண்டும் - காலமுள்ளளவும்
- பரமாத்மனை - புருஷோத்தமனை
- சூழ்ந்திருந்து - சூழவிருந்து
- ஏத்துவர் - துதிப்பர் (பாடுவர்)
- பல்லாண்டு - மங்களாசாஸனத்தை
- ஏ - ஈற்றசை.

(பொழிப்புரை.)

எல்லாவிதத்தாலும் பரிசுத்த ஸ்வபாவனாய் ஸ்ரீவைகுண்டத்தில் நித்தியவாஸஞ்செய்தருளுமவனாய் ஸ்ரீசார்ங்கமென்னும் வில்லைத்திருக்கையில் தரித்த ஸர்வேசுவரனை, ஸ்ரீவில்லிபுத்தூரிலவதரித்த பெரியாழ்வார், 'பல்லாண்டு' (வாழி) என்று அன்பு கூர்ந்தருளிச்செய்தவிப்பாட்டுக்களை அநுசந்திக்கும் வேளையே ஸபலமான வேளையென்று நினைத்துப் பொருளறிந்து காலக்ஷேபம் செய்பவர், நமோநாராயணாயவென்று புருஷோத்தமனைச் சூழவிருந்து காலதத்துவமுள்ளளவும மங்களாசாஸனம் பண்ணும்படியான நித்யமான பதவியைப் பெறுவர்கள்.

---

[1] பவித்திரனை - சேதநாசேதநங்களில் வியாபித்தாலும், தத்கத தோஷம் ஸ்பர்சியாதொழிகையும், நித்யஸம்ஸாரிகளை நித்யசூரிகளோடே சமமாக்கும்படியான பாரிசுத்த்யமும் சொல்லுகிறது.

[2] நல்லாண்டென்று - இப்பாசுரஞ்சொல்லுகைக்கு ஏகாந்தகாலமென்று, "[illegible]" என்னும்படி, கொண்டாடி.

[3] பல்லாண்டும் - யாவதாத்மபாவி (காலபரிணாமமில்லாத பரமபதத்தில் விவகரிக்கப்படுகிறது.

[4] பரமாத்மனை - தனக்குமேலின்றிக்கே, தன்னையொழிந்தாரடங்கத், தனக்கு ஸ்வாதீனமாம்படியிருக்கிறவனை.

[5] சூழ்ந்திருந்தேத்துவர் - "[illegible] ।" என்று துதிப்பர்.

இப்படி கால்வாங்கவொண்ணாத வடிவழகு, அதிசங்கையை விளைத்து மங்களாசாஸனத்திலே மூட்டும்.

[illegible]

வாழித்திருநாமம்.

நல்லதிருப்பல்லாண்டு நான்மூன்றேன் வாழியே
நானூற்றறுபத்தொன்று நமக்குரைத்தான் வாழியே
சொல்லரியவானிதனிற் சோதிவந்தான் வாழியே
தொடைசூடிக்கொடுத்தாளைத் தொழுந்தந்தை வாழியே
செல்வநம்பிதனைப்போலச் சிறப்புற்றான் வாழியே
சென்றுகிழியறுத்துமால் தெய்வமென்றான் வாழியே
வில்லிபுத்தூர்நகரத்தை விளங்கவைத்தான் வாழியே
வேதியர்கோன் பட்டர்பிரான் மேதினியில் வாழியே.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

நித்தியாநுஸந்தானம்

இரண்டாம்பிரிவு.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய

வேதார்த்தஸாரமாகிய

திருப்பள்ளியெழுச்சி.

இதற்கு

பூர்வாசாரியர்கள்செய்தருளிய வியாக்கியைகளுக்கிணங்க

வித்வான்களான

திருக்குடந்தை - ஸ்ரீமான். கு. திருமலாசாரியராலும்,

கோலார்

பிரதிவாதிபயங்கரம் - ஸ்ரீமான். வேங்கடாசாரியராலும்

பரிசோதித்து,

கோலார், ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர்,

மண்டயம். பி. ஸ்ரீநிவாஸய்யங்கார், எம். ஏ.,

அவர்களால்

சென்னை :

ஊ. புஷ்பரதசெட்டி அண்டு கம்பெனியாரது

கலாரத்நாகரம் என்னும் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1898

தொண்டரடிப்பொடியாழ்வார்

பிரபாவச்சுருக்கம்.

திருக்குடந்தைக்கு மேற்குதிக்கில் ௬-௭-நாழிகைவழி தூரத்திலுள்ள, திருமண்டங்குடியென்ற வூரில் தொண்டரடிப்பொடி யாழ்வார், கலி - ௨௮௯-வதான பிரபவ௵ மார்கழி௴ கிர்ஷ்ணபக்ஷம், சதுர்தசி, செவ்வாய்க்கிழமை கூடின கேட்டை நக்ஷத்திரத்தில், ஸ்ரீவைஜயந்தீ வநமாலிகா அம்சராய், வேதியர் குலத்தில் அவதரித்தருளினார். அவருக்கு ஞானபக்தி வைராக்கியங்கள் விசேஷித்திருந்தபடியால், விப்ரநாராயணன் என்று திருநாமம். அவர்க்கு சிறுநாளில் சவுளோப நயநாதிகள் எல்லாம் முறையாய் நடந்தது. வேதசாஸ்திரம் முதலான அகில வித்யைகளிலும் பாரங்கதரா யிருந்தார். அவர் இல்லறம் பூண்டிருந்தவராயினும், மஹா வைராக்ய ஸம்பன்னர், ஒருமுறை திருவரங்கம்சென்று பரமபத நாதனை அழகிய மணவாளனைத் திருவடித்தொழுதபோது, ஆழ்வாருக்குத் தம்பக்கலில் நிரதிசய பக்தியுண்டாகும்படி திருவரங்கச்செல்வனார் விசேஷ கடாக்ஷம் பண்ணியருளினார். பிறகு திருவரங்கமாநகரிலிருந்துகொண்டு, திருவின் மணாளனை ஸர்வஸ்வாமிக்குத் திருமாலைகட்டிச் சாத்தித் திருநந்தவன கைங்கரியத்தில் ஊற்றமாயிருந்தார். ஒருநாள் ஆழ்வார் திருநந்தவனத்தில் திருத்துழாய் முதலானவற்றுக்குத் தண்ணீர் பாய்ச்சிக்கொண் டிருக்கும்போது, தேவ தேவியென்ற ஒரு விலைமகள் அவள் தமக்கையுடன் சோழராஜன் சபையினின்றும் தன்னகத்துக்குத் திரும்பிப்போகும் மார்க்கத்தில், ஆழ்வாருடைய திரு நந்தவனத் தருகேவந்து சற்றுநேரம் இளைப்பாற நின்று, பார்த்தபோது ஆழ்வார் மிக விரக்தராயிருப்பதை நோக்கினாள். அப்பொழுது தேவதேவியைப் பார்த்துத் தமக்கையானவள், "நீ யிவரை யுன்னுடைய விப்ரம ஸரஸோல்லாஸங்களால் வசப்படுத்துவாயானால் உனக்கு நான் ஆறுமாசம் தாதியாகிறேன்" என்னக்கேட்டு தேவதேவி "அப்படி நான் செய்யாவிடில் உனக்கு ஆறுமாதம் தாதியாகிறேன்" என்று பிரதிஞ்ஞை கூறினாள். உடனே தேவதேவி, வேறுவேஷங்கொண்டு திரு நந்தவனத்துள்ளிருக்கும் ஆழ்வாரிடம் சென்றுத் தண்டனிட்டு, "உமது திருவடிகளில் பணிவிடைசெய்து ஈடேறலாமென வந்தேன்" என்றாள். ஆழ்வார் இவள்செய்யும் மாயத்தையறியாது அவ்வார்த்தைக்கு இசைந்து தமது மாதுகராந்நத்தின் மிகுதியை நாடோறும் அவளுக்கிட்டு நந்தவனத்தில் கைங்கரியத்தில் நியோகித்தார். சிலமாதங்கள் சென்றபோது ஒருநாள் பெருமழை பொழிந்தது. அப்போது ஆழ்வார் தமது பன்னசாலைக்குள் ளிருந்துகொண்டு, தேவதேவி புறம்பே மழையில் நிற்கின்றனளே என இரங்கி, அவளை யாழ்வார் உள்ளேயழைக்க; தேவதேவிவந்து தனது கருத்

தை முடிப்பதற்கு இதுவே நற்சமயமெனத் தீர்மானித்து தனது சரஸ்ஸல்லாபத்தால் அவரை மோகிக்கச்செய்துத் தன்வசப் படுத்தினாள். ஆழ்வாரும் வரவர மோகவலையு ளகப்பட்டு திருமாலை கைங்கரியம் ஒழிந்தவேளையெல்லாம் அவள் வீட்டுக்கே செல்லத் தலைப்பட்டார். இப்படிச் சிலகாலத்துள்ளேயே அவர் கைப்பொருளெல்லா மொழிந்து வறண்டுபோக ஒருநாள் விலைமகளான தேவதேவி அவரை வீட்டைவிட்டு வெளியே தள்ளிவிட்டாள்; அப்படியும் அவள் வீட்டுத் திண்ணையைவிட்டு விலகாமல் தலையை மூடிக்கொண்டுப் படுத்துக்கொண்டிருந்தார். இப்படியிருக்கும் அவஸ்தையைப் பெருமாளும் பிராட்டியும் சேர வெழுந்தருளி, க்கண்டு, இதுக்கோர் முடிவுசெய்யத் திருவுளம்பற்றி யருளவேணுமென்று பிராட்டி பெருமாளைப்பிரார்த்திக்க, அதை ஸர்வஸ்வாமியான எம்பெருமான் அங்கீகரித்து, அதற் குடன்பட்டு, தனது ஸன்னிதியிலிருந்து ஓர் தங்கவட்டிலை எடுத்துக்கொண்டு தானேவந்து, விப்ரநாராயணன்கொடுக்கச்சொன்னான் என்று தேவதேவியென்றதாஸியிடத்தில் கொடுத்துவிட்டு, ஆழ்வாரிடத்திலும் வந்து "அவள் உள்ளே அழைக்கிறாள்" எனச் சொல்லிவிட்டுத் தனது கோயிலுக்கு எழுந்தருளினான். ஆழ்வாரும் தாஸிவீட்டினுள்ளேசென்று அவளுடன் கூடிச்சுகித்தார். மறுநாட் காலமே, ஸன்னிதியில் தங்கவட்டில் களவுபோனதாகத் தெரியவந்தது. நிசுளாபுரேந்திரனை சோழராஜன் அதைக்கேள்வியுற்று, வட்டிலுக்காகத் தேடச்சொல்லி கடைசியாய் தேவதேவி வீட்டில் அகப்படக்கண்டு அவளையும் ஆழ்வாரையும் சிறைப்படுத்தினான். பிறகு ஒருநாள் ஆச்ரித வாற்சல்யனான அழகிய மணவாளன் அவ்வரசன் கனவிற்சென்று "ஆழ்வார் குற்றவாளி அல்லர், அவர் பிராரப்தகருமம் இப்போதே முடிந்து போகட்டுமென்று, நாமே நமது வட்டிலைக் கொண்டுபோய்க் கொடுத்தோம், அவரை விட்டுவிடு" என்று நியமிக்க அவன் இவரைச் சிறையிலிருந்து விடுவித்தான். அப்பால் ஆழ்வார் புந்தி திருந்தி வழிபட்டு "மாதரார் கயற்கண்ணென்னும் வலையுட்பட் டழுந்துவேனை" என்று சொல்லி மனநைந்துருகி, "ஊரிலேன் காணியில்லை...... காரொளி வண்ணனே க்கண்ணனே கதறுகின்றேன்" என்று அநவரதந் திருமால்மேல் நின்ற சிந்தையராய் அழகிய மணவாளனுக்குத் திருமாலைகட்டிச் சாத்தித் திருநந்தவன கைங்கரியம் விடாது செய்துகொண்டு, சடு - பாசுரத்தால் திருமாலையென்ற பிரபந்தத்தையும், பத்துப் பாசுரமுள்ள திருப்பள்ளியெழுச்சியையும், திருவாய் மலர்ந்தருளி உலகத்தை வாழ்வித்தருளினார். தீவினைகளனைத்தையும் வேருடனறுத்துத்துடைத்து உய்வதற்கு, எம்பெருமான் நமரடிகளி லொட்டிய தூசியைத் தலைமேற்கொள்ளலே தக்கபிராயச்சித்தமென மனதிற்கொண்டவராதலால், 'தொண்டரடிப்பொடி' என்றதையே தமது திருநாமமாக உகந்தருளினார்.

ஸ்ரீ

திருப்பள்ளியெழுச்சி

முகவுரை.

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த திருப்பள்ளியெழுச்சி யென்ற இப்பிரபந்தத்தை யநுஸந்தித்து அதன் அர்த்தவிசாரஞ் செய்யத் தொடங்குவதற்குமுன், முதல் முதல் அதில்கூறப்படும் ஸ்ரீரங்கநாதன் யாரென்றும், அவனுக்கும் நமக்கும் உள்ள சம்பந்தம் யாதென்றும், இவ்விஷயத்தை யிப்போது ஆராயத்தக்கது ஆவசியகந்தானா வென்பதையும், இவைகளை யறிவதினால் நாம் பெறும் பேற்றையும், அதற்குத்தக்க உபாயங்களையும் பற்றி இங்கு சற்று விசாரிப்போம். யாதெனில் மனிதர் இவ்வகையாராய்ச்சிகளில் மனது ஒடுங்கிச் சிந்தித்துப்பார்த்துத் தேர்ச்சியுற்றுத் தெளிவதுநலம். ஏனெனில் மாறிமாறிவரும் பலவகைப் பிறவிகளிலும் இம்மானிடப்பிறவி கிடைப்பது மிக்கவரிது, கிடைப்பினும் பேற்றையடைவதற்கு முயலும் ஞானம் பிறப்பது அதனினும் அரிதரிது. நல்லது, சற்றுப் பொறுத்து விசாரிப்போமென்றாலும் 'நின்னின்னிலையில மன்னுயிராக்கைகள்' என்றும் சான்றோர் கூறுகின்றமையால் இப்போதே ஆராயப்புகுவது அதியாவசியகம். முதலில் நித்யவிபூதியிலுள்ள பரவாஸுதேவனாகிய பரப்பிரம்மமே இந்த அணியரங்கன் என்று காட்டுவதற்காக அடியில்வரும் பரமபத பரப்பிரம்மவிசாரங்கள்செய்யப்படுகிறது. அதாவது:—

பரமபுருஷார்த்தமாகிய வீட்டின்கண் ஆசையுற்ற முமுக்ஷுக்களாகிய யோகிகளுக்கு த்யேயனாய், பரமகதியாய், அக்ஷரமாய், பரஞ்சோதி ஸ்வரூபனாய் அகிலோபநிஷத்துக்களிலும் பிரதிபாதிக்கப்படுமவனாயுள்ள பரவாஸுதேவனாகிற பரப்பிரமத்தைத் தியானித்து அடையத்தக்க சேதநர்கள் அளவிறந்திடையறாதுவரும் பிறவிக்குக் காரணமாகிய வித்தை வறுத்தழித்து, மறுபடியும் திருப்புதலில்லாத சாசுவத பரமபதத்தில் என்றென்றும் வரம்பின்பமுடையராய் வீற்றிருப்பர் என்று கூறப்படுகிறது. அப்படிப்பட்ட வைஷ்ணவமாகிய பரமபதத்தின் லக்ஷணம் ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் கூறியிருப்பது எங்ஙனமெனில்,

“நிவ்ருத்தவாஸநாவேத்யம் ஹ்ருஷீகாதீந்த்ரியைஸ்ஸதா ।
ஸ்வஸம்வேத்யவிஷயம் ஸர்வாதீந்த்ரியலக்ஷணம் ॥

ப்ரஶாந்தமபயம் ஶுத்தம் துர்விபாவ்யமஸம்ஶ்ரயம் ।
விஷ்ணுஜ்ஞாநமயஸ்யோக்தம் தஜ்ஜ்ஞாநம் பரமம் பதம் ॥
தத்ர ஜ்ஞாநநிரோதேந யோகிநோ யாந்தி யே லயம் ।
ஸம்ஸாரகர்ஷணோப்தௌ தே யாந்தி நிர்பீஜதாம் த்விஜ ॥
ஏவம்ப்ரகாரமமலம் நித்யம் வ்யாபகமக்ஷயம் ।
ஸமஸ்தஹேயரஹிதம் விஷ்ண்வாக்யம் பரமம் பதம் ॥
தத்ப்ரஹ்ம பரமோ யோகீ யதோ நாவர்த்ததே புந: ॥

௧-வது அம்ஶ, ௨௨-வது அத்தி, ௪௯-௫௩ ஶ்லோகங்கள்.

(இதன்பொருள்.) ஞானமயனை விஷ்ணுவினுடைய ஞானரூபபரமபதமானது முயற்சி வேண்டாததாயும், ஒருவராற் கற்பிக்க வேண்டாததாயும், எங்குமொழிவற நிறைந்து நின்றதாயும், ஒத்ததிலதாயும், அபரோக்ஷமாய்த் தனக்குத்தானே விளங்கி ஸாக்ஷாத்கரிக்கத்தக்கதாயும், தன்னிலையிற்றானே யுளதாயும், கூறற்குரிய குறிப்பற்றதாயும், ஒடுக்கமுடையதாயும், அச்சமிலதாயும், தூயதாயும், எவ்விதபாவனைக்கு மெட்டாததாயும், பற்றிலதாயுமுள்ளபடி யிராநின்றது. அப்படிப்பட்ட பரமபதத்தில் உட்பற்று புறப்பற்றனைத்தையு மறுத்து எந்தயோகிகள் ஒன்றி யொடுங்குகிறார்களோ, அவர்கள் பிறவியாகிறவிதையைத் தீய்த்துவிடுகிறார்கள். இந்தப்படி குற்றமற்றதாயும், என்றுமுளதாயும், முற்றவுநின்றதாயும், அழிவற்றதாயும், எவ்வித வேறுபாடிலதாயும், இருக்கிற விஷ்ணு என்ற பெயரையுடைய உயர்ந்தநிலையான பரப்பிரமத்தை யடைகிற பரமயோகியானவன் திரும்பப் பிறவியென்னும் பெருஞ்சுழலையுள் ளகப்படமாட்டான்.

அப்படிப்பட்ட ஸர்வவேதாந்தப் பிரதிபாத்தியமான பரப்பிரமத்தை யடைவதற்கு சாதனமான உபாஸனையைச் செய்யவேண்டி, அப்பரப்பிரமமானது இரண்டுநிலைமை யுடையதென்று கூறப்படுகின்றது. அவற்றுள் ஒன்று மூர்த்தம்.—அதாவது வெளிப்படை; மற்றொன்று அமூர்த்தம்.—அதாவது உள் தேட்டம். மூர்த்தம் நசுவரமானது; அமூர்த்தம் சாசுவதமானது. இவ்விரண்டுநிலைமையும் எங்கும் நிறைந்துளது. ஆகிலும் பிராணிகோடிகளில் தாரதம்மியம் காணப்படுகிறதே அது எப்படியெனில், ஓரிடத்திலெரிந்துகொண்டிருக்கிற நெருப்பானது சுவாலையின் உஷ்ணமும் வெளிச்சமும் அந்நெருப்பின் அருகில் மிகுதியாயும், தூரத்தில் போகப்போகக் குறைவாயுமிருப்பதுபோல பரப்பிரமத்தின் சக்தியினுடைய வியாபகத்தின் ஏற்றத்தாழ்ச்சியால் அல்லது தூரஸமீபங்களால் ஸர்வவஸ்துக்களுக்கும் ஏற்றத்தாழ்ச்சிகாணப்படுகிறது. அதன் விவரமாவது, பிரமன் விஷ்ணு சிவன் மூவரும் பரப்பிரமத

தின் முக்கியமான சக்தியைப்பெற்றவர்கள்; அவரினும் தாழ்ந்தவர் மற்றைத் தேவர்கள்; அவரிலும் மனிதர், விலங்குகள், பாம்புகள், பறவைகள்; அப்பால் மரம், புல், பூண்டு, செடிகள். இவைகளெல்லாம் பரப்பிரமசக்தியின் வியாபகத்தை தூரத்தில்போகப்போகக் குறைவாயுடையவைகள். இதைக்குறித்து விஷ்ணுபுராணத்தில் கூறப்படுகிறது யாதெனின்.

> த்வே ரூபே ப்ரஹ்மணஸ்தஸ்ய மூர்த்தம் சாமூர்த்தமேவ ச ।
> க்ஷராக்ஷரஸ்வரூபே தே ஸர்வபூதேஷ்வவஸ்திதே ।
> ஏகதேசஸ்திதஸ்யாக்நேர் ஜ்யோத்ஸ்நா விஸ்தாரிணீ யதா ।
> தத்ராப்யாஸந்நதூரத்வாத் பஹுத்வஸ்வல்பதாமய: ।

வி. க-வது அம், உஉ-வது அத்தி. ருச-ருரு சுலோ.

அநிர்வசநீயமான அப்பரப்பிரமத்தின் ஓர்வடிவமாயும், அதின் ஸர்வசக்தியையும் பூர்ணமாயுடையவனே திருமால் (ஸ்ரீவிஷ்ணு); அஃதெப்படியெனில்.

> ஸர்வசக்திமயோ விஷ்ணு: ஸ்வரூபம் ப்ரஹ்மணோऽபரம் ।
> மூர்த்தம் யத்யோகிபி: பூர்வம் யோகாரம்பேஷு சிந்த்யதே ॥

(இதன்பொருள்) பரப்பிரம்மமே தன்சத்திமுழுமையும் திரட்டித் திருமால் (ஸ்ரீ விஷ்ணு) வடிவமான வேறோர் உருக்கொண்டதாக தெரியத்தக்கது. அந்த வடிவத்தை யோகிகள் யோகத்தின் தொடக்கத்தில் தியானிக்கிறார்கள். மூர்த்தமாவது ஸ்தாவர ஜங்கமாத்மகமாய், நசுவராநசுவரமாய்க் காணப்படுகிற பிரபஞ்சம் முற்றவும் தனக்குச் சரீரமாக்கிக்கொண்டு இந்த விசுவத்தையே ரூபமாகவுடையவன்; இப்படிப்பட்ட விசுவரூபத்தையே யுத்தசமயத்தில் ஸ்ரீகண்ணபிரான் அர்சுனனுக்கும், அதற்குமுன் திருதராட்டிரன் சபையில் உள்ளார்க்கும் காட்டினது.

> தத்ரைக க்ருத்ஸ்நம் ப்ரவிபக்தமநேகதா ।
> அபஶ்யத் ய ஶரீரே பாண்டவஸ்ததா ॥

ப-கீ. கக-கங.

இந்த ஸ்ரீ அகிலஜகத்துக்களையும், ஸ்வயம் அருணனுயி
வும், சத்துவ ர ன்கிற முக்குணத்தையும் வெவ்வேறு சமயங்
ளிற் சேர்ந்து குணங் தலையெடுத்தபோது விரிஞ்சியாகிற
ரூபத்தை ய யும், சத்துவகுணங் தலையெடுத்தபோது

· மேலேவிவரித்துக் கூறியது.

விஷ்ணுவாய்க் காத்தலையும், தமோகுணம் தலையெடுத்தபோது ருத்ர முதலானவர்களாய் அழித்தலையும் செய்துவருகிறான். இவ்வர்த்தத்தை,

[illegible] ।

[illegible] ।

வி-பு. க-வது அம். உஉ-வது அத். ௬௪-வது ச்லோகத்தில் கூறப்படும்

அன்றியும் ஸ்ரீ வைகுண்டனான ஸ்வாமியே. க்ஷரமாயும் அக்ஷரமாயுமிருக்கும் இவ்வுலகத்தை அனைத்தையும், தனக்கு ஆபரண ரூபமாயும் அஸ்திரசஸ்திர ரூபமாயும் தரித்துக்கொண்டு, இப்படி திவ்ய ஸ்ரக் வஸ்த்ராபரண பூஷிதனாய், தனக்கு உள்ளபடி இவ்வாகாரம் இல்லாவிடினும், சேதநரும் இப்படிப்பட்ட ஸ்வரூபத்யானம் முதலானவைகள் செய்து அதின்மூலமாய் பரப்ரம்மமான தன்னையடைந்து க்ஷேமமடைவரென்று உள்ளம்பற்றி இப்படி திவ்யமங்கள விக்ரஹத்தைப் பரிக்ரஹம் பண்ணினான், எங்ஙனே யெனில்.

[illegible] ।

[illegible] ।

[illegible] ।

[illegible] ॥

விஷ்ணு - பு. அம் - ௧. அத் - உஉ. ச்லோ - ௬௪, ௭௦

(இவற்றின் பொருள்) கார்ய காரண ஸ்வரூபனான எம்பெருமான் புருஷப்ரதானாத்மகமான இப்ரபஞ்சத்தைத் தனக்கு ஆபரணங்களாகவும் அஸ்திரங்களாகவும் தரித்திருக்கிறான். உபாஸகர்க்கு ஸர்வபுருஷார்த்த ஸித்தியும் உண்டாக்கக்கருதி, உண்மையில் தனக்கு யாதொரு உருவமும் இல்லாதிருந்தும், தனக்கு அஸ்த்ரமாயும் பூஷணம் முதலானவைகளாயும் தன்னைச் சார்ந்திருக்கிற அகிலப்ரபஞ்சத்தையும் தனக்கு ... மயமாக்கிக்கொண்டு விளங்குகிறான்.

ஸ்ரீய꞉ பதியானவன் க்ஷராக்ஷரமயன் (... அழியாததும்) என்னப்படுகிறது. அதாவது க்ஷர அக்ஷர ம... ...என்று பொருள் படில், ஒன்றுக்கொன்று விரோதமான இரண் ... ...டத்திற் கூடுதலுண்டோ? வென்றால் அயனூருக்கு அனுப் ... ...கச் சந்திரகத்தின்(தபாலின்) மேல்விலாஸமானது கழிபட ... ...னும் விலாஸக் காரணைப்பார்த்து, எப்படி "உள்ளோபார் ... ...சேர்ந்த அந்த ரங்கமானவிஷயங்களிருக்கிறது" என்று ... ...மன்றி, உள்

தின் முக்கிருக்குங்காரணத்தை மறைத்து இரக்ஷித்துக்கொண்டு, தான் காரிய தேவர் என்று, உபதேசிக்கிறதோ அப்படியே பரப்பிரமஸத்தையால் விளங்கு று நசுவரப்பிரபஞ்சமானது தனக்குள் மறைந்துநிற்கும் அக்ஷரமானகாரணத் தைக் காட்டுகிறதற்காகவே பலமுறை தோன்றி மறைகிறது. ஆனால் எம்பெ ருமான் இப்படிப்பட்ட விக்ரஹத்தை யுபாஸகர்க்காகத் தரிக்கிறானென்றும், அவன் உண்மையில் யாதொருவடிவமு மில்லாதவனென்றும், மாயாரூபியென் றும் சொல்லுகிறபடியால் விக்கிரகரூபியான அவனை வணங்குவதில் பிரயோஜ னம் யாது? பொய்ம்மையான வடிவத்தைத்தியானித்து அல்லது உபாஸித்துப் பெறத்தக்க நன்மையுளதோ? பெறும்பயனும் பொய்யேயாகுமே! ஆதலால் ஸத்யமாய் அரூபமா (அமூர்த்தமா) யுள்ள பரப்பிரமத்தையேயன்றோ 'உபா ஸிக்கவேண்டும்'' என்றால். நல்ல மாதுரியமுள்ள சர்க்கரையால்செய்த திருப் பணியாரமானது ஆனை குதிரை தேர்முதலிய வடிவமுடையதாயினும், அதை யுபாஸிக்குமவர்கள் அதாவது அதைவிரும்பிக்கட்டி வாயிற்போடுமவர்களு க்கு தன் நைஸர்கிகமான தித்திப்பையேதரும். ஆனை குதிரை தேர்முதலிய (மிட்டாயி) வடிவமானது சர்க்கரையையே ஸத்தாகவும் ஆதாரமாகவும் உடைத்தாய் விளங்குகிறபடியால் அதை யுட்கொள்பவர்க்கு சர்க்கரைகிடைப் பதில் சந்தேகமில்லை. அன்றியும் இதேவிஷயத்தை வேறோர் திருஷ்டாந்தத் தால் உறுதியாக்கப்படுகிறது. அதாவது சுவரின்மேல் கறுப்பு சிகப்புமுத லிய பற்பல வர்ணங்கள்கொண்டு எழுதிய சித்திரமானது, உண்மையில் சுவ ரை யாதாரமாய்க்கொண்டு அதைமறைத்துத் தானே விளங்குகிறது. ஆகி லும் அச்சித்திரத்தை விருப்பத்துடன் பலமுறை கட்டியதன் சவுந்தரியாதி களை யநுபவித்து, நெருங்கியொருவன் அதைக் கையாற்பற்றி யாலிங்கனஞ் செய்வானேயானால் உண்மையி லவனகைக்குச் சுவர் அகப்படுமல்லவா? அது போல் மூர்த்தஸ்வரூபத்தை யுபாஸித்தால், அது அமூர்த்தத்தைவிட்டு வே றன்றாகையால், அக்ஷரமாகிய பரமபதங்கைகூடுவதில் சந்தேகமேயில்லை. ஆகையால் ஒரு பிரமமே உள்ளே அமூர்த்தமாயும், வெளித்தோற்றத்துக்கு மூர்த்தமாயும் விளங்குகிறதென்கிற கருத்தையே "ஏகோபி ஸந் ஹரிணஸ் ஸ்வ" ஸ்ரீவிஷ்ணுபுராணங் கூறிற்று.

... ஸம்ஜ்ஞகம் அக்ஷரமாய், அநிர்தேச்யமாய், அமூர்த்தமாயுள்ள அவ்யக்த பரப்பி... வடிவம் ... பத்தையே யுபாஸிக்க லாகாதோ? வென்றால், அவ்வுபா ஸனை ... ர்சிகளுக்குங்கூட பாவிக்க முடியாத தாயும், மிக்கவருத் தத்தா... விஷ்ணுவே ... தக்கதாயு மிருக்கின்றது. அளவிறந்த துன்பத்தைப் பட்டு ... னையா லடையத்தக்கபேறும், எளிதில் ஸமூர்த்த மான ... அடையத்தக்க பேறும் முடிவில் ஒன்றேயாய்

விடில், ஸூமரஹிதமாய், சுலபமாய், சிந்த்யமாய், கல்லாதார் கற்றுணர்ந்தார் யாவரும் உபாஸிக்கத் தக்கதாயு முள்ள ஸ்ரூபோ பாஸனையை யேன் செய்யலாகாது? ஸாக்ஷாத் ஸ்ரீகண்ணபிரானே கீதையில்.

“𑌯𑍇 𑌤𑍍𑌵𑌕𑍍𑌷𑌰𑌮𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑍍𑌯𑌮𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ।
𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑌗𑌮𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌂 𑌚 𑌕𑍂𑌟𑌸𑍍𑌥𑌮𑌚𑌲𑌂 𑌧𑍍𑌰𑍁𑌵𑌮𑍍 ।
𑌸𑌨𑍍𑌨𑌿𑌯𑌮𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌗𑍍𑌰𑌾𑌮𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌸𑌮𑌬𑍁𑌦𑍍𑌧𑌯𑌃 ।
𑌤𑍇 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍁𑌵𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌮𑍇𑌵 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌹𑌿𑌤𑍇 𑌰𑌤𑌾𑌃 ।
𑌕𑍍𑌲𑍇𑌶𑍋𑌽𑌧𑌿𑌕𑌤𑌰𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌮𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌸𑌕𑍍𑌤𑌚𑍇𑌤𑌸𑌾𑌮𑍍 ।
𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾 𑌹𑌿 𑌗𑌤𑌿𑌰𑍍𑌦𑍁𑌃𑌖𑌂 𑌦𑍇𑌹𑌵𑌦𑍍𑌭𑌿𑌰𑌵𑌾𑌪𑍍𑌯𑌤𑍇” ॥

என்று இவ்வர்த்தத்தை அர்ச்சுனன் சந்தேகந்தெளிய அவன் கேள்விக்கு மறுமொழியா யுரைத்தருளினன். ஆதலால் ஸரூபத்தமான ஈசுவரனை யுபாஸிப்பதே நலமெனப் பெற்றும்.

அவ்வுபாஸ்தி யுலகத்தில் மூன்று வகையாய்க் காணப்படுகிறது. **முதலாவது** - ஞானியானவர் சிலர் ஸ்தாவர ஜங்கமாத்மகமான பிரபஞ்ச மனைத்தையும் ஸ்ரீவாசுதேவ ஸ்வரூபமேயென்று பார்த்து பிரபத்தி பண்ணுகிறார்; **இரண்டாவது** - அப்படிப்பட்ட மனோநிச்சயம் பிறவாத மற்றோர்சிலர், ஈசுவரனுடைய தேஜோம்சத்தைப் பிராசுர்யமாக வுடைத்தாய் (அதாவது திருஷ்டாந்தமாக-மருத்துக்களில் மரீசியையும், சோதிமண்டலங்களில் சூரியனையும், நக்ஷத்திரங்களில் சந்திரனையும், உருத்திரர்களில் சங்கரனையும், மஹர்ஷிகளில் பிருகு ரிஷியையும், விருக்ஷங்களில் அசுவத்தத்தையும், பக்ஷிகளில் கருடனையும், நதிகளில் கங்கையையும், நீர்நிலைகளில் சமுத்திரத்தையும், அக்ஷரங்களில் அகாரத்தையும்போல்) பிரஸித்தமாயுள்ள வஸ்துக்களை ஸாக்ஷாத் ஈசுவரனென்றே யறிந்து உபாஸிக்கிறார். இவ்விரண்டு வகையைக் காட்டிலும் உத்தமமாய்த் தோன்றுகிற **மூன்றவது** வகையாதெனில் - அர்ச்சாவதாரோபாஸனை; திவ்யதேசங்களிலும் திருமாளிகைகளிலும், எழுந்தருளியிருக்கும் பிம்பமாகிய மூர்த்தஸ்வரூபங்களிலும், ஸாதாரணமாய் எல்லா
லும் எள்ளுக்குள் எண்ணெய்போல் நிறைந்து விளங்கும் பர
யானது பூர்ணமாய் நிறைந்திருக்கிற தென்பதிற் சந்தேகமேய்
ணமொன்றுபற்றியே இந்த விக்கிரகரூப எம்பெருமானை
வித உபாஸனையைச் செய்கிற விசேஷஞ்ஞரும், அவ்
மற்றை யஞ்ஞரும் யாதோர் வரையறையின்றி, எப்
தம். ஆனல் இதிலின்னமோர் விசேஷமுளது.
க்களைக் கண்டால் உலகத்தார்க்கு அவ்வவற்றின்

ற்றுவதே யொழிய, இவைகள் வாஸுதேவனே யென்று தோற்றுவதில்லை. முயற்சிசெய்தாலும் பாவனைபிறப்பதுங் கஷ்டம். ஆனால் இம்மூர்த்த ரூபமான திவ்யமங்கள விக்கிரகத்திலோவென்றால், பார்த்தவுடன் ஈசுவரனுடைய நாமரூபங்கள், முதல் முதல் மனதுக்குத்தோற்றி யருகில் செல்லத்தக்க ஸன்னிவேசம் உண்டாய், அதன்மேல் ஸ்ரீ வைகுண்டனுடைய பூர்ணாம்சம் இந்த பிம்பத்தில் ஆவேசமாயுள்ளதென்றும், அப்பால் இந்த அகிலத்தையும் சிற்றுருவான தன்னிடத்தில் அடக்கிக் காட்டுகிற விசுவரூபனே யென்றும், இந்த பாவனை தேறத் தேற அந்த அநிர்வசநீய பரப்பிரமமே ஸாக்ஷாத்கரித்து இந்த அர்ச்சாவதாரத்தைச் செய்து உலகமுற்று முய்யும்படி யுபகரிக்கக் கண்காணத்தோன்றி விளங்குகிறதென்றும், மனதுக்குஉண்மையாய்த்தோற்றி, பெரும்பான்மையாய்க் கல்லாதாருங்கூட அன்பு பெருகி யுருகிப் பாடி யலற்றி, விரும்பித்தொழுது வாயார வாழ்த்தும்படியான பரிபக்குவத்தைப்பிறப்பிக்கிறது. தெவிட்டாத ஆனந்தத்துடன் அநவரதம் பகவத் ஸங்கத்தைச் செய்வதற்கு, சேதநர்க்கு இவ்வுபாஸனையைவிட்டால் வேறே வழியில்லை யாதலால் இது உத்தமமாக பரிக்கிரகிக்கப்பட்டிருக்கிறது.

ஆனதுபற்றி இவ்வித ரஹஸ்யார்த்தத்தை மனதிற்கொண்டு, ஆழ்வார்கள் பலரும் ஸ்வபாவமாகவே பரமயோகிகளாயிருந்தார்கள் என்று கூறப்படினும், அர்ச்சாவதாரத்தில் நின்ற, இருந்த, கிடந்த, நடந்த திருக்கோலங்களாய் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை ஸாக்ஷாத்பரப்பிரமத்தின் மூர்த்த ஸ்வரூபமாகவே தாங்க ளிடைவிடாது பக்திசெய்ததுமன்றி யுலகத்தாரையும் "ஒழிவுறப்புப் பிறப்பிறப்புப்பிணி வீயுமாறுசெய்வான் திருவேங்கடத்தாயன்" என்று பலமுறை பிரமாணபுரஸ்ஸரமாய்க் கருணையாற் கூறுகின்றனர். ஆதலால்,

ஸ்ரீ நகஷிவ்ராஹரணம் ஷிவ்ராமெநகொஜு தாயடீயம் ।
ஷுஜஹுக ஷிவ்ஹொஷ்ராஸ்யாம் ஷிவ்ஜ்ஹயா நடமெஷடிநம் ।
மெஷவமெஷவ ஸுவஜாரூயட ஊடமெஷவ உநகுவிரமெதாஉஉ ।

ப - ௲ - அத் - ௧௧, சு - ௧௦ - ௧௧.

ஸ்ரீ" வே ...ற்கீதையிற்கூறியபடி திவ்யமங்கள விக்ரகவிசிஷ்டனை எம்பெரு... ஸாக்ஷாத் பரப்பிரமமென்றே நிச்சயித்து, அனைவரும் பக்திசெய் துய்

பரப்பிர... ...ஸசத்தையெல்லாம் அஸ்திரபூஷணங்க

ஸனை ... எப்படியெனில்,

தத்தா... ...மெஷவஉஹ ணாஉஷம் ।

பட்டு ஸ்ரீ ஸுஷவஹஜவாநுஷஸீஃ ॥

மான ...

𑌶𑍍𑌰𑍀𑌵𑌤𑍍𑌸𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌧𑌰𑌮𑌨𑌨𑍍𑌤𑍇𑌚𑌸𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌂𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑌪𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍇 𑌗𑌦𑌾𑌰𑍂𑌪𑍇𑌣𑌮𑌾𑌧𑌵𑍇 ॥
𑌭𑍂𑌤𑌾𑌦𑌿𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑌿𑌂𑌚 𑌦𑍍𑌵𑌿𑌧𑌾𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌃 ।
𑌬𑌿𑌭𑌰𑍍𑌤𑌿𑌶𑌙𑍍𑌖𑌰𑍂𑌪𑍇𑌣 𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗𑌰𑍂𑌪𑍇𑌣𑌚𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ॥
𑌬𑌲𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌜𑌵𑍇𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑌿𑌤𑌾𑌨𑌿𑌲𑌮𑍍 ।
𑌚𑌕𑍍𑌰𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂𑌚𑌮𑌨𑍋 𑌧𑌤𑍍𑌤𑍇𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌕𑌰𑍇𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ॥
𑌪𑌂𑌚𑌰𑍂𑌪𑌾𑌤𑍁𑌯𑌾𑌮𑌾𑌲𑌾 𑌵𑍈𑌜𑌯𑌨𑍍𑌤𑍀𑌗𑌦𑌾𑌭𑍃𑌤𑌃 ।
𑌸𑌾𑌭𑍂𑌤𑌹𑍇𑌤𑍁𑌸𑌙𑍍𑌘𑌾𑌤 𑌭𑍂𑌤𑌮𑌾𑌲𑌾𑌚𑌵𑍈𑌦𑍍𑌵𑌿𑌜 ॥
𑌯𑌾𑌨𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑍍𑌯𑌶𑍇𑌷𑌾𑌣𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌕𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌕𑌾𑌨𑌿𑌵𑍈 ।
𑌶𑌰𑌰𑍂𑌪𑌾𑌣𑍍𑌯𑌶𑍇𑌷𑌾𑌣𑌿 𑌤𑌾𑌨𑌿𑌧𑌤𑍍𑌤𑍇𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨𑌃 ॥
𑌬𑌿𑌭𑌰𑍍𑌤𑌿𑌯𑌚𑍍𑌚𑌾𑌸𑌿𑌰𑌤𑍍𑌨𑌮𑌚𑍍𑌯𑍁𑌤𑍋𑌽𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌮𑍍 ।
𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌮𑌯𑌂𑌤𑍁𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌕𑍋𑌶𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ॥

வி-பு. க-வது அம்சம். உஉ-வது அத்தி. சுஎ-சுலோ-முதல்-எங-வது வரையில்.

இதன்பொருள்.

(க) ஜீவான்மா (புருடன்) = ஸ்ரீகௌஸ்துபமணிஸ்வரூபமாகவும்.
(உ) பிரகிருதி = ஸ்ரீவத்ஸம் (திருமறு) ஆகவும்.
(ங) புத்தி அதாவது - மஹான் = தண்டு ஆகவும்.
(ச) பூதஆதி அதாவது தாமஸாஹங்காரம் = சாரங்கம் ஆகவும்.
(ரு) இந்திரியஆதி - ஸாத்விகாஹங்காரம் = சங்கம் ஆகவும்.
(சு) மனசு = திருவாழி ஆகவும்.
(எ) சூக்ஷ்மபஞ்சபூதமும்ஸ்துலபஞ்சபூதமும் = வைஜயந்திவநமாலையாகவும்
(அ) ஞானேந்திரிய கர்மேந்திரியங்கள்பத்தும் = பாணங்களாகவும்.
(கூ) தெருள் (ஞானம்) = நந்தகமாகிய கத்தியாகவும்.
(க0) மருள் (அஞ்ஞானம்) = அக்கத்தியி னுறையாகவும்.

இவ்வாறு அகிலத்தையும் அஸ்திர பூஷணங்களாக அங்கீகரித்தருளி ஞன் என்ற இவ்வர்த்தத்தையே கவிதார்க்கிக கேஸரியான ஸ்ரீமத்வேதாந்த தேசிகவர்யரும் அருளிச்செய்திருக்கிறார். அதாவது.

புருடன் மணிவர மாகப் பொன்ஞமூலப்
பிரகிருதி மறுவாக மான்றண் டாகத்
தெருண் மருள்வாண் மறைவாக வாங்கா ரங்கள்
சீர்ங்கசங் காகமநந் திகிரியாக

இருடீகங் களீரைந்துஞ் சரங்க ளாக
 விருபூத மாலைவந மாலை யாகக்
கருடனுரு வாமறையின் பொருளாங் கண்ணன்
 கரிகிரிமே னின்றனைத்துங் காக்கின் றானே.

அதிகார சங்கிரகம். சக-வது பாசுரம்.

இப்படிப்பட்ட ஸர்வேச்வரனைக் கிட்டுவதற்கு அனேக உபாயங்கள் உளவாயினும், சிரகால பரிச்ரம ஸாத்தியமா யுள்ளவைகளைவிட்டு, இக்காலத்துக்கு அநுகுணமாய் சேதநர்க்கு எளிதில் கைகூடத்தக்க நவவித உபாய சோபானங்களைப் பூர்வாசாரியர்கள் கூறியிருக்கின்றனர். அதாவது,

[illegible]
[illegible]

என்கிறபடி யெம்பெருமானிடத்தில் பக்திசெய்வது ஒன்பது பிரகாரமாய் இருக்கையால், வைகறைமுதல் ராத்திரி நித்திரைவேளைபரியந்தம் சேதநன் எம்பெருமான் பக்கலில் அன்புபற்றி மனுஷியருடைய ஸஹஜஸ்வபாவங்களான காலையிற் பள்ளியணைதல், நீராடல், பசிதணிதல், நீர்பருகல், வெற்றிலைதின்றல், இரவிலுறங்கல் முதலிய எல்லாவற்றையும் எம்பெருமானுக்கும் தன்னைப்போல் அவ்வவ்வேளைக்குத் தக்கபடிச் சமர்ப்பித்து, [illegible] * என்றபடி பகவத்பிரஸாத ரூபமாகத் தானும் அநுபவித்தும் ஸ்வீகரித்துக்கொண்டு வருவதினால் இதரவிஷயங்களில் பற்றுநீங்கலும், எம்பெருமான் பக்கலில் வரவர பிரேமாதிசயமும் அவியபிசாரிணீயான பக்தியும் பிறக்கிறது. அன்றியும் அவன்விஷயமாகவே ஸமூகம்செய்வதினால்

[illegible]
[illegible]

(இதினர்த்தம்.) எம்பெருமானுடைய ஆச்சரியகுணசேஷ்டிதங்களை அடிக்கடி கேட்டும், வாயார வாழ்த்தியும் அவனிடம் அன்பு செய்பவர்க்கு எப்படி மனது சுத்தமாகுமோ அப்படி மற்றைய நோன்பு முதலியவற்றால் ஆவதில்லை.) மனக்கல்மஷம் நீங்கி ஸத்வம் சுத்தியாகிறது. அநந்தரம் மனச்சுத்தியும் பத்தியும் உண்டானவாறே, ஸர்வதேச சர்வகால ஸர்வாவஸ்தைகளிலும்,

* (இதன்பொருள்.) பகவானுக்கு சமர்ப்பித்துப் பிறகு தச்சேஷத்தைப் புசிப்பவர்கள் எல்லாப்பாவங்களினின்றும் விடுபடுகிறார்கள்.

ஸர்வாணி மத்திஷ்ண்யதயா பவத்பி: சராணி பூதானி ஸுதா த்ருவாணி ।
ஸம்பாவிதவ்யானி பதே பதே வோ விவிக்த த்ருக்பி: ததுஹார்ஹணம் மே ॥

பாகவதம் ௫-வது ஸ்கந்தம் ௫-ம் அத்தியா ௨௭-ம் சுலோகம்.

(இதின்பொருள்—மனம் வாக்குக் கண்முதலிய எல்லாக் கரணங்களா லும் நடத்தும் வியாபாரங்க ளனைத்தையும் ஸர்வேசுவரனை என் பக்கலில் சமர்ப்பித்தால், அதுவே எனக்குச் செய்யும் ஆராதனமாகும். இவ்வித ஆரா தநத்தைச் செய்யாதொழியின், மனுஷியன் இயமபாசமாகிய போஹத்திலிரு ந்து விடுபடுவது கஷ்டம்) என்கிறபடி, திரிவித கரணங்களாலு மவனுக்கே யுரிமைபூண்டு வழுவிலாவடிமை செய்துகொண்டு அந்தமில் பேரின்பத்தை அடைவார்கள். ஆகையால் எம்பெருமானுக்கு நாடோறுஞ் செய்யுங் கைங் கரியங்களில்,

கௌஸல்யா ஸுப்ரஜா ராம பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே ।
உத்திஷ்ட நரசார்தூல கர்த்தவ்யம் தைவமாஹ்நிகம் ॥

என்று விசுவாமித்திர மாமுனிவர் சக்கரவர்த்தித் திருமகனைப் பள்ளியுண ர்த்தினப்போலே) திருப்பள்ளியெழுச்சியானது முதலாவது கைங்கரியமாத லால், இப்பிரபந்தத்தை ஸந்நிதிகளிலும் திருவாராதனைகளிலும் வைஷ்ண வர்கள் அநுஸந்தித்து வருகிறார்கள்.

தொண்டரடிப்பொடி யாழ்வார் முதலில் ஸ்வரூபோபாயபுருஷார்த்த சூந்யராய், தேகத்தில் ஆத்மபுத்தியைப்பண்ணி, சப்தாதி விஷயங்களில் ஸம் ஸ்ரித்துக்கொண்டு ஸுப்தரா யிருந்தார். அதைக்கண்டு பெரியபெருமாள் நிரவதிக் கிருபையாலே அவரிடம் சென்று உணர்த்தி தன்னைக் காட்டிக்கொ டுத்து, விஷயாந்தரப்பிரா வண்யத்தைமாற்றி, ஸ்வரூபாநுரூபமான அபிநி வேசத்தைத் தன்பக்கலிலே பிறப்பித்தார். அப்போது இவ்வாழ்வாரும் அஞ் ஞானம் நீங்கி சத்வந்தலையெடுத்து "ஆதலாற் பிறவிவேண்டேன்" என்றும், "எம்பிராற்காட் செய்யாதே யென்செய்வான் றோன்றினேனே" என்றும் அத் யவஸிக்கும்படியான ஞானம்பிறந்து "புன்கவிதையேனும் எம்பிராற் கினிய வாறே" என்று திருமாலையிற் சொல்லியபடி பெரியபெருமாளுக் கினிதான வாசிக கைங்கரியத்தைப் பெற்று நின்றார். இப்படிப்பட்ட ஞான விசேஷத் தை யுடையரானபடியை நினைத்து, இவரை யிப்படிப் பெறும்படியாயிற்றோ வெனப் பிரீதிப் பிரகர்ஷத்தாலேயும், இவரை வென்றதன் வைபவத்தை நினைத்தும், எல்லாரையு மிவரைப்போலே நம்பக்கலிலே பிரவணராக்கும்

விரகேதோ? என்று தந்தேகாக்ர சித்தராய்க்கொண்டு பள்ளிகொண் டருளி னர். ஆழ்வாரும் கைங்கரியத் தொளையாலே சென்று, பெருமாளை நிர்ப்பந் தித்துத் திருப்பள்ளி யுணர்த்துகிறார்.

இப்பிரபந்தத்தின் ஸாராம்சமாவது - உன்னடியார்க் காட்படுத்தா யென்றும், ததீயபரியந்தமான காயிக கைங்கரியத்தைக் கொண்டருள வேணு மென்றும், பெரியபெருமாளைப் பிரார்த்திக்கப் படுகிறது.

இதிற் பாசுரங்கள் - ௧0. இவைகள் எல்லாவற்றுள்ளும் மன்னரை வந்திகள் உணர்த்துமாப்போலே பிரபாத சூசகங்களைச் சொல்லி ஆராதந யோக்யமான காலமாயிற்றென்றும், திருப்பள்ளி யுணர்ந்தால் கண்டருளும் படி மங்களவஸ்துக்கள் நிறைந்தபடியையும், மங்களவாத்யங்கள் முழங்குகிற படியையும் கூறி தொண்டரடிப்பொடியான அடியேனும் நான்முகன்முதலிய தேவர்கள் அனைவரும் தேவரீர் திருப்பள்ளியுணரும் வடிவழகுகண்டு ஆனந் தித்துத் திருவடிதொழுது, மங்களாசாஸனஞ் செய்யவேண்டுமென்று அவ சரப் பிரதீக்ஷகராய்க் காத்து நிற்கின்றோம், ஆதலால் உணர்ந்தருளிக் கடா க்ஷித்து கைங்கரியங் கொள்ளவேணுமென்றும் பெரியபெருமாளைத் தொண் டரடிப்பொடி ஆழ்வார் பிரார்த்திக்கிறார்.

இத்திருப்பள்ளியெழுச்சியாகிய பிரதமாராதனத்தை யாழ்வார் உப லக்ஷணமாகக் கூறியபடியால் நாம் நாள்முழுவதும் எம்பெருமான் பக்கல் புரியத்தக்க யதோக்தமான ஷோடசோபசார யுக்தமான திருவாராதன ரூப கைங்கரிய முழுவதையும் நியமித்தாரெனக் கொள்ளவேணும்.

இப்பிரிவின் முதலில் சேர்த்திருக்கிற, தொண்டரடிப்பொடி யாழ்வார் பிரபாவச் சுருக்கத்தில் அவ்வாழ்வார் பெருமை கூறுங்கால், அவர் ஸ்திரீ வியாமோகத்துள் ளகப்பட்டு மருண்டு அவர் தருங்கலவியே கருதி முயங்கிக் கிடந்தனர் என்பதாகவும், அக்காரணம்பற்றி யவரடைந்த துன்பங்களையும் குறித்துச் சொல்லப்பட் டிருக்கிறது. அதை வாசிப்பதனால் நாம் அடையக் கூடிய நன்னெறிப்போதனை யாதெனின். —

அவரத்தனை வைராக்கிய ஸம்பன்னராயும், உட்பற்று புறப்பற்றாகிய இருவகை யுலகப்பற்றையு நீக்கி, நிர்ஜனமாய் ஏகாந்தத்தில் ஓர் நந்தவனத் தில் வசித்துக்கொண்டும், நியதசித்தராய் அழகிய மணவாளனுடைய கலி யாண குணாநுஸந்தானம், மனனம், ஸங்கீர்த்தநத்துடன் அவனை யாராதித்தும், அநவரத கைங்கரிய நிரதராய்த் தியாநித்துக்கொண்டும் காலக்ஷேபஞ்செய்து கொண்டிருந்த அம்மஹானுக்கே, அந்த விலைமகளுடைய க்ஷணஸங்கத்தி னால் இத்தனையும் மறந்து வரவர விடப்பட்டு 'மாதரார் கயற்கண்ணென்னும்

வலையுட்பட் டழுந்தும்படி யாயிற்றென்றால் மற்றைச் சாதாரண மாயவித்தைக்குள் முழுகிக்கிடக்கும் பிராகிருத மானிடவர் விஷயத்தில் அப்பற்று எத்தனை துன்பத்தைத் தருமோ? அறிகிலம். ஆதலால் தெரிவைமார் பக்கல் பற்று நீங்கலும் பகவத் பாகவதர் பக்கல் நிரதிசய பக்தியுடன் பழகுதலும் அத்யாவசியகமென இவ் வாழ்வார் சரித்திரத்தால் அறியப்பெற்றும்.

இவ்விஷயமாய் ஸ்ரீமத் பாகவதத்தில் சவுபரி மஹரிஷியானவர் அவருடைய அநுபவஸித்தாந்தத்தைக் கூறியிருப்பது எங்ஙனே என்னில்.

ஸ்ரீபா - ஸ்க-௯, அத்தி-௬, ஶ்லோ-௫௧.

𑌸𑌙𑍍𑌗𑌂 𑌤𑍍𑌯𑌜𑍇𑌤 𑌮𑌿𑌥𑍁𑌨𑌵𑍍𑌰𑌤𑌿𑌨𑌾𑌂 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌨 𑌵𑌿𑌸𑍃𑌜𑍇𑌦𑍍𑌬𑌹𑌿𑌰𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 ॥
𑌏𑌕𑌶𑍍𑌚𑌰𑌨𑍍𑌰𑌹𑌸𑌿 𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌨𑌨𑍍𑌤 𑌈𑌶𑍇 ।
𑌯𑍁𑌞𑍍𑌜𑍀𑌤 𑌤𑌦𑍍𑌵𑍍𑌰𑌤𑌿𑌷𑍁 𑌸𑌾𑌧𑍁𑌷𑍁 𑌚𑍇𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌃 ॥

(இதன்பொருள்.) வீட்டின்கண் விருப்புற்றவர்கள், இல்லாள் வாழ்க்கையைத் துணையாக வுடையவருடன் கூட்டுறவைத் துறக்கவேண்டும்; ஐம்பொறிகளையும் புறம்பே அவ்வவ் விஷயத்தில் செல்லவொட்டாமல் அடக்கவேண்டும்; ஒருவனேயாய் ஏகாந்த மாய்த்திரிந்துகொண்டு ஸர்வேசுவரனை அநந்தன் பக்கலில் சித்தத்தைச் சமர்ப்பித்து ஒடுங்கி நிர்ப்பரனாய் நிற்கவேண்டும்; ஒருக்கால் யாருடனாவது சேர்ந்து கூடிக்களிக்கவேண்டுமென அபிநிவேசம் பிறந்தால் எம்பெருமான் பக்கலில் அன்புற்ற தொண்டருடன்கூடியுறவாடிக் களிக்கவேண்டும்.

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

தொண்டரடிப்பொடியாழ்வார்

திருவாய்மலர்ந்தருளிய

வேதார்த்தஸாரமாகிய

திருப்பள்ளியெழுச்சி.

திருவரங்கப்பெருமாளரையரருளிச்செய்த தனியன்.

தமேவ மத்வா பரவாஸுதேவம் ரங்கேஶயம் ராஜவதர்ஹணீயம்|
ப்ராபோதிகீம் யோऽக்ருத ஸூக்திமாலாம் பக்தாங்க்ரிரேணும் பகவந்தமீடே||

தமேவ[1]மத்வாபரவாசுதேவம் ரங்கேசயம்ராஜவதர்ஹணீயம்
பிராபோதகீம்யோக்ருதசூக்திமாலாம்[2]பக்தாங்க்ரிரேணும்பகவந்தமீடே.

(பதவுரை.)

தம் - அந்த	ப்ராபோதகீம்-திருப்பள்ளி யுணர்த்துவதான
ஏவ - (பரவாசுதேவம்என்றதோடு அந்வயம்)	யஃஅக்ருத - யார்செய்தாரோ
மத்வா - பிரபத்திசெய்து	சூக்திமாலாம் - நல்லசொன்மாலையை
பரவாசுதேவம் - பரமபதநாதனுகவே	பக்தாங்க்ரிரேணும் - தொண்டரடிப் பொடியென்ற
ரங்கேசயம் - திருவரங்கத்தில் பள்ளிகொண்ட	பகவந்தம் - ஆழ்வாரை
ராஜவத் - சக்கிரவர்த்தியைப்போல்	ஈடே - துதிசெய்துபணிகிறேன்.
அர்ஹணீயம் - பூஜ்யராய்	

(பொழிப்புரை.)

சக்கிரவர்த்தியைப்போல் பக்தியுடன் பூஜிக்கப்படத்தக்கவராய் திருவரங்கத்தில் பள்ளிகொண்ட அழகியமணவாளனே, மறைகளின் உச்சியில் விளங்கும் ஸாக்ஷாத் பரமபதநாதனென்றே உய்த்துணர்ந்து பிரபத்திபண்ணி, வைகறைப்பொழுதில் துயிலினின்று உணர்த்துவதான நல்ல சொன்மாலையை அருளிச்செய்தவர் யாரோ, அப்படிப்பட்ட வைபவத்தையுடைய ஞானதிகுணபூர்ணரான தொண்டரடிப்பொடியாழ்வாரைத் துதித்துத்தொழுகிறேன்.

(1.) ஏவ - என்றசிறட்பினுல் - பரவாஸுதேவனேயென்றும், வேறல்ல னென்றும் கொள்ளவேண்டுமென்று கருத்து. இதுக்காதாரம்.

காவேரீ விரஜா ஸேயம் வைகுண்டம் ரங்கமந்திரம்|
ஸ வாஸுதேவோ ரங்கேஶ: ப்ரத்யக்ஷம் பரமம் பதம்||

(இதன்பொருள்.) "இக்காவேரிநதியே - விரஜாநதி ; இந்தக்கோயிலே - ஶ்ரீவைகுந்தமாநகர் ; இந்தப் பெரியபெருமாளே - பரவாஸுதேவர் ; இதுவே பிரத்தியக்ஷமான பரமபதம் ; என்றும், இங்கிருந்த வண்ணமே, "இப்புவனியும் விண்ணுலகும், அங்காதுஞ் சோராமேயாள்கின்ற வெம்பெருமான், செங்கோலுடைய திருவரங்கச்செல்வர்" என்றபடி, இரண்டு விபூதிகளையும் காத்தருளுகிறுன் என்றும் கருத்து.

(2.) சூக்திமாலாம்=இதிலுள்ள "மாலா" சப்தத்தாலே - இவ்வாழ்வார்பாடிய திருமாலையும். அந்தர்ப்பூதம் என்றுகொள்ளலாம்,

இருவிகற்ப நேரிசைவெண்பா.

மண்டங்குடியென்பர் மாமறையோர்மன்னியசீர்த்
தொண்டரடிப்பொடி தொன்னகரம்[1]—வண்டு
திணர்த்தவயற்[2]றென்னரங்கத் தம்மானைப்பள்ளி
யுணர்த்தும்பிரானு[3]தித்த வூர்.

(பதவுரை.)

மண்டங்குடிஎன்பர் - திருமண்டங்குடியென்று கூறுவர்
மாமறையோர் - மிக்கவேதியர்
மன்னியசீர் - நிலைபெற்ற புகழையுடைய
தொண்டர் அடிப்பொடி - தொண்டர் அடிப்பொடியென்ற திருநாமமுள்ள ஆழ்வார்
தொல்நகரம் - புராணமான நகரம்
வண்டு - பிரமரங்கள்
திணர்த்த - நெருங்கி முரலும்
வயல் - கைதைகள் சேர்ந்த
தென் - தர்சநீயமான
அரங்கத்து - திருவரங்கமாகிய பெரிய கோயிலிலே
அம்மானை - (திருக்கண் வளர்ந்தருளுகிற ஸர்வஸ்வாமியான) அழகியமணவாளனை
பள்ளி உணர்த்தும்பிரான் - திருப்பள்ளியினின்றும் துயில்நீத்தலை விண்ணப்பஞ்செய்யும் ஸ்வாமியான
உதித்தவூர் - திருவவதரித்தருளினபதி.

(பொழிப்புரை.)

பிரமரங்கள்வந்து கூட்டங்கூட்டமாய் நெருங்கி முரலுங்கைதைகள் சூழ்ந் தழகமைந்த திருவரங்கமாகிய பெரியகோயிலிலே திருக்கண்வளர்ந் தருளுகிற ஸர்வஸ்வாமியான அழகியமணவாளனைத் திருப்பள்ளியினின்றும் துயினீத்தல்விண்ணப்பஞ்செய்யும் தொண்டரடிப்பொடியாழ்வார் திருவவதரித்தருளின திவ்யதேசமானது நிலைபெற்ற புகழையுடைய புராணநகரமான திருமண்டங்குடியென்று நான்மறையோதிய வேதியர்கூறுவர்.

---

(1) தொல்நகரம்—நல்ல உயர்ந்த வஸ்துக்கள் உண்டாகும் இடமல்லவே - நகரமாவது-சான்றோர் சிகாமணியாகிய இவ்வாழ்வார் தோற்றத்தால் இவ்வூர்க்கு ஏற்றம் உண்டாயிற்று. தென்னகரம் என்று பாடாந்தரம். அப்போது தென்னரங்கம் என்பதுபோல தர்சநீயமான என்றர்த்தம்.

(2) வண்டுதிணர்த்தவயல் — பிரமரங்கள்கூடி ரீங்காரஞ் செய்துகொண்டு மதுபானம் பண்ணும்படியான புஷ்பங்கள் விகஸித்திருக்கிறவயல்கள் - என்றதனால், ஸ்ரீரங்கக்ஷேத்திரத்துக்கு அருகாமையில் உள்ள கழனிகளில் இடையறாது நீர்ப்பூக்கள் மலரும்படியான ஏராளமான நீர்வளத்தைக் குறிக்கிறது.

(3) பிரான்—உபகாரகன், இப்பிரபந்தத்தையுண்டாக்கிப் பின் புள்ளாரும் அநுஸந்திக்கும்படி யுபகரித்தருளினர்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

(க) கதிரவன்குணதிசைச்சிகரம்வந்தணைந்தான்
கனவிருளகன்றதுகாலையம்பொழுதாய்
மதுவிரிந்தொழுகினமாமலரெல்லாம்
வானவரரசர்கள்வந்துவந்தீண்டி
எதிர்திசைநிறைந்தனரிவரொடும்புகுந்த
விருங்களிற்றீட்டமும்பிடியொடுமுரசும்
அதிர்தலிலலைகடல்போன்றுளதெங்கும்
அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே.

கதிரவன் - ஞாயிறு
குணதிசைசிகரம் - கிழக்கின் உச்சியை
வந்து அணைந்தான் - வந்துசேர்ந்தான்
கனஇருள் - நிபிடமானஇருட்டு
அகன்றது - விலகிற்று
காலைஅம்பொழுதாய் - அழகிய விடியற்காலம் தோன்றவே
மதுவிரிந்து ஒழுகின - தேன்சொரிந்து வெள்ளமிடாநின்றன [வாம்
மாமலரெல்லாம் - மலர்ந்த புஷ்பங்களெல்
வானவர் - தேவர்களும்
அரசர்கள் - ராஜாக்களும் [வந்து
வந்துவந்து - ஒருவர்க்கொருவர் முற்கோலி
ஈண்டி - திரண்டு
எதிர்திசை - திருக்கண்ணோக்கான தெற்கு திக்கிலே
நிறைந்தனர் - நிறைந்து நின்றார்கள்
இவரொடும்புகுந்த - இவர்களுடன்வந்த (இவர்கள் வாஹநமாகிய)
இருங்களிறு ஈட்டமும் - பெரியஆண்யானைத்திரள்களும்
பிடியொடு - பெண்யானைத்திரள்களும்
முரசும் - பேரிகைகளும்
அதிர்தலில் - சப்திக்கும்போது
அலைகடல் - அலையெறிகின்ற சமுத்திர கோஷத்தை
போன்று உளது - ஒத்திருந்தது
எங்கும் - எங்குபார்க்கிலும்
அரங்கத்து அம்மா - திருவரங்கச் செல்வனான தேவரீர்
பள்ளிஎழுந்தருளாயே - திருப்பள்ளியுணர்ந்தருளி கடாக்ஷித்தருளவேணும்.

அனைத்துலகுங்காத்தளிக்கும் அழகியமணவாளா! இப்போது ஆதித்யன் உதயகிரியை வந்தடைந்திருக்கிறான், ராத்திரிமுழுவதும் நிபிடமாயிருந்த இருளானது விலகிப்போயிற்று. திருவாராதனஞ்செய்வதற்கு யோக்யமான நல்ல உதயகாலமாயிற்று, தாமரை செங்கழுநீர் முதலிய பெரியபுஷ்பங்களெல்லாம் விகஸிதமாய்த் தேன்சொரிந்து வெள்ளமிடாநின்றன. தேவர்களும் ராஜாக்களும் ஒருவர்க்கொருவர் முற்கோலிவந்து கூடி உபயவிபூதியுக்தனை உனது திருக்கண்ணோக்கமான எதிர்ப்பக்கத்தில் நிறைந்துநிற்கின்றார்கள். இவர்களோடேவந்த இவர்கள் வாகனமாகிய பெரிய ஆண்யானைத்திரள்களும், பெண்யானைத்திரள்களும் பேரிகைகளும் சப்திக்கும்போது எல்லாத்திக்குகளிலும் அலையெறியாநின்ற சமுத்திரகோஷத்தை யொத்திருக்கின்றது. ஆதலால் திருவரங்கமேவிய செல்வனான தேவரீர்! திருப்பள்ளியுணர்ந்து அடியோமைக் கடாக்ஷித்து அடிமை கொண்டருளவேணும்.

(க) [illegible]

(உ) [illegible]

(உ) கொழுங்கொடிமுல்லையின்கொழுமலரணவிக்
கூர்ந்ததுகுணதிசைமாருதமிதுவோ
எழுந்தனமலரணைப்பள்ளிகொள்ளன்னம்
ஈன்பனிநனைந்ததம்மிருஞ்சிறகுதறி
விழுங்கியமுதலையின்பிலம்புரைபேழ்வாய்
வெள்ளெயிறுறவதன்விடத்தினுக்கனுங்கி
அழுங்கியவானையினருந்துயர்கெடுத்த
வரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே.

கொழும்கொடி முல்லையின் - செழுமையான கொடிகளையுடைய முல்லையினுடைய
கொழுமலர் - அழகியபூவின் பரிமளத்தை
அணவி - அளாவிக்கொண்டு
கூர்ந்தது - விஞ்சிற்று
குணதிசைமாருதமிதுவோ - இந்த விடியற் காலத்துக் கீழ்காற்றானது
எழுந்தன - உறக்கம்விட்டெழுந்தன
மலர் அணை - தாமரைமலராகிய படுக்கையிலே
பள்ளிகொள்அன்னம் - உறங்குகிற ஹம்ஸ மிதுனங்கள்
ஈன்பனிநனைந்த - பொழிகிறபனியாலே நனைந்த
தம்இரும் - தம்மஅழகிய
சிறகுஉதறி - இறகுகளை உதறிக்கொண்டு
விழுங்கியமுதலையின் - விழுங்கிய நக்ரத்தினுடைய
பிலம்புரை - பிலத்வாரத்தையொத்த
பேழ்வாய் - பெரியவாயிலுள்ள
வெள்ளெயிறுஉற - வெளுத்த கோரைப்பற்கள் ஊன்ற
அதன்விடத்தினுக்கு - அம்முதலையின் பல் விஷத்துக்கு
அனுங்கிஅழுங்கிய - பயந்து கதறின
ஆனையின் - கஜேந்திராழ்வானுடைய
அரும்துயர்கெடுத்த - பெரிய துக்கத்தைப் போக்கின
அரங்கத்துஅம்மா - திருவரங்கச் செல்வனான தேவரீர்
பள்ளிஎழுந்தருளாயே - திருப்பள்ளியுணர்ந்தருளிகடாக்ஷித் தருளவேணும்.

அன்னமாயருமறைபயந்த ஆதிப்பிரானே! தேவரீர்க்கு விண்ணப்பம். விடியற்காலத்துக் கீழ்காற்றானது செழுமையான முல்லைமலரின் பரிமளத்தையளைந்துகொண்டுவந்து 'நீங்கள் உறங்குகிறதென்' என் றுணர்த்துவதுபோல சூழ்ந்துகொண்டு முகங்களிலேவீசுகின்றன. அன்றியும் தாமரைப்பூவாகிற படுக்கையிலே உறங்கின அன்னமிதுனங்கள் இரவுமுழுவதும் பனியால்நனைந்துபோன தம்மழகிய சிறகுகளை யுதறிக்கொண்டு உணர்ந் தெழுந்துவிட்டன. ஆகையால் திருவாராதனத்துக்கு யோக்கியமான காலமாயிற்று. விழுங்கின முதலையினுடைய பிலத்வாரத்தையொத்த பெரியவாயில் எயிற்றாலே நெருக்குண்டு அதன் பல்விடத்தால் நோவுபட்டுப் பயந்து கதறிக்கூவின ஸ்ரீகஜேந்திராழ்வானுடைய பெரியஆபத்தைத்தீர்த்தருளின பரமோபகாரகனாய், கோயிலில் நித்தியஸன்னிதி பண்ணியருளும் ஆஸ்ரித வாத்ஸல்யனான தேவரீர் அடியேங்களுடைய ஆர்த்தியெல்லாம் தீரும்படி யுணர்ந்தருளிக் கடாக்ஷித் தருளவேணும்.

---

(௫) [illegible]

(௬) [illegible]

(௩) சுடரொளிபரந்தனசூழ்திசையெல்லாந்
துன்னியதாரகைமின்னொளிசுருங்கிப்
படரொளிபசுத்தனன்பனிமதியிவனோ
பாயிருளகன்றதுபைம்பொழிற்கமுகின்
மடலிடைக்கீறிவண்பாளைகணாற
வைகறைகூர்ந்ததுமாருதமிதுவோ
அடலொளிதிகழ்தருதிகிரியந்தடக்கை
யரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே.

சுடர்ஒளி - ஆதித்தியகிரணங்கள்
பரந்தன - வியாபித்தன
சூழ்திசையெல்லாம் - பார்த்தவிட மெங்கும்
துன்னிய தாரகை - நெருங்கின நக்ஷத்திரங்கள்
மின் ஒளி - வீசுகின்ற வெளிச்சமானது
சுருங்கி - குறைவுபட்டதுமன்றி
படர் ஒளி - படாகின்ற ஒளியையுடைய
பசுத்தனன் - ஒளிமழுங்கினன்
பனிமதிஇவனோ - இந்த குளிர்ந்த சந்திரனும்
பாய்இருள் - பரந்த அந்தகாரமானது
அகனறது - நீங்கிற்று
பைம்பொழிற் கமுகின் - பசுமையான சோலையிலுள்ள பாக்குமரங்களுடைய
மடல்இடைகீறி - பூமடல்கள் நடுவேவிரிந்து
வண்பாளைகள் நாற - செழுமையான பாளைகள் பரிமளிக்க
வைகறை - விடியற்காலத்துள்ள
கூர்ந்தது - அதிகரித்தது
மாருதம் இதுவோ - இந்தக்காற்றானது
அடல்ஒளிதிகழ்தரு - மிடுக்கையுடைய தேஜஃபிரசுரமான
திகிரி - திருவாழியாழ்வானைத்தரித்த
அம்தடக்கை - அழகாய்விசாலமான திருக்கைகளையுடைய
அரங்கத்துஅம்மா - திருவரங்கச் செல்வனான தேவரீர்
பள்ளிஎழுந்தருளாயே - திருப்பள்ளியுணர்ந்தருளி கடாக்ஷித்தருளவேணும்.

ஸர்வசரண்யனான ஓஸ்வாமீ! தேவரீர் திருவடிகளில் விண்ணப்பம். பார்த்தவிடமெங்கும் ஆதித்யகிரணங்கள் பரம்பிநிற்கின்றன. இரவெல்லாம் பளிச்சுப்பளிச்சென்று ஒளிவீசிக்கொண்டிருந்த நக்ஷத்திரங்கள் ஒளிமழுங்கிப்போயின. விஸ்தாரமாய் நிலவெறிக்கும் குளிர்ந்தசந்திரனும் பிரகாசங் குறைந்து வேற்றுருவடைந்தான். எல்லிமுழுதும் பரவிநின்ற இருளும் விலகிப்போயிற்று. பசுமையான சோலைகளிலுள்ள பாக்குமரங்களின் பாளைகள் விகஸிதமாய் அவற்றின்மணத்தை விடிவோறைக் காற்றானது விசேஷமாய் வாரிக்கொண்டு வருகின்றது. ஆதலால் தேஜஃபிரசுரமான திருவாழியாழ்வானைத் திருக்கைபில்தரித்தருளின ஓஸ்வாமீ! திருவரங்கத்தைக் கோயில்கொண்ட திருவின்மணாளா! தேவரீருடைய திரு வடிவழகை அடியோம் அனுபவிக்கும்படி திருப்பள்ளி யுணர்ந்தருளவேணும்.

---

(௫) [illegible]

(௬) [illegible]

(ச) மேட்டிளமேதிகள்தளைவிடுமாயர்கள்
வேய்ங்குழலோசையும்விடைமணிக்குரலும்
ஈட்டியவிசைதிசைபரந்தனவயலு
ளிரிந்தனசுரும்பினமிலங்கையர்குலத்தை
வாட்டியவரிசிலைவானவரேறே
மாமுனிவேள்வியைக்காத்தவபிரத
மாட்டியவடுதிறலயோத்தியெம்மரசே
அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே.

மேடு - பருத்தவயிறுகளையுடைய
இளமேதிகள் - இளம்பருவத்து எருமைகளை
தளைவிடும் - (மேய்கைக்கு) கட்டவிழ்த்து விடுகிற
ஆயர்கள் - இடையர் (ஊதுகிற)
வேய்குழல் ஓசையும் - புல்லாங்குழல் சத்தமும்
விடைமணிகுரலும் - எருதுகளின் கழுத்து மணி யோசையும்
ஈட்டியஇசை - இவ்விரண்டும்கூடிய சப்தமானது
திசைபரந்தன - திக்குகளெல்லாம் பரவின
வயலுள் இரிந்தன - கழனியில் (மலர்களில் தேனுண்ணுகிறவை) சிதறியோடின
சுரும்புஇனம் - வண்டுக்கூட்டங்களானவை
இலங்கையர் குலத்தை - இலங்கைநகரில் வாழும் ராக்ஷஸ வம்சத்தை
வாட்டிய - நிச்சேஷமாகமுடித்த
வரிசிலை - அழகிய ஸ்ரீசார்ங்கத்தை யுடைய
வானவர் ஏறே - பிரமாதி வானவர்களுக்கும் ஸ்வாமியானவராய்
மாமுனி - விசுவாமித்ரமுனியுடைய
வேள்வியைக்காத்து - யாகத்தை யாதொரு நலிவும் வாராமல் இரக்ஷித்து
அவபிரதம் ஆட்டிய - அவபிரதஸ்நாநஞ்செய்வித்தவராய்
அடுதிறல் - பரனைக்கொல்லும் வலியுள்ள
அயோத்தி - திருவயோத்யை ஆளுகிற
எம்அரசே - எங்களுக்கு ஸ்வாமியான சக்கிரவர்த்தித் திருமகனாய்
அரங்கத்து அம்மா - திருவரங்கச் செல்வனான தேவரீர்
பள்ளிஎழுந்தருளாயே - திருப்பள்ளியுணர்ந்தருளி கடாக்ஷித் தருளவேணும்.

பருத்தவயிற்றையுடைய இளம்பருவத்து எருமைகளைக் கட்டவிழ்த்து விடுகிற இடையர்களூதும் புல்லாங்குழலோசையும், எருதுகளின்கழுத்தில் கட்டியிருக்கும் மணிகளின் ஓசையும் இவ்விரண்டும் கூடிச்சேர்ந்த சப்தமானது திக்குகளனைத்துஞ் சென்றுநிறைந்துவிட்டது. கழனிகளில் அலர்ந்த தாமரை செங்கழுநீர்முதலிய மலர்களிலுள்ள மதுவைப் பானஞ்செய்யும் வண்டுக்கூட்டங்கள் அங்கங்கு சிதறியோடிப் போய்விட்டன. முற்காலத்தில் இலங்கையில்வாழ்ந்த அரக்கர்குலத்தை அடியுடனறுத்த அழகிய ஸ்ரீசார்ங்கத்தைத் திருக்கைகளிலேந்தியவராய், பிரமாதி வானவர்க்கும் அதிபனுன ஸ்வாமியே! விசுவாமித்திர மாமுனிவருடைய யாகத்தை யாதொருநலிவும் வாராமற் பாதுகாத்து யாகமுடிவிற் செய்யும் ஸ்நாநத்தையும் செய்துவித்தவராய்ப் பகைவரைக்கொல்லும் வலிமையுடையவராய் திருவயோத்தியை யாளும் எம்மஸ்வாமியான சக்கரவர்த்தித்திருமகனே! உபயவிபூதியுக்தனை திருவரங்கமேவிய செல்வனே! தேவரீர் திருப்பள்ளியுணர்ந் தடியோமுக்கு முகங்கொடுத்தருளி அடிமைகொண்டருளவேணும்.

(எ) [illegible]

(அ) [illegible]

(௫) புலம்பினபுட்களும்பூம்பொழில்களின்வாய்
போயிற்றுக்கங்குல்புகுந்ததுபுலரி
கலந்ததுகுணதிசைக்கனைகடலரவங்
களிவண்டுமிழற்றியகலம்பகம்புனைந்த
வலங்கலந்தொடையல்கொண்டடியிணைபணிவா
னமரர்கள்புகுந்தனராதலிலம்மா
இலங்கையர்கோன்வழிபாடுசெய்கோயி
லெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே.

புலம்பின - ஒலிக்கின்றன
புட்களும் - பறவைகள்
பூம்பொழில்களின்வாய் - பூத்திருக்கிற சோலைகளிலுள்ள
போயிற்றுகங்குல் - இரவுநீங்கிற்று
புகுந்ததுபுலரி - விடியற்காலமானது வந்துவிட்டது
கலந்தது - வியாபித்தது
குணதிசை - கீழ்திக்கிலே
கனைகடல் அரவம் - ஒலிக்கின்ற சமுத்திர கோஷமானது
களிவண்டு - மதுபானம்பண்ணிக் களிக்கிற பிரமரங்கள்
மிழற்றிய - ரீங்காரஞ் செய்கின்ற
கலம்பகம் - நாநாவிதமான புஷ்பங்களாலே
புனைந்த - தொடுத்ததாய்

அலங்கல் - அசையாநின்ற
அந்தொடையல்கொண்டு - அழகிய மாலைகளையேந்திக்கொண்டு
அடியிணைபணிவான் - தேவரீர் திருவடிகளிலே பணிமாறுகைக்கு
அமரர்கள் - வானவர்கள்
புகுந்தனர் - வந்துநின்றார்கள்
ஆதலால் - ஆகையாலே
அம்மா - ஸர்வஸ்வாமி
இலங்கையர்கோன் - ஸ்ரீவிபீஷணாழ்வான்
வழிபாடுசெய் - கைங்கரிய விருத்தியைச்செய்கிற
கோயில் எம்பெருமான் - திருவரங்கத்திலே ஸந்நிதிபண்ணுகிற தேவரீர்
பள்ளிஎழுந்தருளாயே - திருப்பள்ளி யுணர்ந்தருளி கடாக்ஷித்தருளவேணும்.

ஆஸ்ரிதபராதீனரான ஸ்வாமீ! தேவரீர்க்கு விண்ணப்பம். விகஸிதமான புஷ்பங்களையுடைய திருச்சோலையிலுள்ள பக்ஷிக்கூட்டங்கள் உணர்ந்து ஆரவாரியாநின்றன. இருளுக்கிருப்பிடமான இராத்திரியானது விலகிற்று. ஆராதனையோக்யமான விடியற்காலமானது வந்தது. கீழ்த்திசையிலே கோஷிக்கிற ஸ்வபாவமுடைய சமுத்திரத்தின் ஒலியானது எங்கும் வியாபித்தது. மதுபானம்பண்ணிக் களிக்கிறவண்டுகள் ரீங்காரஞ் செய்துகொண்டிருக்கும் நாநாவிதமான புஷ்பங்களாலே தொடுத்த சுந்தரமான அசைந்தாடுமாலையைக் கைகளிலேந்திக்கொண்டு அமரர்கள் மந்திரபுஷ்பம்பண்ணிப் பரிமாறுகைக்காக 'அருளப்பாடிடுவதெப்போதோ' என்று அவஸரப்பிரதீக்ஷகராய் வந்து நின்றார்கள். ஆகையால், அனைத்துலகுக்கும் நாதனே! ஸ்ரீவிபீஷணாழ்வான் தாஸவ்ருத்தியைப்பண்ணுகிற திருவரங்கத்திலே திருப்பள்ளிகொண்டருளும் தேவரீர் உணர்ந்தருளி அடிமைகொண்டருளவேணும்.

---

(௯) [illegible]

(௧௦) [illegible]

(சு) இரவியர்மணிநெடுந்தேரொடுமிவரோ
இறையவர்பதினொருவிடையருமிவரோ
மருவியமயிலினனறுமுகனிவனோ
மருதருமவசுக்களும்வந்துவந்தீண்டிப்
புரவியோடாடலும்பாடலுந்தேருங்
குமரதண்டம்புகுந்தீண்டியவெள்ளம்
அருவரையனையநின்கோயின்முன்னிவரோ
அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே.

இரவியர் - துவாதசஆதித்தியர்களும்
மணிநெடுந்தேரோடும் - அழகிய பெரிதான தேர்களை யுடையரான
இவரோ - இந்த
இறையவர் - ஜகத்துக்குநிர்வாஹகரான
பதினொருவிடையருமிவரோ - இந்த ஏகாதச ருத்திரர்களும்
மருவியமயிலினன் - எப்போதும் விட்டிறங் காத மயில்வாஹநத்தையுடைய
அறுமுகன்இவனோ - இந்தமுருகனும்
மருதரும் - மருத்கணங்களான (நாற்பத்தொன்பதின்மரும்)
வசுக்களும் - அஷ்டவசுக்களும்
வந்துவந்து - ஒருவர்க்கொருவர் முற்கோலி வந்து
ஈண்டி-நெருங்கி

புரவியோடு - குதிரைகளும்
ஆடலும்பாடலும் - நிருத்தமும் கீதமும்
தேரும் - ரதங்களும்
குமரதண்டம் புகுந்து - ஸுப்ர்ம்ஹண்யனோடேவந்து
ஈண்டியவெள்ளம் - நெருங்கின்ற ஸேநா ஸமூஹமானது
அருவரைஅனைய - மாமேருவை யொத்திருக்கிற
நின்கோயில் முன்இவரோ - தேவரீர் திருக் கண்ணோக்கத்துக் கெதிரேவந்து நிற்கின்றது
அரங்கத்துஅம்மா - கோயிலில் பள்ளிகொண்டிருக்கும் தேவரீர்
பள்ளி யெழுந்தருளாயே - திருப்பள்ளியுணர்ந்தருளி கடாக்ஷித்தருளவேணும்

பராவரேசனான ஸ்வாமீ! தேவரீர்க்கு விண்ணப்பம்; அழகாய்ப் பெரிதான தேர்களையுடைய துவாதசாதித்தியர்களும், ஜகத்துக்கு நிர்வாஹகரான ஏகாதச உருத்திரர்களும், எப்போதும் விட்டிறங்காத மயில்வாஹநத்தையுடைய சுப்பிரமணியனும், நாற்பத்தொன்பதின்மரான மருத்கணங்களும், அஷ்டவசுக்களும் ஸபரிவாரமாய் ஒருவர்க்கொருவர் முற்கோலிவந்து நெருங்கி நிற்பதுமன்றி இவர்களுடைய வாஹநமான குதிரைகளும் இரதங்களும் மற்றும் பாட்டுகள் ஆட்டங்களுடனே தேவஸேநாபதியான சுப்பிரமணியனோடுவந்த நிபிடமான ஸேநாஸமூஹமும், மாமேருவை யொத்திருந்துள்ள கோயிலில் தேவரீர் திருக்கண்ணோக்கத்துக்கெதிரிலே, பிரதமகடாக்ஷம் பெறுகைக்காகத் திரண்டுவந்து நிற்கின்றது. ஆகையால் கோயிலின்கண் திருக் கண்வளர்ந்தருளும் தேவரீர் இவர்களைக் கடாக்ஷிப்பதற்காகத் திருப்பள்ளியுணர்ந்தருளவேணும்.

(கக) [illegible]

(கஉ) [illegible]

(எ) அந்தரத்தமரர்கள்கூட்டங்களிவையோ
அருந்தவமுனிவருமருதருமிவரோ
இந்திரனானையுந்தானும்வந்திவனோ
யெம்பெருமானுன்கோயிலின்வாசல்
சுந்தரர்நெருக்கவிச்சாதரர்நூக்க
வியக்கருமயங்கினர்திருவடித்தொழுவான்
அந்தரம்பாரிடமில்லைமற்றிதுவோ
அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே.

அந்தரத்து அமரர்கள் - அண்டாந்தர்வர்த்திகளான தேவர்களும்
கூட்டங்கள் இவையோ - இவர் பரிவாரங்களும்
அரும்தவமுனிவரும் - அருமையான தவம்புரிந்த ஸநகாதிமகர்ஷிகளும்
மருதரும் இவரோ - மருத்கணங்களும்
இந்திரனானையும் தானும - தேவாதிபதியான இந்திரனும் அவனை ஐராவதமும்
வந்து இவனோ - வந்திருப்பதுமன்றி
எம்பெருமானை - எங்களுக்குஸ்வாமியான
உனகோயிலின - உன் திருக்கோயிலினுடைய
வாசல் - திருமுற்றத்திலே
சுந்தரர் நெருக்க - கந்தருவர் நெருக்கவும்
விச்சாதரர்நூக்க - வித்யாதரர்கள்தள்ள
இயக்கரும் - யக்ஷர்கள்
மயங்கினர் - மோகித்துநின்றார்கள்
திருவடி தொழுவான் - தேவரீர்திருவடியை ஸேவிப்பதற்காக
அந்தரம்பார் - ஆகாசமும் பூமியும்
இடம் இல்லை - விவரமற நெருங்கிற்று
மற்று இதுவோ - இடைச்சொல்
அரங்கத்து அம்மா - திருவரங்கத்தைக் கோயில்கொண்ட எம்முடையஸ்வாமீ! தேவரீர்
பள்ளியெழுந் தருளாயே - திருப்பள்ளியுணர்ந்தருளி கடாக்ஷித்தருளவேணும்.

திருமறுமார்பனான ஸ்வாமீ, தேவரீர் திருவடிகளில் விண்ணப்பம்; எங்களுக்கு ஸ்வாமியான உமது திருக்கோயிலின் வாசலிலே தேவர்க் கதிபதியான இந்திரனும் அவனுடைய ஐராவதமென்கிற யானையும் வந்திருப்பதுமன்றி, அண்டாந்தர் வர்த்திகளான தேவர்களும், இவர்களுடைய பரிவாரங்களும், ஒருவராலுஞ் செய்துமுடிக்க வொண்ணாத அருமையான தவத்தைப் புரிந்த ஸநகாதி மஹர்ஷிகளும், மருத்கணங்களும், சுந்தார்கள் நெருக்கவும், அவர்களுடனே விச்சாதார்கள் தள்ளவும் யக்ஷர்களும், ஒன்றாகக்கூடி, தேவரீர் திருப்பள்ளி யுணரும்போதை அழகுகண்டு திருவடிதொழுது திருப்பல்லாண்டு பாடவேண்டுமென்ற குதூஹலத்தாலே ஒருவர்க்கொருவர் முற்கோலிவந்து இடியுண்டு மோஹித்து, ஆகா சாவகாச மிடமடையும்படி புகுந்து நிற்கிறார்கள். பார்த்தருளீர். ஆகையால் ஸர்வஸ்வாமியான தேவரீர் திருப்பள்ளி உணர்ந்தருளி இவர்களை யடிமைகொண் டருளவேணும்.

கரு. [illegible]

கசு. [illegible]

(அ) வம்பவிழ்வானவர்வாயுறைவழங்க
மாநிதிகபிலையொண்கண்ணாடிமுதலா
வெம்பெருமான்படிமைக்கலங்காண்டற்
கேற்பனவாயினகொண்டுநன்முனிவர்
தும்புருநாரதர்புகுந்தனரிவரோ
தோன்றினனிரவியுந்துலங்கொளிபரப்பி
அம்பரதலத்தினின்றகல்கின்றதிருள்போய்
அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே.

வம்பு அவிழ் - பரிமளமான
வானவர் - விண்ணவர்களும்
வாயுறை - அறுகம்புல்லும்
வழங்க - தேவரீர்க்கு ஸமர்ப்பிக்கிறதற்காக
மாநிதிகபிலை - சிலாக்கியமான சங்கநிதிபத்மநிதியையும் கபிலாஸுரபிகளும்
ஒண்கண்ணாடி - ஒளிபொருந்திய திருக்கண்ணாடிமுதலாக
எம்பெருமான் - ஸர்வஸ்வாமியான தேவரீர்
படிமைக்கலம் - உபகரணங்கள் எல்லாம்
காண்டற்கு - கண்டருளுகைக்கு
ஏற்பனவாயின - தகுதியுள்ளனவான
கொண்டு - எடுத்துக்கொண்டு
நல்முனிவர் - அநந்யப்பிரயோஜநரான ரிஷிகளும்

தும்புருநாரதர் - தும்புருநாரதர்களும்
புகுந்தனர் - வந்துநின்றார்கள்
இவரோ - இவர்களன்றியும் [றும்
தோன்றினன் இரவியும் - உதயமானான் ஞாயி
துலங்கு ஒளி - தன்னுடையமிக்கதேஜஸ்ஸை
பரப்பி - பரப்பிக்கொண்டு
அம்பரதலத்தினின்று - ஆகாசத்தினின்றும்
அகல்கின்றது இருள்போய் - அந்தகாரமானது அடியுடன்விலகிவிட்டது
அரங்கத்து அம்மா - திருவரங்கத்துள் பள்ளிகொண்டிருக்கும் ஸர்வரக்ஷகனேதேவரீர்
பள்ளியெழுந் தருளாயே - திருப்பள்ளி யுணர்ந்தருளி எங்களாந் தரமான இருட்டைப்போக்கவேணும்.

ஸர்வரக்ஷகனே ஸ்வாமியே! தேவரீர் திருவாராதனத்துக்கு அநுரூபமான பிராதக்காலமானது ஸந்நிஹிதமாயிற்று; தேவரீர்க்கு ஸமர்ப்பிப்பதற்காக ஸத்ர்சமான, பரிமளமுள்ள அறுகம்புல்லும் சிலாக்கியமான சங்கநிதி பத்மநிதிகளும், கையில் ஏந்திக்கொண்டும் ஸர்வஸ்வாமியான தேவரீர் கண்டருளுகைக்காக கபிலா சுரபிகளும், ஒளிபொருந்திய திருக்கண்ணாடி முதலாக மற்ற உபகரணங்களெல்லாவற்றையுங் கொண்டு, தேவர்களும் அநந்யப் பிரயோஜநரான ரிஷிகளும், மங்களகீதம் பாடுகைக்குத் தும்புரு நாரதர்களும், அவசரப் பிரதீக்ஷகராய் வந்து நின்றார்கள்; இவர்களன்றியும், ஸஹஸ்ரகிரணனான சூரியனானவன் தன்னுடைய மிக்க தேஜஸ்ஸைப் பரப்பிக்கொண்டு தோன்றி விளங்குகிறான். அந்தகாரமானது ஆகாசத்தினின்றும் விலகிப் போயிற்று. ஆகையால் அழகியமணவாளனே தேவரீர் திருப்பள்ளி யுணர்ந்தருளி அவற்றைக் கண்டருளி ஆச்ரிதரான எங்களுடைய ஆந்தரமான இருட்டைப்போக்கி யருளவேணும்.

---

௧௫. [illegible] ॥

௧௬. [illegible] ॥

(கூ) ஏதமிறண்ணுமையெக்கமத்தளி
யாழ்குழன்முழவமோடிசைதிசைகெழுமிக்
கீதங்கள்பாடினர்கின்னரர்கருடர்
கந்தருவருமிவர்கங்குலுமெல்லாம்
மாதவர்வானவர்சாரணரியக்கர்
சித்தருமயங்கினர்திருவடித்தொழுவான்
ஆதலிலவர்க்குநாளோலக்கமருள
வரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே.

ஏதமில் - குற்றமற்ற
தண்ணுமை - மிருதங்கமும் (ஒருதலைப்பறை)
எக்கம் - ஒருதந்தியையுடைய வாத்தியமும
மத்தளி - மத்தளமும்
யாழ்குழல் - வீணைபோன்ற வாத்தியமும் புல்லாங்குழல்முதலிய குழல்களும்
முழவமோடு இசை - இவற்றின் முழக்கத்தோடுகூடிய பட்டுகள்
திசைகெழுமி - திக்குகளெங்கும நிறையும்படி
கீதங்கள்பாடினா - கானஞ்செய்தனா
கின்னரா கருடா - கின்னராகளும் கருடாகளும
கந்தருவருமிவா - கந்தருவாகளும் மற்றுமுள்ளவாகளும
கங்குலுமெல்லாம் - ராத்திரிப்போதெல்லாம்
மாதவாவானவா - ரிஷிகளும்தேவாகளும்
சாரணாஇயக்கா - சாரணாகளும் யக்ஷர்களும்
சித்தரும் - ஸித்தாகளும்
மயங்கினா - கூடிநெருங்கி நின்றார்கள்
திருவடிதொழுவான் - திருவடிதொழுகையாலுண்டானதவரையாலே
ஆதலில் - ஆகையாலே
அவாககு - அவர்களெல்லாக்கும்
நாள - இந்தநாளிலே
ஓலககமருள - திருவோலக்க மருளும்படிக்கிடாக
அரங்கததுஅம்மா - கோயிலில் நித்யவஸனிதிபண்ணி எழுந்தருளி யிருக்கும் ஸ்வாமீ!
பள்ளி எழுந்தருளாயே - தேவரீா சயனம் விட்டு உணாந்து அடியேனுக்காக இவாகளையும் அடிமைகொண் டருளவேணும்.

என்றன் ஆருயிர் அனையவெந்தாய! தேவரீர் திருவடிகளில் விண்ணப்பம் (தேவரீர் உணர்ந்தருளும்போது மங்களகானம் கேட்பதற்காக) குற்றமற்ற சிறுபறையையும, ஒரு தந்தியையுடைய வாத்யத்தையும், மத்தளமும் வீணையும், வேய்ங்குழல புல்லாங்குழல முதலிய குழல்களையும் இவற்றிலுண்டான நாதமானது திக்குகளெல்லாம நிறைந்து முழங்கும்படி இசையைக் கூட்டி மங்களமான கீதங்கள் பாடுந்தங் கின்னரர்களும், கருடர்களும், கந்தருவர்களும், இன்னும் மற்றுள்ளார்களும், ராத்திரியெல்லாம் இடையறாது மாதவத்தைப் புரிகின்ற ரிஷிகளும், அனைத்துத் தேவர்களும், சாரணர்களும், யக்ஷர்களும், சித்தர்களும, இவரெல்லாரும் தேவரீர் திருப்பள்ளி யுணர்ந்தருளும்போதுள்ள தேவரீருடைய திருவடி வழகைக்கண்டு திருவடித் தொழ வேண்டுமென்று த்வரையாலே நெருங்கி நின்றார்கள்; ஆனதுபற்றி ஸர்வரக்ஷகனான தேவரீர் அடியேனுக்காகத திருப்பள்ளி யுணர்ந்தருளி அழகோலக்கமாயிருந்து எல்லாரும் வாழும்படி கடாக்ஷித் தடிமைகொண்டருளவேணும்.

கஎ. [illegible]

கஅ. [illegible]

௧௦. கடிமலர்க்கமலங்கள்மலர்ந்தனவிவையோ
கதிரவன்கனைகடன்முளைத்தனனிவனோ
துடியிடையார்சுரிகுழல்பிழிந்துதறித்
துகிலுடுத்தேறினர்சூழ்புனலரங்கா
தொடையொத்ததுளபமுங்கூடையும்பொலிந்து
தோன்றியதோட்டொண்டரடிப்பொடியென்னு
மடியனையளியனென்றருளியுன்னடியார்க்
காட்படுத்தாய்பள்ளியெழுந்தருளாயே.

கடிமலர்க் கமலங்கள் - பரிமளமுள்ள தாமரைபுஷ்பங்கள்
மலர்ந்தன இவையோ - அலர்ந்தன
கதிரவன் - சூரியனானவன்
கனைகடல் - ஒலிக்கின்ற சமுத்திரத்தில்
முளைத்தனன்இவன் - உதயகிரிமேலேவந்து தோன்றினான்
துடிஇடையார் - உடுக்கைபோன்ற இடையை யுடைய ஸ்திரீகள்
சுரிகுழல் - சுருண்டமயிர்முடியை
பிழிந்து உதறி - பிழிந்து உதறிவிட்டு
துகில் உடுத்து ஏறினர் - வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு கரையேறினார்
சூழ்புனல் அரங்கா - காவேரியாலேசூழப்பட்டதிருவரங்கத்தில் கண்வளர்ந்தருளும அம்மனே
தொடையொத்த துளபமும் - தேவரீர்சாத்திக்கொள்ளத்தக்க திருத்துழாய் மாலையும்
கூடையும் பொலிந்து தோன்றிய தோள் - திருப்படலிகையுமாய்த் தோன்றின தோளையுடையனாய்
தொண்டர அடிப்பொடி - தொண்டரடிப்பொடி என்று பெயருடைய
அடியனை - அடியேனை
அளியன் என்று - எளியனென்று
அருளி - கிருபைபண்ணி
உன்னடியார்க்கு - தேவரீர் தாஸவர்க்கத்துக்கு
ஆட்படுத்தாய் - ஆட்படுத்து (அதற்காக)
பள்ளி - திருப்பள்ளியைவிட்டு
எழுந்தருளாயே - உணர்ந்தருளவேணும்.

காவேரியாற் சூழப்பட்ட கோயிலில் கண்வளர்ந்தருளும் மலர்மகள் மார்பா! தேவரீர்க்கு அடியேன் செய்யும் விண்ணப்பம்; திவ்யபரிமளத்தையுடைய தாமரைப்புஷ்பங்கள் அலர்ந்துவிட்டன. அம்மலர்க்குக்கேள்வனான ஆதித்தியனும் அலையெறியும் சமுத்திரத்தில் உதயகிரியின் மேலேவந்து தோன்றினான். உடுக்கையைப்போன்ற இடையையுடைய ஸ்திரீகள் நீராடி, தங்கள் சுருண்டமயிர்முடிகளைப் பிழிந் துதறிவிட்டு தத்தம் வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு கரையேறினார்கள். ஆகையால் விடியற்காலம் ஆயிற்று; தேவரீர் சாத்தியருளுகைக்குத் தகுதியான திருத்துழாயமாலையும் திருப்படலிகையுமாய்த் தோன்றின தோளையுடையனாய், தொண்டரடிப்பொடி யென்னும் பேரையுடைய அடியேன் எளியன் என்று கிருபைசெய்து தேவரீருடைய தொண்டர்க்குத் தொண்டனாக்குவதற்காக, உணர்ந்தருளி கிருபைசெய் தருளவேணும்.

---

௧௯. [illegible] ॥

௨௦. [illegible] ॥

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

நித்தியாநுஸந்தானம்.

மூன்றாம் பிரிவு.

ஸூடிக்கொடுத்தநாய்ச்சியார்

திருவாய்மலர்ந்தருளிய

உபநிஷத்ஸாரமாகிய

திருப்பாவை.

இதற்கு

பூருவாசாரியர்கள் அருளிச்செய்த

வியாக்கியைகளுக்கிணங்க,

பதவுரை, பொழிப்புரை; ஸ்வாபதேசார்த்தமும்,

ஸம்ஸ்கிருத ப்ரதிகிருதிசுலோகங்களும்,

வித்வான்களான

திருக்குடந்தை, ஸ்ரீமான். கு. திருமலாசாரியராலும்,

கோலார்,

பிரதிவாதிபயங்கரம், ஸ்ரீமான் வெங்கடாசாரியராலும்,

பரிசோதித்து

(கோலார், ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டராயிருந்து,

இப்போது மைசூர் கவர்ன்மெண்டு டிரான்ஸ்லேட்டராயிருக்கும்

எம். பி. ஸ்ரீநிவாஸய்யங்கார், எம். ஏ.

அவர்களால்

சென்னை:

ஜீ. புஷ்பரதசெட்டி அண்டு கம்பெனியாரது

கலாரத்நாகரம் என்னும் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1899.

விலை ரூபா-1.

ஆண்டாள் பிரபாவச்சுருக்கம்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் கலி கூ-தான நளஹு ஆடி மீ சுக்லபக்ஷம் சதுர்தசி செவ்வாய்க்கிழமைகூடின பூரநக்ஷத்திரத்தில் பெரியாழ்வார் நந்தவனத்தில் திருத்துழாய்க்கு நிலத்தைக்கொத்தாநிற்க அத்திருத்துழாய் மண்ணின்கீழே பார்மடந்தை ஆண்டாளாய் அவதரித்தருளினுள். இப்பெண் சிகாமணியை ஆழ்வார்கண்டு அதிப்ரீதராய் அவ்வூரில் எழுந்தருளியிருக்கும் வடபத்திரசாயிநியமனப்படி, கோதையென்று திருநாமம்சாத்தித் திருமகள்போல வளர்த்துவந்தார்.

அப்படி வளர்ந்துவருகையில் ஒருநாள் விஷ்ணுசித்தர் தமது வடபெருங்கோயிலுடையானுக்குக் கட்டிவைத்த ஹாரங்கள் பூமாலே, தோமாலே, பத்திமாலே, முதலியவற்றை அவரில்லாத வேளையில், என்றும்போல் தான் சூடிக்கொண்டு எம்பெருமானுக்கு நான் ஒத்திருக்கிறேனே? இல்லேயோ? எனத் தன் ஒப்பனையைக் கண்ணுடியிற் பார்த்துவிட்டுத்திரும்ப அம்மாலேயை வழக்கம்போல ஒரு பந்நாகச்சுருட்டி திருப்பக்குடலேயில் திரும்பவைத்தாள். இதைப்பார்த்துக்கொண்டேவந்த விஷ்ணுசித்தர், இப்படி ஸ்வாமிக்குச் சாத்தும்மாலேயைக் கெடுப்பதுண்டோ? வெனவெகுண்டு, அற்றைக்கு அம்மாலேயைக் கொண்டுபோய்ச் சாத்தாமலிருந்துவிட்டார். மாலேவராததுகண்டு, அன்றிரவில் ஸ்ரீரெங்கநாதன் அவரதுகனவில் எழுந்தருளி மாலேகொணராத்தற்குக் காரணம்யாதெனவினவி—அவரும் தமதுமகள்செய்த குற்றத்தை விண்ணப்பஞ்செய்தவாறே, பெருமாளும் ஆழ்வாரைநோக்கி, "பெரியாழ்வாரே! கோதாதேவியை, யாரென்று நினைத்தீர்? அவள் என்னுடைய அத்யந்த பிரியபாத்ரையான பூமிப்பிராட்டி யம்சம்-நீர்கட்டிச் சமர்ப்பிக்கும் மாலேகளே அவள்முன்பே சூட்டிக்கொண்டவப்போதுகாணும் வாஸனையாய்ப் பிரியமாயிருப்பது" என்றருளிச்செய்தார். அன்றுமுதல் அவ்வாறே செய்துகொண்டு மகளுக்குச் சூடிக்கொடுத்த நாய்ச்சியார் என்றுபெயரிட்டு "இவள் பின்னேகொல், நிலமாமகள் கொல், திருமகள் கொல், என மனதில் எண்ணிக்கொண்டு அவளிடத்தில் மிகுந்த பக்தியுடன் இருந்தார்.

இந்நாய்ச்சியார் ஆஜந்ம பால்ய யவ்வனுவஸ்தைகடோறும் வளருகிற பரபக்தி பரஞான பரமபக்திகளே யுடையவளாய்க்கொண்டு, பகவத்விஷய பிராவண்யளாய், அவனேவிட்டகன் றுயிராற்றகில்லா நிலேயையுடையளாய், மார்கழி நீராடி நோன்புநோற்று காமபஜநாதிகளேப் பண்ணியும், தரிக்கப்பார்த்து 143 பாசுரமுள்ள "நாய்ச்சியார் திருமொழி", 30-பா-உள்ள "திருப்பாவை" என்ற இரண்டு திவ்யப் பிரபந்தங்களேயு மருளிச்செய்து, ஜகத்துக் குபகரித்தருளினர்.

அனந்தரம் ஆண்டாளுக்கு மணம்புரியத்தக்க பருவம்வரவர, ஆழ்வாருக்கு வியாகுலம் மிகுந்தது. இதுகண்டு ஆண்டாள் "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்ன, ஆழ்வாரும் "பின்னை யெங்ஙனே" என்ன, ஆண்டாள் "திருமாலிருஞ்சோலை யெம்மாயவற்கல்லால் மற்றொருவர்க் கென்னைப் பேசவொட்டேன்" என்ன, ஆழ்வார், "ஆகில் நூற்றெட்டுத் திருப்பதி யெம்பெருமான்களில் நீர் ஆருக்கு வாழ்க்கைப் படுகிறீரென்ன? ஆண்டாளும், "அவ்வவ் வெம்பெருமான்களுடைய குணபாதங்களைக் கீர்த்தித்தருளினால் சொல்லுகிறேன்" என்ன, ஆழ்வாரும், வடபெருங்கோயிலுடையான், அழகர், வடவேங்கடவன், மற்றும் "பாண்டிமண்டலம், மலைநாடு, வடதிசை, தொண்டைமண்டலம், சோழமண்டலம், இவைகளின் திருப்பதி யெம்பெருமான்க ளனைவருடைய வைபவமனைத்தையும் சொல்ல, ஆண்டாள் கேட்டு, ஆநந்தக்கண்ணீர் சொரிய, திருவரங்கத்தின்னமுதருடைய திருவடிவழகில் மாலேறி, மோகித்து, மனமுருகி, அணியரங்கத் தம்மானுக்கே தீர்ந்த காதலையுடையாராகினர்.

அப்போது திருவரங்கச்செல்வனார் ஆழ்வாருடைய ஸ்வப்நத்தில் எழுந்தருளி "நமது கோயிலுக்கு கோதையை பங்குனிமாதம் உத்திர நக்ஷத்திரத்தன்று அழைத்துக்கொண்டுவாரும்; நாமே சர்வசுபலக்ஷண லக்ஷிதமான சுபமுகூர்த்தத்தில், பாணிக்கிரகணம் பண்ணுகிறோம்" என்றருளிச் செய்ய, அன்றே ச்சத்திரசாமராதி ஸகல பரிஜநபரிச்சதங்களுடனே, திருவரங்கத்துக்கு ஆண்டாளை மணிப்பல்லக்கில் எழுந்தருளுவித்துக்கொண்டு அழகியமணவாளர் திருமண்டபத்துட்சென்றார். ஆண்டாள் உடுத்தபட்டுச்சேலையும், செங்கழுநீர் மாலையும், கஸ்தூரிநாமமும், கடைக்கண்விழியும், கொடியேரிடையும், கோடிதிங்களின் நிலவெறிப்ப, கோங்கொத்த கொங்கைகுலுங்க, காற்சிலம்பார்க்க, சீரார்வளையொலிப்ப, அன்னமென்னடைகொண்டு, அழகியமணவாளன் திருமுன்பேசென்று உள்ளேபுகுந்து கண்களாரக்கண்டு, கேசவநம்பியைக் கால்பிடிப்பாள்' என நாகபரியங்கத்தை மிதித்தேறித் திருவரங்கன் திருவடிவே நாடும்படி அகிலருங்காண அந்தர்ப்பவித்தருளினர். இதைக்கண்டு ஆழ்வார், மற்ற அவர்சிஷ்யரான வல்லபதேவராயன் முதலான அகிலரும் அதிவிஸ்மயப்பட்டார்கள்; திருவரங்கச்செல்வனார் ஆழ்வாருக்கு அருளப்பாடிட்டருளி "நீர் நமக்கு சுவசுரராய்விட்டீர்" என உகந்தருளி வில்லிபுத்தூருறைவான் பொன்னடிபூண்டு வாழுமென்று விடைகொடுத்தருள; ஆழ்வாரும் வில்லிபுத்தூர் ஏறச்சென்று, பூர்வம்போலே வடபெருங் கோயிலானுடைய கைங்கரியத்திலே நிரதராய் வாழ்ந்துகொண்டு எழுந்தருளியிருந்தார்.

இவர் திருநாமங்கள்.

1. ஆண்டாள்.
2. சூடிக்கொடுத்தநாய்ச்சியார்.
3. சுரும்பார் குழற்கோதை.
4. தென்னரங்கம்தொழும்தேசியள்.
5. கோதாதேவி.
6. கோதை.

முகவுரை.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
1	16	ஸ்ரீகிருஷ்ணனை	ஸ்ரீகிருஷ்ணனே.
6	20	ஹோதா	ஹோத்தா.
6	21	[illegible]	ப்ரபஞ்சம்.
12	13	ஜீவாத்துமபாவனைவன்	ஜீவாத்துமபாவானவன்.
		[illegible]	அநாதியவித்தை.
13	12	[illegible]	வேறேவழியில்லை.
16	2	[illegible]	மாயையும்.
16	4	[illegible]	[illegible]
16	28	[illegible]	[illegible]
20	7	[illegible]	[illegible]
21	10	[illegible]	[illegible]
21	17	[illegible]	அனைத்து.
26	34	[illegible]	[illegible]
32	1	[illegible]	போக்தா.
34	11	[illegible]	[illegible]
35	35	[illegible]	[illegible]
36	21	[illegible]	[illegible]
37	32	[illegible]	[illegible]

தனியன்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
2	12	[illegible]	சூட்டிக்கொண்டு.
3	33	[illegible]	பறித்தாலும்.

திருப்பாவை.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
3	29	[illegible]	ஆய்ச்சிமாரே.
4	19	[illegible]	[illegible]
4	22	[illegible]	[illegible]
6	[illegible]	[illegible]	அதைக்கண்டு.
6	23	[illegible]	[illegible]
6	30	[illegible]	[illegible]
7	36	[illegible]	தழைக்கவும்.
7	38	தலைகட்டுகிறது	தலைக்கட்டுகிறது.
8	9	[illegible]	ஸாக்ஷாத்கரித்து.
8	21	[illegible]	[illegible]
10	8	[illegible]	யுக்தராய்.
10	13	[illegible]	ஸ்ரீயப்பதி.
12	2	ஸ்ரீயபதி	ஸ்ரீயப்பதி.
54	15	[illegible]	படியாய்.
55	37	[illegible]	ஸ்வாபதேசம்.
56	24	[illegible]	[illegible]
48	3	[illegible]	சவுந்தர்ய.
58	14	அலலது	அல்லது.
60	23	பிர்மாநந்த	பிரமாநந்த.

க்ரந்தங்களின் குறிப்புப்பெயர்களாவன:—

ருக்.	=	இருக்வேதம்
ஈசா.	=	ஈசாவாஸ்யோபநிஷத்து
கட.	=	கடஉபநிஷத்து
முண்ட.	=	முண்டகோபநிஷத்து
ப்ர.	=	பிரச்நோபநிஷத்து
மாண்டூ.	=	மாண்டூக்யஉபநிஷத்து
தை.	=	தைத்திரீயஉபநிஷத்து
ஐத.	=	ஐதரேயஉபநிஷத்து
சா.	=	சாந்தோகியஉபநிஷத்து
ப்ரு.	=	பிருஹதாரணியகஉபநிஷத்து
ம - நா.	=	மஹாநாராயணஉபநிஷத்து
ஸுபா.	=	சுபாலோபநிஷத்து
ந்ரு - தா.	=	ந்ருஸிம்மஉத்தரதாபநீயம்
கௌஷீ.	=	கௌஷீதகிஉபநிஷத்து
மைத்ரா.	=	மைத்ராயணேயுபநிஷத்து
ச்வே.	=	சுவேதாசுவதரஉபநிஷத்து
ப - கீ.	=	பகவத்கீதை
பா.	=	ஸ்ரீபாகவதம்
வி - பு.	=	விஷ்ணுபுராணம்
ரா.	=	இராமாயணம்
ஸூ.	=	பாதராயணபிரம்மசூத்திரம்
தி.	=	திருவாய்மொழி

திருப்பாவை

முகவுரை.

நித்தியானு ஸந்தானத்தின் இம்மூன்றாவது பிரிவுக்கு "திருப்பாவை" யென்றுபெயர், திரு - அழகிய, பாவை - பெண் அல்லது 'நோன்பு' என்று பொருள். இந்தப் பிரபந்தத்தைச் செய்தருளியவர் ஆண்டாள். இம்மாதிரி பிரபந்தத்தைத் திருவெம்பாவை யென்று தமிழர் கூறுவதுண்டு. ஒவ்வொரு பாசுரத்தின் இறுதியில் "எம்பாவாய்" என்று முடிகிறபடியால் இந்நூலின் பெயரும் அதுவாயிற்று.

ஆண்டாளவதரித்த நாள்முதல் ஞானபக்திகள் பெருகிக்கொண் டிருந் தமையால் உலகவாழ்க்கையில் கொஞ்சமும் வாசனையற்றவராய் 'கோல்தேடி யோடுங் கொழுந்ததே போன்றதே, மால்தேடி யோடும்மனம்' என்றபடி வடபெருங் கோயிலுடையானைத் தழுவிச் சுகிக்க ஆவல்கொண்டு அதற்கு விரகென்? என்று மனதிற் கவலைபூண்டு, ஸ்ரீ ஜநகராஜன் திருமகளுக்கு வில்லும், நப்பின்னைப் பிராட்டிக்கு எருதுகளும் பந்தயங்களானாற்போல நமக்கு யாது உளது? என்று தம்முள்ளே திராக்கவலையும் வியஸனமும் பட்டுக்கொண்டிருந்தார். அந்நிலைதச் சிலர் தார்மிகர் கண்டு ஆண்டாளைப் பார்த்து "முன்பு ஸ்ரீ கிருஷ்ணனும் பெண்களுமாய்க் குரவைகோத்து ஆடி, மீண்டு கிருஷ்ணன் பிரிந்துபோய் ஒளிக்க, அப் பெண்பிள்ளைகள் தங்களாற்றாமையாலே ஸ்ரீகிருஷ்ணனைத் தியானித்து தாதாத்மிய மடைந்து 'க்ருஷ்ணோஹமேஷ லலிதம் வ்ரஜாம்யவலோக்யதாம் கதி:' (கிருஷ்ணனாகிய நான் இதோவந்தேன் காளியனே துஷ்டப்பயலே! நில்லு) என்று அநுகரித்துத் தரித்தார்கள். "அவ் வுபாயமே நீரும் கொள்ளலா"மென்று அவர்கள்கூற அதை மனதிற்றாங்கி யாண்டாளும் நல்லது நாமும் அப்படியே அநுகரித்துவாழப் பார்ப்போம் என்று நினைத்து இந்த ஸ்ரீவில்லிபுத்தூரே திருவாய்ப்பாடியாகவும் அங்குள்ள பெண்கள் இடைப்பெண்களாகவும் தாமும் அவர்களி லொருவராகவும், வடபெருங்கோயிலே ஸ்ரீநந்தகோபர் திருமாளிகையாகவும், ஆங்குறைபவன் ஸ்ரீகிருஷ்ணனாகவும் அநுஸந்தானம்பண்ணி, பாவனாப் பிரகர்ஷத்தாலே அநுகாரம் முற்றி இம் முப்பது பாசுரங்களையும்வெளியிட்டருளினர்.

இப்பிரபந்தத்தில் வெளிப்படையாய்த் தோற்றுகிற அர்த்தமாவது 'நோன்பில் ஊற்றமுடைய திருவாய்ப்பாடியின் சிலபெண்கள் இரவில் முற்படவுணர்ந்து ஸ்ரீகிருஷ்ணகுணசேஷ்டிதங்களிலே முழுகி உறங்கிக் கிடக்குமற்றவர்களையும் அவரவர்கள் கிரகங்களுக்குச் சென்று எழுப்பி அவர்களுடன் ஸ்ரீகிருஷ்ணனிடஞ்சென்று தங்கள் குறையைக்கூறி, அபேக்ஷிதத்தை யறிவித்துத் தங்கள்நோன்பின்முடிவில் பெறத்தக்க பேற்றையும் பெற்றனர்' என்பதே

இதிலுள்ளடங்கி மறைந்துகிடக்கும் பொருளே முமுக்ஷுக்களுக்கு அத்யந்தோபாதேயமானபடியால் அவ்வர்த்தத்தை பூர்வாசாரியர்கள் விரிவாய் ஸ்வாபதேசார்த்தமென வெழுதி யுலகத்துக்கு பகரித்தருளி யிருக்கின்றனர். அவைகள் சாதாரணருக்கு துரவகாஹமா யிருப்பதைப்பற்றி எளிதி லுணரத்தக்கதாய் சுருக்கமாய் அந்தந்த இடத்தில் எடுத்துக் காட்டுவது உசிதமென்றெண்ணி ஒவ்வொரு பாசுரத்தி னடியிலும் ஸ்வாபதேசம் அதாவது உட்கருத்து என்ற உரையெழுதப்பட் டிருக்கிறது.

2. இத்திருப்பாவையில் உள்ளூன்றிப் பார்க்குமிடத்தில் உபநிஷதர்த்தங்கள் வெகுவாய் விளங்குகிறபடியால் இதை உபநிஷத் ஸாரமென்று ஆசாரியர்கள் கூறுகின்றனர். அவற்றுள் முக்கியமான சிலவற்றை சில பாக்களிலிருந்து திருஷ்டாந்தமாக எடுத்துக் காட்டப்படுகிறது.

I. (3, 24-பாட்டு.) ஓங்கியுலகளந்த; அன்றிவ்வுலகமளந்தாய.

"இதம் விஷ்ணுர்விசக்ரமே த்ரேதா நிதயே பதம்।
த்ரீணி பதா விசக்ரமே விஷ்ணுர்கோபா அதாப்ய:।" } ரிக்வே. I. 2. 17.

(இ-ள்.) இவ்வுலகங்களனைத்தையும் மூன்றடியாயளந்தான் விஷ்ணு. யாராலும் வஞ்சிக்கமுடியாத ஸர்வரக்ஷகனான ஸ்ரீவிஷ்ணு மூன்றடியாயளந்தான்.

II. (4.) ஊழிமுதல்வன்...

(ச்ரு-) ஸ காரணம் கரணாதிபாதிபோ ந சாஸ்ய கச்சிஜ்ஜநிதா ந சாதிப:।
ச்வேதாச்வதர உ. VI. 9.

(இ-ள்.) ஜீவாத்மாவுக்கு அதிபதியான ஈச்வரனே அகிலத்தையும் காரணமாய்நின்று சிருஷ்டிக்கும் முதல்வன்; அவனைப் படைக்கிறவனும் அவனுக்கு அதிபதியும் யாருமில்லை.

III. (5-ம். பா.) மாயனை மன்னுவடமதுரைமைந்தனை ....

(ச்ரு-) அஸ்மாந்மாயீ ஸ்ருஜதே விச்வமேதத். ச்வேதாச்வதர IV. 10.

(இ-ள்.) மாயனான பரமபுருஷன் பிரபஞ்சமனைத்தையும் படைத்தருளுகிறான்.

IV. (6-ம். பா. 2ம். பா.) வெள்ளத்தரவிற் றுயிலமர்ந்த வித்தினை; பாற்கடலுட் பையத் துயின்ற பரமன்.

(ச்ரு-) ஸமுத்ரேந்தம் விச்வசம்புவம் தைத்திரீய நா. 6. 11.
அந்தஸ்ஸமுத்ரே கவயோ வயந்தி। தைத்திரீய.

(இ-ள்.) க்ஷீரசமுத்திரத்தின் மத்தியில் திருப்பள்ளிகொண்டவன் அகில பிரபஞ்சத்துக்கும் மங்களகரன்.

(இ-ள்.) அவன் திருப்பாற்கடலுள் இடமுடையான் எனக்கவிகளறிகிறார்கள்.

V. (5-ம். பா.) போயபிழையும் புகுதருவானின்றனவும் தீயினிற்றூசாகும்.

(ச்ரு-) தத்யதேஷீகாதூலமக்நௌ ப்ரோதம் ப்ரதூயேத।
ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே। ச்சா. 5-24-3.

(இ - ள்.) நெருப்புப்பட்ட பஞ்சுபோல் ஸஞ்சிதபாபங்கள் அடியுடனற்றுப்போகின்றன. (அதாவது பூர்வாக நாசத்தைச் சொன்னபடி.)

(ஸ்லோ) யதா புஷ்கரபலாச ஆபோ ந ஸ்லிஷ்யந்தே।
ஏவமேவம்விதி பாபம் கர்ம ந ஸ்லிஷ்யதே। சா. 4-14-3.

(இ - ள்.) ஸம்பந்த ஜ்ஞானம் வந்தவுடன், தாமரை இலையில் நீர் ஒட்டாததுபோல், இவனைப் பாபகர்மங்கள் பற்றுவதில்லை.

VI. (21-ம். பா.) தோற்றமாய் நின்ற சுடரே!

(ஸ்லோ) அத யதத: பரோ திவோ ஜ்யோதிர்தீப்யதே। சா०-3-13-7.

(இ - ள்.) பரமபதத்தில் தோற்றமாய் நின்ற ஒண்சுடர்.

VII. (22-ம். பா.) வந்து தலைப்பெய்தோம்....

(ஸ்லோ) ஜ்ஞாநமாத்மநி மஹதி நியச்சேத் தத்யச்சேச்சாந்த ஆத்மநி। க. III. 13.

(இ - ள்.) சேதனனை இவ்வாத்மாவை சேதனனான பரமாத்மாவுக்கே அர்ஹமாய்ச் சேர்க்கவேண்டியது.

VIII. (29-ம். பா.) உன்றன்னோடு உற்றோமே யாவோம் உனக்கே நாமாட் செய்வோம் மற்றை நங்காமங்கள் மாற்று.

(ஸ்லோ) [illegible]

(இ - ள்.) பரமாத்மாவின் நியமனப்படி அவனை கைங்கரியங்களை இவ்வாத்மா செய்யத் தக்கவன்.

(ஸ்லோ) [illegible] ப்ரு. III. 4.

(இ-ள்.) அவனுக்குச் சேஷமாயிருக்கிற இவ்வாத்மா ஆனந்தப்பட்டதுபடிபண்ணி இவனுக்கு ஸ்வாதந்த்ர்யமான கைங்கரியங்களைக் கொடுத்து அது தானும் பாரதந்த்ர்ய ஸ்வரூபமாய்ச் செய்யவேணும்.

IX. (28-ம். பா.) குறைவொன்றுமில்லாத கோவிந்தா...

(ஸ்லோ) [illegible]

ஶாண்டி. 2-13

(இ - ள்.) அவாப்த ஸமஸ்தகாமனான ஸர்வேச்வரனுக்கு அடையப்படாததும் அடையத்தக்கதுமொன்றுமில்லை.

3. இத்திருப்பாவையில் வெளிப்படையாய்த் தோற்றுகிற மார்கழி நீராட்ட நோன்புக்கு அடியென்னென்னில், ஸ்ரீமத் பாகவதத்தில் பத்தாவது ஸ்கந்தம் 22-வது அத்தியாயத்தில் மார்கழி நீராட்ட நோன்பைக்குறித்துக் கூறப்பட்டுள்ள அடியில்வரும் சுலோகங்களை யாதாரமாய்க் காணலாம்.

ஸ்லோ॥ ஹேமந்தே ப்ரதமே மாஸி நந்தவ்ரஜகுமாரிகா:
சேருர்ஹவிஷ்யம் புஞ்ஜாநா: காத்யாயந்யர்ச்சநவ்ரதம்। (X-22-1)

ஆப்லுத்யாம்பஸி காளிந்த்யா ஜலாந்தே சோதிதேऽருணே
க்ருத்வா ப்ரதிக்ருதிம் தேவீமானர்ச்சுர் ந்ருப ஸைகதீம்। X-22-2.
கந்தைர் மால்யை: ஸுரபிபிர் பலிபிர் தூபதீபகை:
உச்சாவசைச்சோபஹாரை: ப்ரவாளபலதண்டுலை:। 3.
காத்யாயனி மஹாமாயே மஹாயோகின்யதீச்வரி
நந்தகோபஸுதம் தேவி பதிம் மே குரு தே நம:। 4.
ஏவம் மாஸம் வ்ரதம் சேரு: குமார்ய: க்ருஷ்ணசேதஸ:
பத்ரகாளீம் ஸமானர்ச்சுர் பூயாந்நந்தஸுத: பதி:। 5
ஊஷஸ்யுத்தாய கோத்ரை: ஸ்வைரந்யோந்யாபத்தபாஹவ:
க்ருஷ்ணமுச்சைர்ஜகுர்யாந்த்ய: காளிந்த்யாம் ஸ்நாதுமன்வஹம்। 6.
தாஸாம் விஜ்ஞாய பகவான் ஸ்வபாதஸ்பர்சகாம்யயா
த்ருதவ்ரதானாம் ஸங்கல்பமாஹ தாமோதரோऽபலா:। X-22-29.
ஸங்கல்போ விதித: ஸாத்வ்யோ பவதீனாம் மதர்ச்சனம்
மயானுமோதித: ஸோऽஸௌ ஸத்யோ பவிதுமர்ஹதி। X-22-30.

(இ - ள்.) ஒருமுறை நந்தகோகுலத்திலுள்ள ஆயர் சிறுமியரனைவருங்கூடி மார்கழிமாதத்தில் நாடோறும் விடிவோறை யெழுந்து ஒருவர்கையை யொருவர் பற்றிக்கொண்டு ஸ்ரீ கண்ணபிரான் புகழை யுரக்கப் பாடிக்கொண்டு காளிந்திநதிக்குச் சென்று, அருணோதய வேளையில் அந்நதியில் நீராடி மணலினுல் காத்யாயனீ தேவதாவிக்கிரஹத்தைச் செய்து தங்களுடன் கொண்டுபோன பத்திரபுஷ்ப தூபதீப கந்தமூல பலவஸ்திரமால்ய நிவேதனாதிகளைக்கொண்டு நாளும் பூசித்து ஸ்ரீ கிருஷ்ணனையே நந்தமக்குப் பதியாக்கித் தரவேண்டுமென்று அந்தத் தேவியைப் பிரார்த்தித்து ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் மிகவும் உள்ளன்புடன் அம்மாதம் முழுமையும் நோன்பு புரிந்தனர். அந்நோன்பின் முடிவில் கண்ணபிரான் அவர்களிருக்குமிடஞ் சென்று அவர்களைநோக்கிக் கூறியமொழியாவது: "நீங்கள் எனக்கு அடிமைசெய்ய ஆவலுற்று இந்நோன்பு நோற்றீர்களல்லவா? அதற்குகந்தேன், உங்கள் கருத்திற் கிசைந்தேன்; ஆனுல் இதிலோர் விசேஷமுளது: அதுயாதெனிற் கேளீர்.

ஶ்லோ॥ ந மய்யாவேசிததியாம் காம: காமாய கல்பதே।
பர்ஜிதா க்வதிதா தானா: ப்ராயோ பீஜாய நேஷ்யதே॥ X-22-31.

(இ - ள்.) என்னிடத்தில் அன்புவைப்பார்க்கு அவ்வன்பின் மூலம் காமமேயானுலும் அது அவித்யாகாமகாம ஹேதுகமாவதில்லை. பிறப்பினும்விதையைத் தீய்த்து முத்தியையேதரும். எப்படியெனில், வறுக்கப்பட்டு பக்குவமான தானியங்கள் மறுபடி முளையாததுபோலே.

காமார்த்திகளாய் தியானிப்பார்க்குங்கூட ஸர்வேசுவரன் மோக்ஷத்தைக் கொடுப்பதுண்டா? என்று ஓர் ஆசங்கையுளது. அதற்கு ஸ்ரீமத் பாகவதத்தில் கூறப்பட்டுள்ள சமாதானம் யாதெனில்; காமத்தினுல் மாத்திரமேயல்ல, மற்ற எக்காரணத்தினு லாவது ஸர்வேசுவரனுன ஸ்ரீகிருஷ்ணனிடத்தில் இடைவிடாது மநம்பொருந்தி நிற்பாரானுல் பேற்றுக்கு அது ஒன்றேபோதும். நிந்திப்பார்க்குங்கூட முத்தியையே தருகிறுன். சர்வத்திலும் சமமாயிருக்கும் பக

வானுக்கு நிந்தைமுதலானதுகளாலே வைஷம்ய மில்லை, அதினலேயே (எந்த வுபாயத்தால் சேதநர் அவனைத் தியாநித்தாலும் அத்தியானத்தால்) நிந்தை முதலியவற்றின் பாவமுநீங்கி பரிசுத்தராய் அவனையே சேர்வார்கள். இவ் விஷயமான சந்தேகத்தைக் குறித்து ஸ்ரீநாரதரை தருமபுத்திரர் கேட்க, அம்மஹர்ஷி யானவர் தெளிய அறைவது யாதெனில். ஸ்ரீபா-7-1ல்.

ஶ்லோ॥ த்வேஷாத்வேஷாநுபந்தேந நிர்வைரேண பயேந வா।
ஸ்நேஹாத்காமேந வா யுஞ்ஜ்யாத் கதஞ்சிந்நேக்ஷதே ப்ருதக்॥ 28.
கீடஃ பேஶஸ்க்ருதா ருத்தஃ குட்யாயாம் தமநுஸ்மரந்।
ஸம்ரம்பபயயோகேந விந்ததே தத்ஸ்வரூபதாம்॥ 30.
காமாத் த்வேஷாத் பயாத் ஸ்நேஹாத் யதா பக்த்யேஶ்வரே மந:
ஆவேஶ்ய ததகம் ஹித்வா பஹவஸ்தத்கதிம் கதா:॥ 32.
கோப்ய: காமாத் பயாத் கம்ஸோ த்வேஷாச் சைத்யாதயோ ந்ருபா:
ஸம்பந்தாத் வ்ருஷ்ணய: ஸ்நேஹாத் யூயம் பக்த்யா வயம் விபோ॥ 33.

(இ - ள்.) புருஷோத்தமனுன ஸ்ரீமந்நாராயணனிடத்தில் விரோதத்தாலாவது, பத்தியாலாவது, பயத்தாலாவது, அன்பினலாவது காமத்தினலாவது இவ்வைந்து வகைகளில் எவ்வகைக் காரணத்தினலாவது மனதைச்செலுத்திப் பொருத்தலாம்; எப்படியானலும் அவனுக்கு இவைகளில் ஒருவகை உயர்த்தியென்றும் மற்றொருவகை தாழ்த்தியென்றும் காணவில்லை (28); அன்றியும் வைரம் பயம் முதலியவற்றல் மனம் ஏகாக்கிரப்பட்டு அவன் ஒப்புமையையடையலாம்; குளவியால் கூட்டிக்குள்ளடைக்கப்பட்டிருக்கிற புழுவானது, அக்குளவி யெப்போதுவந்து தன்னைக் கொட்டுமோ' என்று அக்குளவியையே இடைவிடாது பயத்தால் தியானித்துக்கொண் டிருப்பதினல் கொஞ்சநாளைக் குள்ளேயே அக்கூட்டுக்குட் புழுவானது அக்குளவியின் ரூபத்தையே அடைகிறது (30); ஆகையால் மேற்கூறிய ஐவகைக் காரணத்தாலும் அவனையேஸ்மரித்துக்கொண்டும் அப்படி ஸ்மரிப்பதினலேயே, ஒருக்கால் விரோதமுதலானவற்றல் நிந்திந்ததினல் வரும் பகவதபசாரமாகிற பாவத்தினின்றும் நீங்கி ஸத்கதியையே யடைகிறர்கள் (32); யார் யார் எப்படி யடைந்தார்களென்றல், கோகுலத்திலுள்ள வாய்ச்சிமார் * ஸ்ரீ கண்ணபிரானைச் சேரவேணுமென்ற காமவிரஹத்தினல் அவனையே ஸ்மரித்து ஸத்கதியைச் சேர்ந்தார்கள்; அப்படியே கம்ஸன் அவனிடத்தில் பயத்தாலும், சிசுபாலன் முதலானேர் அவனிடத்தில் சத்துரு பாவத்தாலும், உறவின் முறைமையால் விருஷ்ணிமுதலானவர்களும் சினேகத்தால் பாண்டவர்களான நீங்களும், பத்தியால் எம்போலியரான இரிடிகளும் நற்கதியைச் சேரப்பெற்றேரும்.

ஆகையால் மனம் ஒருப்பட்டு ஸர்வேசுவரனுன எம்பெருமானிடத்தில் பொருந்த நிற்றல் உபாயமேயொழிய அப்படித் தியானித்தது, அல்லது விடாது ஸ்மரித்தது யாதுகாரணம் பற்றி யென்பதை ஸர்வசரண்யன் கவனிப்பதேயில்லை. இப்பொருளையே பகவத்கீதையிலும் ஸ்ரீ கிருஷ்ணன் அருளிச்செய்கிறன்.

---

* கோகுலத்தில் இருந்த ஆய்ச்சியர் யார் என்பதையும் அவர்களுக்கும் ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் நேர்ந்த சம்ஸர்கத்தின் தாற்பரியத்தையுங் குறித்து பின்னுலித்துடன் சேர்க்கப்பட்டிருக்கும்பட்டியிற் கண்டுகொள்வது.

அநந்யசேதா꞉ ஸததம் யோ மாம் ஸ்மரதி நித்யஶ꞉ ।

தஸ்யாஹம் ஸுலப꞉ பார்த்த² நித்யயுக்தஸ்ய யோகி³ந꞉ ॥

கீ³. VIII. 14.

(இ - ள்.) யாவனொருவன் ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் இடைவிடாது என்னையே எப்பொழுதும் நினைத்து தியானிக்கிறானோ அப்படிப்பட்ட சேதநனுக்கு நான் சீக்கிரம வசப்படுகிறேன்.

4. திருப்பள்ளியெழுச்சியின் முகவுரையில் ஸ்ரீரங்கத்தில் அரவணைமேற் பள்ளிகொண்டிருக்கும் திருவரங்கன் யார் என்றும் அவனுக்கும் நமக்குமுள்ள சம்பந்தமியாதென்றும் சற்று விசாரிப்போம் என்றுகூறி அவற்றுள், அகிலஹேய பிரத்யநீகாநந்த கலியாண குணாகரனாய், அநந்தாநந்த ப்ரகாரனாய் நித்யவிபூதியில் எழுந்தருளியிருக்கும் புருஷோத்தமனான ஸ்ரீமந்நாராயணனே இந்த லீலாவிபூதியில் ஸ்ரீரங்கநாதனாக அவதரித்தருளினானென்று எடுத்துக்காட்டி, பிறகு முற்கூற்றின்படி அவனுக்கும் சேதநனுக்குமுள்ள ஸம்பந்தத்தை கிரந்த விஸ்தரபயத்தால் விசதமாய்ச் சொல்லாமல் நின்றிருக்கிறபடியாலும், இத்திருப்பாவையில் அச்சம்பந்தத்தை நன்குயறிவ தவசியமாய்க் காண்கிறபடியாலும், இதனுட் புகுந்து அர்த்தவிசாரஞ் செய்வதற்குமுன், ஆத்தும தத்துவ விசாரமும் இவ்வாத்மாவுக்கும் பரமாத்மாவுக்குமுள்ள ஸம்பந்தத்தையும் சற்றுமன்றி விசாரஞ் செய்யவேண்டுமென்று தொடங்கி-முதல் முதல் சித்தத்துவத்தைக் குறித்து விவரிக்கப்படுகிறது. விசிஷ்டாத்வைதத்தின் கொள்கைப்படி தத்துவம் மூன்று. சித். அசித். ஈச்வரன்.

(ஶ்ரு) போ⁴க்தா போ⁴க்³யம் ப்ரேரிதாரம் ச மத்வா

ஸர்வம் ப்ரோக்தம் த்ரிவித⁴ம் ப்³ரஹ்மமேதத் ॥ ஶ்வே. 1-12.

(இ - ள்.) கர்மபலத்தைப் புசிக்கும் ஜீவாத்மாவும், அவனுக்கு போக்யமாயுள்ள பிரகிருதியும், இவ்விரண்டு தத்துவத்தையும் நடத்தும் பரமாத்மாவையும், சேர்த்து இந்த பிரபஞ்ச மூன்றுதத்துவாத்மகமென்றறிந்தும் சொல்லப்பட்டது. இதுதான் பரப்பிரமம்.

1. சித்தத்துவம். அதாவது மூன்று வகைப்பட்டிருக்கும் நித்யா. பத்தர், முக்தர்.

   இவற்றுள் நித்யரென்பார் லீலாவிபூதியுள்ளகப்பட்டு கர்மகதியால் பிறப்பிறப்பு முதலியவற்றை யடையாமல் என்றுமொன்றும் ஒருபடிப்பட்டு, ஸ்ரீவைகுண்டத்தில் பரமபதநாதனை இறைப்பொழுது மிடைவீடின்றி கண்ணுற்று ஸேவித்துக்கொண்டு குணாநுபவஞ் செய்யும் அநந்தகருட விஷ்வக்ஸேனாதிகள்.

(ஶ்ரு) நித்யோ நித்யாநாம்... ஶ்வே. VI. 13.

(இ - ள்.) நித்தியர்களுக்கு நித்தியனும்.

(ஶ்ரு) ஸதா³ பஶ்யந்தி ஸூரய꞉ ॥ தி³வீவ சக்ஷுராததம் ।

(இ-ள்.) புருஷோத்தமனான ஸ்ரீமந்நாராயணனை நித்யசூரிகள் இமைப்பின்றி ஸேவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

பத்தமுக்த உபயாவஸ்தையையும் அடைகிற பிரத்யகாத்மாவின் ஸ்வரூப ஸ்வபாவங்களை முதலிற்கூறி, அப்பால் பத்தமுக்த ஆத்மாக்களின் இலக்கணம் கூறப்படுகிறது. பிரதியகாத்மா.

(1) இருபத்தைந்தாவது தத்துவமாய்ச் சொல்லப்பட்ட புருஷன்.

(ஶ்ரு-தி) ஸம்ஸவிம்ஶோயம்புருஷ:
ஸம்ஸவிம்ஶஆத்மேத்யாஹுஹி।

(இ - ள்.) இருபத்தைந்தாவதான ஆத்தும தத்துவமே புருஷன்.

(2) தேஹேந்த்ரியாதி விலக்ஷணன் - எப்படியெனில், மூலபிரகிருதி - 1, மஹத்து-1, அகங்காரம்-1, பஞ்சதந்மாத்திரை-5, ஞானேந்திரிய கர்மேந்திரியங்கள்-10, மனசு-1, பிருதிவி முதலிய பூதங்கள்-5, ஆகச் சேர்ந்த 24-தத்துவங்களும் அவைகளின் விகாரங்களுஞ் சேர்ந்தது தேஹம். இத்தேகத்தினின்றும் வேறுபட்டவன்.

ஶ்லோ॥ விஷ்ணோர்மநுஷ்யதேஹஸ்ய ஶிரபாணாத்யலக்ஷணம்
தஸ்மாத்க்வஹமிதி ப்ரஜ்ஞா ஸம்ஜ்ஞாயாஜநகர்மஸு॥

விஷ்ணு-பு-. 2-13-85.

(இ - ள்.) மனுஷ்யனுடைய சரீரமானது கைகால் முதலிய லக்ஷணங்களை யுடையபடியால் வேறு வேறான பிரிவுகளை யுள்ளது, அவற்றுள் எதில், 'நான்' என்ற பாவத்தை வைப்பேன்.

(3) அஜடன். அதாவது தன்னுட் பிரகாசமுள்ளவன் (ஞானமின்றியுந் தானே தோற்றுபவன்.)

(ஶ்ரு-தி) அத்ராயம்புருஷ: ஸ்வயம்ஜ்யோதிர்பவதி। ப்ரு. 6-3-9.

(இ - ள்.) ஹிருதயகமலத்தில் ஜீவாத்மா தன்னொளியினால் விளங்குகிறான்.

(4) ஆனந்தரூபன். (பரிபூரணானந்தமுள்ளவன்.)

ஶ்லோ॥ நிவ்ருதோஜ்ஞானவாய ஆத்மாஜ்ஞாநமயோமல:।

விஷ்ணு-பு-. 6-7-22.

(இ - ள்.) எப்படி இவ்வாத்மா ஞானமயனோ அப்படியே ஆநந்தமயனாகவும் விளங்குகிறான்.

(5) நித்யன்—(அதாவது என்றுமுள்ளவன்.)

(ஶ்ரு-தி) அஜோநித்ய: ஶாஶ்வதோயம் புராணோநஹந்யதே ஹந்யமானே ஶரீரே. க. 2-18.

(இ-ள்.) இந்த ஆத்மா பிறப்பில்லாதவன், என்று முள்ளவன், அழியாதவன், பழையவன், இச்சரீர மழிந்துபோயினும் அவனழிவதில்லை.

(6) அணு (வெகுசூக்குமமானவன்.)

(ஶ்ரு-தி) ஏஷோணுராத்மா சேதஸாவேதிதவ்ய: (மு-. 3-1-9.)

(இ - ள.) இவ்வாத்மாவானவன் பகுக்கப்படத் தகாதவன்; பரிசுத்த மனதினால் அறியப்படத்தக்கவன்.

(7) அவ்யக்தன் (வெளிப்படையாய் கண்ணால் காணப்படாதவன்.)

(ஸ்ரு) அவ்யக்தோऽயம் (ஸ-கீ. 2-20.)=இவ்வாத்மா வியக்தனல்லன்.

(8) அசிந்த்யன் (இன்னபடிப் பட்டவனென்று ஊஹிக்க முடியாதவன்.)

(ஸ்ரு) அசிந்த்யோऽயம் (ஸ-கீ. 2-20.)=இவ்வாத்மா எண்ணலரியன்.

(9) நிரவயவன் (பிரித்தெடுத்துக் காட்டத்தக்க அவயவ சமுதாய மில்லாமல், தன்னுள் ளொன்றாயிருக்கை.)

ஸ்லோ॥ ஆத்மா நித்யோऽவ்யயஶ்ஶுத்த ஏகஃ ... ஸா. 7-7-19.

(இ - ள்.) இவ்வாத்மா நித்யனாய் நாசமில்லாதவனாய் பரிசுத்தனாய் நிரவயவனா யிருப்பவன்.

(10) நிர்விகாரன் (அசித்தைப்போலே வேற்றுமைப்படாமல் ஒருபடிபட்டிருப்பவன்.)

(ஸ்ரு) அவிகார்யோऽயமுச்யதே. (ஸ-கீ. 2-20.)

(இ - ள்.) இவ்வாத்மா ஒருவகையாயும் பரிணமிப்பதில்லன்.

(11) ஞாநாஶ்ரயன் (ஞானத்துக் கிருப்பிடமாயுள்ளவன்.)

(ஶ்ரு) விஜ்ஞாநம் யஜ்ஞம் தநுதே. தைத்திரீய IV.

(இ - ள்.) ஞானாஶ்ரயனான ஆத்மா யஜ்ஞம் புரிகிறான்.

(ஶ்ரு) நஹி விஜ்ஞாதுர் விஜ்ஞாதேர் விபரிலோபோ வித்யதே. ப்ரு.4-3-30.

(இ - ள்.) அறிபவனான ஜீவாத்மாவினுடைய ஞானமானது நஷ்டமாவதில்லை.

(12) நியாம்யன் (ஈசுவரனுக் கடிமைப்பட்டிருப்பவன், அதாவது அவன் ஸங்கல்பாநு குணமான வியாபாரமுடையவன்.)

(ஶ்ரு) ய ஆத்மாநமந்தரோ யமயதி. (காண்வபாடம்.)

(இ - ள்.) எந்த ஈசுவரன் ஜீவாத்மாவை உள்நின்று ஏவுகிறானோ.

(13) ஈசுவரனுக்குத் தார்யன் (ஈசுவரனால் வஹிக்கப்பட்டுள்ளவன்)=ஈசுவரன் ஸ்வரூபமின்றி இவ்வாத்மா நில்லாமை.

(ஶ்ரு) ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸநே கார்கி ஸூர்யாசந்த்ரமஸௌ வித்ருதௌ திஷ்டத:॥ ப்ரு. 5-8-9.

(இ - ள்.) அக்ஷர ஸ்வரூபனான புருஷோத்தமனுடைய ஆஜ்ஞையில் சந்திரசூரியர்கள் தரிக்கப்பட்டு விளங்குகிறார்கள்.

(14) ஈசுவரனுக்கு சேஷமாய் ஈசுவரனுக்கு உரித்தானவன் அதாவது அவனுக்கு இஷ்டவிநியோகார்ஹமானவன்.

(ஸ்ரு) தத்வஜ்ஞாநஸாதநம்| கட. 3-13.

இந்த சேஷபூதனை ஜீவாத்மாவை ஸர்வ சேஷியான பரமாத்மாவுக்கு உரித்தாக்கவேண்டும்.

ஜீவாத்மஸ்வரூப ஸ்வபாவங்கள்.

பிரத்யகாத்மா இயல்பாய் இக்குணங்களை யுடையவனு யிருந்தும், அனுதி சஞ்சிதமாய்த்தொடர்ந்து வந்த நல்வினை தீவினைகளாகிற அவித்தையால் கட்டுண்டு ஜீவாத்துமாவாய் அக்கர்மத்துக்கிசைந்து அதற்குத் தக்க இன்பதுன்பங்களைத் துய்ப்பதற்காக குறுகின ஞானைசுவரிய முடையவனுய் கர்மலப்தபிரகிருதி பரிணாமவிசேஷரூப தேவமநுஷ்ய திர்யக்ஸ்தாவராதி சரீரத்தையடைந்து இந்தலீலாவிபூதியில் வந்து பிறக்கிறுன்.

(1) வந்ததும் முன்செய்த தீவினையாற் கட்டுப்படுகிறன்.

(ஸ்ரு) ஸவா உபயம்புருஷோ ஜாயமாந: ஶரீரமபிஸம்பத்யமாந: பாப்மபிஸ்ஸம்ஸ்ருஜ்யதே. ப்ரு. 6-3-8.

(இ - ள்.) இந்த பந்தாவஸ்தையிலுள்ள புருஷன் பிறந்து சரீரத்தை யடைந்ததும், இவனைப் பழைய தீவினைகள்வந்து சேர்கின்றன.

(2) கர்மகர்த்தா.—அப்பாபத்தினுற் கட்டுண்டு மறுபடியும் சுதந்திரனைப் போல இருவகைவினைகளையும் ஓயாது செய்ய எத்தனிக்கிறுன்.)

(ஸ்மா) ஶரீரமாஶ்ரித்ய ஶுபாஶுபம் கர்ம ஸமாசரத்யேவ ததோ நிபந்தந: ஶரீரமந்யத்பஜதே ஶுபாஶுபம் ததபி விவேகஜம்|| ஸ்ரீ ஸாம. 7-7-49.

(இ - ள்.) தனக்காதீனமான தேகத்தைக்கொண்டு ஜீவாத்மா நல்வினை தீவினைகளைப் புரிகிறுன்! அவற்றின் பயனைத்துய்ப்பதற்காக மறுபடியும் அக்கர்மத்தினுலேயே சரீரத்தை யடைகிறன். இவையிரண்டும் அவிவேகத்தால் வந்தது.

(3) ஓயாது அலைந்து திகைக்கிறன். (அதாவது) புருஷனுனவன் இவ்வாறு கர்மங்களை யோயாதுசெய்துகொண்டு பிரகிருதிசம்பந்தத்தாற் கட்டுண்டு இன்பதுன்பங்களை யநுபவித்துக்கொண்டு மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து திரிந்து, சுழன்று சுழன்றுவரும் சக்கிரம்போல், ஆக்கையைப் பற்றிப்பற்றிப் புலம்பித்தளர்ந்து எய்த்து ஒழிகிறுன்.

(ஸ்ரு) ப்ராணாதிபஸ்ஸஞ்சரதி ஸ்வகர்மபி: அங்குஷ்டமாத்ரோ ரவிதுல்யரூப:|| ஶ்வே. 5-7.

(இ - ள்.) சரீரத்துள்ள பிராணன்களுக்கு எஜமானனுய் கட்டைவிரல் பிரமாணனுய், சூரிய ஸமான ரூபமுள்ள இவ்வாத்மா தன் கர்மங்களால் அலைகிறுன்.

(ஶ்ரு) ஸர்வாஜீவே ஸர்வஸம்ஸ்தே ப்ருஹந்தே தஸ்மின் ஹம்ஸோ ப்ராம்யதே ப்ரஹ்மசக்ரே॥ ஶ்வே. 1-6.

(இ - ள்.) அகிலப்பிராணிராசிகளும் பிழைத்திருக்க ஏதுவாயும், அவைகள் யதாவகாசம் சுகமாய்த் தங்கும்படி பெரிதாயுள்ள, பரப்பிரமத்தின் இந்த லீலாசக்கிரத்தில் பக்ஷிபோன்ற ஜீவாத்மா இங்குமங்கும் நிலைதப்பித் திரிகிறான்.

(4) அநீசன். (திரோஹித ஆத்துமஸ்வரூபனாய் ஈசுவரனையும் மறந்து ஒன்றுந் தோற்றாமல் சுகமனுபவிக்கப் பார்க்கிறான்; அது கைகூடுவதில்லை. தாய்தந்தை புத்ரதாராதி சுற்றத்தால் வருந் துக்கங்களைத் தன்னதென்று அனுபவிக்கிறான்.

(ஶ்ரு) அநீஶயா ஶோசதி முஹ்யமாந:॥ முண். 3-1-2.

(இ-ள்.) கையிலாகாமல் திகைத்து மனம்நொந்து துன்பப்படுகிறான்.

அப்படி யுலகவாழ்க்கையிற் கட்டுண்டு எந்தெந்தக் கர்மங்களைச் செய்கிறானோ அவ்வவற்றின்பலனை யநுபவித்தே தீரவேண்டியதாகிறது.

(5) கர்மத்தால்வரும் உயர்வுதாழ்வு.

(ஶ்ரு) யதாகாரீ யதாசாரீ ததா பவதி, ஸாதுகாரீ ஸாதுர்பவதி பாபகாரீ பாபோ பவதி. ப்ரு. 4-4-5.

(இ - ள்.) எவ்வித ஒழுக்கமுடையவனாய் எவ்வாறுநடக்கிறானோ அவ்வாறு ஆகிறான்; நன்மையைச்செய்தவன் நல்லவனாகிறான். தீமையைச்செய்தவன் கொடியவனாகிறான்.

(6) கொடுத்த ஆயுளை அநியாயமாய்க் கழிக்கிறான்.—

மநுஷியனுக்குப்பிறந்ததுமுதல் மரணமாகும்வரையில் பூரணமானவாயுள் நூறுவருஷமாயிருந்தாலும் அதில், பால்யகைசோரங்கள் இருபதுவருஷமும், ஒன்றுக்கும் யோக்கியமில்லாத மூப்பில் இருபதுவருஷமும் போக, மற்ற யௌவந கவுமாராவஸ்தையில் பாக்கி வருஷங்களை, நீக்கமுடியாத குடும்ப வியாபாரத்தில் ஆழ்ந்து ஆஸக்தனாய் அகப்பட்டுக்கொண்டு அரைநொடிப்பொழுது மிடைவீடின்றி மண் பொன் பொருள் பெண்டு பிள்ளை சுற்றம் என்று துவண்டு துவக்குண்டு துன்புற்றுத் தேடித்தேடி அலைந்து திரிந்து அலமந்து ஒடுங்கியும் கடைசியாய் ஓய்கிறானில்லை; தனதாயுள் ஒழிவதையும் புருஷார்த்தம் கைகூடாமையையும் நினைப்பதுமில்லை; அன்றியும் கோசகாரன் என்ற பட்டுப்பூச்சியானது தன்வாயால் நூலைப்பெருக்கித் தன்னையே தானே சுற்றிக் கொண்டு உள்ளேவிட்டு வெளியிற்போக மார்க்கமின்றி திகைப்பதுபோல், ஓயாத கர்மத்தாற் றன்னைச் சுற்றிலும் மூடிக்கொண்டு கடைசியில்,

(7) மஹா இருளைச் சேருகிறன்—

(ஶ்ரு) அந்தம் தம: ப்ரவிஶந்தி யேऽவித்யாமுபாஸதே. ஈஶா. 9.

(இ - ள்.) யார் அறியாமையுள்ளகப்பட்டு ஸ்வஸ்வரூப ஞானமின்றி யுழலுகிறாரோ, அவர் முடிவில் மஹாந்தகாரத்தையுடைய லோகங்களைச் சேருகிறார்.

(8) உத்க்ரமணம். சரீரம் விடும்போது ஸம்ஸாரிசேதநன் எப்படி நிலை பிரிகிறானெனில்.

(ஶ்ரு-) 𑌤𑌸𑍍𑌯 𑌹𑍈𑌤𑌸𑍍𑌯 𑌹𑍃𑌦𑌯𑌸𑍍𑌯𑌾𑌗𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌦𑍍𑌯𑍋𑌤𑌤𑍇 । 𑌤𑍇𑌨 𑌪𑍍𑌰𑌦𑍍𑌯𑍋𑌤𑍇𑌨𑍈𑌷 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌾𑌮𑌤𑌿, 𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑍍𑌟𑍋 𑌵𑌾 𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑍋 𑌵𑌾 𑌅𑌨𑍍𑌯𑍇𑌭𑍍𑌯𑍋 𑌵𑌾 𑌶𑌰𑍀𑌰𑌦𑍇𑌶𑍇𑌭𑍍𑌯𑌃. ப்ரு. 4-4-2.

(இ - ள்.) யாக்கை நீங்கும்போது புருஷனுடைய இதயத்தின் முனை மஹாப்பிரகாசத்தை யடைகிறது, அந்தப்பிரகாசத்தைக்கொண்டு வெளிப்படுகிறான், கண்வழியாயாவது தலையின்வழியாயாவது, சரீரத்தின் மற்றெந்தப் பாகத்தின்வழியாயாவது புறப்படுகிறான்.

(9) கர்மமும் பழையவாசனையும் (அவனுடன் விடாது செல்வன.)

(ஶ்ரு-) 𑌤𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌕𑌰𑍍𑌮𑌣𑍀 𑌸𑌮𑌨𑍍𑌵𑌾𑌰𑌭𑍇𑌤𑍇 𑌪𑍂𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌚, ப்ரு. 4-4-2.

(இ - ள்.) உடம்புவிட்டுப் பிரிந்து போமவனை அவன் கற்றகல்வியும் செய்தவினையும் பற்றிக்கொள்கின்றன : பழையவாசனையும் விடுவதில்லை, பின்செல்கிறது.

(10) புருஷன் தன்னுடைய சரீரம் ஜீரணமாய் கர்மாயோக்யமானதைக் கண்டு அதை விட்டுவிட்டு, புதிதாயும் கெட்டியாயும் உள்ள மற்றோர் சரீரத்தையடைகின்றான். எப்படியெனில், மனுஷியன் பழந்துணி கந்தலாய்ப்போனதைத் தூர எறிந்துவிட்டு கெட்டியாய்ப் புதிதாயுள்ள வேறோர் வஸ்திரத்தைத் தரித்துக்கொள்வதுபோல. அன்றியும் இந்தப் பவுதிக சரீரம் விழுந்ததும் பிதுருக்கள், கந்தருவர், பிரஜாபதி, பிரமன், தேவர் அல்லது மற்றப் பூதங்களுடையவாவது சரீரங்களையடைந்து சுவர்க்கவாசியாய் புண்யாநுகுணமாய்ச் சுகத்தையும் பாபாநுகுணமாய் நரகாதிகளையும் அநுபவித்து அது முடிந்ததும் திரும்பவும் தூமமார்க்கத்தால் பவுதிக சரீரத்தைப் பெறுவதற்கு இவ்வுலகத்தையே வந்து சேருகிறன்.

(ஶ்ரு-) 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌯𑌤𑍍𑌕𑌿𑌞𑍍𑌚𑍇𑌹 𑌕𑌰𑍋𑌤𑍍𑌯𑌯𑌮𑍍 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌲𑍍𑌲𑍋𑌕𑌾𑌤𑍍 𑌪𑍁𑌨𑌰𑍇𑌤𑍍𑌯𑌸𑍍𑌮𑍈 𑌲𑍋𑌕𑌾𑌯 𑌕𑌰𑍍𑌮𑌣𑍇. ப்ரு. 4-4-6.

(இ - ள்.) அவ்வவ்வுலகங்களில் தன்னுடைய புண்ணிய பாபகர்மத்தின் மூட்டையைக் கரைத்துவிட்டு, இன்னம் கர்மஸம்பாதனத்துக்காக இவ்வுலகத்துக்கேவந்து சேருகிறான்.

(11) இவ்வாறு பலபிறப்பும் பிறந்து பிணிமூப்பு இறப்பு முதலியவற்றில் முழுகிக் கால்வாங்கமுடியாமல் துன்புற்று சுகந்தேடப்போனால் சொற்பமுந்திலும் கிடைப்பதின்றி, கஷ்டத்துக்கே ஆளாய், கைகால்களில் விலங்குபோட்டுக்கொண்டு திரிபவன்போல் வேண்டாமெனினும் நீக்க வொண்ணாதபடி, கடலில் விழுந்தலையுந் துரும்புபோல எங்கும் விஶ்ராந்திகாணமல், அலைந்து ஓய்ந்துபோகையில் ஜன்மாந்தரங்களில் செய்திருந்த புண்யவசத்தால் பகவதநுக்கிரகம்

அநுகூலிக்க புத்தி நல்மார்க்கத்துக்குத் திரும்பி அறிவின் மிக்க சான்றோரைச் சார்ந்தாலொழிய இதுக்கு மார்க்கமில்லையென்று மனதிற்றோன்றி, தலை நெருப்புப்பற்றினவன் நீரைக்கண்டாலொழிய வேறிடத்தில் தரிக்கமாட்டான்போல், எங்கும் நிலைகொள்ளாமல் அதிதீவிர வேதனையுடனே ஆர்த்தனாய் ஆசாரியனைச் சரணாகதியடைந்து "ஒன்றுந்தெரியாத மூடனேனையாட்கொண்டு கரையேற்ற வழிபார்த்தருளு" மென்று வேண்டிக்கொள்ளுகிறான்.

(ஶ்ரு-ப) தத்விஜ்ஞாநார்த²ம் ஸ கு³ருமேவாபி⁴க³ச்சே²த் ஸமித்பாணி: ஶ்ரோத்ரியம் ப்³ரஹ்மநிஷ்ட²ம். முண். 1-2-12.

(இ - ள்.) வேதவித்தாய் பிரமநிஷ்டனான ஆசாரியனை மாணாக்கன் கையில் சமித்துக் கொண்டு தேடிச் சேரவேண்டியது.

ஆசாரியனுடைய உபதேசம்.

இந்த ஜீவாத்மாவானவன் அநாதியவித்தையினாற் கட்டுண்டு அதனாற் சஞ்சிதமான புண்யபாவங்களான இருவகைவினைகளாற்கிடைத்த, தேவர் மனிதர் விலங்குதாவரம், ஆகிய நால்வகைப்பட்ட உடம்புகளிற் புகுந்து அவ்வவற்றைத் தானென்றுனென்று அபிமானித்து அதினாலுண்டான நீக்கமுடியாத ஸம்ஸாரபயத்தை யடைந்திருக்கிறான்; ஆதலால் அம்மஹா பயத்தை யடியுடன் போக்கவேண்டுமானால், தேகத்தைவிட வேறான ஆத்மஸ்வரூப மின்னதென்றும், அதன் ஸ்வபாவமின்னதென்றும், ஆத்மாவின் அந்தர்யாமியாய் விளங்கும் பரமாத்மாவின் ஸ்வரூபஸ்வபாவமின்னதென்றும், அவனையுபாஸிக்கும் வகையாதென்றும், அறியவேண்டும்; அவனையுபாஸிப்பதினால் ஆத்மஸ்வரூப ஆவிர்ப்பாவமுண்டாய் அநவதிகாதிசயாநந்தாநுபவமுங் கைகூடுவதிற் சந்தேகமில்லை.

(1) உண்மைவேண்டும்.

(ஶ்ரு-ப) ஸத்யமேவ ஜயதே நாந்ருதம். முண்.3-1-6.

(இ - ள்.) உண்மையால் வெற்றியுண்டு, பொய்யால் ஒன்றுமாவதில்லை.

(2) இவ்வாறு அவனை கபடமின்றி உறுதியாய் நம்பும்படிசெய்து அவனைப்புக்கொண்டதின்மேல் ஆசாரியன் உபதேசிக்கிறான்.

(ஶ்ரு-ப) நஹவை ஸஶரீரஸ்ய ஸத: ப்ரியாப்ரியயோரபஹதிரஸ்தி. ஶா. 8-12-1.

(இ - ள்.) இப்புருஷனுக்கு இந்த காமசரீரமுள்ளவரையில் விருப்பு வெறுப்பற்றுப் போவதில்லை அதாவது இன்பதுன்பம் நீங்குவதில்லை.

(3) இவ்விஷயமாய், பெற்றதாயினும் ஆயிரமடங்கு அதிவாத்ஸல்யமுள்ள சுருதிகூறுவதியாதெனில்.

(ஶ்ரு-ப) உத்திஷ்ட² ஜாக்³ருத ப்ராப்ய வராந்நிபோ³த⁴த. கட². 3-14.

(இ - ள்.) அலக்ஷியமாயிராமல் அஞ்ஞான நித்திரையை விட்டு உணர்மின், எழுமின், சான்றோரான ஆசாரியரைக்கிட்டி ஞேயமான பரதத்துவார்த்தத்தைக் கேட்டறிமின்.

(4) இச்சரீரசம்பந்தத்தை அடியுடனறுத்து, விடுபட்டு நற்கதி சேரவேணுமானால், அகில சிதசித்காரணபூதனான ஸ்ரீமந்நாராயணனைச் சரணமடைந்து உபாஸித்தால், அவனனுக்கிரகம் பண்ணுவான்.

(ஸ்ரு-தி) தஸ்மிந் யத³ந்தஸ் தத³ந்வேஷ்டவ்யம் தத்³வாவ விஜிஜ்ஞாஸிதவ்யம். ஛ா. 8-1-1.

(இ - ள்) ஹிருதயகமலத்தில் எழுந்தருளியிருக்கும் பரமாத்மாவைத் தேடியடைந்து அவனையன்றோ உபாஸிக்கத்தக்கது.

(5) பரமாத்மாவைச்சரணமடைந்து உபாஸித்தால்ஸர்வமிருத்யுபாசங்களினின்றும் விடுபட்டு, யாதொரு துக்கமுமின்றி அந்தமில்பேரின்பத்தாழ்ந்து அவனையே பெறுவார்கள். இதைவிட்டால் வேறே வழி

(ஸ்ரு-தி) தமேவம் விதி³த்வா அதி ம்ருத்யுமேதி, நாந்ய: பந்தா வித்³யதே அயநாய. ஶ்வே. 3-8.

(இ - ள்.) இந்த பரமாத்மாவை யிவ்வாறறிந்து உபாஸிந்தவன் மரணபயத்தைத் தாண்டுகிறான். இதையன்றி நன்மார்க்கத்துக்கு வேறுபாயமில்லை.

(ஸ்ரு-தி) தமாத்மஸ்த²ம் யேऽநுபஶ்யந்தி தீ⁴ரா: தேஷாம் ஸுக²ம் ஶாஶ்வதம் நேதரேஷாம்। கO. 5-12.

(இ - ள்.) ஜீவாத்மாவில் அந்தர்யாமியாய் எழுந்தருளி யிருக்கும் பரமாத்மாவை யுபாசித்தவர்க்கு அந்தமில் பேரின்பங் கைகூடும், மற்றவர்க்காவதில்லை.

ஆகையால் அப்படிப்பட்ட ஸர்வேசுவரனை எவ்வாறு தெரிந்து எவ்வாறு உபாஸிக்கிறது என்றால் அதைச் சொல்லுகிறேன் கேள் என்று ஆசிரியன் உபதேசிக்கிறான். *

ஈசுவரஸ்வரூபஸ்வபாவங்கள்.

(1) நித்யவிபூதி - பரமபதத்தில் திருமாமணி மண்டபத்தில் சீரியசிங்காசனத்தின்மீது புருஷோத்தமனான ஸ்ரீமந்நாராயணன் கிரீடாதிநூபுராந்தமான திவ்யாபரணஸ்ரக்வஸ்திரபூஷிதனாய் நிரதிசயசவுந்தர்யஸவுகுமார்யலாவண்யயவ்வனாதி யபரிமித உதாரகுணகண நிதியான திவ்யமங்களவிக்ரஹ விசிஷ்டனாய் ஸ்ரீபூமி நீளாதேவிகளுடனே எழுந்தருளியிருக்கிறான்.

(ஸ்ரு-தி) தி³வ்யே ப்³ரஹ்மபுரே ஹ்யேஷ வ்யோம்நி ஆத்மா ப்ரதிஷ்டி²த:. முண்ட³. 2-2-7.

(இ - ள்.) திவ்யமான ஸ்ரீவைகுண்டத்திலே பரம்பிரமனான புருஷோத்தமன் வீற்றிருக்கிறான்.

* "ஸ்ரீவிசிஷ்டாத்வைத பாஸ்கர"மென்கிற கிரந்தத்தில் சித், அசித், ஈசுவர தத்துவங்களின் விவரத்தைப் பரக்கக்காணலாம்.

(2) திவ்யமங்கள விக்கிரஹவிசிஷ்டன் (அப்ராகிருத அகர்மநிமித்த ஸ்வாஸாதாரணதிவ்ய ஸ்வரூபன்).

(𑌶𑍍𑌰𑍁) 𑌯 𑌏𑌷𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑍇 𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇* 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌶𑍍𑌮𑌶𑍍𑌰𑍁𑌃 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌕𑍇𑌶 𑌆𑌪𑍍𑌰𑌣𑌖𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵 𑌏𑌵 𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌃। 𑌛𑌾. 1-6-6.

(இ - ள்.) ஆதித்ய மண்டலாந்தர்வர்த்தியான ஸ்ரீமந்நாராயணன் ஸ்வாபிமதாநுரூப ஏகரூப அசிந்த்யதிவ்ய அத்புதநித்ய நிரவத்ய நிரதிசய ஔஜ்வல்ய, சவுந்தர்ய ஸவுகந்த்ய சவுகுமார்ய லாவண்ய, யவ்வநாதி அநந்தகுணகணநிதியான திவ்யமங்களரூபத்தை ஸ்வபாவமாய் என்றுமுள்ளவன்.

(3) அஸாதாரண தீப்தியுக்தன்.

(𑌶𑍍𑌰𑍁) 𑌤𑌚𑍍𑌛𑍁𑌭𑍍𑌰𑌂 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑌾𑌂 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌸𑍍𑌤𑌦𑍍𑌯𑌦𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌦𑍋 𑌵𑌿𑌦𑍁𑌃। 𑌮𑍁𑌣𑍍𑌡. 2-2-10.

(இ - ள்.) பரமாத்மாவானவன் நிரவத்யனுய் சகலபிரகாச பதார்த்தங்களுக்கெல்லாம் ஒளி கொடுப்பவனுயிருக்கிறுன், பரமாத்மதத்துவ விவேசநமுள்ளவர்கள் இவ்வாறு அறிந்திருக்கிறுர்கள்.

(𑌶𑍍𑌰𑍁) 𑌅𑌥 𑌯𑌦𑌤𑌃 𑌪𑌰𑍋 𑌦𑌿𑌵𑍋 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍍𑌦𑍀𑌪𑍍𑌯𑌤𑍇. 𑌛𑌾. 3-13-7.

(இ - ள்) அப்பிராகிருத ஸ்தான விசேஷத்துக்கப்பால், மூன்றுபாதமாய் விளங்கும் பரப்பிரமமான பரமாத்மாவானவன் அஸாதாரண தீப்தியுக்தனுய் விளங்குகிறுன்.

இவ்வாறே அவனுக்குநிகில ஹேயபிரதியநீக அநந்தஞாநாநந்தங்களாகிற, ஸ்வபாவமாயுள்ள அநவதிக அதிசய அஸங்கியேய கலியாணகுணங்களுண்டு; அவைகளைக்கூறுவது மிகஅருமை, ஆகிலும் சிலவற்றைக் கூறுகிறேன்கேள்.

(4) ஆநந்தமயன் (ஸ்வாபாவிகஅநவதிகாதிசயாநந்தமயன்).

(𑌶𑍍𑌰𑍁) 𑌆𑌨𑌨𑍍𑌦𑌰𑍂𑌪𑌮𑌮𑍃𑌤𑌂 𑌯𑌦𑍍𑌵𑌿𑌭𑌾𑌤𑌿 𑌮𑍁𑌣𑍍𑌡. 2-2-8.

(இ - ள்.) அந்தமும் அளவுமில்லாத ஆநந்த விசிஷ்டஸ்வரூபனுய் இனியனுய் விளங்குபவன்.

(5) என்றும் மறைபடாத அபஹதபாப்மத் வாதிகுணமுள்ளவன்.

(𑌶𑍍𑌰𑍁) 𑌏𑌷 𑌆𑌤𑍍𑌮𑌾𑌽𑌪𑌹𑌤𑌪𑌾𑌪𑍍𑌮𑌾 𑌵𑌿𑌜𑌰𑍋 𑌵𑌿𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌰𑍍𑌵𑌿𑌶𑍋𑌕𑍋 𑌵𑌿𑌜𑌿𑌘𑌤𑍍𑌸𑍋𑌽𑌪𑌿𑌪𑌾𑌸𑌃 𑌸𑌤𑍍𑌯𑌕𑌾𑌮𑌃 𑌸𑌤𑍍𑌯𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌃॥ 𑌛𑌾. 8-1-5.

(இ - ள்.) இந்த பரமாத்மாவானவன் நித்யநிரஸ்தமான அதாவது யாதொருதீங்குமில்லாதவன், மூப்பில்லாதவன், மரணமில்லாதவன், துக்கமில்லாதவன், பசிதாகமில்லாதவன், நினைத்ததையும் விரும்பினதையும் முடிக்கவல்லவன்.

---

* சுவர்ணமயமான மீசையும் சுவர்ணமயமான தலை ரோமங்களும் சொல்லி, திருவடி விரல்நகபரியந்தம் எல்லாம் சுவர்ணஜோதிமயமாக விளங்குபவன் என்பதால் நகசிகை பரியந்தம் ஸ்வரூபமுழுமையும் பரமதீப்தியுக்தமெனச் சொல்லியது.

(6) அறுவகைக்கல்யாண குணங்களுள்ளவன்.

(1) ஞானம் - அதாவது எல்லாவற்றையு மெப்போதுமறிகை.

(2) பலம் - அகிலத்தையும் வஹிக்கும் திறமை.

(3) ஐசுவரியம் - நித்தியவிபூதி லீலாவிபூதி யிரண்டையுமாளுகை.

(4) வீரியம் - என்றும் நீங்காத ஊக்கமுடைமை.

(5) சக்தி - பரா, அபரா முதலிய அநந்தசக்திகளையுடைமை.

(6) தேஜஸ் - ஸதோதயமான திவ்யதீப்தி யுடைமை.

(7) நிகிலஜகதுதயவிபவலயமஹாநந்தைககாரணன்.

(ஶ்ரு-தி) யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே யேந ஜாதாநி ஜீவந்தி யத்ப்ர

யந்த்யபிஸம்விஶந்தி தத்விஜிஜ்ஞாஸஸ்வ தத் ப்ரஹ்மேதி। தை. 3-1.

(இ - ள்.) யாரிடத்திலிருந்து இந்த பூதங்களுண்டாகின்றனவோ, உண்டானவை யாரால் பிழைக்கின்றனவோ, யாரிடத்திலேயே முடிவில் மறைந்து சேர்ந்து விடுகின்றனவோ, அவனையே பரம்பிரமமாக அறிந்துகொள்!

(8) தன்னால் சிருஷ்டிக்கப்பட்ட இந்தலீலா விபூதியில் நிரவதிகமகிமை யுடன் விளங்குபவன்.

(ஶ்ரு-தி) யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்யஸ்யைஷ மஹிமா புவி॥ முண்ட. 2-2-7.

(இ - ள்.) யாவனொருவன் எல்லாவற்றையுமறியத்தக்கவனாய், அவ்வவற்றின் பிரகாரங்களுடன் அறிந்தவனாயும் விளங்குகிறானோ யாருடைய அளவிறந்த சக்தியுடன்கூடிய மஹிமையானது இந்த லீலாவிபூதியென்ற இப்பிரபஞ்சத்தின்கண் தோற்றுகிறதோ அவனே பரமாத்மா.

(9) ஸகல சேதநாசேதநாந்தராத்மா.

(ஶ்ரு-தி) யஸ்ஸ்வாத்மநி திஷ்டந், யஃப்ருதிவ்யாம் திஷ்டந்।

யோऽந்தரிக்ஷே திஷ்டந், யோ திவி திஷ்டந். ப்ரு. 3-7-3.

(இ - ள்.) எவன் ஜீவாத்மாவிலும், எவன் பூமியிலும் எவன் நீரின்கண்ணும், எவன் ஆகாயத்தின் கண்ணும் உள்நின்ற நிலையாய்க் காணப்படுகிறானோ அவனே ஸர்வாந்தர்யாமி.

(10) நிகில சேதநாசேதநபயாபயஹேதுவானவன்.

(ஶ்ரு-தி) யதிதம் கிஞ்ச ஜகத்ஸர்வம் ப்ராண ஏஜதி நிஸ்ஸ்ருதம்।

மஹத்பயம் வஜ்ரமுத்யதம் ய ஏதத்விதுரம்ருதாஸ்தே பவந்தி।

பயாதஸ்யாக்நிஸ்தபதி பயாத்தபதி ஸூர்ய:।

பயாதிந்த்ரஶ்ச வாயுஶ்ச ம்ருத்யுர்தாவதி பஞ்சம:. கட. 2-6-3.

(இ - ள்.) பிராணசப்தத்தினால் சொல்லப்படுகிற பரமாத்மாவினிடத்தி லுண்டான அனைத்துலகமும், அவனுடைய சாஸநாதிலங்கனத்தா லென்னவருமோ என்று, எடுக்கப்பட்ட வஜ்ராயுதத்தைக்கண்டா லெப்படியோ அப்படி

நடுங்குகிறது. அவனிடம் பயத்தால் நெருப்பு எரிகிறது, பயத்தால் சூரியன் எறிக்கிறான், பயத்தால் இந்திரனும் வாயுவு தன்றன் றொழில்களில் ஓயாது நிற்கிறார்கள்; இயமன் பஞ்சமனைப்போல ஓடுகிறான்.

(ஶ்ரு) ஏததம்ருதமப4யமேதத் ப்3ரஹ்மேதி. சா. 8-12.

(இ - ள்.) இதுவே மோக்ஷரூபம், நிர்பயமானது இதையே பிரமம் என்று கூறுவது.

(11) அசாதாரண அமிருதத்வ பிராப்திஹேது.

(ஶ்ரு) அம்ருதஸ்யைஷ ஸேது:। முண்ட். 2-2-5.

(இ - ள்.) ஸம்ஸாரமாகிற கடலுக்கு அக்கரையான அமிருதத்துவத்துக்கு அதாவது மோக்ஷத்துக்கு இருப்பிடமாய் இந்தபரமாத்மா விளங்குபவன்.

(12) அவனே அத்தனும் அன்னையாயும் விளங்குபவன்.

(ஶ்ரு) யோ ந: பிதா ஜநிதா யோ விதா4தா. ருக். 10-82-3.

(இ - ள்.) அவனே நமக்குப் பெற்றதகப்பனும் போஷகனுமாவான்.

(13) அவன் எங்குமுள்ளவன்.

(ஶ்ரு) ஸ ஏவாத4ஸ்தாத் ஸ உபரிஷ்டாத் ஸ பஶ்சாத் ஸ புரஸ்தாத் ஸ த3க்ஷிணத: ஸ உத்தரத: ஸ ஏவேத3ம் ஸர்வமிதி। சா, 7-25-1.

(இ - ள்.) அவனே கீழிலும் மேலும் பின்னும் முன்னும், வலமும் இடமும் எல்லாவிடத்திலும் எல்லாமாய் விளங்குகிறான்.

ஸ்மு - ஸர்வத்ர ப்ரவிஷ்டோ வேத3ஸா:। ப்3ருஹஸ்மு. 1-2-1.

(14) சேதநாசேதநாத்மகமான விசுவமனைத்தையும் தாங்குபவன்.

(ஶ்ரு) ஸம்யுக்தமேதத் க்ஷரமக்ஷரம் ச வ்யக்தாவ்யக்தம் ப4ரதே விஶ்வமீஶ:॥ ஶ்வே. 1-8.

(இ - ள்.) ஸ்தூல சூக்ஷும விசிஷ்டமான சேதநா சேதந பிரபஞ்சத்தை பரமாத்மாவானவன் தாங்கி யருளுகிறான்.

(15) எல்லாவற்றிலுமிருப்பவன்.

(ஶ்ரு) ஸர்வவ்யாபிநமாத்மாநம் க்ஷீரே ஸர்பிரிவார்பிதம். ஶ்வே. 1-16.

(இ - ள்.) பாலுள் கலந்துநிற்கும் நெய்யேபோன்று பரமாத்மாவானவன் அனைத்துள்ளும் கலந்து பரந்து உளன்.

(16) அனைத்தையும் ஆளுபவன்.

(ஶ்ரு) ஏஷ ஸர்வேஶ்வர ஏஷ பூ4தாதி4பதிரேஷ பூ4தபால ஏஷ ஸேதுர்விதரண ஏஷாம் லோகாநாமஸம்பே4தா3ய.

ப்3ரு. 6-4-22.

(இ - ள்.) இந்த பரமாத்மா வானவன் அனைத்தையு மாளுபவன், இவனே ஸர்வபூதங் களுக்கும் எஜமானனுகவும், பூதங்களை ரக்ஷிப்பவனுகவும் விளங்குகிறுன், அனைத்துலகங்களுக்கும் ஸாங்கரிய முண்டாகாதபடி கரைபோன்று தாங் குகிறவன்.

(17) நாம் உபாஸிக்கவேண்டி பரமாத்மாநமது ஹிருதயகமலத்தில் எழுந் தருளியிருக்கிறுன்.

(ஶ்ரு) ஷூ ஜீாஶ-ஸாயாஂ நிஹிரொதாஉஸ்ஜஂஞெதாஃ தெத-நா. 10-1.

(இ - ள.) இந்தப் பிராணியினுடைய தஹராகாசத்தில் பரமாத்மா விளங்குகிறுன்.

(ஶ்ரு) மமநஂவிஶொகஸஷிநூ ஜஂதஸ்ஹஃவாஸிதவ்ஃ உஷ. 3-1-7.

(இ - ள்.) ஸர்வோபத்திரவ நிவர்த்தகமான ஹிருதயாகாசத்தை (உபாஸகாநுக்கிரகா ரத்தம்) இடமாகக் கொண்ட ஸர்வேசுரனை யுபாஸிக்கவேண்டும்.

(18) உபாஸிக்குமவர்க்கு நல்வினைவைக் கொடுத்தருளுகிறுன்.

(ஶ்ரு) ஸநொஷெவஃஹயா ஸ்துராஸஂயநக்தி உஹா நா. 10-3.

(இ - ள்.) ஸ்ரீமந்நாராயணன் நமக்கு நல்வினைவைக்கொடுத்து நம்மை இரக்ஷிக்கிறுன்.

(19) சிதசித்விசிஷ்ட பரப்பிரமரூப ஏகவஸ்துவான பரமாத்மாவுக்கு ஜீவன் விசேஷணமாகையாலே, அவனை பரமாத்மாவின் அம்சம் என்று சீழ் 22 - ல் கூறப்படுகிறது. இப்படி பரமாத்மாவுக்கு விசேஷணமாயும் அதினுலேயே அவனது அம்சம் என்றும் சொல் லப்படுகிற ஜீவாத்மாவைத் தனக்குச் சரீரமாயுள்ள பரமாத்மா ஒருவனே.

(ஶ்ரு) அயமாத்மாப்ஹ (இந்த ஜீவாத்மா பிரமாம்சமே) வ்ரு. 2-5-19.

(ஶ்ரு) வஉகஶெவாஜீயஂ ஸு. உபா. 6-2-1.

(இ - ள்.) விசேஷபூதனை ஜீவாத்மாவையும் அவனை வியாபித்திருக்கும் விசேஷ்ய மான பரமாத்மாவையும் சேர்த்துப் பார்க்கையில் ஒன்றேயாகையால் உண் மையாய் நாநாத்வம அதாவது வேறுபாடுகள் ஒன்றுமில்லை.

(20) விசேஷண விசிஷ்டமான பரமாத்மா ஒருவனேயாயினும், பரமா த்மசரீரமாயும் அதினுலேயே விசேஷணமென்றும் சொல்லப் பட்ட ஜீவாத்மா, ஸ்வரூபஸ்வபாவங்களாலே பரமாத்மாவினின் றும் வேதுவாய் வேறுபாடுள்ளவன். (ஏனென்றுல் ஈசுவரனுக்குள்ள ஸர்வஜகத்பதித்வ ஸர்வேசுவரத்வாதிகள் அசித்தினின்றும் விடு பட்டு முக்தாவஸ்தையிலுள்ள பிரதியகாத்மாவுக்கும் கிடையாதா தலால்.)

ஈசுவரனுக்கும் ஜீவனுக்குமுள்ள பேதங்களாவன.

ஈசுவரன்	ஜீவாத்மா
(1) சிருட்டிக்கிறவன்	சிருட்டிக்கப்படத்தக்கவன்.
(2) நியந்தா (ஏவுகிறவன்)	நியாம்யன் (ஏவப்படத்தக்கவன்).
(3) ஸர்வஞ்ஞன் (எல்லாமறிந்தவன்)	அஞ்ஞன் (அறியாதவன்).
(4) ஸ்வாதீனன்	பராதீனன்.
(5) சுத்தன்	அசுத்தன்.
(6) கல்யாணகுணகரன்	ஹேயகுணநிதி.
(7) பதி	சேஷன் (அவனுக்குரியவன்) இவை முதலான அனேக வேறுபாடுகள் காணப்படுகின்றன.

(ஸூ) அம்சோநாநாவ்யபதேசாத் அந்யதாசாபி தாசகிதவாதித்வ மதீயத ஏகே. 2-3-42.

(இ - ள்.) மேற்கூறிய (பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்குமுள்ள) வேறுபாட்டினால் நாநாத்வமும் (அதாவது அவனுக்கு மிவனுக்குமுள்ள பேதங்) காண்கையாலும், ஸர்வஜீவ வியாபகத்தாலே அடியில் 21-ல் குறிக்கப்படுகிற பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் அபேதங்காண்கையாலும், ஜீவன் பரமாத்மாவின் அம்சன் என்று கொள்ளத்தக்கது. சில ஆதர்வணிகள் - பிரமமே - வேடர்கள், தாஸர் என்று அபேதமாய்க் கூறுகின்றனர்.

(ஸூ) மமைவாம்சோ ஜீவலோகே ஜீவபூத ஸநாதந:॥ கீ. 15-7.

(இ - ள்.) ஸநாதநனை இவ்வாத்மா, என்னுடைய அம்சமாயிருந்துகொண்டே அநாதிகர்மமாகிற அவித்தையினால் கட்டுண்டு தேவமனுஷ்யாதி நான்குவித சரீரங்களை ஜீவலோகத்தில் அடைகிறான்.

(21) ஜீவனில் பரமாத்மா நெய்யினுட்சுவைபோன்று வியாபித்திருக்கும் காரணத்தால் ஜீவன் பரமாத்மாவைவிட வேறல்லனாகவும், பரமாத்மாவோ டொன்றேயாகவும் சொல்லும்படிக்கு பிரித்தெடுக்கமுடியாமல் அவனுக்கு மிவனுக்குமுள்ள ஒருமைப்பாடுயாவையெனில்.

ஜீவநு (பரமாத்மஸ்ருஜ்யம்)=பரப்பிரமத்தால் சிருட்டிக்கப்பட்டும்.

(தந்நியாம்யம்)=அவன் ஏவலுக்குடம்பட்டும்.

(தச்சரீரம்)=அவனுக்குச் சரீரமாய் நின்றும்.

(தச்சேஷம்)=அவனுக் குரிமைபூண்டு அடிமைசெய்தும்.

(தததாதாரம்)=அவனைத்தனக்கு (ஆதாரமாய்) நிலையாயடைந்தும்.

(தத்ரக்ஷ்யம்)=அவனால் காக்கப்பட்டும்.

(தத்ஸம்ஹார்யம்)=அவனால் அவனிலேயே அடக்கிகொள்ளப்பட்டும்.

(ததுபாஸகம்)=அவனைத் தன்விடுதலைக்காக உபாஸித்துக்கொண்டும்.

*(தத்ப்ரஸாதாத் ப்ராப்யந்தே காமமோக்ஷார்த²த⁴ர்மா: புருஷார்த²கா:)— அவனுடைய பிரஸாதத்தால் அடையத்தக்க அறம் பொருளின்பம் வீடு என்ற நால்வகை மெய்ப்பொருளேயும் அடைந்தும் வாழ்தல்.

(22) மேற் கூறப்பட்டுள்ள ஈசுவரசொரூப சுவபாவங்களை கிஞ்சிஞ்ஞனமனுஷியன் அறிவதெப்படி? ஈசுவரனுக்குக் கலியாணகுணங்கள் மாத்திரம் கூறப்பட்டுள்ளன. அவனுக்கு இயல்பாய் ஹேயகுணங்கள் ஒன்றுமில்லேயாயினும் அவன் அம்சபூதனைய்ச் சரீரமாய் நிற்கும் ஜீவனுக்குள்ள ஈனகுணங்களாவது ஈசுவரனுக் குண்டாகலாகாதோ? என்றால், ஈனகுணங்கள் எப்போதுங் கிடையாது என்று 5 - வது இலக்கத்தில் கண்டதை, இரண்டு நியாயத்தால் கூறி மனுஷியன் அறியும் உபாயமுங் கூறப்படுகிறது.

பிரகிருதி (அதாவது பவுதிக சரீரம) க்குள் ளகப்பட்டு அதன் வசவர்த்தியாய் அஞ்ஞனாய் நிற்கும் மனுஷியனுடைய பகுத்தறியும் ஞானமானது இயல்பாகவே மிகவும் குறுகியும் எள்ளளவும் தீர்க்கதரிசனத்துக்கு யோக்கியமின்றி ஒரு சிறுகூட்டுக்குள் ளடைபட்டிருக்கும் மின்மினிப் பூச்சிபோல், இந்திரியாதிகளால் பிறக்கும் அறிவையன்றி யநுமானம் முதலியவற்றால் ஈசுவர சொரூப சுவபாவங்களை யுணர்வது மிகவரிதா யிருக்கின்றது; ஆயினும் மனிதன் இவ்வுலகத்தில் நாடோறும் பழகுகிற இவன் அநுபவத்தை முன்னிட்டு அதன்வழியாகவே நெடுந்தூரம் எட்டி ஈசுவரனை ஊகித்தறிந்து உய்யும்படி செய்யவேணுமென்றும், அதாவது, இவனுக்குத் தெரிந்திருக்கிறதைக்கொண்டே தெரியாததையும் அறியும்படி செய்ய எத்தனித்துப், பெற்றதாயினும் மிக்க அன்புள்ள சுருதியானது இச்சிவான்மாவைப் பார்த்து ஈசுவர சொரூப சுபாவங்களை யுபதேசிக்கிறது.

எத்தனை தூரம்வரையில் மனிதன் உணர்ச்சி எட்டக்கூடு மென்பதைச் சற்று விசாரிப்போம்.

1. காரியத்தின்கண் எக்குணங்கள் காணப்படுகின்றனவோ அவைகாரணத்தின்கண் சமமாயாவது அதிகமாயாவது விளங்கவேணுமே தவிர காரியத்தில் விளங்குவதைவிட காரணத்தில் குறைவா யிருக்கமாட்டாது.*

ஸூ. தத³நந்யத்வமாரம்ப⁴ணஶப்³தா³தி³ப்⁴ய:. 2-1-15.

ச்²ரு. ஐததா³த்ம்யமித³ம் ஸர்வம். சா². 6-8-7.

2. ஏகதேசாம்சத்தில் என்னென்ன லக்ஷணங்கள் அமைந்திருக்கின்றனவோ அவைகள், அதன்மொத்தத்தில் பூரணமாய் விசேஷமாய் விளங்குமேயொழிய அம்சத்தினைவிட மொத்தத்தில் குறைவாயிருக்கமாட்டாது.

---

* இங்கு கூறிய காரணகாரியம் வெற்றிலேயும் சுண்ணும்பும், சேர்த்தால் சிகப்பாவதுபோல் உண்டாகும் பரிணும காரியமல்ல.

ஸூ. அம்ஶோ நாநாவ்யபதேஶாத் அந்யதா சாபி
தாஶகிதவாதித்வமதீயத ஏகே. 2 - 3 - 42.

ஶ்ரு. பாதோऽஸ்ய விஶ்வா பூதாநி.

ஆனதுபற்றி இந்த நியாயத்தைக்கொண்டு உட்புகுந்து சோதித்துபார்க்குமளவில் ஈசுவரன் இந்தச் சேதனவர்க்கத்தைத் தானே உபாதாநகாரணமாய் நின்று, தன்னிலே தோற்றுவித்துத் தானும் அவனுக்குள்ளே அந்தர்யாமியாய் (சமுத்திரத்தில் முழுகிக்கிடக்கு குடங்களில் நீரானது உள்ளும் புறம்பும் வியாபித்து நிற்பதுபோல) அவனுக்கு ஆத்மாவாயும் விளங்குகிறான்; ஈசுவரன் தானாகிற பூரணத்தில் சீவன் இவ்வாறு ஓர் ஏகதேசாம்சமாய் (குடத்துண்ணீர்போலும் ஊசிக்காதின் துவாரத்தினுள் ஆகாயம்போலும்) தன்னிற் பிரியாது நிற்குபடிசெய்து மிருப்பதால் காரியமான இந்தச் சேதநனிடத்தில் சாதாரணமாய்க் குறைந்து நிறைவின்றி விளங்குகிற ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேசு, இன்பு, தண்மை, அளி, பொறை, முதலிய மேற்கூறின நற்குணங்கள் அனைத்தும் காரணமான ஈசுவரனிடத்தில் சம்பூரணமாய் உண்மையாகவே அளவின்றி யமைந்து, என்றுமொன்று மொழிவற நிறைந்து விளங்குமென்று எல்லோரும் அறிந்து ஒப்புக்கொள்ளலாகும்; அன்றியும் சேதநனுக்கு ஆகந்துகமாய் சரீரசம்பந்தத்தால் நேர்கிற சாரீரக சுவபாவங்களான, பசி, தாகம், மூப்பு, இறப்பு, பிறப்பு, ப்பிணி, நித்திரை, தீவினை, துன்பம், முதலிய ஈனகுணங்கள் அனாதி துஷ்கர்மத்தால் கட்டுண்டிருக்கிற சீவனிடத்தில் மாத்திரம் காணப்படுமேதவிர, என்றுமொன்றும் கர்மவசியனாகாத ஈசுவரனிடம் அணுவளவும் காணப்படமாட்டாது. இவைகள் சீவனுக்குங்கூட ஸ்வரூப பிரயுக்தமன்று; என்றும் யாவரும் அறியத்தக்கது.

ஸ்ரீ. புருஷ: ப்ரக்ருதிஸ்தோ ஹி புங்க்தே ப்ரக்ருதிஜாந்குணாந்।
காரணம் குணஸங்கோऽஸ்ய ஸதஸத்யோநிஜந்மஸு॥ ஸ-கீ-13, 21.

(இ - ள்.) ஜீவாத்மாவானவன் பிரகிருதியான தனது சரீரத்திற் கட்டுண்டிருப்பதால், போக்யரூபமான பிரகிருதியின் சப்தாதிகுணங்களை (இன்பதுன்பங்களை) அனுபவிக்கிறான்; அன்றியும் உத்கிருஷ்ட நிக்ருஷ்ட யோநிபேதங்களில் பிறப்பதற்குங்கூட மேற்படி சத்வரஜஸ் தமஸ் என்கிற முக்குணங்களுடன் அவன் எப்பொழுதும் கூடியாடுவதே காரணம்.

ஶ்ரு॥ அநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி॥ ஶ்வே-தா॥4-6.

(இ - ள்.) மற்றவனான ஈசுவரன் (இந்த பவுதிக சரீரத்துள் ஜீவனுடன் வஸித்தபோதிலும்) சரீரசம்பந்தமான இன்பதுன்பங்களை யநுபவிக்காமல் உதாஸீனனாய் விளங்குகிறான்.

முக்தன் ஆவது எப்படியெனில்.

(1) அந்தக்கரணத்தைக் குடிகொண்ட அவா வற்றுப்போகவேண்டும்.

(ஶ்ரு) யதா ஸர்வே ப்ரமுச்யந்தே காமா யேऽஸ்ய ஹ்ருதி ஶ்ரிதா:।
அத மர்த்யோऽம்ருதோ பவத்யத்ர ப்ரஹ்ம ஸமஶ்நுதே கட. 2-6-14.

(இ - ள்.) ஜீவாத்மாவினுடைய ஹிருதயாசயத்தில் குடிகொண்டிருக்கும் காமங்கள் எல்லாம் ஒழிந்து போனபோது, இறக்கும் தன்மையைப்பெற்ற இந்த ஜீவன் அமிருதனுய் அதாவது நாசமில்லாதவனுய் ஆகிருன், நிரதிசய பிரம்மாநந்தானுபவத்தைப் பெறுகிருன்.

(2) இதயத்தில் முடிபோட்டிருக்கும் அகங்கார மமகாரங்கள் அற்றுப் போகவேண்டும்.

(ஶ்ரு) [illegible] கஶ. 2-6-14

(இ - ள்.) இந்த ஜீவனுடைய ஹிருதயத்திலுள்ள ராகத்துவேஷ அகங்கார மமகார முடிச்சுகள், எப்போது அறந்து அற்றுப்போகின்றனவோ, அப்பொழுது மரண ஸ்வபாவத்தைப்பெற்ற இச்சீவன் அவிநாசியாகிருன். இத்தனையே தான் இவ்வாத்மாவுக்கு உபதேசிக்கத்தக்க பாகம் (அதாவது இவ்வளவே சீவன் அறியவேண்டுவது.)

(3) பரமாத்மாவை யாராதிக்கவேண்டும்.

(ஶ்ரு) [illegible] ஶ்வே. 4-13.

(இ - ள்.) இவ்வுலகத்திலுள்ள இரண்டுகால் நாற்காற்சந்துக்கள் முதலிய அனைத்துச் சீவன்களையும், எவன் ஆளுகிருனே, அட்டிப்பட்ட ஸர்வேசுவரனை ஸ்ரீமந் நாராயணனைக்கொண்டு ஸர்வவித ஆராதந கைங்கரியங்களையும் சமர்ப்பிப்போம்.

(4) அவனைச் சரணுகதியடையவேண்டும்.

(ஶ்ரு) [illegible] ஶ்வே. 6-18.

(இ - ள்.) முதலில் சதுமுகனைச் சிருஷ்டித்து யாவன் அவனுக்கு வேதங்களைக் கற்பித்துக்கொடுக்கிருனே, அன்றியும் இந்த ஜீவாத்மாவினுடைய புத்தி (அஞ்ஞானம் நீங்கி) ப்பிரகாசிக்கும்படி செய்பவனே அப்படிப்பட்ட ஸர்வேசுவரனை - முமுக்ஷுவான நான் சரணுகதியடைகிறேன்.

(5) அவனைச் சேதநாசேதநங்களினின்றும் பிரித்து அறியவேண்டும்.

(ஶ்ரு) [illegible] கஶ. 2-6-17.

(இ - ள்.) கட்டைவிரலளவாய்க் கூறப்படுகிற அந்தர்யாமியானபரமாத்மா ஸர்வஜநங்களுடைய ஹிருதய கமலத்திலும் வாசஞ்செய்கிருன். அந்தப் பரமாத்மாவை அவனுக்குச் சரீரபூதனை சேதநனைவிட வேறென்று (அதாவது இச்சீவாத்மாவுக்கு ஆதாரமாயும் நியந்தாவாயும் சேஷியாயும் வேறுபட்டிருக்கிருனென்று) பகுத்து அறியவேண்டும்.

(6) ஸித்தையே நோக்குற்று நிற்றல்வேண்டும்.

(ஶ்ரு-தி) ப-ுரு-ஷாந்ந பரம்கிம்சித் ஸாகாஷ்டா ஸா பரா கதி:| கட. 1-2-11.

(பொ-ள்) பரம புருஷனுன ஸ்ரீமந்நாராயணனைவிட உத்தமமான பிராப்யம் வேறில்லை, உபாயமும் வேறில்லையென்று அவனையே நோக்குற்றிருக்கக்கடவது.

(7) உபாஸ்யனுன பரமாத்மாவினிடத்தில் ஒடுங்கவும், மற்ற வியாபாரங்களெல்லாம் ஒடுங்கிப்போகவே, அவனைச் சேர்வதென்று கொல்! என்றும், ஆக்கைவிடும் பொழுதையும் எதிர்பார்த்திருக்கிறுன்.

(ஶ்ரு-தி) அஶ்வஇவ ரோமாணி விதூ-ய பாபம் சந்த்ர இவ ராஹோர் முகாத் ப்ரமுச்ய | தூ-த்வா ஶரீரமக்ருதம் க்ருதாத்மா ப்ரஹ்மலோகமபி ஸம்பவாமி. ஸாந்தோ. 8-13-1.

(இ-ள்.) குதிரையானது தன் சரீர ரோமங்களைச் சிலிர்த்துதறுவதுபோல் முன் செய்த தீவினைகளை உதறிவிட்டு, இராகுவால்பிடிபட்ட சந்திரன் மோக்ஷணமானதும் சுத்த மண்டலமாய்ப் பிரகாசிப்பதுபோலே, துஷ்டமான சரீரத்தை உதறி விட்டுவிட்டு கிருதார்த்தாத்மாவாய், நித்யமாயுள்ள பகவல்லோகத்தை அடைகிறேன். (என்று உற்சாஹத்துடன் கூறுவது.)

மேற்சொல்லிய உபாயங்களாலும் பகவதநுக்கிரகத்தாலும், பூர்வோத்தராகங்கள் கழிபடவே பிராரப்த சரீரமானது விடும்பொழுது இவன் அர்ச்சிராதிகதியைச் சேரும்படி, இவனுபாஸித்த எம்பெருமானே தலைக்கட்டி வைக்கிறுன்.

8. பவுதிகசரீரத்தினின்றும் விடுபடுகிறன்.

(ஶ்ரு-தி) ஏவமேவைஷ ஸம்ப்ரஸாதோ ஸ்மாச்சரீராத் ஸமுத்தாய பரம்ஜ்யோதி ரூபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபி நிஷ்பத்யதே. ஸா. 8-3-4.

(இ-ள்.) உபசாந்தனுன இந்த உபாஸக ஜீவாத்மா, இழிவான இப் பவுதிக சரீரத்தை விட்டுக் கிளம்பி, ஸ்ரீ வைகுண்ட நிகேதநனுன பரமாத்மாவை யடைந்து ஸ்வஸ்வரூபயுக்தனுகிறுன்.

எப்படிச் செல்லுகிறுனென்று விவரிக்கப்படுகிறது. ஈசுவரனநுக்கிரகத்தால் பரமபதமார்க்கத்தின் பிரகாசமுண்டாய் இதய குகையைவிட்டு வெளிப்பட்டு மூர்த்தாவில் உயரச்செல்லுகிற ஏகநாடியின்வழியே மேலே சென்று அர்ச்சிராதிகதியிற் சேர்கிறுன். அர்ச்சிராதியென்றுல் - அர்ச்சிஸ்ஸையாதியாகவுடைய தேவபதம், தேவயாநம், பிரம்மபதம்என்றும் சொல்லப்படுவது. அதில்; (1) அர்ச்சிஸ், (2) அஹஸ்; (3) சுக்லபக்ஷம், (4) உத்தராயணம்; (5) ஸம்வத்ஸரம்; (6) ஆதித்யன்; (7) சந்திரன்; (8) மின்னல்; (9) அப்பால் அமாநவன் என்ற அதி தேவதாவிசேஷங்கள் ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற் சேர்க்குமவைகள். அவர்களால் அழைத்துக்கொண்டு போகப்படுகிறுன்.

(10) அர்ச்சிராதிகதி.

(ஶ்ரு-தி) ஸூர்யத்வாரேண தே விரஜா: ப்ரயாந்தி யத்ராம்ருத: ஸ புருஷோ ஹ்யவ்யயாத்மா. முண்ட. 1-2-11.

(இ - ள்.) (ஸங்கியாவிகள்) எல்லாப்பாவங்களையு முதறிக் கழித்துவிட்டு சூரியமண்டலத்தைப் பேதித்துக்கொண்டு, எந்த ஸஹஸ்ரஸ்தூண நிர்மிதமாய் திடமாய் நித்தியமாய் என்றுமழியாத ஸ்ரீ வைகுண்டத்தில் திவ்ய பர்யங்கத்தில் ஹேயபிரத்தியநீகனுய் ஸதைகரூபனுய் திவ்ய விக்ரஹயுக்தனுன பரமாத்மா எழுந்தருளியிருக்கிறனே, அப்படிப்பட்ட பரம புருஷன் ஸமீபத்தைச் சேருகிறுர்கள்.

(11) அப்பால சூக்ஷ்ம சரீரவி சிலேஷமுண்டானவாறே முன்பு அங்ருத திரோஹிதமாய்ப் போயிருந்த அபஹத பாப்மத்வாதி அனந்தகுணங்கள் வெளிப்படத் தோற்றுகின்றன.

அபஹதபாப்மத்வாதி குணங்கள் வெளிப்படுகின்றன.

(ஶ்ரு) யஆத்மா அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர் விஶோகோ விஜிகத்ஸோ அபிபாஸஸ் ஸத்யகாமஸ் ஸத்யஸங்கல்ப꞉. ஊா. 8-7-1.

(இ - ள்.) இந்த ஆவிர்ப்பூதஸ்வரூபனுன ஆத்மா ஸமஸ்த பாபங்களினின்று நீங்கினவன், நரைதிரை இல்லாதவன் மரணத்துக்குட்படாதவன், சோகநிவர்த்தியுள்ளவன், பசிதாகமில்லாதவனுமாய், தவிர்வில்லாத ஆவலேயும், முடிக்கும்படியான ஸங்கல்பத்தையும் உடையவன்.

அர்ச்சிராதி மார்க்கத்திற் முக்தாத்மா செல்லுகையில், அர்ச்சிஸ் என்ற அதி தேவதை, அகஸ்என்ற அதிதேவதையினிடம் அழைத்துக்கொண்டுபோய்ச் சேர்க்க அங்கிருந்து சுக்லபக்ஷத்துக்கும், அங்கிருந்து உத்தராயணத்துக்கும், அங்கிருந்து ஸம்வத்ஸரத்துக்கும், அங்கிருந்து ஆதித்யனுக்கும், அங்கிருந்து சந்திரனிடத்திற்கும், அங்கிருந்து மின்னலுக்குஞ்சென்று, போகையில் நேரிடும் அக்நிலோகம், வாயுலோகம், வருணலோகம், இந்திரலோகம், பிரஜாபதிலோகம் இவைகளைத் தாண்டிக்கொண்டு கீழ்ச்சொல்லப்பட்ட ஆதிவாகிகர்களின் ஸத்காரங்களை யாங்காங்கு பெற்றுக்கொண்டு, ஆவரணங்களையும் பிரகிருதியையுங் கடந்து பிரமலோகம் (ஹிரணியகர்ப்பலோகம்) சென்றால், அங்கு ஆரம் என்றமடுவும் தாண்டுகிறுன், யேட்டிஹா என்றபொழுதுகள் அவனைக் கண்டு விலகியோடுகின்றன; அப்பாற் சென்றுபோகையில் விரஜாநதியைக் காண்கிறுன்.

11. விரஜாநதியைத் தாண்டுதல்.

(ஶ்ரு) ஸஏதம்தேவயாநம் பந்தாநமாபத்ய ஆக்நிலோகமாகச்சதி ஸ விரஜாம்நதீம் தாம் மநஸாஉத்யேதி கவுஷீ. 1-4.

(இ - ள்.) இந்த தேவயானத்திற்செல்பவன், விரஜை என்ற பெயருடைய நதீதீரம் அடைந்து அதில் நீராடி அப்பாற் செல்லுகிறுன்.

அப்பால் இல்யம் என்ற விருக்ஷமும், ஸாலஜ்யம் என்ற ஸம்ஸ்தானமும், அபராஜிதமென்ற அரண்மனையும், இந்திரன் பிரஜாபதியாகிற இருவர்வாயிற் காப்போரும், விபு என்ற ஸபாஸ்தலமும், அதனுள் விசக்ஷணம் என்ற ஒரு மாஸநமும் அமிதவுஜஸ் என்ற பர்யங்க சமீப முதலானவைகளையுந் தாண்டிப் போய்ச் சேருகிறுனென்று விரிவாய் கவுஷீதகீ யுபநிஷத்தில் ஸ்வேக்ஷாசாயு

ஊது. இதையும் இதன் விபரத்தையும் ஸ்ரீவிசிஷ்டாத்வைதபாஸ்கரத்தில் தெளிவாய்க்கண்டு கொள்ளலாம்.

12. விரஜாநதீஸ்நாநமானபின்பு அமாநவகரஸ்பர்சம் உண்டாகிறது.

(ஶ்ரு) தத்புருஷோऽமாநவஸ்ஸ ஏதாந்ப்ரஹ்ம கமயதி — ஶா. 10-1.

(இ - ள்.) அமாநவன் என்ற பகவத்பாரிஷதன் இந்த முக்த ஜீவாத்மாக்களை பரம்பிரம்மனை நாராயணனைச் சேரும்படி உபசரிக்கிறன்.

அப்பால் திவ்யசூரிபரிஷத்தால் நிறைந்து விளங்கும் திவ்யமண்டபத்துள் நுழைந்து சென்று ஸ்ரீ, பூமீ, நீளாஸமேதனை ஸர்வேசுவரனைக்கண்டு திருவடி தொழுகிறன்.

13. புருஷோத்தமனைக்கண்டு திருவடிதொழுதல்.

(ஶ்ரு) ஸ ஏதஸ்மாஜ்ஜீவகநாத் பராத்பரம் புரிஶயம் புருஷமீக்ஷதே. — ப்ர. 5-5.

(இ - ள்.) முக்தனை ஆத்மா, இந்த தேஹமாகிற பாரத்தைத் தூக்குகிற தேஹியை விட சுத்த ஆத்ம தத்துவத்துக்குப் பரமாய், ஸர்வஜீவ ஹிருதய கமலாந்தர்வர்த்தியாய் எழுந்தருளியிருக்கும் (தான் உபாஸித்த) நிருபாதிக புருஷ சப்தவாச்சியனாய் பகவானைபரவாசுதேவனையே கண்டு ஸேவிக்கிறன்.

(14.) அவனைக்கண்டு திருவடி தொழுததும் ஸர்வகர்ம விநிர்முக்தனாய், எம்பெருமானுடைய சமீபத்திற்சென்று ஸ்துதிப்ரணாமாஞ்சலியுடன் ஏத்தி தனதுபிதாவாகிய பகவானுடைய உத்ஸங்கத்தில் ஏறியுட்கார்ந்துகொண்டு அவனால் ஆலிங்கனம்பண்ணப்பட்டு ஒருவர்க்கொருவர் ஆலோகன ஸாபநங்களுண்டாய் ஸ்வரூப ரூபகுணவிக்ரஹங்களினநுபவமு முண்டாகின்றன.

(ஶ்ரு) யதா பஶ்ய: பஶ்யதே ருக்மவர்ணம் கர்த்தாரமீஶம் புருஷம் ப்ரஹ்மயோநிம் । ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி — முண். 3-1-3.

(இ - ள்.) பிரமதர்சியான முக்தாத்மா, தேஜோமயமான திவ்யமங்கள விக்ரஹயுக்தனாய், ஜகத்தைப்படைத்தாளுமவனாய் உபாதாநகாரண பூதனாய், நிருபாதிக புருஷசப்த வாச்சியனை பரம்பிரம்மமாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீபர வாசுதேவனை (பிரமதரிசியான முக்தாத்மா) யெப்போது கண்ணாரக்காண்கிறுனோ அப்பொழுதே புண்யபாவங்களையும், பிரகிருதிவாஸனையையும் அடியுடன்போக்கி, முற்கூறிய அபஹதபாப்மத்வாதி அஷ்டகுண லக்ஷணத்தாலே கூடின பிரும்மரூபத்துடன் விசேஷ ஸாமியாவஸ்தையை அடைகிறன்.

(ஶ்ரு) இதம் ஜ்ஞாநமுபாஶ்ரித்ய மம ஸாதர்ம்யமாகதா: ஸர்கேऽபி நோபஜாயந்தே ப்ரலயே ந வ்யதந்தி ச — ஸ-மீ. 14-2.

(ஶ்ரு ள்.) இனி சொல்லப்படுகிற ஞானத்தை யடைந்து, என்னைப்போன்று எண்குணத்துடன் சமானராய், மற்றவரைப்போல் சிருஷ்டியில் பிறக்காமலும், பிர

ளயத்தில் நசிக்காமலும் நித்திய விபூதியை யநுபவித்துக்கொண்டு பேறு வர்கள்.

(15.) பகவதநுபவ ஜநிதப்ரீதி யதிசயத்தாலே கரைகடந்து களித்தல்.

(ஶ்ரு) ஸ தத்ர பர்யேதி ஜக்ஷந் க்ரீடந் ரமமாண꞉। ஊா. 8-12-3.

(ஶ்ரு) ஸவாநஷ்நதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதா। ஊா. 8-12-5.

(இ - ள்.) இந்த உபஸத்தாவான (பரமாத்மாவைச் சேர்ந்த) முக்தாத்மாவானவன் பரமாத்மாவைப் பூர்ணநுபவஞ் செய்துகொண்டு அவனுடன் இடைவிடா து யதேஷ்டமான போகங்களை யநுபவிக்கிறுன்.

ஷை சரிரேந்திரியப் பிராண விலக்ஷணனுன ஆத்மா, (தன் பூர்வகர்மத் தால் வந்திருந்த அநிருதாதிகளை யுதறிக்கழித்துவிட்டு) ஸ்வாபா விகமான ஞானத்தாலே ஸ்ரீ வைகுந்தத்தில் அநந்தாநந்தாநுபவத் தைச் செய்துகொண்டு வாழ்கிறுன்.

(16) இப்படி அகாலகால்யமான திவ்ய பரம பதத்தில் ஸ்ரீமந்நாராயண னுக்கே ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தோசிதமான ஸர்வப்பிர கார கைங்கரியத்துடன் வாழ்ந்துகொண்டிருப்பவன் எஞ்ஞான்றும் மீட்சியின்றி வைகுந்தமாநகரிலே ஆனந்தமாய் விளங்குகிறுன்.

(ஶ்ரு) அநாவ்ருத்தி꞉ ஶப்தாத் அநாவ்ருத்தி꞉ ஶப்தாத். ஸூ. 4-4-12.

(இ - ள்) இந்த முக்தனுனசேதநன் முன்பு மறைபட்டுப்போயிருந்திப்போது வெளிப் பட்டு நன்ருய் விளங்கிய அபஹதபாப்மத்வாதி குணங்களையுடையவனுய் அநவதிகாதிசயாநந்த பிரசுரமான (பரப்பிரம,) புருஷோத்தமனை அநுப விக்கிறுன் ஶ்ருதிபிரமாணத்தால் அவன் ஒருக்காலும் திரும்புவதில்லை, ஒருக்காலும் லீலாவிபூதிக்குத் திரும்புவதில்லை.

(ஶ்லோ) யதா யதா நிவர்த்தந்தே சந்த்ரஸூர்யாதயோ க்ரஹா꞉।
அத்யாபி ந நிவர்த்தந்தே த்வாதஶாக்ஷரசிந்தகா꞉॥

(இ - ள்.) திங்களுங் கதிரவனும் சென்று சென்று திரும்புகிறுர்கள்; பன்னீரக்ஷரமுள் ள மந்திரத்தை யறிந்தவர்கள் என்றும் வைகுந்தமாநகர் விட்டு மீளுவ தில்லை.

(ஶ்ரு) ஸ கல்வேவம் வர்த்தயந் யாவதாயுஷம் ப்ரஹ்மலோகமபிஸம்பத்யதே, ந ச புநராவர்த்ததே, ந ச புநராவர்த்ததே. ஊா. 8-15.

(இ - ள்.) இவ்வாறு ஆயுள் முடிவுவரையில் இவ்வுலகில் இல்லறம்வழுவாது நடாத்தி வந்து முடிவினில் சரீரத்தை வீழ்த்தி, உபாஸகனுனவன், பரமபதம்சென்று அநவதிகாதி சயாநந்தரூப பரப்பிரமனுன புருஷோத்தமனை குணநுபவஞ் செய்துகொண்டு ஆநந்திக்கிறுன்; ஈசுவரேச்சையாலவது ஸ்வேச்சையு

லாவது கர்மவசத்தாலாவது பிராகிருத போகத்தில் இச்சைகொண்டு ஸம்ஸார சக்கிரத்துள் அகப்பட்டு இந்த லீலாவிபூதிக்கு ஒருக்காலுந் திரும்புவதில்லை. மீண்டு திரும்புவதேயில்லை.

முமுக்ஷுவானவன் ஈசுவரனை பக்திசெய்யும்வகை யினி கூறப்படுகிறது.

V. உலகத்தின்கண் மனுஷியர்களை யுண்டாக்கி, அவர்களை (தலைவன், தலைவி,) (தந்தை மகன்,) பொன் பொருள் முதலிய எல்லாவற்றிலும் ஒருவர்க்கொருவர் அன்புபூண்டு கட்டுண்டு களிக்கும்படி ஸர்வ ஜகத்காரணபூதனை ஸர்வேசுவரன் செய்திருப்பதின் காரணம் என்னவெனில், அன்பு இன்னதென்றும் அதைப்பழகுவ தின்னவாறு என்றும் காட்டிக்கொடுத்து, இதில் தேறினபின் ஸர்வகர்ம ஸமாராத்யனை தன்னிடத்தில் அந்தபக்தியைச்செய்யும்படி திருப்பிக்கொள்ளவேணும், என்று அவன் ஸங்கல்பம்.

(ஸ்ரு) நவா அரெ வத்யு: காமாய வத்ஃ ப்ரியோ பவதி ।
ஆத்மநஸ்து காமாய வத்ஃ ப்ரியோ பவதி । ப்ரு. 2-4-5.

(இ - ள்.) உலகத்தில் புருஷன், ஸ்திரீ, மகன், பொருள் என்ற இவர்கள் என் ஸந்தோஷத்தின் பொருட்டு ஏற்பட்டிருக்கின்றனர், நான் அவர்களுக்குச் சந்தோஷத்துக்காக ஏற்பட்டிருக்கிறேன் என்று ஒருவரும் எண்ணக்கூடாது. ஆனால் 'நம்மால் ஆராதிக்கப் பட்ட எம்பெருமானுடைய ஸங்கல்பாநுஸாரமாய் நடந்து அவன் ஸங்கல்பத்தை நிறைவேற்றுவதற்காக'; அவன் சங்கற்பமாவது - இவ்வுலகத்தின்கண் பந்துமித்ராதிகளான வழிகளில் அன்பைப் பயின்று வரவரத்தேறினதும், அந்த பக்தியை இடைவிடாது தன் பக்கலிலேயே திருப்பிக்கொள்ளவேணும் என்பதுதான். மனுஷியனல்லாத மற்றைத்தாழ்ந்த ஜாதிகளான விலங்கு பட்சி முதலிய பிராணிகள் தத்தம் குஞ்சு குட்டிகளிடத்தில் வைக்கும் அன்பானது சொற்பகாலமுள்ளதாயும் பிறகு மறக்கத்தக்கதாயும் தோற்றுகிறது. ஆனால் உயர்ந்தஜாதியான மனுஷியனோ வென்றால் வர வரப்பயின்றுவருதலால் வெகுநாள்மறக்காமல் தன் பிள்ளை குட்டிகளிடம் திடமாய் அன்புவைக்கிறான்

VI. ஈசுவரனும் ஜீவனும் தத்துவத்தில் வஸ்து ஏகமாய் அதாவது விசேஷண விசேஷ்யமாயிருந்தாலும், விசேஷணமாகிற ஜீவனைத்தனித்துப்பார்த்து அவனுக்குள்ள ஸ்வரூப ஸ்வபாவங்களை வேறே எடுத்துக்கூறியும், விசேஷ்யமான பரமாத்மாவின் ஸ்வரூப ஸ்வபாவங்களை வேறேயாய் எடுத்துக்காட்டியுமிருக்கிறது. எஞ்ஞான்று மிவ்விருவருக்குமுள்ள நீங்காச் சம்பந்தமானது சாதாரண மநுஷிய ஹிருதயத்துக்கு எட்டுவதருமையாயிருப்பதுபற்றி பூர்வாசாரியர்கள், அவர்கள் நாடோறும் பழகும் பரஸ்பர சம்பந்தமுள்ள லவுகிக திருஷ்டாந்தங்களைக்கொண்டு பலவாறாக எடுத்துக்காட்டியிருக்கின்றனர். ஜீவேசுவரர்களுக்கு உள்ள இச்சம்பந்தம் இன்று நேற்று உண்டானதல்ல. அநாதியாய் ஜீவேசுவரர்கள் உள்ளநாளாய் இயல்பாகவே இடைவீடின்றி எக்காலத்துமிருந்தும் ஜீவாத்மாவுக்கு அவித்தையினால் மறைபட்டுத் தோற்றாமலும் அவனாலறிந் தொப்புக்கொள்ளப்படாமலும் போயிருக்கிறது. எப்படியெனில் வெகுநாளாய் தன் இளம்பிரா

யத்திலே நெடுந்தூரம் தேசாந்தரம் போய்விட்ட தனது பிதாவை மறந்துபோயிருக்கையில், அவன் திரும்பத் தனதுதேசத்துக்குவந்தால் அவனைக்கண்டு தன் பிதாவென்று தெரிந்துகொண்டு நடுவில் வெகுகாலம் மறந்திருந்த துக்கமும் தீர்ந்து அவனுடன் கூடி இன்புறுவதுபோல. இதிலிப்போதுகூறிய பிதாவுக்கும் புத்திரனுக்குமுள்ள பரஸ்பர ஸம்பந்தம் எப்படிப் புதிதாயுண்டானதல்லவோ, நடுவில் மறந்துபோய் திரும்ப அறிந்துகொள்ளப்பட்டதோ அப்படிப்போலவே ஜீவேசுவர சம்பந்தமும். அன்றியும் மற்றோர்திருஷ்டாந்தம்-பூமியில் புதைத்துவைக்கப்பட்டிருக்கும் தன்தனத்தை மறந்துபோனவன் அந்தக்ஷேத்திரத்தின் மேலேயே நாடோறும் நடந்துபோய்க்கொண் டிருந்தாலும் அதை யறியமாட்டாமல், பிறகு பிறரால் தெரிவிக்கப்பட்டு அதை யெடுத்துக்கொண்டு தனக்கு அதிலுள்ள சம்பந்தத்தை நாட்டுகிறான்; அதுபோல.

(ஶ்ரு-) தத்³யதா² ஹிரண்யநிதி⁴ம் நிஹிதம் அக்ஷேத்ரஜ்ஞா: உபர்யுபரி ஸஞ்சரந்தோ ந விந்தே³யு: ஏவமேவேமா: ஸர்வா: ப்ரஜா: அஹரஹர்க³ச்ச²ந்த்ய: ஏதம் ப்³ரஹ்மலோகம் ந விந்த³ந்த்யந்ருதேந ஹி ப்ரத்யூடா⁴:॥ ஶா. VIII. 2. 3.

(இ-ள்.) அது எப்படியெனில் — புதையலிருக்கு மிடத்தை யறியாதவர்கள்நாடோறுமதன் மேலேயே நடந்துலாவித் திரிந்தாலும் அப்புதையலிருப்பை யறியமாட்டார்களோ, அப்படியே இப்பாரிலுள்ள சகலப்பிரஜைகளும் நாடோறும் (ஹிருதயாகாசவாசியாகிய) பரமாத்மாவினிடம்சென்றும் கூடியும் அவனால் கட்டிக்கொள்ளப்பட்டும், அவனிடத்திலேயே ஏகமென்னலாம்படி வாசமாயிருந்தாலும், அப்பரமாத்மாவை யறிகிறார்களில்லை, ஏனென்றால் அநாத்ய வித்யாகாமத்தினால் மூடப்பட்டிருக்கிறார்கள்.

(ஸூ-) அவிபா⁴கே³ந த்³ருஷ்டத்வாத். IV. 4. 4.

(இ - ள்.) முக்தனானவன் பிரத்தியகாத்மாவானவன் தனக்கு ஆத்மரூபனான பரமாத்மாவுக்குத்தான் சரீரமாகையால், அவனைவிட தான் வேறன்றென அவனுடன் ஸாதாமியத்தை யடைந்து பரப்பிரம்மத்தை-யதாவது அவன் கலியாண குணங்களை யநுபவிக்கிறான்—தன் ஆத்மாபரமாத்மாவையே ஆத்மாவாக வுடையதென்று அறியப்பட்டபடியால்.

ஆனதுபற்றி ஜீவேசுவரனுக்கு பரஸ்பரமுள்ள சம்பந்தமானது மத்தியகாலத்தில் மறந்து திரோஹிதமானாலும் சம்பந்தமாத்திரம் ஒருக்காலும் அழிந்துபோயிருக்கவில்லை. அப்படிப்பட்ட ஒருவரைவிட்டொருவர் பிரியாத, என்றுமுள்ள சம்பந்தத்தைத்தான் அடியில் வருகிறபடி ஒன்பது விதமாய் எடுத்துக் காட்டப்படுகிறது.

நவவிதசம்பந்தம்.

(1) ஈசுவரனுக்கும் ஆத்மாவுக்கும் என்றும் உள்ள மேற்படிச் சம்பந்தத்தையறிந்து அவனிடத்தில் பக்திசெய்வது எந்தப்பிரகாரத்தாலே என்று விசாரிக்கும்போது, சம்பந்தம் ஒன்றேயாயினும் மனு

ஷியனுடைய புத்திக்கு எட்டும்படியாய் உலகத்தில் அனுபவஸித்தமாயுள்ள அனேகவித சம்பந்தங்களை (அதாவது ஒன்றையொன்று அன்புடன் பற்றிநிற்றலை) ஆசாரியர்கள் எடுத்துக்காட்டியிருப்பவைகளில் முக்கியமாய் உள்ளது ஒன்பதுவித சம்பந்தம். அதாவது ஒன்பதுவிதத்தில் அவனைவிட்டு ஆத்மாபிரிந்து நில்லாமையையும், ஆத்மாவை விட்டு பரமாத்மா வேறுபட்டுப் பிரிந்து நில்லாமையையும், கண்டு தெளிந்து ஈசுவரனிடம் நீங்காத பரமபக்தியுடன் அன்புபற்றிநிற்றல். அவை வருமாறு.—

(1) பிதாச ரக்ஷகச் ஶேஷீ பர்தா ஜ்ஞேயோ ரமாபதி:।
ஸ்வாம்யாதாரோ மமாத்மா ச போக்தா சாத்யமநூதித:॥

ஈசுவரன்	சித்
(இ - ள்.) (1) பிதா (விசேஷ்யம்)	புத்திரன் (விசேஷணம்)
(2) ரக்ஷகன் (காப்பவன்)	ரக்ஷ்யன் (காக்கப்படத்தக்கவன்)
(3) சேஷீ (உரிமையுடையான்	சேஷன் (உரியன்)
(4) பர்த்தா (தாங்குபவன்)	பார்யா—(தாங்கப்படத்தக்கவன்)
(5) ஞேயம் (அறியப்படுமவன்)	ஞாதா (அறிபவன்)
(6) சுவாமி(பொருளையுடையான்)	ஸ்வம் (சொம் அல்லது பொருள்)
(7) ஆதாரம் (தாங்கும்பொருள்)	ஆதேயம் (தாங்கப்படுபொருள்)
(8) ஆத்மா (சரீரி)	சரீரம்.
(9) போக்தா (அநுபவிப்பவன்)	போக்யம் (அனுபவிக்கப்படும்பொருள்)

(1) விசேஷண விசேஷ்ய ஸம்பந்தம். பிதா புத்திரஸம்பந்தம் (அதாவது மட்குடத்தில் கருமையும் துணியில் வெண்மையும் விசேஷணம்; குடமும் துணியும் விசேஷியம்) அது போல் ஈசுவரனும் ஆத்மாவும் ஒருவரைவிட்டு ஒருவர்விலகி நிற்கவொண்ணமை.

(ஶ்ரு-) ஸ பந்துர்ஜநிதா ஸ விதாதா. மஹா நா. 2-5.

(இ - ள்.) ஈசுவரன் நமக்கு ஸர்வவித பந்துவாயும் நமது தகப்பனுயும் நம்மை நியமிப்பவனுயுமிருக்கிறவன்.

(ஸ்மு) பிதாஹமஸ்ய ஜகதோ மாதா தாதா பிதாமஹ:। ப-கீ-9-17.
அஹம் பீஜப்ரத: பிதா. ப. கீ. 14-4.

(இ - ள்.) இந்த சேதநாசேதநாத்மகமான ஜகத்துக்கு நானேபிதா, தாய், போஷிப்பவன் மற்றும் பாட்டனும் ஆகுபவன். நானே விரை போட்டுமுளைப்பிவிக்கும் தகப்பனுமாவேன்.

(2) ரக்ஷ்ய ரக்ஷகஸம்பந்தம். காக்குங்கடமையுள்ளவன் ஈசுவரன்; களைகண் மற்றிலேன் என்று அவன் காத்தலையே எதிர்நோக்கி யிருக்குமவன் ஜீவன்.

(ஶ்ரு-) விஷ்வஸ்யைகம் பரிவேஷ்டிதாரம். ஶ்வே. 1-1-1.

(இ - ள்.) பிரபஞ்சமனைத்தையும் படைத்துக் காப்பவ னவனே.

•(ஶ்லோ) ஜமஸ்வாதாதமெய்வஷ. விஷ்ணு. I. 22-39.

(இ - ள்.) இந்த ஜகத்தை ஜகார்தனை ஸ்ரீவிஷ்ணுவே காப்பவனும்.

(ஶ்ரு) ஸவஊவகாலெ ஊ-வநஸ்ரொவா. ஶ்வே. 4-15.

(இ - ள்.) அவன்சமயத்தில் எல்லா உலகங்களேயும் பாதுகாப்பவன்.

(3) சேஷசேஷீஸம்பந்தம்.} ஈசுவரனுடைய திருவுள்ளத்தின் ஸங்கல்பா நு குணமாய் அவனுக்கே இஷ்ட விநியோகார்ஹமாய் (மனுஷிய னுக்கு அவனுடைய கைகால்கள் போன்று) நிற்கும் ஜீவன், சேஷன். இச்சீவனைத் தனக்குரிமையாயுடைய ஈசுவரன், சேஷீ.

(ஶ்ரு) ஜ்ஞாநமாத்மநி மஹதி நியச்செத்தச்செச்செச்சாந்த ஆத்மநி. கட. 3-13.

(இ - ள்.) ஞானத்தை-மஹானுன ஆத்மாவினிடத்தில் ஒடுக்கவேண்டும்; இந்த ஆத்மாவை ஆநந்தரூபியாய் சேஷியான பரமாத்மாவினிடத்தில் ஒடுக்கவேண்டும்.

(ஶ்ரு) ஆத்மாநமந்தரோயமயதி. ப்ரு. 3-7-23.

(இ - ள்.) அந்த பரமாத்மாவே, ஜீவாத்மாவை உள்நின்று இயக்குகிறான்.

ஶ்லோ॥ தஸ்யாஹம்நப்ரணஶ்யாமி ஸசமெநப்ரணஶ்யதி. ஶ்ரீ. 6-30.

(இ - ள்.) அந்த பக்தனுக்கு நான் எப்பொழுது மில்லாமற் போவதில்லை. அவனும் எனக்கு இல்லாமற்போவதில்லை அதாவது அவனும் நானும் என்றும் ஒன்று பட்டு விலகாமல் பொருந்தி நிற்போம்.

ஶ்லோ॥ மத்ஸ்தாநி ஸர்வபூதாநி. ஶ்ரீ. 9-4.

(இ - ள்.) எல்லா பிராணிகளும் என்னிடத்தில் விளங்குகின்றன.

(4) பர்த்ருபார்யா ஸம்பந்தம். இச்சம்பந்தம், நெருப்பைவிட்டுப் பிரியாத நெருப்புப்பொறி எப்படியோ, அப்படி ஈசுவரனைவிட்டு அவன் அம்சபூதனாய் வேறுபடாமல் ஜீவன் தோற்றுவன் என்றும், மொத் தத்திலடங்கிய அதன்கூறுபோன்று ஈசுவரனில் ஜீவன் வஹிக்கப் பட்டுளன் என்றும், காட்டுவது. இச்சம்பந்தம் இன்று நேற்று உண் டானதல்ல; ஈசுவரனுள்ள நாளாக என்ஞான்றும் உளது. ஈசுவரன் பர்த்தா. அவனுக்கு அங்யமான சேதநா சேதநாத்மக பிரபஞ்சம் பார்யா. ஒருவனயிருந்த பரமாத்மாவே தன்னுடன் ஒன்றுபட்டுப் பிரித்தெடுக்க முடியாதபடி யொன்றேயெனலாம்படியிருந்த சித சித் பிரபஞ்சத்தை, தன்னையே இருபிரிவாய்ச்செய்து ஒருபாகம் தானும் மற்றோர்பாகம் ஸ்திரீரூபமாகவும் ஆக்கி பிரபஞ்சப் பிர காரமாய் விளங்குகிறானென்று பிருஹதாரணியக உபநிஷத்தில் கூறப்பட்டுள்ளது.

(ஶ்ரு) ஸஇமமேவாத்மாநம் த்வேதாபாதயத்।
ததஃபதிஶ்ச பத்நீசாபவதாம். ப்ரு. 1-4-3.

(இ - ள்.) அந்தபரமபுருஷன் தன்விக்கிரஹத்தையே இரண்டு பிளவாய் வீழ்த்தினன். அவ்விரண்டு பிரிவும் ஆணும் பெண்ணுமாயிற்று.

(5) ஞாத்ருஜ்ஞேய ஸம்பந்தம். ஜீவாத்மாவானவன், பரமாத்மாவின் ஸ்வரூப ஸ்வபாவங்களைத் தெரிந்துகொள்ளுகிறுனுதலால் ஞாதாவாகிறுன். அவனுல் தெரிந்துகொள்ளப் படுகிறபடியால் ஜ்ஞேயன் பரமாத்மா.

(ஶ்ரு) ஏதஜ்ஜ்ஞேயம் நித்யமேவாத்மஸம்ஸ்தம் நாத꞉ பரம் வேதிதவ்யம் ஹி கிஞ்சித். ஶ்வே. 1-12.

(இ - ள்.) ஆத்மாவின்கண் அந்தர்யாமியாய் என்றும் யெழுந்தருளியிருக்கும் பரமபுருஷனையே அறிந்து உபாஸிக்கவேண்டும். இதையன்றி வேறு அறியத்தக்கது ஒன்றுமில்லை.

(ஶ்ரு) நாராயணம் மஹாஜ்ஞேயம். ப-ரா-ஷைஸூத்ரம்॥

(இ - ள்.) அறிவதற்கருமையான ஜ்ஞேயமானவன் ஸ்ரீமந்நாராயணன்.

(ஶ்ரு) ஏதஜ்ஜ்ஞாத்வா அம்ருதா பவந்தி. ஶ்வே. 3-7.

(இ - ள்.) புருஷோத்தமனை யறிந்துபாஸித்தால் மிருத்தியுவைத் தாண்டுகிறுர்கள்.

6. ஸ்வஸ்வாமி ஸம்பந்தம். உலகத்தில் பொருளையுடையவன் அதைத் தனது இஷ்டப்படி அநுபவிக்கவும், பெட்டியில் வைத்துப் பேணவும் பிறர்க்கு உதவவும் தானே சுவதந்திரனுய் எப்படி யுபயோகிக்கிறுனே, அப்படி இவ்வாத்மாவை ஈசுவரனும் இவனை ஒருபடி வைக்கவும் தள்ளவும் எடுக்கவும் சுவதந்திரமான பாத்தியமுடையவன்; ஜீவாத்மாவும் அப்பொருள்போலவே, தன் சுவதந்திரமின்றி அவனனுகூலத்துக்கே கடமைபட்டு என்றும் வாழ்பவன்.

(ஶ்ரு) ப்ரதானக்ஷேத்ரஜ்ஞபதிர்குணேஶ꞉. ஶ்வே. 6-16.

(இ - ள்.) அனந்தகல்யாணகுணுகரனுன ஸ்ரீமந்நாராயணனே தனது சரீரபூதமான ஆத்மாவுக்கும் அசித்துக்கும் அதிபதி.

(ஶ்ரு) ஸ காரணம் கரணாதிபாதிப꞉. ஶ்வே. 6-9.

(இ - ள்.) ஆத்மாவுக்கு அந்தர்நிவிஷ்டனுய் நியாமகனுயுள்ள புருஷோத்தமனே ஸர்வ ஜகத்துக்கும் உபாதான காரணபூதன்.

(ஶ்ரு) பதிம் விஶ்வஸ்யாத்மேஶ்வரம் ஶாஶ்வதம் ஶிவமச்யுதம்। தை-நா. 11-3.

(இ - ள்.) என்று முள்ளவனுய், நழுவாத புகழுள்ளவனுய் பிரபஞ்சமனைத்துக்கும் அதிபதியாய் ஆத்மாவுக்கு நியாமகனுன ஸ்ரீமந்நாராயணனை.

(ஶ்ரு) அந்த꞉ப்ரவிஷ்டஶ்ஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா. யஜு-3-24.

(இ - ள்.) அனைத்துலகுக்கும் ஆத்மஸ்வரூபமாய் விளங்கும் புருஷோத்தமன் ஸர்வ ஜனங்களுடைய ஹிருதய கமலத்துள்ளும் வாஸஞ்செய்துகொண்டு எல்லாரையும் நியமிக்கிறுன்.

(ஶ்ரு) கதிர்பர்தா ப்ரபு꞉ ஸாக்ஷீ நிவாஸஶ்ஶரணம் ஸுஹ்ருத்। ஸ-கீ-9-18.

(இ - ள்.) அர்ஜுனா! நானே இவ்வுலகுக்குக் களைகண், தாங்குபவன், ஆளுபவன் என் சாஸனம் உல்லங்கனமின்றி நடக்கிறதா என்று பார்ப்பவன், ஸர்வபூதங்களுக்கும் இருப்பிடம், ரக்ஷிப்பவனும், நன்கு செய்பவனும் நானே.

(7) ஆதாராதேயசம்பந்தம். ஆதேயமாவது, தனக்கு ஆதாரமாயிருபப தொன்றைப்பற்றி நிற்கும் பொருள். அதாவது ஆதாரவஸ்து வின்றித் தனக்கு ஜீவனமில்லாமையும் பிரிந்து வாழாமையு முடையது; ஆதேயம் - ஜீவாத்மா. ஆதாரமாவது ஈசுவரன். தன்னைவிட்டு நீங்காது என்றும் தன்னையே ஆச்ரயித்துக்கொண் டிருக்கும் சிதசித்பிரபஞ்சமனைத்தையும் தன்னிடத்தில் இடங்கொடுத்து நிலை நிற்கும்படி செய்பவன்.

(ச்ரு) விஶ்வம்பிபர்த்தி ஸ்வவநஸ்ய நாதி:। உ-நா. 1-6.

(இ - ள்.) இவ்வுலகங்களுக்கு உத்பாதகனான பரமபுருஷன் அனைத்தையும் ஆதாரமாய் நின்று தாங்குகிறான்.

ஏஷஸேது ர்விதரணோ லோகாநாம் ஸம்பேதாய. ச்சா. 8-4-1.

(இ - ள்.) இந்த உலகங்களெல்லாம் வரம்பும் நிலையும் கொலையாதபடி சேதுவைப் போன்று தாங்குபவன் பரமாத்மா.

(ச்ரு) மத்ஸ்தாநி ஸர்வபூதாநி ஏதத்விதிது பதாரய। ப-கீ. 9-6.

(இ - ள்.) எல்லாப் பூதங்களும் என்னால் வஹிக்கப்பட்டு நிலைநிற்கின்றன வென்று அறிந்துகொள்.

(8) சரீர சரீரிசம்பந்தம். அதாவது உலகத்தில் மநுஷ்யாதி சரீரத்தையுடைய பிராணி அல்லது ஸத்வம் எப்படி அந்தச்சரீரம் ஸ்வரூப லக்ஷணங்களால் தன்னைவிட வேறாயினும் தான் அதனுடனொன்றுபட்டுப் பொருந்தி தான் அச்சரீரமே யென்றுசொல்லலாம் படி கூடி அதைத் தனது இஷ்டவிநியோகார்ஹமாம்படி உபயோகித் தனுபவிக்கிறானோ, அப்படியே பரமாத்மா ஜீவனுக்குச் சரீரியாய் அதாவது ஆத்மாவாய் நின்று சீவனைத்தன் இஷ்ட விநியோகார்ஹமாய் நியமிக்கிறான்.

(ச்ரு) ய ஆத்மநி திஷ்டந் ஆத்மநோऽந்தரோ யமாத்மா ந வேத
யஸ்யாத்மா ஶரீரம் ய ஆத்மாநமந்தரோ யமயதி. ஸ த ஆத்மாந்தர்யாம்யம்ருத:

(இ - ள்.) எந்த பரமாத்மாவானவன் ஜீவாத்மாவில் நிலைகொண்டு அந்த ஆத்மாவின் அந்தர்யாமியாய் (அவனுள் சூக்ஷமமாய் நின்று) அவ்வாத்மாவினால் அறியப்படாமல், அவ்வாத்மாவைத் தனக்குச் சரீரமாய் பண்ணிக்கொண்டு, அவ்வாத்மாவை உள் நின்று தன் கைங்கரியவிருத்தியில் ஸங்கல்பிக்கிறானோ அவனே பரவாசுதேவன்.

(ச்ரு) யோऽக்ஷரமந்தரே ஸஞ்சரந் யஸ்யாக்ஷரம் ஶரீரம். ஸுபாலோ.

(இ - ள்.) அவனே அக்ஷரமாகிய ஆத்மாவினிடம் இடங்கொண்டு பூர்ணமாய்வியாபித்து வாஸஞ்செய்து, ஆத்மாவைத் தனக்குச் சரீரமாகவும் பண்ணிக்கொண்டவனும்.

(9) போக்துரு போக்யஸம்பந்தம். அதாவது உலகத்தில் உள்ள சப்தாதியின்பத்தைத்தரும் போக்யவஸ்துவை ஒருவன் தன்னிஷ்டத்துடன்

அதன்பூரண ரஸத்தையும் தன்னுடைய ஸர்வேந்திரியங்களாலும் அதனுட்புகுந்து அனுபவித்துச்சுகிக்கிறனோ அப்படி ஆத்மாவைக் கொண்டு தன்னைப் பாடுவித்துக்கொண்டு சுகிக்கிற பரமாத்மா போக்தா. ஜீவாத்மாவானவன் அவனோடே ஸர்வாவஸ்தைகளிலும் ஏகதர்மி யென்னலாம்படியொத்திருந்து (தன்னுடைய ரஸத்துக் காவது, அவனுக்கும் தனக்கும் பொதுவி லுண்டாகும் ரஸத்துக் காவது அன்றியில்) போக்தாவான ஈசுவரனுடைய ரஸத்துக்குமாத்திரமே யுறுப்பாய், (உலகத்துள்ள போக்யபதார்த்தங்கள் போலவே நின்று) மங்களாசாஸன கைங்கரியஞ் செய்கையால், போக்ய வஸ்து.

(ஸ்ரு-) யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ரம் ச உபே பவத ஓதந:। க. 2-25.

(இ - ள்.) அந்த பரமாத்மாவுக்கு போக்யமான சராசராத்மகமான பிரபஞ்சமனைத்தும் பிரளயத்தில் ஓதனமாகின்றனவோ. (ஓதனம்=அன்னம்)

(ஸ்ரு-) போக்தாரம் யஜ்ஞதபஸாம். ஸ்ரீ. 5-29.

(இ - ள்.) ஸர்வயஞ்ஞங்களையும், புரியுந்தவத்தையும் யார் உட்கொள்கிறனோ (அவன் பரமாத்மா)

(ஸ்ரு-) அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம் போக்தா ச ப்ரபுரேவ ச. ஸ்ரீ. 9-24.

(இ - ள்.) நானே ஸர்வவிதயஞ்ஞங்களுக்கும் போக்தாவாயும் அதிபதியாயுமுள்ளவன்.

ஈசுவரனுக்கும் சேதநனுக்கும் உள்ள சம்பந்தத்தை இவ்வொன்பதுவகையானின்றி, உலகத்தா ரறியத்தக்க வொன்பதினுயிரம்வகையான லவுகிக திருட்டாந்தங்க ளெடுத்துக்காட்டிக் கூறினும் 29-ம் பாட்டில் ஆண்டாள்"எற்றைக்கு மேழேழ பிறவிக்குமுன்றன்னோ டுற்றேமேயாவோம் உனக்கேநாமாட்செய்வோம், மற்றைநம்காமங்கண்மாற்று" என்று கூறிய அவர் திருவுள்ளக்கருத்தின் ஆழத்தை யெடுத்துரைப்பது வேதாந்தவேத்யமேயொழிய, சுத்தஸாத்விகமான மனுஷிய இதயத்துக்கு மெட்டாது. ஆதிசேஷனாலு முரைப்பதரிது உணரவுமரிதரிது; இவ்வுரையெழுது மாசிரியர். 'உற்றோமே' 'உனக்கே'என்றபதங்களிலுள்ளதேற்றம் பிரிநிலை ஏகாரங்களிலும் 'உற்றோமே' என்ற பதப்பொருளிலும் ஆழ்ந்தாழ்ந்து ஆநந்தித்து உயிர்க்கிச்சம்பந்தமறிவது ஒன்றே போதுமென்று கொண்டாடுகிறார். இந்த முகவுரையில் சித்தத்துவ ஈசுவரதத்துவவிவரணம் கொஞ்சம் எழுதியிருப்பது இச்சம்பந்தம் போதமாவதற்காகவே.

மேற்குறித்த ஒன்பதுவகைகளில் சேதநனுடைய அநந்யார்ஹ சேஷத்வத்தைக் குறிக்கிற பர்த்ருபார்யா ஸம்பந்தமானது மிகவும் பிரதானமாய் ஆழ்வார்களனைவரும் ஸ்வரூபாநுகுணமாய் எம்பெருமானை நாயகனாகவும், தம்மை நாயகியாகவும் பாவனைபண்ணி ஸ்வபாவத்தில்புமான்களாதலால் அந்த பாவனைதார்டியமுண்டாவது மிகுந்த கஷ்டமாயும், பிறந்தாலும் அடிக்கடி நழுவத்தக்கதாயும் இருந்தது. ஆண்டாளுக்கோவென்றால் ஸ்வபாவமாய் ஸ்திரீத்வ மிருந்தபடி

யால் நாயக நாயகீபாவம் பண்ணுவது மிகவும் ஸுகரமாயிருக்கது. தாம்ஸ்திரீஸ்வபாவ யுக்தரா யிருந்தபடியால் இதரபாகவத சேதநரை யழைக்கும்போது சிறுமியர்காள் என்றே அழைக்கிறார்.

VII. இத்திருப்பாவை முப்பது பாட்டுகளிலும் ஒவ்வொன்றன் தாற்பரியம் வருமாறு.

பாசுரம்.

1. அதிகார ஸ்வரூபமும் உபாயோபேயஸ்வரூபமும்.

2. பகவத் கைங்கரியத்தில் ருசியுடைய அதிகாரிக்கு நேரிடும் ஸ்வபாவ விசேஷங்கள்.

3. அநுமதிதானம் பண்ணினார்க்குண்டாகும் திருஷ்டபல சம்ருத்தி.

4. அவ்வதிகாரிகளுக்கு பாகவதநுகூலர் கிஞ்சித்கரிக்கும் ஆறு.

5. அவர்களுக்கு பூர்வோத்தராகங்கள் நசிக்கும்பிரகாரம்.

6-15. பகவதநுபவஸஹகாரிகளையெழுப்புகை.

16. ஆசாரியகடகனை யெழுப்புதல்.

17. ஆசாரியனை யெழுப்புதல்.

18-19. நப்பின்னைப்பிராட்டியையெழுப்புதல்.

20. எழுப்பிவந்தகாரியம் அறிவித்தல்.

21. நப்பின்னைப்பிராட்டியுடன் ஸ்ரீகிருஷ்ணனையெழுப்புதல்.

22. தங்கள் அநந்யார்ஹசேஷத்வத்தை யறிவிக்கிறார்கள்.

23. பேரோலக்கமாய் சிங்காதனத்திலிருந்து கேட்டருளென்று கண்ணனைப் பிரார்த்தித்தல்.

24. திருவடிதொழுது மங்களாசாஸனம்செய்தல்.

25. புருஷார்த்தம் அருளும்படி கண்ணனை பிரார்த்தித்தல்.

26. பகவத்கைங்கரியாதிகளுக்கு அபேக்ஷிதங்களையறிவித்தல்.

27. நோன்பினால் ஈசுவரன்பக்கல் பெறுமவற்றைச்சொல்லி ஸ்வரூபவிரோதியையும் ஸாதநவிரோதியையும் கழித்தல்.

28. பிராப்தி பிராபகவிரோதியைக்கழித்தல்.

29. உபேயஸ்வரூபத்தை விவகரித்து திருஷ்டபலங்களைக் கேட்டாலும் நீதரவேண்டாமென்றல்.

30. இப்பிரபந்தம் கற்பார்க்கு உண்டாம் பலத்தைக்கூறுதல்.

VIII. இம்முப்பது பாசுரங்களையும் மார்கழிமாஸம் முப்பதுநாள்களிலும் நாளொன்றுக்கு ஒருபாட்டுவீதம் திருவாராதநத்தில் முடிவில் சாற்றுமுறைசெய்து முடிப்பதுமின்றி மற்றவேளைகளில் அந்தந்தப்பாட்டின் அர்த்தவிசாரஞ்செய்வது எல்லாருக்கும் வழக்கமாயிருக்கிறது; எல்லாதிவ்யதேசங்களிலும் பெருமாள் ஸன்னதிக் கிடதுபாகத்தில் ஆண்டாள் ஸன்னிதி யேற்பட்டிருக்கிறது. ஆள் என்னும் பகுதியடியாய்ப்பிறந்த பெண்பாற்பெயர் ஆண்டாள்; அடிமைகொண்டவள் என்று பொருள்படுகிறது. இப்பிரபந்தத்தில் 'நீராடப் போதுவீர்' என்று நீராட்டம் கூறியிருக்கின்றமையால் இது திருப்பள்ளியெழுச்சியின்பின் வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாசுரத்தின் அடியிலும் ஸ்ரீமான் கோவிந்தநம் ரெங்காச்சார் ஸ்வாமி செய்தருளிய அந்தந்தபாட்டின் பிரதிகிருதியின்ஸம் ஸ்கிருதசுலோகங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

அடிவரவு.

1 மார்கழி	7 கீசு	13 புள்ளின்	19 குத்து	25 ஒருத்தி
2 வையம்	8 கீழ்வானம்	14 உங்கள்	20 முப்பத்து	26 மாலே
3 ஓங்கி	9 தூமணி	15 எல்லே	21 ஏற்றகலம்	27 கூடாரை
4 ஆழி	10 நோற்று	16 நாயகன்	22 அங்கண்	28 கறவை
5 மாயனை	11 கற்று	17 அம்பரம்	23 மாரி	29 சிற்றம்
6 புள்ளும்	12 கனைத்து	18 உந்து	24 அன்று	30 வங்கக்கடல்

ஆண்டாள்வாழித்திருநாமம்.

திருவாடிப்பூரத்துச் சகத்துதித்தாள்வாழியே
திருப்பாவைமுப்பதுஞ் செப்பினாள்வாழியே
பெரியாழ்வார்பெற்றெடுத்த பெண்பிள்ளைவாழியே
பெரும்பூதூர்மாமுனிக்குப் பின்னானாள்வாழியே
ஒருநூற்றுநாற்பத்து மூன்றுரைத்தாள்வாழியே
உயரரங்கற்கேகண்ணி யுகந்தளித்தாள்வாழியே
மருவாருந்திருமல்லி வளநாடுவாழியே
வண்புதுவைநகர்க்கோதை மலர்ப்பதங்கள்வாழியே.

ஆண்டாள் திருவடிகளேசரணம்.

சிதசிதீசுவரனான ஸ்ரீ வைகுந்தன் சிஷ்டபரிபாலன துஷ்டநிக்ர ஹார்த்தமாய் ஸ்ரீ கிருஷ்ணனாய் லீலாவிபூதியிலவதரித்தபோது தேவர்களும் இருஷிகளும் கிருஷ்ண ஸம்சிலேஷத்தைப் பெறலாமென்று அவரவர்கள் தத்தமக்குரிய ஸ்வருபங்களுடன் வடமதுரையிலும் திருவாய்ப்பாடியிலும் வந்து பிறந்தனர்கள். இவ்விஷயம் ஸ்ரீபாகவதத்தில் 10-1-23-லும், அதர்வணீ கிருஷ்ணோபநிஷத்திலும் ஸ்பஷ்டமாய்க் கூறப்பட்டிருக்கின்றது அவ் இரஹஸியார்த்தத்தை அடியில் விவரிக்கப்படுகிறது.

நெ.	பூர்வரூபம்.	கிருஷ்ணாவதாரகாலத்தில் அடைந்த ரூபம்.	ஆதர்வணீ கிருஷ்ணோபநிஷத்தின் வாக்கியங்கள்.
1	தண்டகாரணிய ரிஷிகள்.	ஆய்ச்சிமார்கள்.	[illegible]
2	பரமானந்தம்	ஸ்ரீநந்தகோபர்.	[illegible]
3	மோக்ஷலக்ஷ்மீ.	ஸ்ரீயசோதைப் பிராட்டி.	[illegible]
4	பிரமபுத்திரி (ஸரஸ்வதி.)	ஸ்ரீதேவகிபிராட்டி	[illegible]
5	வேதம்.	ஸ்ரீவசுதேவர்.	[illegible]
6	வேதபிரதிபாத்தியா.	ஸ்ரீகிருஷ்ணராமா.	[illegible]
7	இருக்குகள்.	சிலகோபிகளும் பசுக்களும்.	[illegible]
8	கமலாஸனன் (விரிஞ்சி)	(மாடோட்டுங்கோல்.)	[illegible]
9	உருத்திரன்.	வம்சம் (புல்லாங்குழல்)	[illegible]
10	இந்திரன்.	கொம்பு வாத்தியம்.	[illegible]
11	ஸ்ரீவைகுந்தம்.	திருவாய்ப்பாடி.	[illegible]
12	தபஸ்விகள்.	விருக்ஷங்கள்.	[illegible]
13	அசுரர்கள்.	பூ, நா, சகட, த்ருணாவர்த்தர்	[illegible]
14	ஸ்ரீஹரி: (பரப்பிரமம்)	கண்ணபிரான்.	[illegible]
15	ஆதிசேஷன்.	ஸ்ரீபலராமன்.	[illegible]
16	வேதமும் உபநிஷத்தும்.	நரகாசுரனைச் சமித்துகொண்டுவந்த 16,200பெண்.	[illegible]
17	த்வேஷ மத்ஸரம்.	சாணூரனும் முஷ்டிகனும்.	[illegible]
18	தர்மம் - காவல்.	குவலயாபீடம் பகாசுரன்.	[illegible]
19	தயை - பூமி.	ரோகணி - ஸத்யபாமை.	[illegible]
20	மஹாவியாதி.	அகாசுரன்.	[illegible]
21	கலி.	கம்சன்.	[illegible]
22	சமம், தமம், சத்தியம்.	சுதாமன்-உத்தவன்-அக்ரூரர்	[illegible]
23	க்ஷீரசமுத்திரம்.	பாற்பானைதயிர்ப்பானை.	[illegible]
24	வைஷ்ணவீமாயை.	தேவகியின் பெண்.	[illegible]
25	கசியபர்.	உரல்.	[illegible]
26	அதிதி.	கயிறு.	[illegible]

நெம்.	பூர்வரூபம்.	கிருஷ்ணாவதாரகாலத்தில் அடைந்த ரூபம்.	ஆதர்வணீ கிருஷ்ணோப நிஷத்தின் வாக்கியங்கள்.
27	காளி.	கதை.	𑌗𑌦𑌾 𑌚 𑌕𑌾𑌲𑌿𑌕𑌾
28	மஹேசுவரன்.	கத்தி.	[illegible]
29	ஸம்ஸித்திபிந்து.	சங்கம் சக்கிரம்.	[illegible]
30	ஜகத்துக்கு பீஜம்.	கையிலுள்ள தாமரைத்தண்டு.	[illegible]
31	நாரதமுனி	ஸுதாமா (குசேலன்)	𑌸𑍁𑌦𑌾𑌮𑌾 𑌨𑌾𑌰𑌦𑍋 𑌮𑍁𑌨𑌿𑌃
32	கருடன்.	வடபாண்டீரம்.	𑌗𑌰𑍁𑌡𑍋 𑌵𑌟𑌭𑌾𑌣𑍍𑌡𑍀𑌰𑌃
33	பக்தி.	பிருந்தா.	𑌵𑍃𑌨𑍍𑌦𑌾 𑌭𑌕𑍍𑌤𑌿𑌃

அட்டவணை.

ஆண்டாள் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாவை முப்பதுக்கும் செய்யப்பட்டிருக்கிற ஸ்வாபதேசம் அதாவது உட்கருத்து என்ற உரையில் ஆங்காங்கு அருமையாயுள்ள பதங்களின் உட்பொருள்களை எளிதிலுணர்வதற்காக இந்த அட்டவணை வரையப்படுகிறது. பாசுரத்தை யநுஸந்திக்கையில் ஸ்வாபதேசார்த்தம் தெரியாதபோது இப்பட்டியை நோக்கினால் எளிதில் பொருள் வெளிப்படும்.

அரும்பதம்	அதன் உட்பொருள்	அரும்பதம்.	அதன் உட்பொருள்.
1 நேரிழையீர்	... ஞானபக்தியுள்ள சேதநரே.	திங்கு	... தேகாத்மாபிமாநம்.
சீறுமீர்கள்	.. அநந்யார்ஹ சேஷபூதைகளான ஆத்மாக்கள்.	மும்மாரி	... ஆகாரத்திர யஞானம்.
ஆய்ப்பாடி	.. திவ்ய தேசம்.	நெல்	... ஞானஸம்பன்னர்.
சீராட்டம்	... பகவத் குணாநுபவம்.	கயல்	.. ஆத்மவர்க்கங்கள்.
நந்தகோபன்	... ஆசாரியருக்கு நியாமகன்.	பொறிவண்டு	... லக்ஷ்மீஸமேதனான நாராயணன்.
கார்மேனி	... ஆஸ்ரிதஸகலதாப நிவர்த்தகமான.	பசுக்கள்	... ஞானிகள்.
பறை	.. அபேக்ஷித புருஷார்த்தங்கள்.	குடம்	.. சிஷ்யர்.
எம்பாவை	. பகவத்கைங்கரியரூப நோன்பு.	செல்வம்	... ஸத்வசம்பத்து.
2 வையத்து	... லீலாவிபூதி.	4 அண்ணல்	.. ஆசாரியன்.
மை	... ஞானயோகம்.	ஆழி	... திவ்யகல்யாண குணமிருதாப்தி.
மலர்	.. பக்தியோகம்.	மின்னி	... தியானயோகத்தால் ஸாக்ஷாத் கரித்து.
ஐயம்	... பகவத்வைபவம்.	வலம்புரி	... பிரணவார்த்தம்.
பிச்சை	... பாகவதவைபவம்.	சார்ங்கம்	... சேஷ சேஷீபாவம்.
3 உலகளந்த	... சேதநரை சேஷபூதராக்கின.	சரமழை	.. ஸ்வரூபயாதாத்மிய ஞானம்.
		5 ஆயர்	... அநந்யார்ஹசேஷர்.
		தூயமலர்	... இதயகமலம்.
		6 புள்	... பாகவதர்.

	அரும்பதம்.	அதன் உட்பொருள்.
	சங்கு ..	பிரணவம்.
	பேய்முலைநஞ்சு...	அகங்காரமமகாரம்.
	கள்ளச்சகடம் ...	காமக் குரோதம்.
	முனிவர்கள் ...	குணாநுபவபரர்.
	யோகிகள் .	கைங்கரியபரர்.
7	ஆனைச்சாத்தன்...	பரமபாகவதர்.
	காசு ...	திருமந்திரம்.
	பிறப்பு ...	த்வயசரம சுலோகம்.
	தயிர் ..	திவ்யப் பிரபந்தம்.
	திற ...	இருளைநீக்கு.
8	கீழ்வானம் ...	ஸர்வ உத்க்ரோசகாலம்.
	எருமை ..	அஜ்ஞானம்.
	பிள்ளைகள் ...	சேதநர்.
	மா .	அகங்காரம்.
	மல்லர் ...	அரிஷட்வர்க்கம்.
	தேவர் ..	நித்யஸூரி.
9	தூமணிமாடம் ...	பஞ்சோபநிஷன்மய மாணவிக்கிரகம்.
	விளக்கு ...	ஞானம்.
	கமழ்வளர்தல் .	ஈசுவரனே உபாய மாகக் கொள்ளல்.
	கதவம் ...	மமகாரம்.
	மாமீர் ...	புருஷகாரபூதையான பிராட்டி.
	ஊமை ..	பகவத் விஷயத்தில் வாக்கு மடங்கினதாய் நிற்றல்.
	செவிடு ...	உபாயவைலக்ஷண்யம் பிறந்தல்.
	அனந்தல் ...	ஏகாந்த விருத்தியில் ஆழ்தல்.
10	சுவர்க்கம் ..	சுகாநுப பிராப்யம்.
	கும்பகரணனும்...	தமோகுணம்.
11	கற்றுக்கறவை ...	ஸஸந்தாநரானசிஷ்யர்
	செற்றார் ..	உபாயாந்தரபரர், உபேயாந்தரபரர்.
	திறல் ..	ஸ்வார்த்தபரதா.
	குற்றம் ..	பூர்வோத்தராகங்கள்.
	மயில் ..	ஸ்வாமி.
	செற்றாதே ...	கரணவியாபாரமின்றி
	உறங்குதல் ...	ஏகநிஷ்டராயிருத்தல்
12	எருமை ...	சிஷ்யர்.
	*பால்சோர ...	பகவத்குணங்கள் சுரக்க.
	பனி ...	பகவத்பாகவத குணாநுபவதிவலைகள்.
	தென்னிலங்கைக் கோமான்.	அகங்காரம்.
13	புள் ...	காமாதி தோஷங்கள்.
	பிள்ளைகள் ..	அபிநவபாகவதர்.

	அரும்பதம்.	அதன் உட்பொருள்.
	பாவைக்களம் ...	காலக்ஷேப கூடம்.
	வெள்ளி ...	பரிசுத்தஞானம்.
	வியாழம் ...	அஞ்ஞானம்.
14	வாவி ...	திருமந்திரம்.
	செங்கழுநீர் ..	நம: என்றபதம்.
	வாய்நெகிழ்தல் ...	பாரதந்திரியம் தோற்றல்.
	ஆம்பல் ...	சுவாதந்திரிய ஞானம்.
	கூம்பின ...	மடிந்தன.
	செங்கற் பொடிக் கூறை.	சேஷத்வஞானம்.
	வெண்பல் ...	மந்தஸ்மிதம்.
15	இளங்கிளி ...	பாகவதா பிரிவேசமுள்ள ஸ்வாமி.
	கட்டுரைகள் ..	இரஹஸ்யார்த்த மடங்கியவார்த்தைகள்.
	வல்லானை ..	அகங்காரங்கள்.
	மாற்றார் ...	காமக் குரோதங்கள்.
	மாயன் ...	ஆஸ்ரிதபாரதந்திரன்.
16	நந்தகோபன் ...	சேஷத்வ காஷ்டையிலுள்ள ஆசாரியன்.
	தோரணவாயில்...	திருமந்திரார்த்த விசாரங்கள்.
	மணிக்கதவு ..	ஆத்ம சொரூபாநுபவம்.
	நாள் ...	ஸ்வஸ்வாதந்திரிய பிரவர்த்தி.
	தூயோமாய் ..	பிரயோஜனாந்தர அபேக்ஷையின்றி.
17	அம்பரமே .	ஈசுவரமுகவிகாஸம்.
	தண்ணீரே ...	அதில் போக்த்ருத்வ புத்தி நிவருத்தி.
	சோறு ..	கைங்கரியம்.
	யசோதை ...	திருமந்திரம்.
	அம்பரம் ...	நிரீசுவரவாதிகள்.
	உம்பர் ...	நித்தியசூரி.
18	கோழி ..	பாகவதர்கள்.
	மாதவிப்பந்தல்...	வேதாந்தம்.
	குயிலினம் ...	பரமபாகவதர்.
	பந்து .	சேதநவர்க்கமும் ஈசுவரனும்.
	கை ...	ஞானம்.
	வளையொலிப்ப ...	ரஹஸ்யம் பிரகாசிக்க
19	குத்துவிளக்கு ...	ஸர்வஞ்ஞத்வம்.
	கால் (நான்கு) ...	கர்த்ருத்வங்கள்.
	கட்டில் ...	லீலாவிபூதி.
	பஞ்ச ...	அர்த்தபஞ்சகஞானம்
	சயனம் ...	முமுக்ஷு இதயம்.
	மை ...	சுத்தஸத்வம்.

	அரும்பதம்.	அதன் உட்பொருள்
	கண்	ஞானம்.
20	கப்பம்	ஞானஸங்கோசசக்தி.
	செப்பம்	நிஷ்பக்ஷபாதம்.
	மென்முலை	பரமபக்தி.
	செவ்வாய்	சவுந்தரியம்.
	மருங்குல்	வைராக்கியம்.
	உக்கம்	அகங்காரமமகாரநிவிருத்தி.
	தட்டொளி	ஸ்வரூபஞானம்.
21	கலங்கள்	சிஷ்யர்கள்.
	பசுக்கள்	இரஹஸ்யங்கள்.
	ஊற்றம்	சப்தப்பிரமாணம்.
	வலி	நிருபாதிகசேஷத்வம்
22	அபிமானம்	அகங்காரமமகாரம்.
	சாபம்	விச்லேஷவ்யஸனம்.
23	மலைமுழஞ்சு	உபநிஷத்பாகம்.
	நிமிர்ந்து	தண்டாகாரமாய் நீண்டு.
	புறப்பட்டு	பிரகிருதியினின்றும் வேறுபட்டு.
	ஆஸ்தான மண்டபம்.	த்வயம்.
24	அளத்தல்	ஸ்வாமித்வம் நிலைநிறுத்தல்.
	இலங்கை	பிரகிருதி.
	சகடம்	காமக்குரோதம்.
	கன்று	லோபம்.
	பகை	பிராப்யவிரோதி.
25	ஒருத்தி	அஷ்டாக்ஷரம்.
	ஒருத்தி	த்வாதசாக்ஷரி.
	வளர்தல்	ஈச்வரஸத்தை
	கஞ்சன்	அகங்காரம்.
	வருத்தம்	வியஸனம்.
26	சங்கங்கள்	அநந்யார்ஹ சேஷத்வ ஞானம்.
	பெரும்பறை	பாரதந்திரிய ஞானம்.
	பல்லாண்டிசைப்பார்.	ஸத்ஸஹவாஸம்.

	அரும்பதம்.	அதன் உட்பொருள்.
	விளக்கு	பாகவத சேஷத்வஞானம்.
	கொடி	கைங்கரியம்.
	விதானம்	போக்த்ருத்வ நிவ்ருத்தி.
27	கூடாரா	திருந்தாதவர்.
	சூடகம்	திருமண் காப்பு.
	தோள்வளை	திருவிலச்சினை.
	தோடு	திருமந்திரம்.
	செவிப்பூ	த்வயம்.
	பாடகம்	சரமசுலோகம்.
	ஆடை	சேஷத்வ ஞானம்.
	பாற்சோறு	கைங்கரியம்.
	நெய்	பாரதந்திரிய ஞானம்.
28	கறவைகள்	ஸம்ஸாரிகள்.
	கானம்	ஸம்ஸாரம்.
	அறிவு	உபாயாந்திரம்.
	குறையொன்றுமில்லாத.	அவாப்த ஸமஸ்தகாமனான.
	உறவு	ஸ்வஸ்வாமி ஸம்பந்தம்.
29	பெற்றம்மேய்த்து.	ஸ்வ[illegible]யரக்ஷணம்.
	குற்றேவல்	கைங்கரியம்.
	உற்றோம்	[illegible]தாமி யென்னலாம்படி.
	காமங்கள்	திருவுட பலங்கள்.
30	வங்கம்	சரீரம்.
	கடல்	சம்ஸாரம்.
	கடைதல்	ஸ்வரூப ஸத்தையையுண்டாக்கல்.
	சேயிழை	ஞானபக்தி வைராக்யம்.
	செல்வம்	[illegible]பூர்த்தி.
	அப்பாவை	பெரியபிராட்டியார்.
	இன்பு	பிரயாநந்தம்.

ஶ்ரீ𑌮𑌤𑍇 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌯 𑌨𑌮𑌃

சூடிக்கொடுத்தநாய்ச்சியார் திருவாய்மலர்ந்தருளிய

உபநிஷத்ஸாரமாகிய

திருப்பாவை.

பட்டர் அருளிச்செய்த தனியன்.

𑌨𑍀𑌳𑌾𑌤𑍁𑌙𑍍𑌗𑌸𑍍𑌤𑌨𑌗𑌿𑌰𑌿𑌤𑌟𑍀𑌸𑍁𑌪𑍍𑌤𑌮𑍁𑌦𑍍𑌬𑍋𑌧𑍍𑌯 𑌕𑍃𑌷𑍍𑌣𑌂
𑌪𑌾𑌰𑌾𑌰𑍍𑌥𑍍𑌯𑌂 𑌸𑍍𑌵𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌶𑌤𑌶𑌿𑌰𑌃𑌸𑌿𑌦𑍍𑌧𑌮𑌧𑍍𑌯𑌾𑌪𑌯𑌨𑍍𑌤𑍀 ।
𑌸𑍍𑌵𑍋𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌾𑌯𑌾𑌂 𑌸𑍍𑌰𑌜𑌿 𑌨𑌿𑌗𑌳𑌿𑌤𑌂 𑌯𑌾 𑌬𑌲𑌾𑌤𑍍𑌕𑍃𑌤𑍍𑌯 𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇
𑌗𑍋𑌦𑌾 𑌤𑌸𑍍𑌯𑍈 𑌨𑌮 𑌇𑌦𑌮𑌿𑌦𑌂 𑌭𑍂𑌯 𑌏𑌵𑌾𑌸𑍍𑌤𑍁 𑌭𑍂𑌯𑌃 ॥

நீளா[1]துங்கஸ்தநகிரிதடீஸுப்தமுத்போத்யக்ருஷ்ணம்
பாரார்த்யம்ஸ்வம்ச்ருதிசதசிரஸ்ஸித்தமத்யாபயந்தீ[2]।
ஸ்வோச்சிஷ்டாயாம்ஸ்ரஜிநிகளிதம்யாபலாத்க்ருத்யபுங்க்தே
கோதாதஸ்யைநமஇதமிதம்பூயயேவாஸ்துபூய:॥

நீளா - நப்பின்னைப்பிராட்டியுடைய	ஸ்ரஜி - மாலையிலே
துங்கஸ்தந - ஓங்கிப்பணைத்த திருமுலைத்தடங்களாகிற	நிகளிதம் - கட்டுண்டிருக்கிற
கிரிதடீஸுப்தம் - மலைத்தாழ்வரையிலேகண்வளர்ந்தருளினவனாய்	யா - யாதொரு
உத்போத்யக்ருஷ்ணம்-கண்ணபிரானைத்திருப்பள்ளியுணர்த்தி	பலாத்க்ருத்ய - கட்டாயஞ்செய்து
பாரார்த்தியம் ஸ்வம் - தன்னுடைய பாரதந்த்ரியத்தை	புங்க்தே - புசிக்கிறாளோ
ச்ருதிசதசிரஸ்ஸித்தம் - பலவேதங்களின் தலையான உபநிஷத்துக்களாலே தேறின	கோதா - கோதையென்னும் திருநாமத்தையுடைய ஆண்டாள்
அத்யாபயந்தீ - அறிவியாநின்றுகொண்டு	தஸ்யை - அப்படிப்பட்ட பெருமையுடையவளின் பொருட்டு
ஸ்வோச்சிஷ்டாயாம் - தன்னால்சூடிக்களையப்பட்ட	நமஇதம்இதம் - இந்தஇந்தபிரணாமமானது
	பூயொபூயொயேவ - காலதத்துவம் உள்ளதனையும்
	அஸ்து - ஆகுக.

(பொழிப்புரை.) நப்பின்னைப் பிராட்டியினுடைய ஓங்கிப்பணைத்த திருமுலைத்தடங்களாகிற மலைத்தாழ்வரையிலே திருக்கண்வளர்ந்தருளினவனாய், தன்னால் சூடிக்களையப்பட்ட பூமாலையிலே அன்புபூண்டு கட்டுண்டவனாயுமிருக்கிற ஸ்ரீ கிருஷ்ணனைத் திருப்பள்ளியுணர்த்தி, பலவேதங்களின் தலையான உபநிஷத்துக்களாலே முடிவாய்த்தேறின, தன்னுடைய பாரதந்த்ரியத்தை அறிவியா நின்றுகொண்டு, கோதையென்னும் திருநாமத்தையுடைய யாதொரு ஆண்டாள் கட்டாயஞ்செய்து அநுபவஞ் செய்கிறாளோ அப்படிப்பட்ட பெருமையையுடைய கோதை நாய்ச்சியாரின் பொருட்டு என்னுடைய இந்தப் பிரணாமமானது காலதத்துவமுள்ள தனையும் ஆகுக.

---

(1) நீளா = நப்பின்னைப்பிராட்டி ; இவர்யார் எனில், யசோதைப்பிராட்டியின் தம்பியாகிய மிதிலாநகரவாஸியான ஸ்ரீகும்பர் என்பவர்க்கு அவர் தேவியாரான தர்மதேவதையென்றவரிடத்தில் பிறந்த பெண். ஸ்வயம்வரத்தில் ஏற்பட்டிருந்த ஏழு எருதுகளைப் பொருது தொலைத்து, இவரைக் கண்ணன் திருக்கல்யாணஞ் செய்துகொண்டனன்.

(2) அத்யாபயந்தீ = '𑌯𑍋 𑌵𑍈 𑌵𑍇𑌦𑌾𑌂𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌹𑌿𑌣𑍋𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑍈' என்கிறபடி விரிஞ்சன் முதலானோர்க்கும் வேதங்களை வெளியிட்டருளு மவனாயிருக்கச்செய்தே, ஆண்டாள் அவனுக்கறிவித்தலாவதென்னவெனின்—'𑌪𑌤𑌿𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌂' என்ற ஸ்வஸ்வாமிபாவத்தையும், '𑌯𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌶𑌰𑍀𑌰𑌂' என்றபடி சேஷசேஷீபாவத்தையும் அநுஷ்டிப்பாரில்லாமையாலே அவனும் மறந்து கைவிட்டிருந்ததைக்கண்டு 'மலர்மார்பா வாய்திறவாய்' 'உறங்காதெழுந்திராய்' 'விமலா துயிலெழாய்' என எழுப்பி 'உன்றன்னோடுற்றோமேயாவோமுனக்கே நாமாட்செய்வோம்' என்று யறிவுறுத்தினள்.

உய்யக்கொண்டார் அருளிச்செய்த தனியன்கள்.

இருவிகற்ப நேரிசைவெண்பா.

அன்னவயற்புதுவை[1]யாண்டாளரங்கற்கு[2]ப்
பன்னுதிருப்பாவைபல்பதிய[3]—மின்னிசையாற்[4]
பாடிக்கொடுத்தாணற்பாமாலைபூமாலை
சூடிக்கொடுத்தாளை[5]ச்சொல்.

அன்னவயற்புதுவை - அன்னப்புட்கள்வாழுங் கழனிகள்சூழ்ந்த ஸ்ரீவில்லிபுத்தூரி லவதரித்தருளின
ஆண்டாள் - கோதைநாய்ச்சியார்
அரங்கற்கு - அழகியமணவாளனுக்கு
பன்னு - ஆராய்ந்தருளிச்செய்த
திருப்பாவை - திருப்பாவையாகிற
பல்பதியம் - முப்பஃதுபாசுரங்களை
இன்இசையால் - காதுக்கினிமையான வோசையுடன்
பாடிக்கொடுத்தாளை - ஓதிச் சமர்ப்பித்தவளை
நற்பாமாலை - நல்லபாசுரங்களின்மாலையை
பூமாலை - செண்பகமுதலிய மலர்களாற்றொடுத்த புட்பமாலையை
சூடிக்கொடுத்தாளை - தானே சூட்டிகொண்டு ஒத்துப்பார்த்து, பிறகு ஸமர்ப்பித்தவளை
சொல் - (மனமே நீ) ஏத்து (அனவரதமனுஸந்தானம் பண்ணு.)

(பொழிப்புரை.) அன்னப்புட்கள் வாழுங்கழனிகள் சூழ்ந்த ஸ்ரீவில்லிபுத்தூரிலவதரித்தருளி, திருவரங்கச் செல்வனார்க்குத் திருப்பாவையாகிற நல்ல முப்பதுபாக்களின் மாலையைச் செய்து காதுக்கினிமையான வோசையுடன், ஓதிச் சமர்ப்பித்து, திருத்தமப்பனாராகிய பெரியாழ்வார் தொடுத்த பூமாலையைத்தான் குழலிற் சூட்டிக்கொண்டு ஒப்பனைபார்த்து, பிறகு அரங்கற்குச் சமர்ப்பித்தருளின ஆண்டாளை, மனமே! நீ அநவரத மநுஸந்தாநம் பண்ணு.

---

(1) புதுவை - வடபத்திரசாயி மறைபட்டு சயநித்துக்கொண்டிருந்த மஹாரண்ணியத்தை, அங்கு பிரபுவாய் வாழ்ந்த வில்லியென்பவன் வெட்டிப் புதிதாய் ஊருங்கட்டி, அப்பெருமாளுடைய திருப்பிரதிஷ்டையும் பண்ணுவித்தான்; ஆனதுபற்றி புதுவை, புத்தூர், வில்லிபுத்தூர் என வழங்குகிறது.

(2) அரங்கர்க்குப்பன்னு—ஆண்டாள் ஸ்ரீகண்ணனைப் பள்ளியுணர்த்தித்திருப்பாவை பாடியிருக்க, பெரியபெருமாளுக்குப்பாடிக் கொடுக்கையாவது என்னவெனில், ஆஸ்ரிதவியாமோஹம் வெளிப்படக்கண்டது பெரியபெருமாளிடத்திலாதலாலே, பாடினது மவனையே.

"அண்ணாந்திருக்கவேயாங்கவளைக்கைப்பிடித்த
பெண்ணாளன்பேணுமூர்ப்பேருமரங்கமே." 11-திருமொழி-9.

(3) பல்பதிகம் - என்று பாடாந்திரம். பதிகம்—பத்து.
பத்யம் - என்பது தமிழிற் பதியம் என்றாயிற்று.

(4) இன் இசையால்—செவிக்கினிய செஞ்சொல்லால், "[illegible]" என்று சொல்லுகிறபடி ஓசையின் இனிமையைக் கூறுகிறது.

(5) சூடிக்கொடுத்தாள் — தன்னுடைய வாசஞ்செய்பூங்குழலிலே சூட்டி, பூமாலைக்கும் வாசனையுண்டாக்கிக் கொடுத்தவள்.

இதுவுமது.

சூடிக்கொடுத்தசுடர்க்கொடியே[1]தொல்பாவை[2]
பாடியருளவல்லபல்வளையாய்—நாடிநீர்
வேங்கடவற்கென்னைவிதியென்றவிம்மாற்ற
நாங்கடவாவண்ணமேநல்கு.

சூடிக்கொடுத்த - திருத்தமப்பனார்கட்டியமாலையைச்சூட்டிப்பார்த்துக்கொண்டு அப்பால்அரங்கற்கு ஸமர்ப்பித்தருளின
சுடர்க்கொடியே - பொன்மயமான லதைபோன்றவளே !
தொல்பாவை-முற்காலத்தில் (பிரசித்தமான) திருப்பாவையை
பாடியருளவல்ல - சங்கத்தமிழ்மாலையாகப்பாடியருளத்தக்க தேர்ச்சியுடைய
பல்வளையாய் - திருக்கைகளில் பலவகைப்பட்ட கங்கணமணிந்தவளே !
நாடிநீர் - ஆலோசித்துத்தேவரீர்
வேங்கடவற்கு - திருவேங்கடவெற்புடையானுக்கு மணவாட்டியாகும்படி
என்னை - அடியேனை
விதி - விதிக்கவேணும்
என்ற இம்மாற்றம்- என்ற இந்த பகவத்பிரேமமுள்ள உமதுசொல்லை
நாம்கடவாவண்ணமே - அடியேம் திறம்பாவாற்றை
நல்கு - கொடு (நீர்அருளவேண்டும்)

(பொழிப்புரை.) திருத்தமப்பனாராகிய பெரியாழ்வார் கட்டியபூமாலையைமுதலிற் றலையிற்சூட்டி அழகுபார்த்துக்கொண்டு, அனந்தரம் திருவரங்கநாயகனுற்குச் சமர்ப்பித்தருளும் பொற்கொடியே! ஆய்ச்சியர்முன்பு கண்ணபிரானை இறைஞ்சியவாற்றை திருப்பாவையென்ற சங்கத்தமிழ் மாலையாகப் பாடி யருளத்தக்க தேர்ச் [illegible] பெற்ற தேசியளே! திருக்கைகளில் பலவகைப் பட்ட கங்கணமணிந்த [illegible] ளே! நீர் அரங்கதேவனை நோக்கி "வேங்கடவற் கென்னைவிதிக்கிற்றியே [illegible] ன்று பிரார்த்தித்த உம்முடைய பகவத்பிரேம முள்ள இம்மொழியை [illegible] யாமும் திறம்பாதபடி யநுஸந்தித்து பகவத்பிரேமத்துக்குப் பாத்தி [illegible] ம்படி நீர் அருளல்வேண்டும்.

---

(1) சுடர்க்[illegible] ஹேமமயலதையைப் போன்றவளே.

(2) தொ[illegible] ற்காலத்தில் பிரஸித்தமான மார்கழிநீராட்டமென்ற காதை. அதாவது ஒருட[illegible] ப்பாடியிலுள்ள ஆயர் சிறுமியரனைவருங்கூடி, மார்கழிமாதம் முப்பதுநாளும் [illegible] யெழுந்து, கண்ணனைப்பாடிக்கொண்டு காளிந்தீ நதிக்குச்சென்று அந்நதியில்நீ[illegible] னயேதத்தமக்கு நாயகனுக்கிக் கொடுக்கவேணுமென்று அக்காலவழக்கின்படி[illegible] தேவியைப்பூசித்து வேண்டிக்கொண்டு அவளை யிடையறாது பத்தியுடன் ([illegible] அந்நோன்பின் முடிவில் கண்ணன் அந்நீர்த்துறைக்கெழுந்தருளி, அவர் [illegible] அவர்கள் கருத்தையுணர்ந்து, அதற்கிசைந்து "நீங்களென்னையடையவேற[illegible] நித்தமாய் புஜித்தாலும் (அந்த பஜனைக்குமூலம் எதுவானாலும் சரி) என்னை [illegible] ப்பது என்ற அந்த ஓர் வழியாலேயே உங்கள் பிறவியென்னும் வித்துத் திற[illegible] வறுபட்டொழிந்துபோம்" என்று அருளிச்செய்தனன். இது க்காதாரம் [illegible] வது ஸ்கந்தம், 22-ம் அத்தியாயத்திற் கூறப்பட்டுள்ளது.

திருப்பாவை.

இயற்றரவிணைக் கொச்சகக்கலிப்பா.

(க) மார்கழித்திங்கண்மதிநிறைந்தநன்னாளா
னீராடப்போதுவீர்போதுமினோநேரிழையீர்
சீர்மல்குமாய்ப்பாடிச்செல்வச்சிறுமீர்காள்
கூர்வேற்கொடுந்தொழிலனந்தகோபன்குமர
னேரார்ந்தகண்ணியசோதையிளஞ்சிங்கம்
கார்மேனிச்செங்கட்கதிர்மதியம்போன்முகத்தா
னாராயணனேநமக்கேபறைதருவான்
பாரோர்புகழப்படிந்தேலோரெம்பாவாய்.

(பதவுரை.)

மார்கழித்திங்கள் - மாசங்களிற்சிறந்த மார்கழி மாதமாயும்
மதிநிறைந்த - பூர்ணமான சந்திரனையுடைய
நல்நாளால் - இந்தமங்களதினத்தில்
நீர்ஆட - ஸ்நாநஞ்செய்ய (கிருஷ்ணஸம்ச்லேஷ[illegible]பெற)
போதுவீர் - போ[illegible]க்கவா
போதுமின் - வாருங்கள்
நேரிழையீர் - ஏற்றபூண்கள் அணிந்த
சீர்மல்கும் - சம்பத்து நிறைந்த
ஆய்பாடி - நந்தகோகுலத்திலுள்ள
செல்வச்சிறுமீர்காள் செல்வமுள்ள இளம்பெண்களே (பகவத்கைங்கர்ய நிரதரான ஆத்மாக்களே)
கூர்வேற் - கூராகியவேலாயுதத்தையுடைய
கொடும்தொழிலன் - கண்ணன் பகைவரைத் தொலைக்கும் கொடியதொழிலுள்ள
நந்தகோபன் - ஸ்ரீநந்தகோபருடைய
குமரன் - மகனாய்
ஏர் ஆர்ந்தகண்ணி - அழகுநிறைந்த கண்களுள்ள
யசோதை - யசோதைப்பிராட்டியினுடைய
இளம் சிங்கம - இளமையான சிங்கம்போன்றவனாய்
கார்மேனி - கார்முகில்போன்ற திருமேனியையும்
செங்கன் - செம்மையாகிய கண்களையும்
கதிர்மதியம்போல் - சூரியனைப்போல் பிரகாசமுமாய், சந்திரனைப்போன்று சந்தோஷ கரமுமாய் (உள்ள)
முகத்தான் - திருமுகமண்டலத்தை யுடையனான ஸர்வஸ்மாத்பரனான
நாராயணனே - இந்தக்கண்ணனே
நமக்கே - (அவனிடத்துஅன்புள்ள) நமக்கே
பறை - தமுக்கு என்ற வாத்தியத்தை (நம்முடைய அபேக்ஷிதங்களை)
தருவான் - தந்தருளுவான்
பாரோர் - உலகத்துள்ளார்
புகழ - மெச்ச
படிந்து - நோன்பில் ஊற்றத்தை யடைந்து
ஏல் ஓர் - தகுதியான ஒப்பற்ற
எம்பாவாய் - எமதுநோன்பு முடிந்தது.

(பொழிப்புரை)

செல்வப்பெருக்கையுடைய திருவாய்ப்பாடியில் கைங்கரிய ஸ்ரீயால் நிறைந்த, இளம் பெண்களே! நேர்த்தியான ஆபரணங்களை யணிந்த தோழிகாள்! மாசங்களில் சிறப்புற்ற மார்கழி மாஸமாயும் சுக்லபக்ஷமாயும் நல்ல முகூர்த்தமாயுமுள்ள இம்மங்கள தினத்தில்

யமுனாநதியில் நீராடப்போக ஆவலுள்ளீர்காள் வாருங்கள். கண்ணபிரானுக்குப் பகைமை கொண்டுவரும் ஜந்துக்களைத் தொலைக்கும்படியான வேலாயுதத்தைக் கையில்தரித்திருக்கும் ஸ்ரீநந்தகோபருடைய குமாரனும், அழகுநிறைந்த கண்களையுடைய யசோதைப்பிராட்டிக்கு, இளஞ்சிங்கம்போன்ற குழந்தையாயும் கார்முகில்போன்ற திருமேனியையும், செந்தாமரை மலர்போன்ற கண்ணிணையும், சூரியனைப்போன்று பிரகாசத்தையும், சந்திரனைப் போன்று சந்தோஷகரமாயு முள்ள திருமுக மண்டலத்தையு முடையனுன ஸர்வ ஸமர்த்தனு நாராயணனே அவனே உபாயமாகப்பற்றிய நமக்கு நம்ம அபேக்ஷித புருஷார்த்தங்களைத் தந்தருளுவான். ஆகையினுலே, உலகத்துள்ளவர்கள் கொண்டாடும்படி இந்நோன்பில் ஊற்றத்தையடைந்து கிருஷ்ணஸம்ஸ்லேஷத்தைப் பெறவேண்டுவீர், நல்முயற்சிசெய்தால் நம்முடைய ஒப்பற்ற நோன்பு இனிது முடிகிறது. இப்படி பகவத் பராயணளான ஒரு ஆய்ச்சி மற்றவர்களைநோக்கி அழைத்தனள்.

இதின்ஸ்வாபதேசார்த்தம் (உட்கருத்து)—ஒப்பற்ற ஞானபக்திவைராக்கியங்களை யடைந்த சேதநர்களே! பகவத் கைங்கரியம் பண்ணுவதில் ருசியுள்ள ஞானஜன்மாக்கள் ஆதரித்திருக்கும் ஊரிலேயுள்ள, பகவத்ஸம்பந்தத்தால்வந்த அநுபவ பரிகரமான அபிநிவேசாதி சயத்தையுடைய அநந்யார்ஹ சேஷரான ஆத்துமாக்களே! ஸதாசார்ய பிரஸாதத்தால் ஸ்வரூப யாதாத்மியம் பிறந்து சேதநர்ஸத்வோத்ரிகதராய் பகவதநுபவஞ் செய்வதற்கு யோக்கியமான இந்த சுபவேளையிலே பகவத்பரரான நீங்கள், எம்பெருமானுடைய அநுபவைகாந்தமான கைங்கரியம்பண்ணவாருங்கள். ஸர்வாநிஷ்ட நிவர்த்தகமான மங்களாசாஸனஞ் செய்தருளும் ஆசாரியர்களுக்கு நியாமகனுய், பரிபூர்ண ஞானத்துக்குப் பிரகாசகனுய், ஸௌலப்ய ஸௌசீல்யங்கள் தோற்றும் படியாய் ஆச்ரிதரின் ஸகலதாப நிவர்த்தகமாயுள்ள திருமேனியை யுடையவனுய், வாத்ஸல்ய ஸ்வாமித்துவங்கள் தோற்றும்படியான [illegible] ண ஸௌகர்யாபாதகமான திருக்கண்களை யுடையவனுய், பிரதிகூலர் [illegible] ணுகவொட்டாதபடி தீக்ஷ்ணமாயும், அநுகூலர் அணுகும்படி ஆஹ்லாதகரமாயுமுள்ள திருமுக மண்டலத்தை யுடையவனுய் ஞானசக்தியாதி குணங்களை யுடையவனுமான ஸ்ரீமந்நாராயணனே நம்முடைய அபேக்ஷித புருஷார்த்தத்தைத் தந்தருள்வான். இவ்விதமாய் நாம் பகவதநுபவத்தில் அவகாகித்தால் நம்முடைய ஒப்பற்ற பகவத் கைங்கரிய ரூபமான நோன்பு உலகத்துள்ளாரனைவரும் கொண்டாடும்படி சுபமாய்த் தலைக்கட்டுகிறது.

க. [illegible]

உ. [illegible]

(உ) வையத்துவாழ்வீர்காணுநம்பாவைக்குச்
செய்யுங்கிரிசைகள்கேளீரோபாற்கடலுட்
பையத்துயின்றபரமனடிபாடி
நெய்யுண்ணோம்பாலுண்ணோநாட்காலேநீராடி
மையிட்டெழுதோமலரிட்டுநாமுடியோந்
செய்யாதனசெய்யோந்தீக்குறளைச்சென்றோதோ
மையமும்பிச்சையுமாந்தனையுங்கைகாட்டி
யுய்யுமாறெண்ணியுகந்தேலோரெம்பாவாய்.

வையத்து - இப்புவியில்
வாழ்வீர்காள் - சுகித்துவாழ்கின்ற ஆய்ச்சியரே
நாமும் - நாமெல்லாரும்
நம்பாவைக்கு - நம்மநோன்புக்கு
செய்யும் - பண்ணவேண்டிய
கிரிசைகள் - முறைமைகளை
கேளீரோ - கேட்டிலீரோ
பாற்கடலுள் - திருப்பாற்கடலில்
பைய - மெள்ள
துயின்ற - யோகநித்திரை செய்யும்
பரமன் - உதக்ருஷ்டனை நம்மஸ்வாமியின்
அடிபாடி - திருவடிகளை ஏத்தி
நெய் உண்ணோம் - நெய்யைத் தின்னமாட்டோம்
பால் உண்ணோம் - பாலைக் குடிக்கமாட்டோம்
நாட்காலே - விடியற்காலத்திலேயே
நீராடி - முழுகிக்குளித்து
மையிட்டெழுதோம் - கண்களுக்கு அஞ்சனமிடுவதில்லை
மலரிட்டு - தலைகளில் நல்லபூக்களைச்சூடி
நாம் முடியோம் - நாம் முடித்துக் கொள்வதில்லை
செய்யாதன - பெரியோர் ஒழுக்கமல்லாதவற்றை
செய்யோம் - யாம்செய்வதில்லை
தீக்குறளை - கொடிதான கோளை (பொய்சொற்களை)
சென்று ஓதோம் - ஒருவரிடத்துச் சென்று காதில் உரையோம்
ஐயமும் - உபகாரமும்
பிச்சையும் - இரப்பவர்க்கு உணவும்
ஆந்தனையும் - இயன்றமட்டில்
கைகாட்டி - கொடுத்து
உய்யும் ஆறு - ஈடேறும் வழியை
எண்ணி - சிந்தித்து
உகந்து - களித்து
ஏல் ஓர் - தகுந்த ஒப்பற்ற
எம்பாவாய் - எமதுநோன்பு முடிகிறது.

இப்புவியில் பிறந்து வாழத்தக்க ஆய்ச்சிமாரே! நாமெல்லோரும் நம்ம நோன்புக்கு பண்ணவேண்டிய கிரமங்கள் என்னவென்று கேட்டிலீரோ! சாவதானமாய்க் கேளுங்கள்: திருப்பாற் கடலுள் ஆதிசேஷன் பணமகுடத்தில் யோக நித்திரைசெய்யும் பரம உத்கிருஷ்டனை நமது ஸ்வாமியின் திருவடியைத் துதிக்கவேண்டும்; நெய் பால்முதலிய போக்யபதார்த்தங்களை தியஜிக்கவேண்டும். விடியற்காலத்தில் நீராடவேண்டும். கண்களுக்கு மைதீட்டக்கூடாது; தலைகளில் நல்ல பூக்களைச் சூடுவதில்லை. பெரியோர்களுடைய ஒழுக்கமல்லாதவற்றை நாம் செய்யத்தக்கதன்று. ஒருவரிடத்துச்சென்று ஒருவர்பேரில் கோட்சொல்வதுங் கூடாது; நம்மால் கூடியமட்டும் கேட்போர்க்குச் சகாயமும் இரப்போர்க்கு உணவும் கொடுத்துதவவேண்டும். இந்தப்படி நாம் எப்போதும் ஈடேறும்வழியைச் சிந்தித்துக் களித்தால் நமது ஒப்பற்ற நோன்பு இனிது தலைக்கட்டுகிறது.

(ஸ்வாபதேசம்)—பகவத்குணங்கள் ஸ்வஸ்வ விஷயங்களிலே மண்டிச் சேர்ந்து விளங்காநின்ற இந்த லீலாவிபூதியில் குறையநுபவம் பண்ணுகிற்கும் பாக்கியமுள்ள சேதநரே! பகவத்கைங்கரிய ரூபமான நம்ம நோன்புக்கு அவசியமாய் அநுஷ்டிக்கத்தக்க கர்மங்களையும் விடத்தக்க கர்மங்களையும், சாவதானமாகக் கேளுங்கள். திருப்பாற் கடலில் திருவநந்தாழ்வானாகிற படுக்கையில் ஜகத்ரக்ஷண சிந்தாயுக்தனாய் திருக்கண் வளர்ந்தருளும் எம்பெருமானுடைய திருவடிக்கமலங்களே தஞ்சமென்று பாடக்கடவோம். இதையொழிந்த போக்யாந்தர விஷயங்களில் அபிஸந்தியை விலக்கல்வேண்டும். அன்றியும் அவரவர் தத்தம் வர்ணாச்ரமோசித ஸ்நாநாதி நித்யகர்மங்களை அநுஷ்டிக்கக்கடவோம். நாமாய் பகவத்ப்ராப்திக்கு ஸாதநங்களான ஞானயோக பக்தியோகங்க ளிரண்டிலும் அந்வயிக்கலாகாது. எம்பெருமான் வாத்ஸல்யாதி குணவிசிஷ்டனேயாகிலும் தத்ஸம்பந்திகளை முன்னிட்டல்லது அவனை நாம் பற்றவொண்ணாது; பகவத் வைபவத்தையும் பாகவதவைபவத்தையும் நாமறிந்தளவும் அதிகாரிகளான மற்றவர்களுக்கு உபதேசிக்கவேண்டும். இந்தப் பிரகாரம் நாம் ஈடேறத்தக்க உபாயத்தை நன்றாய் ஊகித்துப் பகவத்விஷயத்தில் ருசிபெற்று அவனையே சரணமென்று பற்றினால், நம்முடைய ஒப்பற்ற கைங்கரிய ரூபமான நோன்பு சுபமாய்த் தலைக்கட்டும்.

---

௩. [illegible]

௪. [illegible]

(௩) ஓங்கியுலகளந்தவுத்தமன்பேர்பாடி
நாங்கணம்பாவைக்குச்சாற்றிநீராடினாற்
றீங்கின்றிநாடெல்லாந்திங்கண்மும்மாரிபெய்
தோங்குபெருஞ்செந்நெலூடுகயலுகளப்
பூங்குவளைப்போதிற்பொறிவண்டுகண்படுப்பத்
தேங்காதேபுக்கிருந்துசீர்த்தமுலைபற்றி
வாங்கக்குடநிறைக்கும்வள்ளற்பெரும்பசுக்க
ணீங்காதசெல்வநிறைந்தேலோரெம்பாவாய்.

ஓங்கி - உயர்ந்து வளர்ந்து
உலகு - மூன்றுலோகங்களையும்
அளந்த - (நெடுமாலாக) திருவடிகளாலே அளந்தருளின
உத்தமன் - ஸர்வச்லாக்கியனான எம்பெருமான்
பேர் - திருநாமங்களை
பாடி - கீர்த்தனஞ்செய்து
நாங்கள் - அடியோம்
நம்பாவைக்கு - நமது (நோன்புக்காக)
சாத்தி - ஒருப்பட்டு
நீர்ஆடினால் - ஸ்நாநம் செய்தால்
தீங்கு இன்றி - யாதொரு குறைவுமின்றி
நாடுஎல்லாம் - ஊர்களெங்கும்
திங்கள் - மாதமாதம்
மும்மாரி - மூன்றுமழை
பெய்து - பொழிந்து (அஃதால்)
ஓங்கு - உயர்ந்துவளரும்
பெரும்செம்நெல் - பருமனான நல்லசெம்பா நெல் பயிரின்
ஊடு - நடுவே
கயல் - மீன்கள்
உகள - குதித்துவிளையாட
பூங்குவளைப்போதில் - மலர்ந்திருக்கிற செங்குவளைப்புஷ்பங்களில்
பொறிவண்டு - புள்ளிகளையுடைய சுரும்புகள்
கண்படுப்ப - தூங்கவும்
தேங்காதே - ஜனங்கள்கூடி பயம்உண்டுபண்ணாதே
புக்கு - இருந்து=தனியேகொட்டிலில்நுழைந்து, அமைதியோடு உட்கார்ந்துகொண்டு
சீர்த்தமுலை - (பால்நிறைவால்) கனமான மடிகளை
பற்றிவாங்க - பிழிந்துகறக்க
குடம்நிறைக்கும் - பாற்பானைகளை நிறையச் செய்யும்
வள்ளல் - பெரும்=உதாரமானபருத்த
பசுக்கள் - ஆநிரைகளும்
நீங்காத - என்றும் விலகாத
செல்வம் - சீர்மை (சம்பத்தும்)
நிறைந்து - ஸம்பூர்ணமாக
ஏலோர் - தகுந்த ஒப்பற்ற
எம்பாவாய் - எமதுநோன்பு (இனிது முடிகிறது).

உயர்ந்து வளர்ந்து திருவிக்கிர மாவதாரஞ்செய்து மூவுலகுமளந்தருளின ஸர்வச்லாக்கியனான எம்பெருமான் திருநாமங்களைக் கீர்த்தனஞ்செய்து நாம் நமது நோன்புக்காக எல்லோரும் ஒருப்பட்டு ஸ்நாநஞ்செய்தால் தேசங்களனைத்தும் யாதொரு குறைவுமின்றி, மாத மாதம் மூன்றுமழை பொழிந்து, உயர்ந்துவளரும் பருமனான நல்லசெம்பா நெற்பயிரின் நடுவே மீன்கள் குதித்துவிளையாடவும், அழகிய செங்குவளைப் பூக்களில் புள்ளிகளையுடைய சுரும்புகள் தூங்கவும், ஜனக்கூட்டமின்றி தனியே கொட்டிலில் நுழைந்து அமைதியுடன் உட்கார்ந்துகொண்டு கனமானமடிகளைப் பிழிந்து கறந்தால், உதாரமான பருத்த ஆநிரைகள் பாற்பானைகளை நிறையச்செய்யும். இந்தப்படி யென்றென்றைக்கும் அழியாச் சீர்மையும், சம்பத்தும் ஸம்பூர்ணமாகச் சேர்ந்து உலகெல்லாமகிழ, எமது நோன்பு இனிது முடிகிறது.

(ஸ்வாபதேசம்) — பகவதபிமுகரான சேதனரே! அகங்காரத்திற் காட்பட்ட ஸம்ஸாரி சேதனருக்கு, ஒருக்கால், பகவத் கடாக்ஷமடியாய் "நம்மை ரக்ஷிக்கக்கடவர் யாவர்" என்று ஞானம் பிறப்பதுண்டு. அதைக்கண்டு அந்தர்யாமியான ஸர்வேசுவரன் திருவுள்ளமுவந்து, அப்படிப்பட்ட சேதநரை கரையேற்றுவதற்கு அவரையும், அவருடைய பரிஜந வர்க்கங்களையும் தனது திருவடிகளால் ஒத்தி அவரையெல்லாம் தனக்கு சேஷபூதராக்கிக் கொள்ளுகிறான். அப்படிப்பட்ட பரமோபகாரகனை ஸ்ரீமந்நாராயணனுடைய திவ்யநாமஸங்கீர்த்தனம்பண்ணி, அநந்யப்பிர யோஜநரான அடியோம், லோகவியவஹாராநுஸாரமாய் ஒரு நோன்பை வியாஜமாயிட்டுக் கொண்டு பகவத் குணாநுபவத்தைப் பண்ணினால், தன்னடையே பூமியெங்கும் தேகாத்மாபிமானாதி தோஷங்கள் நீங்கி, ஸத்வம் தலையெடுத்து, அநந்யார்ஹ சேஷத்வ, அநந்யசரணத்வ, அநந்ய போக்யதவங்க ளாகிற ஆகாரத் திரயஞானமுண்டாம். இதுவுமன்றி அப்படிப்பட்ட ஞானஸம்பன்னரான சேதநர்களுடைய நடுவில், தத்ஸம்பந்திகளான ஆத்துமவர்க்கங்கள், தமக்கு யாத்ருச்சிகமாய்க் கிடைத்த உத்கிருஷ்ட பதவியைக் குறித்து சந்தோஷிக்கிறார்கள். இப்படிப்பட்ட ஸௌம்யரூபரான ஞானதிகளின் ஹ்ருதயகமலங்களில், நித்தியபரஞ்சோதி ரூபனான ஸர்வேசுவரன் லக்ஷ்மீஸமேதனாய் எழுந்தருளியிருக்கிறான். இந்த ஞானிகள் தம்மை அடுத்துத் தமது திருவடிகளில் ஆச்ரயிக்கும் சிஷ்யருக்கு விதேயராய் அவர் வேண்டிக்கொள்ளு மவைகளை உபதேசித்து அவரை பரிபூர்ண ஞானிகளாகச்செய்து, அவிச்சின்ன பகவத் குணாநுபவ சக்தியையும் அவருக்கு உண்டாகும்படி விசேஷகடாக்ஷம் பண்ணுகிறார்கள்; இப்படி ஜகத்தெங்கும் ஸத்வஸம்பத்துவியாபிக்க, நாம்செய்யும் பகவத் கைங்கரிய ரூபமான நோன்பு இனிதாய்த் தலைக்கட்டுகிறது.

---

௫. [illegible]

௬. [illegible]

(ச) ஆழிமழைக்கண்ணா வொன்றுநீகைகரவேல்
லாழியுட்புக்குமுகந்துகொடார்த்தேறி
யூழிமுதல்வனுருவம்போன்மெய்கறுத்துப்
பாழியந்தோளுடைப்பற்பநாபன்கையி
லாழிபோன்மின்னிவலம்புரிபோனின்றதிர்ந்து
தாழாதேசார்ங்கமுதைத்தசரமழைபோல்
வாழவுலகினிற்பெய்திடாய்நாங்களு
மார்கழிநீராடமகிழ்ந்தேலோரெம்பாவாய்.

ஆழிமழைக்கு - ஏராளமாகியமழைக்கு (மண்டலவர்ஷத்துக்கு)
அண்ணா - இறையவனே (இந்திரனே)
ஒன்றும் - கொஞ்சமும்
நீ கை கரவேல்-உன்உதவியை ஒளிக்காதே
ஆழியுள் - கடலினடுவுள்
புக்கு - புகுந்து
முகந்துகொடு - (நீரெல்லாம்) மொண்டு கொண்டு
ஆர்த்து - முழங்கி
ஏறி - மேகமண்டலத்துஏறி
ஊழிமுதல்வன் - உகமுடிவிலுள்ள ஆதிக்கடவுள் (திருமால்)
உருவம்போல் - கார்மேனிபோல்
மெய்கறுத்து - உனதுஉடம்பும்சியாமளவண்ணமடைந்து
பாழிஅம் தோளுடை - கம்பீரமான அழகிய தோள்களையுடைய
பற்பநாபன்கையில் - உந்திபூத்தோனை(திருமால்) கையில்

ஆழிபோல் - திருவாழியாழ்வானைப்போல்
மின்னி - ஒளிசெய்து
வலம்புரிபோல் - தக்ஷிணாவர்த்த சங்கம்போல் (பாஞ்சஜனியம்)
நின்றுஅதிர்ந்து - (ஆகாயத்தில்) நிலைபெற்று மா முழக்கத்தைச்செய்து
தாழாதே - தாமதியாதே
சார்ங்கம்உதைத்த - சார்ங்கமென்னும் வில் வில்பூட்டிஎய்த
சரமழைபோல் - பாணவர்ஷத்தைப்போல்
வாழவுலகினில்-உலகினில் எல்லாந்தழைக்க
பெய்திடாய் - பொழிந்துவிடு
நாங்களும் - அடியோமும்
மார்கழிநீராட - மார்கழிமாதத்தில் செய்யத்தக்க ஸ்நாநத்தைச் செய்வதற்கு
மகிழ்ந்து - உகந்து
ஏல் ஓா - தகுந்த ஒப்பற்ற
எம்பாவாய் - எமது நோன்பு இனிது முடிகிறது.

அகண்டமாய்ப் பொழியும் ஏராளமான மழைக்கு அதிபதியான பர்ஜந்யனே! (இந்திரனே?) உன் உதவியைக்கொஞ்சமும் ஒளிக்காதே; கடலுட்புகுந்து நீரைமொண்டுகொண்டு மேகமண்டலத்து ஏறச்சென்று முழங்கி காயாம்பூவண்ணனுடைய கார்மேனிபோன்று சியாமளநிறத்தையடைந்து, கம்பீரமான அழகிய தோள்களையுடைய உந்திபூத்தோனை ஸ்ரீயப்பதியினுடைய கையில் உள்ள திருவாழியாழ்வானைப்போல ஒளிவீசி மின்னி, அவன் கையிற்றரித்த தக்ஷிணாவர்த்த சங்கமான பாஞ்சஜனியம்போல முழக்கஞ்செய்து, சார்ங்கமென்னும் வில்லில் தொடுத்து எய்யும் பாணவர்ஷத்தைப்போன்று உலகமெல்லாந் தழைக்கவும் நன்றாய்ப்பொழி; நாங்களும் இம்மார்கழி மாதத்தில் செய்யத்தக்க நீராட்டத்தை சந்தோஷத்துடன் செய்ய நாங்கள் உத்தேசித்த அத்விதீயமான நோன்பு இனிதாய்த் தலைகட்டுகிறது.

(ஸ்வாபதேசம்)—பகவத்குணா மிருதத்தை வர்ஷிக்கும் அபரிச்சேத்ய மான ஞானவைபவத்தையுடைய ஆசாரியனே! ஸ்வஸம்பந்தத்தால் அனை வரையும் ஸர்வேச்வரனுடைய காருண்யத்துக்கு விஷயமாக்கவல்ல நீ பகவத் விஷ யோபதேசத்தைச் செய்வதில் சற்றும் பின்வாங்கவேண்டாம்; ஸ்ரீமந் நாராயணனுடைய திவ்யகல்யாண குணாமிருதாப்தியில் ஆழ்ந்து முழுகி அங் குள்ள குணவிசேஷங்களை புத்திஸ்தமாய்ப் பண்ணிக்கொண்டு ஸ்ஸம்ப்ரம மாய் ஆசாரியபீடத்தில் ஏறவேண்டும்; அநந்தரம், ஈசுவரனுடைய திருமேனி யைப்போலே காருண்ய விருஷ்ட்டியைச் செய்யத்தக்க உனது திருமேனி யிலும் காந்திவிசேஷம் பிறந்து, தியான யோகத்தால் பகவானை ஸாக்ஷாத் கரித்து அனுபவிக்கிற உன்னுடைய திவ்யவர்ச்சஸ்ஸானது மஹாவிஷ்ணுவி னுடைய திருவாழி யாழ்வானைப்போலே விளங்கவும் அவன்கையில் தரித்த பாஞ்சஜன்னியம்போலே, நீ பிரணவார்த்தத்தை ஸமஸ்தரும் அறியும்படி திருவாய்மொழி முகத்தாலே கெட்டியாய் வெளியிட்டருளவேணும்; மற்றும், சேஷசேஷீபாவத்தை முன்னிட்டு ஸ்வரூபயாதாத்மிய ஞானம்பிறந்து உன் னால் உலகத்துள்ளாரனைவரும் கடைத்தேறும்படி நீ உபதேசிக்கக்கடவாய்; பகவத்கைங்கரியைகபோக பரரான நாங்களும் பகவத் பாகவதேஷ்டத்வேந நித்ய நைமித்திக கர்மங்களையதாவத் மனமுவந்து அநுஷ்டித்துக்கொண்டுவர, நம்ம உத்தேசியமான பகவத்குணாநுபவமாகிய இந்நோன்பு சுகமாய் தலைக் கட்டும்.

எ. [illegible]

அ. [illegible]

(ரு) மாயனைமன்னுவடமதுரைமைந்தனைத்
தூயபெருநீர்யமுனைத்துறைவனை
யாயர்குலத்தினிற்றோன்றுமணிவிளக்கைத்
தாயைக்குடல்விளக்கஞ்செய்ததாமோதரனைத்
தூயோமாய்வந்துநாந்தூமலர்தூய்த்தொழுது
வாயினாற்பாடிமனத்தினாற்சிந்திக்கப்
போயபிழையும்புகுதருவானின்றனவுந்
தீயினிற்றூசாகுஞ்செப்பேலோரெம்பாவாய்.

மாயனை - ஆச்சரியகுண சேஷ்டிதனை
மன்னு - பகவத்ஸம்பந்தம் நிலைபெற்ற
வடமதுரை மைந்தனை - உத்தரமதுராபுரியில் அவதரித்தவனை
தூய - பரிசுத்தமான
பெருநீர் - ஏராளமான நீர்பெருகும்
யமுனைத்துறைவனை - யமுனாதீர வாஸியானவனை
ஆயர்குலத்தினில் - நந்தகோகுலத்தில்
தோன்றும் . வளர்ந்த
மணிவிளக்கை - இரத்தினதீபத்தை
தாயை - தேவகி தேவியினுடைய
குடல் - கர்ப்பாசயத்துள்
விளக்கம்செய்த - துலங்கொளி பரப்பின
தாமோதரனை - கண்ணபிரானை
தூயோமாய்வந்து நாம் - நீராடிச் சுத்தமாய் வந்து நாம்
தூமலர்கள் - நல்ல பூக்களை
தூய்த்தொழுது - (பாதங்களில்) இட்டு வணங்கி
வாயினால் - வாக்கினால்
பாடி - அவன்புகழைப்பாடி
மனத்தினால் - அன்புகூர்ந்த நெஞ்சினால்
சிந்திக்க - தியானித்தால்
போயபிழையும் - முன்செய்ததீவினையும்
புகுதருவான் நின்றனவும் - இனி நேரிடத்தக்க பாவங்களும்
தீயினில் - நெருப்பில்பட்ட
தூசு - பஞ்சுபோல்
ஆகும் - ஆய்விடும் (உருமாய்ந்துபோம்)
செப்பு - திவ்யநாமங்களை அநுஸந்தானம் செய்
ஏலோர் - ஒப்பற்ற
எம்பாவாய் - (எமதுநோன்பு இனிது முடிகிறது).

ஆச்சரியகுண சேஷ்டிதனாய் மதுரையில் அவதரித்தருளி, ஏராளமாய் தெளிந்த நீர் ஓடும் யமுனையாற்றினருகே நந்தகோகுலத்துள் வளர்ந்த, இரத்தின தீபம்போன்று தேவகிதேவியின் கருக்குடலுள் துலங்கும் ஒளிபரப்பின கண்ணபிரானை நாம் நீராடிச் சுத்தமாய்வந்து நல்லமலர்களைப் பாதங்களிலிட்டு, வாக்குப் பயன்பட அவன் புகழைப் பாடி, அவனிடத்து அன்புகூர்ந்த நமது நெஞ்சினால் தியானித்தால், யாம் முன்செய்த தீவினையும், நமக்கு இனிவரும் பாவங்களும் நெருப்புப்பொறிவிழுந்த பஞ்சுப்பொதிபோல் ஒழிந்துபோம்; ஆதலால், தோழி! ஸ்ரீயப்பதியின் திவ்யநாமங்களை யிடையறாது அநுஸந்தானஞ்செய்தால், எமது ஒப்பற்ற நோன்பு இனிது முடிகிறது.

(ஸ்வாபதேசம்)—நித்ய சூரிகளுங்கூட ஆராய்ந்து அறிவதற்கு முடியாத பரத்வத்தை யுடையவனாய், பகவத் ஸம்பந்தம் இடையறாது நிலைபெற்றிருக்

கும் வடமதுரை முதலான திவ்ய தேசங்களில் நித்யவாஸஞ் செய்யுமவனாய், பரிசுத்தமாயும் அவிச்சின்னமாயும் விளங்கும் சுடர்ஞான வின்பப்பெருக்கை யுடையவனாய், பரமபக்தி பரிதரான பாகவதர்கள் திருவோலக்கத்தில் மணி தீபம்போற் பிரகாசிக்கு மவனாய், தாயாகிய தேவகீதேவி, கவுசல்யை முதலானோருடைய, பிறப்பிறப்புத் துன்பத்தை நிவர்த்திசெய்து ஸ்வஸம்பந்தத்தால் மீட்சியின்றி வைகுந்தமாநகர் ஏறச்செய்தவனாய், பக்தபராதீனனாய் அவர் வேண்டுகோளின்படி கட்டுண்டு நிற்குமவனான ஸ்ரீமந்நாராயணனை, அநந்ய பிரயோஜநரான அடியோம் பரிசுத்தாந்தக் கரணயுக்தராய உத்தமமான அன்பாகிய தேன்சொரியும் ஹ்ருதயகமலத்தை அவனது திருவடிகளில் ஸமர்ப்பித்து அவனுக்காட்செய்து, அவன் திவ்யகுண சேஷ்டிதங்களை வாயாரவாழ்த்தி, அவனது திவ்யமங்கள சொரூபத்தை யேகாக்கிர சித்தராய்த் தியானித்தால் நம்முடைய பூர்வோத்தரமான பாபங்கள் நெருப்புப்பொறிவீழ்ந்த பஞ்சுப்பொதிபோல் ஒழிந்துபோம்; ஆகையால் இப்படிப்பட்ட ஸ்ரீயப்பதியினுடைய குணஸங்கீர்த்தனம்பண்ணினால் நம்முடைய கைங்கரிய ரூபமான நோன்பு சுகமாய்த் தலைக்கட்டுகிறது.

---

௯. [illegible]

௰. [illegible]

(சு) புள்ளுஞ்சிலம்பினகாண்புள்ளரையன்கோயிலில்
வெள்ளைவிளிசங்கின்பேரரவங்கேட்டிலையோ
பிள்ளாயெழுந்திராய்பேய்முலைநஞ்சுண்டு
கள்ளச்சகடங்கலக்கழியக்காலோச்சி
வெள்ளத்தரவிற்றுயிலமர்ந்தவித்தினை
யுள்ளத்துக்கொண்டுமுனிவர்களுமியோகிகளும்
மெள்ளவெழுந்தரியென்றபேரரவ
முள்ளம்புகுந்துகுளிர்ந்தேலோரெம்பாவாய்.

புள்ளும் - பற்பல பக்ஷிகள்
சிலம்பினகாண் - ஒலித்தனபார்
புள்ளரையன் - கருடனுடைய ஸ்வாமியான கண்ணனுடைய
கோயிலில் - அரமனையில்
வெள்ளை - வெண்மையான
விளி - அழைக்கிறதுபோல் தோற்றுகிற
சங்கின் - சங்கத்தின்
பேரரவம் - பெருமொலி
கேட்டிலையோ - நின்காதிற் படவில்லையோ
பிள்ளாய் - சிறுபெண்ணே
எழுந்திராய் - படுக்கையைவிட்டு எழும்பாய்
பேய்முலை - பேய்ச்சியாகிய பூதனையின் முலை
நஞ்சுண்டு - விஷத்தைப்பானஞ்செய்து
கள்ளச்சகடம் - வஞ்சனையாய்வந்த சகடாசுரனை
கலக்கு அழிய - சேர்க்கை நிலைகுலைய
கால் ஓச்சி - திருவடிகளா லெறிந்து

வெள்ளத்தரவில் - திருப்பாற் கடலுள் ஆதி சேஷனில்
துயில் அமர்ந்த - யோகநித்திரைகொண்ட
வித்தினை - ஞானசொரூபியை
உள்ளத்துக்கொண்டு - கருத்தில்வைத்து
முனிவர்களும் - தவசிகளும்
யோகிகளும் - நிஷ்டர்களும்
மெள்ள - பைய
எழுந்து - துயில்நீத்து
அரி - ஹரி: ஹரி:
என்ற பேரரவம் - என்று சொல்லிக்கொண்டெழும்பும் பேரொலி
உள்ளம்புகுந்து - எமது மனதினுழைந்து
குளிர்ந்து - ஆனந்தமாக
ஏலோர் - ஒப்பற்ற
எம்பாவாய் - (எமது நோன்பு இனிது முடிகிறது).

ஒன்றுமறியாச் சிறுபெண்ணே! பெருங்கூடுகளி லுட்கார்ந்துகொண்டு பற்பல பறவைக ளொலிக்கின்றனபார். பெரியதிருவடிக்கு ஸ்வாமியான கண்ணனுடைய ஸன்னிதியில் கோஷிக்கிற வெள்ளைச்சங்கநாத முன்காதிற் படவில்லையோ, எழும்பாய். பேய்ச்சியான பூதனையின் முலைவிடத்தைப்பருகி, வஞ்சனைகொடுவந்த சகடாசுரனை நிலைகுலையத் திருவடிகளாலெறிந்து சிதைத்தும், திருப்பாற்கடலுட் பாம்பணையில் யோகத்துயில்கொண்டருளும், ஞானச்சொரூபியைத் தவசிகளும் நிஷ்டர்களும் கருத்தில் ஊன்றிவைத்துத் துயினீத்தெழும்புகையில், ஹரி: ஹரி: யென்றுகூறும் பேரொலி நமது மனதினுழைந்து ஆனந்தமாக, ஒப்பற்ற எமதுநோன்பு இனிது முடிகிறது.

(ஸ்வாபதேசம்) — நூதனமாக பகவத் ஸம்பந்தம்பெற்ற சேதனனே! பரமஸாத்விகரான பாகவதர்கள், பகவத்குணநுஸந்தான பூர்வகமாகத் தம்தம்

வர்ணாசிரமோசித கர்மாநுஷ்டாநங்களைச் செய்வதற்காக எழுந்திருந்த பட்டார்கள். ஸ்ரீயஃபதிக்கு வாஸஸ்தாநமான பிரணவத்துள் மத்யமாதின் திவ்ய ரஹஸ்யார்த்தங்களையெடுத்து பாஞ்சஜன்னிய கோஷம்பே. ஆசாரியர்கள் கோஷிப்பதை நீர் கேட்கவில்லையோ? பகவத்ஆராதந கயிற்று; எழுந்திராய், பிரகிருதிஸ்தர்களான நமக்குத் தத்ஸம்பந்தத்தால் யுருது உண்டாகும் அகங்கார மமகாரங்க ளிரண்டையும் நிவர்த்திப்ட் காமக்குரோதங்களையும் அடியுடன் போக்கிக் கிருபைசெய் தருளுமவ திருப்பாற்கடலுள், திருவநந்தாழ்வான்மேல் யோகநித்ரை செய்தருளும் காரணனை ஸ்ரீமந் நாராயணனை ஹ்ருதயத்தில் தியானித்து குணாநுப ரும், கைங்கரியபரரும், ஜாகரூகர்களாய் ஸாவதாநமாக, ஹரிஃ ஹரிஃ எ உருவிடுகிற மஹாத்வநியானது, நம்முடைய ஹ்ருதயத்தில் பிரவேசி பரமாஹ்லாதத்தை யுண்டாக்க நம்ம உத்தேசியமான பகவத் கைங் ரூபநோன்பு சுகமாய்த் தலைக்கட்டுகிறது;

கக. [illegible]

கஉ. [illegible]

(எ) கீசுகீசென்றெங்குமானைச்சாத்தன்கலந்து
பேசினபேச்சரவங்கேட்டிலையோபேய்ப்பெண்ணே
காசும்பிறப்புங்கலகலப்பக்கைபேர்த்து
வாசநறுங்குழலாய்ச்சியர்மத்தினா
லோசைபடுத்ததயிரரவங்கேட்டிலையோ
நாயகப்பெண்பிள்ளாய்நாராயணன்மூர்த்தி
கேசவனைப்பாடவுநீகேட்டேகிடத்தியோ
தேசமுடையாய்திறவேலோரெம்பாவாய்.

கீசுகீசு என்று - கீசுகிசு என்ற ஒலியுடன்
எங்கும் - எல்லாவிடத்திலும்
ஆனைச்சாத்தன் - பாரத்துவாஜபக்ஷிகள்
கலந்து - கூடிக்கொண்டு
பேசினபேச்சு அரவம் - கூவின குரலின் தொனி
கேட்டிலையோ - உன்காதிற் படவில்லையோ
பேய்ப்பெண்ணே - ஒன்றுமறியாத பேதையே
காசும் - கழுத்தில் பூணும் அச்சுத்தாலியும்
பிறப்பும் - ஆமைத்தாலியும்
கலகலப்ப - கலகலவென் றொலிக்கும்படியாக
கைபேர்த்து - கைகளை நீட்டிமுடக்கி
வாசம் நறும் - வாசனைவீசும்
குழல் - கூந்தலையுடைய
ஆய்ச்சியர் - இடைச்சியர்
மத்தினால் - கடைகிறமத்தினால்
ஓசைப்படுத்த - கடையப்பட்ட
தயிரரவம் - தயிர்ஒலி
கேட்டிலையோ - காதிற்படவில்லையோ
நாயகப்பெண்பிள்ளாய் - பெண்களுட் சிகாமணியே
நாராயணன் மூர்த்தி - ஸ்ரீ வைகுந்தபதியான நாரணனுடைய சாக்ஷாத் சொரூபமான
கேசவனை - கண்ணனை
பாடவும் - நாம் புகழவும்
நீ கேட்டே - நீ கேட்டுக்கொண்டே
கிடத்தியோ - சும்மா படுத்திருக்கின்றனையோ
தேசமுடையாய் - அழகுள்ளவளே
திற - திருவாயில் கதவைத்திற
ஏலோர் - ஒப்பற்ற
எம்பாவாய் - எமது நோன்பு இனிது முடிகிறது.

ஒன்று மறியாத பேதையே! கீசுகீசு என்று இங்குமங்கும் காடைப் பறவைகள் கூடிக்கொண்டு கூவும் குரல்கள் உனது காதிற்படவில்லையோ! வாசனைவீசும் கூந்தலையுடைய இடைச்சியர், கழுத்தி னச்சுத்தாலியும் ஆமைத்தாலியும் கலகலவென் றொலிக்கும்படி கைகளை நீட்டிமுடக்கி மத்தினால் கடையுந் தயிரினொலியும் இன்னும் உனக்கு கேழ்க்க வரவில்லையோ! பெண்களுள் இரத்தினமே! வைகுந்தபதியான நாரணனுடைய சாக்ஷாத்சொரூபமான எமது கண்ணபிரானை யாம்புகழ்ந்து பாடிநிற்க, நீ கேட்டுக்கொண்டு பேசாது காதிற்படாதவள்போல் படுத்திருக்கின்றனை யல்லவா! அழகு நிறைந்த நங்காய்! கதவைத் திறந்து நீயும்வந்து நம்முடன்சேர்ந்தால் எமது நோன்பு இனிது முடிகிறது.

(ஸ்வாபதேசம்)—பகவத்விஷயத்தில் பராங்முகனான சேதனனே! அறிவுறாய்; அகங்கார மமகாரங்களுக்கு உட்படாத பரமபாகவதர் வெகுநாள் ஒருவரோடொருவர் கூடியிருந்து, அநந்தரம் விட்டுப் பிரியும்பொழுது, அந்த விச்லெஷ வியஸனம் தோற்றும்படியாக ஒருவர்க்கொருவர் பேசும்

வார்த்தையின் த்வனியைக் கேட்கவில்லையோ! ஒன்று மறியாதாரைப்பே நீயும் வீணில் காலஹரணம் செய்யப்போமா? ஆசாரியர்கள் அங்கங்கே, மந்த்ரத்தையும், துவயசரமச் லோகங்களையும் குறித்து ஒன்றின் அர் தை மற்றொன்றில் ஒப்பிட்டு ஒருவர்க்கொருவர் காட்டி விசதீகரித்து . தவிசாரஞ்செய்யும் பேரொலி எங்குபார்த்தாலும் முழங்கிக்கொண்டிரு ஸ்வரூபோபாய புருஷார்த்த ஞானங் தலையெடுத்து, மிக்க பகவத்வி வியாமோஹத்தை யுடைய அநந்யார்ஹ சேஷரான பாகவதர் ஸம்ஸாரி தநரை ஸதுபதேசம்பண்ணி சிக்ஷிக்க, இந்த சேதநர் விசேஷஞானம் (றுச் செய்யும் திவ்யப்பிரபந்தார்த்தாநு ஸந்தானத்தின் பேரொலியையு கேட்கவில்லையோ! பாகவதர்களுக்குள் சிரோ பூஷணமாகத்தக்க சேதனே நீயே எங்களுக்கெல்லாந் தலைவனாய் பகவத் குணாநுபவத்தில் த்வரித்து களை நியோகிக்கத் தக்கவராயிருந்தும், நீ இப்படி தாமசம் செய்யப்போ இல்லாவிட்டால் ஸ்ரீமந் நாராயண ஸ்வரூபனான ஸ்ரீ கிர்ஷ்ணனை நாங் வாயார வாழ்த்திக்கொண்டிருக்க, நீ அதைக்கேட்டு அந்த குணாமிருதத், முழுகியிருக்கின்றனையோ? பகவத் கடாக்ஷத்தைக் குறைவறப்பெற்று வி கும் சேதநனே! உனக்கென்குறை! ஆத்மயாதாத்மியத்தை மூடியிருக் அகங்கார தமக்கவாடத்தைத் திறந்தருளி நீயும் எம்முடன்சேர்ந்துகொள குணாநுபவஞ் செய்தால் எமது பகவத் கைங்கரிய ரூபமான நோன்பு இ தாய்த் தலைக்கட்டுகிறது.

௧ரு. [illegible]

௧சு. [illegible]

(அ) கீழ்வானம்வெள்ளென்றெருமைசிறுவீடு
மேய்வான்பரந்தனகாண்மிக்குள்ளபிள்ளைகளும்
போவான்போகின்றாரைப்போகாமற்காத்துன்னைக்
கூவுவான்வந்துநின்றோங்கோதுகுலமுடைய
பாவாயெழுந்திராய்பாடிப்பறைகொண்டு
மாவாய்பிளந்தானைமல்லரைமாட்டிய
தேவாதிதேவனைச்சென்றுநாம்சேவித்தா
லாவாவென்றாராய்ந்தருளேலோரெம்பாவாய்.

கீழ்வானம் - கீழண்டைத்திசைவானம்
வெள்ளென்று - வெளுப்பாய்
எருமை - எருமைகள்
சிறுவீடு - (சற்றுநேரம்போய் மேய்ந்து திரும்பிவருவதற்காக) விடப்பட்டு
மேய்வான் - மேய்வதற்காக
பரந்தனகாண் - வெளியேபோய்விட்டன
மிக்குள்ள - உன்னையொழிந்த
பிள்ளைகளும் - இடைப்பெண்மக்களை
போவான் - வெளியே போவதற்காக
போகின்றாரை - யத்தனமா யிருந்தவரை
போகாமற்காத்து - போகாதபடி தடுத்து
உன்னைக் கூவுவான் - உன்னையழைக்கும்பொருட்டு
வந்துநின்றோம் - யாம்வந்து உனதுகோயிலின் வாசலிற் காத்து நிற்கின்றோம்
கோதுகுலமுடைய - அக்களிப்பு (குதூகலம்) உடைய
பாவாய் எழுந்திராய் - நங்காய் படுக்கைவிட்டு எழும்பு
பாடி - (கண்ணபிரானை) ஏத்தி
பறைகொண்டு - அவன் அருளும் புருஷார்த்தத்தைப் பெற்றுக்கொண்டு
மாவாய் - குதிரைவடிவத்தில்வந்த கேசி என்னும் அசுரன்வாயை
பிளந்தானை - இரண்டுபிளவாய்க் கிழித்தவனை
மல்லரை - சாணூராதி மல்லயுத்தம் செய்வோரை
மாட்டிய - தொலைத்த
தேவாதி தேவனை - உம்பர் கோமானை
சென்று - அவன்பக்கல் அடைந்து
நாம் சேவித்தால் - நாமெல்லாரும் கைதொழுதால்
ஆ ஆ என்று - பரிதாபம்! பரிதாபம்! என இரங்கி
ஆராய்ந்து - நமது நிலைமையை திருவுள்ளத்திற்கொண்டு
அருள் - நமக்கு அருள்புரிவானானால்
ஏலோரெம்பாவாய் - எமது நோன்பு இனிது முடிகிறது.

கீழண்டைத்திசையில் வானம் வெளுப்பாயிற்று. எருமைகள் சிறு மேய்ச்சலுக்காக விடப்பட்டு வெளியே சென்றுவிட்டன. உன்னைத்தவிர, வெளியே போகத்தக்க மற்ற இடைப்பெண்களையும் போகாமற்றடுத்து உன்னை யழைக்கவேண்டி, யாம் வந்துனது மனையின் வாயிலில் காத்துநிற்கின்றோம். மிகுந்த அக்களிப்புடைய, நங்காய்! படுக்கைவிட்டெழும்பு; குதிரைவடிவமாய்வந்த கேசியென்ற அசுரனை வாய்கிழித்து, சாணூராதி மல்லரைத் தொலைத்த உம்பர் கோமானான நமது கண்ணபிரானைச்சார்ந்து கைதொழுதால், அவன் நமது நிலைமையைத் திருவுள்ளத்திற்கொண்டு, பரிதாபம்! பரிதாபம்! என்றிரங்கி நமக்கருள்புரிவான். நமது நோன்பு மினிது முடிகிறது.

(ஸ்வாபதேசம்)—பகவத் கிருபையை விசேஷமாய் அடைந்த அநங்யார்ஹரான ஸ்வாமியே! அசேதன பதார்த்தங்களுக்குங்கூட ஸத்வகுணம்

தலையெடுத்து விருத்தியாகும்படியான காலம் பிராப்தமாயிற்று. நீர் எ
க்கவேண்டும். ஸத்துவகுணமானது தலையெடுத்து துலங்கின உடனே
ஞானமானது விலகி தனக்கு ஜீவனோபாயத்தையும், செல்லுமிடத்
தேடிக்கொண்டு புறப்பட்டுப்போயிற்று, பகவத் ஸன்னிதிக்குப் பே
யே பிரயோஜனமாகவுடைய, மற்ற சேதநனையும் பாகவதனை முன்ன
லதே திருவடி தொழக்கடவோ மல்லோமென்று சொல்லித்தடுத்து,
த்துக்கொண்டு, பரமபாகவதரான உமது புருஷகாரத்தை அபே
உமது வாசலின்கண்வந்து காத்து நிற்கின்றோம். பகவதபிமானத்தில்
யிருக்கிற ஸ்வாமியே! விரைவாய் உணர்ந்தருளும். அகங்கார நிரா
யும், காமக்குரோதாதி அரிஷட்வர்க்கங்களையும் தொலைத்தவனையும்
யசூரி நிர்வாஹகனையு மிருக்கிற கண்ணனைப் பாடுகிறதே முக்கியமா
புருஷார்த்தத்தை அடைந்து பிராப்யத்துவனையால், நாமே வலுவில்
சென்று திருவடிதொழுதால், ஒருவேளை அவனுக்கு நம்மிடத்தில்
யித்வம் குறைந்திருந்ததேயாயினும், ஆர்த்தரக்ஷணத்தைச் செய்யத்
வனோ? மாட்டான், ஆகையால், நம்ம குறைகளைநீக்கி அவன் கிருபை
நம்ம ஒப்பற்ற நோன்பு சுகமாய் நிறைவேறுகிறது.

கரு. [illegible]

கசு. [illegible]

(கூ) தூமணிமாடத்துச்சுற்றும்விளக்கெரியத்
தூபங்கமழத்துயிலணைமேற்கண்வளரு
மாமான்மகளேமணிக்கதவந்தாள்திறவாய்
மாமீரவளையெழுப்பீரோவும்மகள்தா
னூமையோவன்றிச்செவிடோவனந்தலோ
வேமப்பெருந்துயின்மந்திரப்பட்டாளோ
மாமாயன்மாதவன்வைகுந்தனென்றென்று
நாமம்பலவுநவின்றேலோரெம்பாவாய்.

(பதவுரை.)

தூ - தெள்ளிய
மணி - இரத்தினங்களிழைத்த
மாடத்து - மாளிகையில்
சுற்றும் - எல்லாப்பக்கங்களிலும்
விளக்குஎரிய - விளக்குகள் எரிந்துகொண்டிருக்க
தூபம் - நறும்புகை
கமழ - வாசனைவீச
துயிலணைமேல் - நித்திரைசெய்யத்தக்க பஞ்சுமெத்தையின்மேல்
கண்வளரும் - தூங்கும்
மாமான்மகளே - அம்மான்பெண்ணே
மணிக்கதவம் - இரத்தினக்கதவினுடைய
தாள்திறவாய் - தாழ்ப்பாளைத்திறப்பாயாக
மாமீர் - அம்மாமீர்
அவளை - அந்தப்பெண்பிள்ளையை
எழுப்பீரோ - எழுப்பபடாதோ
உம்மகள்தான் - உமதுபெண்தான்
ஊமையோ-மூகையோ (வாய்பேசாதவளோ
அன்றி - அல்லது
செவிடோ - காதுகேழ்க்காதவளோ
அனந்தலோ - வைகலில்செய்யும் சிற்றுறக்கமோ (அவட்கு)
ஏமம் - மயக்கமோ
பெருந்துயில் - பேருறக்கமோ
மந்திரப்பட்டாளோ - ஏவற்பேய் கொண்டவளோ
மா மாயன் - மிகுந்த ஆச்சரியகுணசேஷ்டிதன்
மாதவன் - பூமகள்கேள்வன்
வைகுந்தன் - ஸ்ரீவைகுந்தமாநகரான்
என்றென்று - என்றுசொல்லிச்சொல்லி
நாமம்பலவும் - அவன் திருநாமங்களாயிரத்தையும்
நவின்று - சொல்லி
ஏலோர் - ஒப்பற்ற
எம்பாவாய் - எமதுநோன்பு இனிதுஆகிறது.

(பொழிப்புரை.)

தெள்ளிய இரத்தினங்களிழைத்த மாளிகையில் எங்கும் விளக்குகள் எரிந்துகொண்டிருக்க நறும்புகைவாசனைவீச, பஞ்சணையின் மேற்றுயிலும் அம்மான்பெண்ணே, தாழ்ப்பாளைத் திறப்பாயாக—அம்மாமீர்! உம்மபெண்ணை யெழுப்பலாகாதோ, அவள் ஊமையோ அல்லது செவிடோ, அவளுக்குச்சிற்றுறக்கமோ, மயக்கமோ, அன்றிப்பேருறக்கமோ, ஏவற்பேய் பிடிக்கப்பட்டாளோ? காணேம்; மிகுந்த ஆச்சரியகுண சேஷ்டிதன், பூமகள் கேள்வன், ஸ்ரீவைகுந்தநாதன், என்று ஸ்ரீயப்பதியினுடைய பேராயிரத்தையும் சொல்லிச்சொல்லி யொப்பற்ற நமது நோன்பு இனிதுமுடிகிறது. இப்பாட்டில் - ஸ்வரூபத்தை யுணர்ந்துவந்து அனுபவிக்கையுமவன் காரியமாகையால், கண்ணன் வந்தபோது வருகிறானென்று அநாதரித்திருப்பாளொருத்தியை யெழுப்புகிறார்கள்.

(ஸ்வாபதேசம்) — எம்பெருமானால் புத்ரத்வேந அபிமானிக்கப்பட்ட, அநந்யசரணரான சேதனரே! அப்ராகிருதமாய், பஞ்சோப நிஷன்மயமாயுள்ள

திவ்யமங்கள விக்கிரஹத்திலே, ஸர்வதோமுகமான ஞானப்பிரதீபம் பிரகாசித்துக்கொண்டு, அநுஷ்டாந பரியவ ஸாயியாயிருக்க, நீர் ஸ்நம் யாது மின்றியே பகவதேகோபாயாத்யவஸாயத்திலே நிஷ்டைடிருக்கிற இதைப்பார்த்து நாங்கள் மிகவும் சந்தோஷிக்கிறோம்; அநுபவ விரோதியாயிருக்கும் மமகாரத்தைத் தவிர்ப்பித்து தேவரீ நிஷ்டை எமக்கும் நன்றாய் விளங்கும்படி செய்தருளவேணும்" என்றநுபவ குதூஹலரான சிலபாகவதர் பிரார்த்தித்தாலும் அந்த அதிகாரி ஸ்வநிஷ்டையிலேயே ஊற்றத்தையடைந்து ஒன்றும்பேசாதிருக்க அட அந்த பாகவதர்கள் புருஷகார பூதையான பிராட்டியைப்பார்த்து, ஜநகியான பிராட்டியே! உன்னிடத்தில் அநந்யோபாயத்வ ஸ்வரூமுள்ள இந்த அதிகாரியை பகவதேகோபாயாத்யவஸாயத்தைச் (படி நீ நியோகிக்க லாகாதா? வாகாதீந்திரியங்கள் தனித்தனியே விஷயத்திலேயே ஏகாந்தமாய் பிராவண்யத்தை யடைந்திருப்பதால், ப்பவர்க்குப் பிரதியுத்தரம் கொடுத்தல் முதலான பிரபஞ்ச விஷ பிரவர்த்தி யில்லையோ? அல்லது அஷ்டாக்ஷர மந்த்ர மத்யஸ்தமான என்பதினால், உபாயவைலக்ஷண்யம் பிறந்து, பிரவர்த்தியந்தரத்தில் . மில்லாமல் ஏகாந்த விருத்தியில் ஆழ்ந்து, மோஹிதரா யிருக்கிறரோ பெருமான் அத்யந்த ஸுலபன், ஸ்ரீய:பதி, பராத்பரவஸ்து என்ற முதலான அவனுடைய திவ்யநாம ஸங்கீர்த்தனங்களையும் கல்யாண , களையும் இப்போது அநுஸந்திக்கிறோம்; இப்போதாவது அவனை வி யுன்முகராம்படி நீர்செய்து, அவரும் எங்களுடன் கலந்தால் எங்களு பகவத் கைங்கரிய ரூபமான நோன்பு சுகமாய்த் தலைக்கட்டுகிறது.

---

௧௭. [illegible]

௧௮. [illegible]

(௧0) நோற்றுச்சுவர்க்கம்புகுகின்றவம்மனாய்
மாற்றமுந்தாராரோவாசல்திறவாதார்
நாற்றத்துழாய்முடிநாராயணனம்மாற்
போற்றப்பறைதரும்புண்ணியனாற்பண்டொருநாள்
கூற்றத்தின்வாய்வீழ்ந்தகும்பகரணனுந்
தோற்றுமுனக்கேபெருந்துயில்தான்றந்தானோ
வாற்றவனந்தலுடையாயருங்கலமே
தேற்றமாய்வந்துதிறவேலோரெம்பாவாய்.

(பதவுரை.)

நோற்று - நோன்புநோற்று
சுவர்க்கம் - துறக்கம்
புகுகின்ற - சேரத்தக்க
அம்மனாய் - நாயகப்பிள்ளாய்
மாற்றமும் - எதிர்மொழியாவது
தாராரோ - கொடாரோ
வாசல் - கதவை
திறவாதார் - திறவாதவர்கள்
நாற்றத்துழாய் - நறுந்துழாய்மாலையை
முடி - திருமுடியிலுடைய
நாராயணன் - கண்ணபிரான்
நம்மால் - நம்மால்
போற்ற - துதிசெய்யப்பட (மங்களாசாஸனம் பண்ணப்பட)
பறைதரும் - வாத்தியத்தை (புருஷார்த்தத்தை)த்தரும்
புண்ணியனால் - புண்ணியாத்மவினால்
பண்டொருநாள் - முற்காலத்திலே
கூற்றத்தின் - இயமனுடைய
வாய்வீழ்ந்த - வாயிற்பட்ட
கும்பகரணனும் - கும்பகரணனும்
தோற்றும் - அபஜயப்பட்டு
உனக்கே - உனக்குத்தானே
பெருந்துயில்தான் - பேருறக்கத்தை
தந்தானோ - கொடுத்தானோ
ஆற்ற - மிகவும்
அனந்தலுடையாய் - காலையில் தூக்கத்தையுடையவளே
அருங்கலமே - எங்கள் அருமையான ஆபரணமானவளே
தேற்றமாய்வந்து - தெளிவுகொண்டுவந்து
திற - கதவைத்திற
ஏலோர் - ஒப்பற்ற
எம்பாவாய்-எமதுநோன்பு இனிதுமுடிகிறது.

(பொழிப்புரை.)

நோன்பு நோற்று துறக்கம் சேரத்தக்க நாயகப்பிள்ளாய்! கதவைத் திறவாவிட்டாலும், மறுமொழியாவது கொடலாகாதா? நறுந்துழாய் மாலையைச்சூடிய புண்ணியமூர்த்தியான கண்ணபிரான் நம்மால் துதிக்கப்பட்ட வாத்தியத்தைத் தருவான். முன்பொருகாலத்தில் யமன் வாய்க்ககப்பட்டிறந்த கும்பகரணனும் அபஜயப்பட்டு உனக்குத்தானே பேருறக்கத்தைக் கொடுத்தானோ? மிகுந்த சிற்றுறக்கமுள்ள எங்களருமையான நாயகமே! நீ தெளிவுடன் வந்து கதவைத்திறக்க ஒப்பற்ற எமதுநோன்பு இனிது முடிகிறது.

(ஸ்வாபதேசம்)—ஸித்தஸாதன பரிக்ரஹம்பண்ணி ஸ்வரூபமான பிராப்யத்தை அனுபவிக்கிற சுவாமியே! எங்களுடைய அநுபவ விரோதியான அகங்காரம் நீங்கி உம்மைக் கண்ணாரக்கண்டு ஸேவிக்க அநுகூலியாவிடினும் எங்களை உத்தரிக்கும்படியான உம்முடைய ஒருவார்த்தை யானாலும் கிடைப்பதும் அரிதோ? ஆர்த்தநாதத்தையுடனே கேட்கவேணுமென்று அகிலத்திலும் வியாபித்து நிற்கிற ஸ்ரீமந் நாராயணனுடைய திருவடியைத் தொ

ரூதால் நம்புருஷார்த்தத்தை அவன் அவசியம் நிறைவேற்றுகிறுன். சிரகாலம், காடநித்ராயை உண்டாக்கவல்ல தமோகுணமானது உம்முடைய ஆத்மதேஜஃ பிரபாவத்தாலே அடிபட்டு உம்மிடம் வாராமல் விலகி மாண்டுபோக, ஸ்வாநுபவ தசையிலே ஆழ்ந்து ஆத்தும பரிஷ்வங்கத்தை யடைந்து அனுபவிக்கிற பிராஞ்ஞரான உம்மை, காடநித்ராயை யடைந்தவராக அடியோம் எண்ணுகிறேம்; வியாபாராந்தரத்தில் அபிருசி யில்லாத நமக்குச் சிரோபூஷணம் போன்றவரே! எங்களுடைய ஆற்றமையை நோக்கி அஞ்ஞானமாகிய கவாடத்தைத் திறந்து தத்வதரிசனமாம்படி பண்ணிவைத்து, எம்முடனே கலந்து அனுக்கிரகித்தால் நம்முடைய பகவத் கைங்கரியரூபமான இந்த நோன்பு சுகமாய்த் தலைக்கட்டுகிறது.

---

௧௯. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

௨௦. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

(கக) கற்றுக்கறவைக்கணங்கள்பலகறந்து
செற்றார்திறலழியச்சென்றுசெருச்செய்யும்
குற்றமொன்றில்லாதகோவலர்தம்பொற்கொடியே
புற்றரவல்குற்புனமயிலேபோதராய்
சுற்றத்துத்தோழிமாரெல்லாரும்வந்துநின்
முற்றம்புகுந்துமுகில்வண்ணன்பேர்பாடச்
செற்றாதேபேசாதேசெல்வப்பெண்டாட்டிநீ
எற்றுக்குறங்கும்பொருளேலோரெம்பாவாய்.

(பதவுரை.)

கற்றுக்கறவை - கன்றுகளீன்ற பசுக்களின்
கணங்கள்பல - அனேககூட்டங்களை
கறந்து - பால்பீச்சி
செற்றார் - பகைவர்
திறல் - வலிமை
அழிய - குலையும்படி
சென்று - படையெடுத்துப்போய்
செருச்செய்யும் - சண்டைபண்ணும்
குற்றம் - பழி
ஒன்றில்லாத - யாதுமில்லாத
கோவலர்தம் - ஆயருடைய குலத்திற்பிறந்த
பொற்கொடியே - கனகலதை போன்றவளே
புற்றரவு - புற்றிலுள்ளபாம்புபோன்ற
அல்குல் - நிதம்பஸ்தலத்தை யுடையவளே
புனமயிலே - காட்டிலுள்ள மயில்போன்ற சாயலுடையவளே
போதராய் - வாராய்
சுற்றத்துத்தோழிமார் - உறவினராகிய தோழிப்பெண்களும்
எல்லாரும்வந்து - அனைவரும் சேர்ந்து
நின்முற்றம்புகுந்து - உன்னகத்து வாசலிலே நுழைந்து
முகில்வண்ணன் - கார்மேனிக்கண்ணனை
பேர்பாட-திருநாமத்தைப்பாடிக்கொண்டாட
செற்றாதே - அசங்காதே
பேசாதே - பேசாமல்
செல்வம் - பகவதைசுவரியமுடைய
பெண்டாட்டி நீ - பெண்ணே நீ
எற்றுக்குறங்கும்பொருள் - தூங்குகிறஅபிப்பிராயம் தானென்ன
ஏலோர் - ஒப்பற்ற
எம்பாவாய்-எமதுநோன்பு இனிதுமுடிகிறது.

(பொழிப்புரை.)

கன்றுகளீன்ற பசுக்கூட்டங்களைப் பால்பீச்சிப் பகைவர்வலிமை குலையப்படையெடுத்துச் சண்டை செய்பவராய் குறையொன்றுமில்லாத வருமான ஆயருடைய கனகலதை போன்ற பெண்ணே; புற்றிலுள்ள பாம்புபோன்ற நிதம்பஸ்தலத்தையும், காட்டுமயிலின் தோகைபோன்ற கூந்தலையு முடையவளே! உறவாகிய தோழிப்பெண்களனைவரும் வந்துன்னகத்து வாசலிலேசேர்ந்து கார்மேனிக்கண்ணன் திருநாமங்களைப் பாடிக்கொண்டிருக்க, பகவதைசுவரியமுடைய பெண்ணே! நீ அசங்காமலும் பேசாமலும் தூங்குகிற கருத்தென்ன?

(ஸ்வாபதேசம்)—ஈசுவரனே உபாயோபேய மென்று அத்யவஸித்திருக்கும் அதிகாரியே! எழுந்தருளும். ஸஸந்தானரான சிஷ்யஸமூஹங்களை அவரவர்களுடைய அபிநிவேசானுகுணமாக ஞானப்ரதானம் பண்ணியும், மற்றும் உபாயாந்தரபரரும் உபேயாந்தர பரருமானவருடைய ஸ்வார்த்த பரதையானது அடியுடன் நசிக்கும்படி தேவரீர் உபதேசத்தால் தொலைத்து

பூர்வோத்தராகங்க ளொன்றுமில்லாதபடிசெய்யும் ஆசார்யர்களில் சிறந்தவரே! தஹராகாசமத்யஸ்தனை பரமாத்மாவின் விசராத்தில் பரமபக்தியையும் வியாமோஹத்தையுமுடைய ஸ்வாமியே! நீர் புறப்பட்டு எங்களுடன் சேர்ந்துவரவேணும் அன்றியும் அநந்யார்ஹ சேஷபூதரான பாகவதர்கள் உம்முடைய திருமாளிகையில் முன்னண்டைவந்து, நீரும் வெளிப் புறப்படவேண்டி, ஆர்த்தத்திராணபராயணனை ஸ்ரீ கிருஷ்ணனைக் கொண்டாடி வாழ்த்தி நிற்கிறார்கள். பகவத்குணங்களை புஜிக்கையாகிற சம்பத்தையுடைய ஸ்வாமி! ஒருகரண வியாபாரமுமின்றி, பதில் ஒருவார்த்தையையும் பேசாமலும் நீர் ஏகநிஷ்டராயிருப்பது எதற்காக? நாங்கள் பார்த்துவிட்டு பின்னுக்குத் திரும்பிப்போகவோ? அல்லது ஸம்ஸாரிசேதனரை சிக்ஷிப்பதற்காகவோ? இதன் பிரயோஜனத்தைத் தெரிவித்து எங்களுடனே நீர் கலந்தால் எங்களுடைய முக்கியோத்தேசியமான பகவத் கைங்கரிய ரூபமான நோன்பு ஸாங்கமாய் இனிது நிறைவேறிவிடும்.

---

௨௧. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

௨௨. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

(கஉ) கனைத்திளங்கற்றெருமைகன்றுக்கிரங்கி
நினைத்துமுலைவழியேநின்றுபால்சோர
நனைத்தில்லஞ்சேறாக்குநற்செல்வன்றங்காய்
பனித்தலைவீழநின்வாசற்கடைபற்றி
சினத்தினாற்றென்னிலங்கைக்கோமானைச்செற்ற
மனத்துக்கினியானைப்பாடவுநீவாய்திறவாய்
இனித்தானெழுந்திராயீதென்னபேருறக்கம்
அனைத்தில்லத்தாருமறிந்தேலோரெம்பாவாய்.

(பதவுரை.)

கனைத்து - கூவிக்கதறிக்கொண்டு
இளங்கற்றெருமை - இளமையான கன்றை யுடைய எருமை
கன்றுக்கிரங்கி - தன்கன்றினிடம் அருள்கொண்டு
நினைத்து - கருதினவுடன்
முலைவழியே - மடிகளில்
நின்று - ஓயாது
பால்சோர - பால்சுரக்க
நனைத்து - ஈரமாக்கி
இல்லம் - வீடுமுழுவதும்
சேறாக்கும் - சேறாகச்செய்யும்
நற்செல்வன் - பகவதனுபவரூபஐசுவரியமுள்ளவனுக்கு
தங்காய் - உடன்பிறந்தவளே
பனி - பனியானது
தலைவீழ - தலைமேல்பெய்ய
நின்வாசற்கடைபற்றி - உன்வாசல் படியைப் பிடித்துக்கொண்டு
சினத்தினால் - கோபத்தினால்
தென்இலங்கைகோமானை - இராவணனை
செற்ற - கொன்ற
மனத்துக்கினியானை - மனதுக்குஆஹ்லாதமான சக்கரவர்த்தித் திருமகனை
பாடவும் - பாடுகையிலுங்கூட
நீவாய்திறவாய் - நீசும்மாஇருக்கின்றாய்
இனித்தான் - இனிமேலாவது
எழுந்திராய் - படுக்கையைவிட்டுக்கிளம்பு
ஈதென்னபேருறக்கம் - இஃதுஎன்ன மஹாநித்திரை
அனைத்தில்லத்தாருமறிந்து - எல்லாப்பெண்களு மறிந்தார்கள்
ஏலோர் - ஒப்பற்ற
எம்பாவாய்-நமதுநோன்பு இனிதுமுடிகிறது.

(பொழிப்புரை.)

இளங்கன்றுகளையுடைய எருமைகள் கன்றைநினைத்துப் பரிதபித்துக்கூவினவுடன் மடிகளில் ஓயாது பால்சுரக்க வீடுமுழுமையும் நனைத்துச் சேறாக்கும் ஏராளமும் பகவதனுபவைசுவரியமுமுள்ள கண்ணனின் தோழனுக்குப்பின் தோன்றினவளே, தலைமீது பனிபெய்ய உனது வாசலின்படியைப் பிடித்துக்கொண்டு நிற்கிறோம்; கோபத்தினு லிராவணனைத் தொலைத்த மனோஹரமான நமது ஸ்வாமியை யாம்பாடிநிற்கச் செய்தே நீ ஒன்றும் பேசுவதில்லையே, இஃது என்னபெருந்தூக்கம்! இனிமேலாவது படுக்கையைவிட்டு எழுந்தருளவேணும்; நீயும் சேர்ந்தால் நமதுநோன்பு இனிது முடிகிறது.

(ஸ்வாபதேசம்) — ஸ்வாமி! பாகவதாபிமான நிஷ்டரே! இனியாவது உணர்ந்து எழுந்தருளவேணும். பாலஸந்தானமுடைய சிஷ்யரானவர், தமக்கும் ஸ்வஸந்தானத்துக்கும் ஸ்வாசாரியன் பகவத்குணாநுபவம் இன்னம் பண்ணிவைக்க வில்லையே என்று இரங்க அவ்விஷயத்தில் தியாநாரூடரு

இய ஆசாரியனே தன்குழந்தைகளுக்கு குணுநுபவம் பண்ணிவைக்கிறதாகப் பாவித்து, அந்தபாவநாபிரகர்ஷத்தாலே, ஆசார்ய கடாக்ஷமடியாக பகவற் குணங்கள் சுரக்க, இதைக் கேட்போர்களெல்லாருங்கூட ஸாம்ஸாரிக தாபங் கள் தணிந்துகளிக்கும்படி அந்தப்பாவனுதார்டியம் பண்ணி விடுகிறது. இப் பேர்ப்பட்ட சிலாக்கியமான ஸம்பத்தை நிலையாகப்பெற்ற ஆசாரியனுடைய ஸஹோதரரே! பகவத் பாகவத குணுநுபவப் பிரவாஹங்களின் திவலைகள் அடியோமை ருசிபிறக்கும்படிசெய்து இழுத்தாலும், அதில் போக்யதாபுத்தி பண்ணுமல் அதை விட்டு விட்டு, உம்மஸேவையே முக்கியமென்று நினைத்து உமது திருமாளிகையின் வாயிலில்வந்து காத்து நிற்கின்றோம்; ஜநநமரணுதி ஸம்ஸாரத்துக்குக் காரணமான அகங்காரத்தை அடியுடன் அழித்து நம்மன துக்கு அதிப்பிரியனுன சக்கிரவர்த்தித்திருமகனை நாங்கள் வாழ்த்திக்கொண்டு நின்றுலும் நீரும் இன்னும் விழித்துக்கொள்ள வில்லையே! இதென்ன ஆச் சரியம்! இவர் நித்திரைதான் ஸம்ஸாரிகள் நித்திரையைப் போன்றதாளுல், ஸத்வோத்தரமான இக்காலத்தில் தீரும்படியா யிருக்கும்; அல்லது ஸர்வே சுவரனுடைய நித்ரையைப் போன்றதாளுல் பரார்த்தியைக் கண்டவுடன் நீங்கிப்போ மல்லவா? இவை யிரண்டுமாதிரியு மல்லாததுளுல் இந்த பாகவத ருடைய நித்ரை சரமபர்வ நிஷ்டருடைய ஆற்றுமையைக் கண்டால் தீரும் போல் தோற்றுகிறது; ஆகையால் இங்கு அதுக்கு அதிகாரிகள் இல்லாமை யாலே பேருறக்கமா யிருக்கிறதோ? ஓய் ஸ்வாமி! எப்படியாயினும் ஆக ட்டும் பகவத்விஷயம் ரகசியமன்றல்லவா? அதை யாவருமறியும்படி நீரும் நம்முடன் சேர்ந்துகொண்டு கொண்டாடினுல் நம்முடைய உத்தேச்யமான பகவத் கைங்கரியரூபமான நோன்பு சுகமாய்த் தலைக்கட்டுகிறது.

---

௨௩. [illegible]

௨௪. [illegible]

(கங) புள்ளின்வாய்கீண்டானைப்பொல்லாவரக்கனைக்
கிள்ளிக்களைந்தானைக்கீர்த்திமைபாடிப்போய்
பிள்ளைகளெல்லாரும்பாவைக்களம்புக்கார்
வெள்ளியெழுந்துவியாழமுறங்கிற்று
புள்ளுஞ்சிலம்பினகாண்போதரிக்கண்ணினாய்
குள்ளக்குளிரக்குடைந்துநீராடாதே
பள்ளிக்கிடத்தியோபாவாய்நீநன்னாளாற்
கள்ளந்தவிர்ந்துகலந்தேலோரெம்பாவாய்.

(பதவுரை.)

புள்ளின்வாய் - பகாசுரனுடையவாயை
கீண்டானை - கிழித்தானை
பொல்லாவரக்கனை - தீயவசுரனான ராவணனை
கிள்ளிக்களைந்தானை - வேருடன் அறுத்தொழித்த சக்கிரவர்த்தித் திருமகனாரை
கீர்த்திமை - பெரும்புகழை
பாடிப்போய் - பாடிக்கொண்டுசென்று
பிள்ளைகளெல்லாரும் - பெண்பிள்ளைகளனைவரும்
பாவைக்களம் - கழகமிடுங்குறிப்பிடம்
புக்கார் - சென்றுவிட்டனர்
வெள்ளியெழுந்து - சுக்கிரனுதயமாய்
வியாழம்உறங்கிற்று - குருமறைந்தது
புள்ளுஞ்சிலம்பினகாண் - பறவைகளுங் கூவுகின்றன
போது அரிக்கண்ணினாய் - தாமரைப்பூவிலுள்ள வண்டுகளைப்போன்ற கண்களையுடையாளே
குள்ளக்குளிர - நன்றாய்க்குளிரும்படி
குடைந்து - குளித்து
நீர்ஆடாதே - முழுகாமல்
பள்ளிக்கிடத்தியோ - பஞ்சணைமேற் றுயில்கின்றனையோ
பாவாய் நீ - அழகிய பெண்ணே நீ
நல்நாளால் - நோன்புக்குஏற்ற தினமாதலால்
கள்ளந்தவிர்ந்து - கபடத்தைவிட்டு
கலந்து - எங்களோடுசேர்ந்தால்
ஏலோர் - ஒப்பற்ற
எம்பாவாய்-நமதுநோன்பு இனிதுமுடிகிறது.

(பொழிப்புரை.)

பகாசுரனுடைய வாயைக்கிழித்தும், கொடிய இராவணனை வேருடனறுத்தவனுமான நமது ஸ்வாமியின் பெரும்புகழைப் பாடிக்கொண்டு பெண்பிள்ளைகளனைவரும் கழகமிடுங் குறிப்பிடம் போய்ச்சேர்ந்தனர்; சுக்கிரோதயமாயிற்று; பிரகஸ்பதி கிரகமும் மறைந்துவிட்டது; பறவைகளோ அங்கங்கு கூவாநின்றன. பூவில்விழும் வண்டுபோன்ற கண்ணினாய், நன்றாய்க் குளிரும்படிக் குளித்து முழுகாதே இன்னும் பஞ்சணைமேற் றுயில்கின்றனையோ, காரிகையே! இது நோன்புக்கேற்ற தினமாதலால் மாயஞ் செய்யாமல் எங்களுடன் சேர்ந்தால் ஒப்பற்ற நமது நோன்பு இனிதுமுடிகிறது.

(ஸ்வாபதேசம்) — ஸ்வரூபஞானம்பிறந்து அதினால் நிர்பரராயிருக்கும் ஸ்வாமியே! பள்ளிவிட்டெழுந்து எங்களுடன் சேரவேணும்; தன்னை யாஸ்ரயித்து நின்றார்க்கு அனுபவ விரோதியான காமாதி தோஷங்களைப் போக்குமவனாய், தேகமும் ஆத்மாவும் ஸ்வதந்திரமென்று தோற்றுவிக்கும் தீமையையுடைய, அகங்காரத்தை நிர்மூலம்செய்து நிரஸித்தவனான ஸர்வஸ்வாமியினுடைய கல்யாணகுணங்களையே தாரகமாக வெண்ணிப் பாடிக்கொண்டு,

அபிநவ பாகவதர்களும், எல்லாரும் சேரத்தக்க காலக்ஷேப கூடத்துக்கு அப்போதே சென்றுவிட்டனர்; பரிசுத்தஞானம் தலையெடுத்து ஓங்கிற்று. அஞ்ஞானம் தலைமடிந்தது. மற்றுமுள்ள பாகவதர்களும் த்வரித்துக்கொண்டு போந்தார்கள், ஸ்வச்சமான ஞானத்தை யடைந்தவரே! ஸர்வசரண்யனைப் பிரிந்திருந்த வியஸனமெல்லாம் நிச்சேஷமாய் நீங்கிப்போம்படி காலக்ஷேப கூடத்தில் பிரவேசித்துச் சேர்ந்து பகவதநுபவத்தைப் பண்ணாதே, நீர்மாத்திரம் தனித்து குணாநுபவம் பண்ணுகிறீரோ? பண்ணலாமோ? ஸத்வோத்தர காலமாகையால், இப்போது நீர் தனியே ஈசுவரனுடைய குணாநுபவம் பண்ணுகிற வஞ்சனையைவிட்டு எங்களோடே ஒரு தன்மையாகக் கலந்து எங்களுக்கும் உம்மைப்போல் சத்தையை யுண்டாக்கிறுல் நம்ம பரமைகாந்த்ய ஸ்வாதந்த்ரிய ரூபமான நோன்பு சுகமாய் நிறைவேறுகிறது.

---

௨௫. [illegible]

௨௬. [illegible]

(கச) உங்கள்புழைக்கடைத்தோட்டத்துவாவியுட்
செங்கழுநீர்வாய்நெகிழ்ந்தாம்பல்வாய்கூம்பினகாண்
செங்கற்பொடிக்கூறைவெண்பற்றவத்தவர்
தங்கள்திருக்கோயில்சங்கிடுவான்போதந்தா
ரெங்களைமுன்னமெழுப்புவான்வாய்பேசு
நங்காயெழுந்திராய்நாணாதாய்நாவுடையாய்
சங்கொடுசக்கரமேந்துந்தடக்கையன்
பங்கயக்கண்ணானைப்பாடேலோரெம்பாவாய்.

(பதவுரை.)

உங்கள் - உமது
புழைக்கடை - பின்புறத்து
தோட்டத்து - தோட்டத்தில்
வாவியுள் - கிணற்றிலே, (தடாகத்தில்)
செங்கழுநீர் - செங்குவளைப்பூ
வாய்நெகிழ்ந்து - மலர்ந்து
ஆம்பல் - அல்லிப்பூக்கள் (கருநெய்தல்)
வாய்கூம்பினகாண் - மூடிக்கொண்டன
செங்கல்பொடி - காவிக்கல்லின் பொடியில் தோய்ந்த
கூறை - துணியை உடுத்திக்கொண்டிருக்கிற
வெண்பல் தவத்தவர் - வெண்மையான பற்களையுடைய மாதவர் (சந்நியாஸிகள்)
தங்கள் - தங்கள் தங்களுடைய
திருக்கோயில் - ஆலயங்களில்
சங்கு இடுவான் - ஆராதனைக்காக
போதந்தார் - போகிறார்கள்
எங்களை - எங்களை
முன்னம் - முன்னதாக
எழுப்புவான் - எழுப்புகிறதற்காக
வாய்பேசும் - வெறும்வார்த்தைசொன்ன
நங்காய் - சிறந்தவளே
எழுந்திராய் - எழும்புவாய்
நாணாதாய் - வெட்கமில்லாதவளே
நாஉடையாய் - வாயாடுகிறவளே
சங்கொடுசக்கரம் - பாஞ்சஜன்னியத்தொடு திருவாழியையும்
ஏந்தும் - தாங்கிய
தடக்கையன் - விசாலமான திருக்கைகளையுடைய
பங்கயக்கண்ணனை - தாமரைக்கண்ணனை
பாட - பாடுகிறதினால்
ஏல்ஓர் - ஒப்பற்ற
எம்பாவாய்-நமதுநோன்பு இனிதுமுடிகிறது.

(மொழிப்புரை.)

கண்ணன் தானேவருகிறனென்று கிட்டபரமானவளே! உங்களுடைய புழைக்கடைத் தோட்டத்துத்தடாகத்திலுள்ள செங்கழுநீர்மலர்கள் விகஸித்து, கருநெய்தற்பூக்கள் முகுளிதமாய் விட்டன, எழுந்திராய்; அதுவுமன்றி, காவிவஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு வெளுத்த பற்களையுடைய தபோவ்ருத்த நாரிகளான ஸன்னியாஸிகள், அவரவர் தங்கள் தங்கள் கோயில்களில் திருவாராதனத்துக்காகப் போகின்றார்கள். நீராட வேண்டியதற்காக எங்களை முதல் முதல் எழுந்துவந்து எழுப்புவதாக வாயில்மாத்திரம் கெட்டியாய்ச் சொல்லிவிட்டு, அந்தப்படி நடவாத, சிறந்தபெண்பிள்ளாய்! உனக்குக் கொஞ்சமும் லஜ்ஜையில்லையா? பேச்சுமாத்திரம் இனிமையா யிருந்தது; ஆகிலும் எழுந்திரு - ஏனென்றால், ஸ்ரீ பாஞ்சஜன்னியத்தையும் திருவாழி யாழ்வானையும் தரித்தவனாய், முழந்தாள் அளவும் நீண்டிருக்கிற திருக்கைகளை யுடையவனாய், தாமரை மலர்போன்ற திருக்கண்களை யுடையனான ஸ்ரீ கிருஷ்ணனை, நீயும்சேர்ந்து எல்லாரும்பாடினோமானால், நாம் எடுத்துக்கொண்டநோன்பு சுகமாய்த் தலைக்கட்டுகிறது.

அபிநவ பாகவதர்களும், எல்லாரும் சேரத்தக்க காலக்ஷேப கூடத்துக்கு அப்போதே சென்றுவிட்டனர்; பரிசுத்தஞானம் தலையெடுத்து ஓங்கிற்று. அஞ்ஞானம் தலைமடிந்தது. மற்றுமுள்ள பாகவதர்களும் த்வரித்துக்கொண்டு போந்தார்கள், ஸ்வச்சமான ஞானத்தை யடைந்தவரே! ஸர்வசரண்யனைப் பிரிந்திருந்த வியஸனமெல்லாம் நிச்சேஷமாய் நீங்கிப்போம்படி காலக்ஷேப கூடத்தில் பிரவேசித்துச் சேர்ந்து பகவதநுபவத்தைப் பண்ணாதே, நீர்மாத்திரம் தனித்து குணாநுபவம் பண்ணுகிறீரோ? பண்ணலாமோ? ஸத்யோத்தர காலமாகையால், இப்போது நீர் தனியே ஈசுவரனுடைய குணாநுபவம் பண்ணுகிற வஞ்சனையைவிட்டு எங்களோடே ஒரு தன்மையாகக் கலந்து எங்களுக்கும் உம்மைப்போல் சத்தையை யுண்டாக்கினால் நம்ம பாவைக் கைங்கரிய ரூபமான நோன்பு சுகமாய் நிறைவேறுகிறது.

---

௨௫. [illegible]
[illegible]
[illegible]
[illegible]॥

௨௬. [illegible]
[illegible]।
[illegible]
[illegible]॥

(கச) உங்கள்புழைக்கடைத்தோட்டத்துவாவியுட்
செங்கழுநீர்வாய்நெகிழ்ந்தாம்பல்வாய்கூம்பினகாண்
செங்கற்பொடிக்கூறைவெண்பற்றவத்தவர்
தங்கள்திருக்கோயில்சங்கிடுவான்போதந்தா
ரெங்களைமுன்னமெழுப்புவான்வாய்பேசு
நங்காயெழுந்திராய்நாணாதாய்நாவுடையாய்
சங்கொடுசக்கரமேந்துந்தடக்கையன்
பங்கயக்கண்ணானைப்பாடேலோரெம்பாவாய்.

(பதவுரை.)

உங்கள் - உமது
புழைக்கடை - பின்புறத்து
தோட்டத்து - தோட்டத்தில்
வாவியுள் - கிணற்றில், (தடாகத்தில்)
செங்கழுநீர் - செங்குவளைப் பூ
வாய்நெகிழ்ந்து - மலர்ந்து
ஆம்பல் - அல்லிப்பூக்கள் (கருநெய்தல்)
வாய்கூம்பினகாண் - மூடிக்கொண்டன
செங்கல்பொடி - காவிக்கல்லின் பொடியில் தோய்த்த
கூறை - துணியை உடுத்திக்கொண்டிருக்கிற
வெண்பல் தவத்தவர் - வெண்மையான பற்களையுடைய மாதவர் (ஸன்னியாஸிகள்)
தங்கள் - தங்கள் தங்களுடைய
திருக்கோயில் - ஆலயங்களில்
சங்கு இடுவான் - ஆராதனத்துக்காக
போதந்தார் - போகிறார்கள்
எங்களை - எங்களை
முன்னம் - முன்னதாக
எழுப்புவான் - எழுப்புகிறதற்காக
வாய்பேசும் - வெறும்வார்த்தைசொன்ன
நங்காய் - சிறந்தவளே
எழுந்திராய் - எழும்புவாய்
நாணாதாய் - வெட்கமில்லாதவளே
நாவுடையாய் - வாயாடுகிறவளே
சங்கொடுசக்கரம் - பாஞ்சஜன்னியத்தொடு திருவாழியையும்
ஏந்தும் - தாங்கிய
தடக்கையன் - விசாலமான திருக்கைகளையுடைய
பங்கயக்கண்ணானை - தாமரைக்கண்ணனை
பாட - பாடுகிறதினால்
ஏலோர் - ஒப்பற்ற
எம்பாவாய் - நமதுநோன்பு இனிதுமுடிகிறது.

(மொழிப்புரை.)

கண்ணன் தானேவருகிறானென்று நிர்ப்பரமானவளே! உங்களுடைய புழைக்கடைத் தோட்டத்துத்தடாகத்திலுள்ள செங்கழுநீர்மலர்கள் விகஸித்து, கருநெய்தற்பூக்கள் முகுளிதமாய் விட்டன, எழுந்திராய்; அதுவுமன்றி, காவிவஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு வெளுத்த பற்களையுடைய தபோவேஷதாரிகளான ஸன்னியாஸிகள், அவரவர் தங்கள் தங்கள் கோயில்களில் திருவாராதனத்துக்காகப் போகின்றார்கள். நீராட வேண்டியதற்காக எங்களை முதல் முதல் எழுந்துவந்து எழுப்புவதாக வாயில்மாத்திரம் கெட்டியாய்ச் சொல்லிவிட்டு, அந்தப்படி நடவாத, சிறந்தபெண்பிள்ளாய்! உனக்குக் கொஞ்சமும் லஜ்ஜையில்லையா? பேச்சுமாத்திரம் இனிமையாயிருந்தது; ஆகிலும் எழுந்திரு - ஏனென்றால், ஸ்ரீ பாஞ்சஜன்னியத்தையும் திருவாழி யாழ்வானையும் தரித்தவனாய், முழந்தாள் அளவும் நீண்டிருக்கிற திருக்கைகளை யுடையவனாய், தாமரை மலர்போன்ற திருக்கண்களை யுடையனான ஸ்ரீ கிருஷ்ணனை, நீயும்சேர்ந்து எல்லாரும்பாடினோமானால், நாம் எடுத்துக்கொண்டநோன்பு சுகமாய்த் தலைக்கட்டுகிறது.

(ஸ்வாபதேசம்)—பகவத்ஸம்பந்தத்தை யுண்டாக்கத்தக்க சேதநரே! நீர் எழுந்தருளவேணும். ஞானவிசிஷ்டரான உங்களுக்கு விஹாரஸ்தாநமான திருமந்த்ரத்தினுடைய மத்தியில் வர்த்திக்கிற நம: என்றபதத்தில், 'பாரதந்திரியம்' ஆகிற அர்த்தம் பிரகாசமாய் விகஸித்தது. ஸ்வாதந்திரிய ஞானம் தலைமடிந்தது. ராகப்பிரயுக்தமான சேஷத்வ ஞானமுள்ளவர்களாயும், மந்தஸ்மிதத்தை யுடைய பிரபந்நாதிகாரிகள் தங்கள் தங்கள் எம்பெருமான் ஸன்னிதியிலே திருவாராதனம் பண்ணுகிறதற்குப் போந்தார்கள், அடியோங்கள் அபேக்ஷிப்பதற்கு முன்னே, நீர் எங்களை ஞானவான்க ளாக்குவதாக ஸ்ரீஸூக்திகளை யருளிச்செய்த ஸ்வாமியே! இப்போது தேவரீர் சொல்லிய படி செய்தருளவேண்டாமா? செய்யாவிடில் உம்மைப்போன்ற பெரியவாளுக்கு லஜ்ஜைக் கிடமாகுமே! ஸர்வேச்வரனுங் கூட மோஹிக்கும்படி செவிக்கினிய செஞ்சொல் பேசத்தக்கவரே, திருவாழியையும் பாஞ்சஜன்னியத்தையும் திருக்கைகளில் தாங்கியும், ஆழ்வார்களிடத்திலே வந்தலையாநின்ற கண்களையுடைய கண்ணபிரானைப் பாடுகையே பிரயோஜனமாகத் திருவாய்மொழியிட்டு நீரும் நம்மோடு சேர்ந்து எல்லாரும் பாடினோமானால், நாம் எடுத்துக்கொண்ட பகவத்கைங்கரிய ரூபமான நோன்பு இனிதாய் நிறைவேறி ஈடேறலாம்.

---

௨௭. [illegible]

௨௮. [illegible]

(கரு) எல்லேயிளங்கிளியேயின்னமுறங்குதியோ
சில்லென்றழையேன்மினங்கைமீர்போதருகின்றேன்
வல்லையுன்கட்டுரைகள்பண்டேயுன்வாயறிதும்
வல்லீர்கள்நீங்களேநானேதானாயிடுக
ஒல்லைநீபோதாயுனக்கென்னவேறுடையை
எல்லாரும்போந்தாரோபோந்தார்போந்தெண்ணிக்கொள்
வல்லானைகொன்றானைமாற்றாரைமாற்றழிக்க
வல்லானைமாயனைப்பாடேலோரெம்பாவாய்.

(பதவுரை.)

எல்லே - என்னே (பெண்களை யழைக்கும் சொல்)
இளங்கிளியே - இனிமையான கிளிபோன்ற சொல்லை யுடையவளே
இன்னம் - நாங்கள் எழுந்தபின்பும்
உறங்குதியோ - தூங்குகிறாயோ (என்ன)
சில்என்று - சிலுகுசிலுகுஎன்று
அழையேல்மின் - கூப்பிடாதேயுங்கள்
நங்கைமீர் - பெண்ணிற்சிறந்தவரே
போதருகின்றேன் - புறப்பட்டு வருகிறேன் (என்ன)
வல்லை - பேசுவதில் ஸாமர்த்தியமுள்ள
உன்கட்டுரைகள் - உன்உறுதிமொழியையும்
பண்டே - முன்னமே
உன்வாயறிதும் - நீபேசும் வல்லமையையும் அறிவோம் (என்ன)
வல்லீர்கள் - பேசுந்திறமுடையவர்கள்
நீங்களே - நீங்கள்தான்
நானேதான் - நான்தானே
ஆய்இடுக - ஆகக்கடவேன் (என்று சொல்லி விட்டு உங்களுக்குச் செய்யவேண்டியது என் என்ன)
ஒல்லை நீபோதாய் - எங்கள் திரளிலே சடக்கென வந்து சேரவேணும்
உனக்கு - உன்றனக்கு
என்ன வேறு-வேறு உயர்ந்த காரியத்தை
உடையை - உடைத்தா யிருக்கிறாய் (என்று கேட்க)
எல்லாரும் - உணர்வில்லாச் சிறுபெண்களும்
போந்தாரோ - உணர்ந்து வந்தார்களோ (என்ன)
போந்தார் - வந்திருக்கிறார்கள்
போந்து - புறப்பட்டுவந்து
எண்ணிக்கொள் - கணக்குச் செய்துகொள்ளாய் (என்ன)
வல் ஆனை - வலிய குவலயாபீடத்தை
கொன்றானை - கொலைத்து
மாற்றாரை-பகைவரான கம்ஸாதிகளினுடைய
மாற்று - செருக்கை
அழிக்க வல்லானை - நாசஞ்செய்யும் சமர்த்தனை
மாயனை - மாயாசேஷ்டிதனை (சர்வஞ்ஞனை)
பாட - நாமெல்லாம் சேர்ந்து புகழ
எல் ஓர் எம் பாவாய் - நம்முடைய வொப்பற்ற நோன்பு இனிது தலைக்கட்டுகிறது.

(பொழிப்புரை.)

எல்லாருடைய திரட்சியையுங் காணவேண்டி யிருப்பாளொருத்தியை மற்றவர்கள் வந்து, "இளமைதங்கிய கிளிபோன்ற சொல்லை யுடையவளே! நாங்கள் எல்லாரும் எழுந்து வந்திருக்கிறோம் பார், நீ என்ன வின்னும்தூங்குகிறாயே" என்று அழைக்க, அதற்கு அவள்— "பெண்களிற் சிறந்தவர்களே! சிலுகுசிலுகு என்று கூப்பிடாதேயுங்கள், புறப்பட்டு வருகிறேன்" என்ன, அவர்கள் "சமர்த்தையான உன்பேச்சினுறுதியும், பேசுந் திறத்தையும் நாம் முன்னமே அறிந்திருக்கிறோம்" என்று சொல்ல அவள் "நீங்களே பேசுந்திறமுடையவர்கள், ஆகிலும் நானும் உங்களைப் பார்த்து இனி அபராதை ஆகக்கடவேன்" என்று சொல்லிவிட்டு உங்களுக்குச் செய்யவேண்டியதென் என்று கேட்க, அவர்கள் "நீ எங்கள் கூட்டத்துள் விரைவில் வந்துசேர்ந்து கொள்ளவேணும், இதைவிட உனக்கு வேறு உயர்ந்த காரியம் என்ன இருக்கிறது" என்று கேட்க அவள் "உணர்வறியாச் சிறுபெண்களும் தூக்கம்விட்டெழுந்து

வந்தார்களோ என்ன “வந்திருக்கிறார்கள், நீ வந்து கணக்குப்பண்ணிக்கொள்” என்ன “அவள் “நாமெல்லாம் கூடி ஆகிறது என்” என்று கேட்க, அவர்கள் “வலிமையான குவலயாபீடத்தைக்கொன்று, பகைவரான கம்ஸாதிகளை, அவர்களுடைய அகங்காரத்துடன் வேருடனறுத்துத் தொலைத்த மஹாமாயாசேஷ்டிதனான கண்ணைபிரானைத் துதித்துக் கொண்டாட நமது ஒப்பற்ற நோன்பு சுகமாய்த் தலைக்கட்டுகிறது என்று சொன்னார்கள்.

(ஸ்வாபதேசம்) — “பாகவதாபிநிவேசமுள்ள ஸ்வாமியே, இதென்ன ஆச்சரியம்! நாங்களனைவரும் எழுந்திருந்துவந்த பின்பும் கூட இன்னும் உறங்கப்போமோ?” என்றிப்படிச்சொன்ன பாகவதர்களைப்பார்த்து, அவர்— நீங்கள்சொல்லும் வார்த்தை நான்செய்யும் பகவத் குணாநுபவத்துக்கு விரோதியாயிருக்கிறது. சற்றுப் பொறுங்கள் வந்துவிட்டேன்” என்று சொன்னார். அதற்கு அந்தப் பாகவதர்கள் “நீர் இரஹஸ்யார்த்தங்களை உள்ளடக்கி சாமர்த்தியமாய்ப் பேசுகிற வழக்கத்தை நாங்கள் முன்னமே அறிந்திருக்கிறோம்.” என்று சொல்ல அந்தஸ்வாமி “என்னுடைய அநுபவத்துக்கு நீங்கள் விரோதத்தைச் செய்திடினும், உங்கள்பேரில் பழிபொறுக்காமல் என்னைச் சிலாகித்துப்பேசுகிற ஸாமர்த்தியம் உங்களிடத்திலேயேயிருக்கிறது ஆகிலும், பாகவத சேஷத்வம் ஸ்வரூபமாகையாலே நீங்கள் இடும்பழியை அடியேனே ஒப்புக்கொள்ளவேண்டியதுதான்.” என்றார். அதைக்கேட்டு அவர் “சுவாமி எது எப்படியானாலும் ஆகட்டும், நீரும் எங்களுடன் சடக்கெனவந்து சேரவேணும். நீர்மட்டும் பகவத் குணாநுபவத்தைச் செய்வது சரியோ?” என்று கேட்க அவர் “ஆனால் எல்லாரும் காலக்ஷேப கூடத்துக்குவந்து சேர்ந்தார்களோ” என்று கேட்டார் இதுக்கு அந்தபாகவதர்கள் “அனைவரும் வந்து சேர்ந்துவிட்டனர். தேவரீர் வேணுமானால் கடாக்ஷிக்கலாம் என்று சொல்ல, ஆனால் நாம் இப்போது செய்யவேண்டியது என்ன” என்று அவர்கேட்க. பாகவதர்கள் “ஸ்வப்ரயத்நத்தால் கடக்கவரிதாயும், ப்ராயச்சித்தத்தால் நிவர்த்திக்கக் கூடாததாயுமிருக்கிற அகங்காரத்தைப் போக்கி, மற்றுமுள்ள காமக்குரோதாதி பகைகளையும் அழித்துத்தர வல்லனாய், ஆஸ்ரித பரதந்திரனான ஸ்ரீமந் நாராயணனை நாம் எல்லாரும் சேர்ந்து பாட நம்ம பகவத் கைங்கரிய ரூபமான நோன்பு இனிது தலைக்கட்டுகிறது.

உக. [illegible]

௩0. [illegible]

(கசு) நாயகனாய்நின்றநந்தகோபனுடைய
கோயில்காப்பானே! கொடித்தோன்றுந்தோரண
வாயில்காப்பானே! மணிக்கதவந்தாள்திறவாய்
ஆயர்சிறுமியரோமுக்கறைபறை
மாயன்மணிவண்ணன்நென்னலேவாய்நேர்ந்தான்
தூயோமாய்வந்தோந்துயிலெழப்பாடுவான்
வாயால்முன்னமுன்னம்மாற்றாதேயம்மாநீ
நேயநிலைக்கதவநீக்கேலோரெம்பாவாய்.

(பதவுரை.)

நாயகனாய்நின்ற - எங்களுக்கு ஸ்வாமியாயிருக்கிற	மணிவண்ணன் - நீலரத்நம்போன்ற திருநிறத்தையுடைய ஸர்வேசுவரன்
நந்தகோபனுடைய - ஸ்ரீநந்தகோபனுடைய	நென்னலே - நென்னேற்றே
கோயில் - திருமாளிகையை	வாய்நேர்ந்தான் - திருவாய்மலர்ந் தருளினன்
காப்பானே - காக்குமவனே	தூயோமாய் - அநந்யப்பிரயோஜநராய்
கொடி - துகில்கொடிகள்	வந்தோம் - வந்திருக்கிறோம்
தோன்றும் - விளங்குகிற	துயிலெழ - பள்ளியுணர்ந்தருள
தோரணவாயில் - தோரணங்கள் கட்டியிருக்கிற திருவாசலை	பாடுவான் - பாடுவதற்கு
காப்பானே - காக்குமவனே!	வாயால் - உன்வாயாலே
மணிக்கதவம் - அழகியகதவினுடைய	முன்னம் முன்னம் - முதல் முதலிலே
தாள்திறவாய்-தாழ்ப்பாளைத்திறந்து (உள்ளே புகரவிடவேணும்)	மாற்றாதே - மறுக்காதே
ஆயர் - ஒன்றுமறியாத ஆய்க்குலத்துப்பிறந்த	அம்மா - ஸ்வாமி
சிறுமியரோமுக்கு - சிறுபெண்களான எங்களுக்கு	நீ - நீயே
அறை-சப்தம்செய்கிற	நேசம் - சேர்ந்திருக்கிற
பறை - பறை (தருகிறோமென்று)	நிலை - நிலையையுடைய
மாயன் - ஆச்சரியகுணசேஷ்டிதனை	கதவம் - கதவையும்
	நீக்கு - திறக்கவேணும்
	எல்லோர் எம்பாவாய் - எங்கள்நோன்பு இனிது முடிகிறது.

(பொழிப்புரை.)

முற்பட உணர்ந்தவர்கள் மற்றகுமரிகளை யெழுப்பி எல்லாரும் திரண்டு ஸ்ரீநந்த கோபனுடைய திருமாளிகைக்குச்சென்று த்வாரபாலகரைப் பார்த்து எங்களுக்கு ஸ்வாமியாயிருக்கிற ஸ்ரீநந்த கோபனுடைய திருமாளிகையைக் காவல்கொண்டிருக்கும் ஸ்வாமியே! எங்களை யுள்ளேபுகர அநுமதி பண்ணவேண்டும் என்றுசொல்ல, அவரும் அநுமதி கொடுத்தபின்பேரில், அங்குநின்றும் புறப்பட்டு உள்புகுந்து இரண்டாம்வாசல் அருகேசென்று, “துகில்கொடிகள் விளங்கும் தோரணவாசலைக் காக்கும் ஸ்வாமியே! அழகிய கதவின் தாழ்ப்பாளைத் திறந்து உள்ளேபுக அநுமதி தருவாயாக” என்று கேழ்க்க அவர் இவர்களைக்கண்டு [illegible]ித்து சற்றுத் தாமதித்துநிற்க, இவர்கள் அவரைநோக்கி, நீ யோசிக்கவேண்டாம், நாங்கள் ஒன்றுமறியாத இடையர்வயிற்றிற்பிறந்த பெண்பிள்ளைகள், ஆச்சரியகுண சேஷ்டிதனை, கார்மேனிக்கண்ணன் நேற்றே இனிய ஒலிசெய்யும் பறையை எங்களுக்குத் தருகிறதாகத்திருவாய் மலர்ந்தருளினன்; அதுபற்றி அநந்யப் பிரயோஜநராய் அவனது திருப்பள்ளி

யெழுச்சியை வாயாரப் பாடுவதற்காக வந்து நிற்கின்றோம். ஸ்வாமீ! முதல்முதல் உன் வாயால் மறுக்காதிருக்கப் பிரார்த்திக்கிறோம். சாத்தி திருக்காப்புச் சேர்த்திருக்கும் கதவங்களை நீர் திறந்தருளி வழிவிடவேணும். உன் கிருபையால் எங்கள் ஒப்பற்ற நோன்பு இனி தாய்த் தலைக்கட்டுகிறது.

(ஸ்வாபதேசம்) — ஆசாரிய கடாக்ஷத்தைப் பூரணமாயடைந்த ஓர் ஸ்வாமியைநோக்கி "தானே சேஷித்வ காஷ்டையிலே நிற்கிற ஆசாரியனுடைய ஸம்பந்தத்தைச் செய்துவைக்கக் கடவ கடகரோ! என்றும், அப்பால் மற்றொருவரைப்பார்த்து, ஆசாரியனுடைய பிராவண்யம் தோற்றும்படியான திருமந்திரார்த்தின் விசாரங்களை அவனுபதேசத்தால் மனோகதமாக்கிக்கொண்டு அடியோங்களை உபதேசித்துக் காக்கும் ஸ்வாமியே! சிலாக்கியமான கேவல ஆத்துமஸ்வரூபாநுபவத்தையும், அதினால் வரும் ஸ்வஸ்வாதந்திரிய பிரவிருத்தியையும் தவிர்த்தருளவேணும்; எம்பெருமானே உபாயோபேயமென்றத்தியவஸித்திருக்கும் ஞான ஜந்மாக்களுடைய திருவம்சத்திலே பிறந்த பகவதநந்யார்ஹசேஷரான எமக்கு ஆஶ்ரித வாத்ஸல்யனான ஸ்ரீ கிருஷ்ணனே தானே புருஷார்த்தத்தைத் தந்தருளுவதாக கீதாதிகளில் முன்னமே அருளிச்செய்தான். ஆனதுபற்றி பிரயோஜநாந்தரத்தில் அபேக்ஷையில்லாமல், அவனைத் திருப்பள்ளியெழுச்சி பாடுவதற்காக வந்து நிற்கிறோம், எங்களுக்கு ஸ்வாமியாயும் கடகராயுமிருக்கிற நீர் முதல் முதல் நிஷேதிக்காமல் கிருபைசெய்து அநுகூலிக்கவேண்டும், இப்போது நீர் ஸ்வரூபவை லக்ஷணியத்தை மறைக்காதே ஸ்ரீ கிருஷ்ணனுடைய ஸேவையை எங்களுக்கு ஸகாலத்தில் செய்துவைத்தால் எங்களுடைய உத்தேசியமான பகவத் கைங்கரியரூபமான நோன்பு சுகமாகத் தலைக்கட்டுகிறது.

---

௬௧. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

௬௨. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

(கஎ) அம்பரமேதண்ணீரேசோறேயறஞ்செய்யும்
எம்பெருமாஅன்நந்தகோபாலாவெழுந்திராய்
கொம்பனார்க்கெல்லாங்கொழுந்தேகுலவிளக்கே
எம்பெருமாட்டியசோதாயறிவுறாய்
அம்பரமூடறுத்தோங்கியுலகளந்த
உம்பர்கோமானேயுறங்காதெழுந்திராய்
செம்பொற்கழலடிச்செல்வாபலதேவா
உம்பியுநீயுமுறங்கேலோரெம்பாவாய்.

(பதவுரை.)

அம்பரமே - வஸ்திரமும்
தண்ணீரே - குளிர்ந்த தீர்த்தமும்
சோறே - அடிசிலும் (ஆகியவிவற்றை)
அறம் - தர்மபுத்தியால்
செய்யும் - தானஞ்செய்யும்
எம்பெருமா அன் - எங்கள் ஸ்வாமியே!
நந்தகோபாலா - ஸ்ரீநந்தகோபரே
எழுந்திராய் . எழுந்திருக்கவேண்டும்
கொம்பு அனார்க்கு எல்லாம் - வஞ்சிக்கொம்பையொத்த பெண்களுக்கெல்லாம்
கொழுந்தே - சிறப்புற்றவளே
குலவிளக்கே - ஆயர்குலத்துக்கு மங்களதீபம் போன்றவளே
எம்பெருமாட்டி - எங்களுக்கு ஸ்வாமினியான
அசோதாய் - யசோதைப்பிராட்டியே
அறிவுறாய் - எழுந்திருக்கவேண்டும்
அம்பரம் - ஆகாசத்தையெல்லாம்
ஊடறுத்து - இடைவெளியாக்கிக்கொண்டு
ஓங்கி - பரமபதத்தளவும்செல்லவளர்ந்து
உலகு - ஸமஸ்தலோகங்களையும்
அளந்த - அளந்தருளின
உம்பர்கோமானே - தேவர்க்கு அதிபதியே
உறங்காது - கண்வளர்ந்தருளாமல்
எழுந்திராய் - எழுந்திருக்கவேணும்
செம்பொன் - சிவந்தபொன்னாற்செய்த
கழல் - வீரக்கழலணிந்த
அடி - திருவடிகளையுடைய
செல்வா - ஸ்ரீமானான
பலதேவா - பலபத்ரனே
உம்பியும் - உனக்குத் தம்பியான கண்ணபிரானும்
நீயும் - நீயும்
உறங்கேல் - தூங்காதிருக்கவேணும்
ஓரெம்பாவாய் - ஒப்பற்ற எமதுநோன்பு இனிது முடிகிறது.

(பொழிப்புரை.)

"தகுந்த ஆடைகளையும், குளிர்ந்த தீர்த்தமும், அடிசிலுமாகிய விவற்றை தர்மபுத்தியோடு எங்களுக்கு தானஞ்செய்யுகின்ற ஸ்ரீநந்தகோபரே! கிருபைசெய்து எழுந்திருக்கவேண்டும்" என்று ஆயர்சிறுமியர் பிரார்த்தித்துவிட்டு, இரண்டாங்கட்டுக்குச் சென்று, "உலகத்திலுள்ள வஞ்சிக்கொம்பையொத்த ஸ்திரீகளுக்கெல்லாம் முக்கியமாயும் எங்களுக்கு ஸ்வாமினியுமாயுமுள்ள யசோதைப்பிராட்டியே! நீ உணர்ந்தருளவேணும்" என்று அழைத்துவிட்டு அப்புறம் சென்று கண்ணனைநோக்கி "ஆகாசத்தையெல்லாம் இடைவெளி யாக்கிக்கொண்டு, பரமபதந்தளவும்செல்ல நிமிர்ந்து ஸமஸ்தலோகங்களையும் அளந்தருளின தேவாதிதேவனான கண்ணபிரானே! கண்வளர்ந்தருளுவதில் நின்றும் உணர்ந்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்துவிட்டு அப்புறம் போந்து மூத்தபிரானைப் பார்த்து "சிவந்தபொன்னாற் செய்த வீரக்கழல்களையணிந்த திருவடிகளுடன் விளங்கிய ஸ்ரீமானான பலபத்திரனே! நீயும் உன்தம்பியுங்கூட இருவரும் திருப்பள்ளியைவிட்டு உணர்ந்தருளி, எங்களைக்கடாக்ஷித்தால் நாங்கள் அபேக்ஷித்துவந்த நோன்பு இனிதாய்த் தலைக்கட்டும் என்று கோருகிறார்கள்,

(ஸ்வாபதேசம்)—"ஸர்வேசுவரனுடைய முகவிகாஸத்தையும், தத்வர்த்தகமான போக்தருத்வபுத்தி நிவ்ருத்தியையும், அதற்கு ஹேதுவான கைங்கரியத்தையும், சிஷ்யரான நமக்கு ஸ்வயம் புருஷார்த்தமாகத் தந்தருளுமவனாய், நமக்குச் சேஷியாய் நம்மை ரக்ஷிக்கிற ஆசாரியனே! நீர் உணர்ந்தருளவேணும்."

ஸம்ஸாரிகளுடைய அபிமானத்துக்கு அநுரூபமாக ஈசுவரன் அமைத்து வைத்திருக்கிற மந்திரங்களுக்கெல்லாம் ஶ்ரேஷ்டமாய் பிரபன்ன ஜனகோஷ்டிக்குப் பிரகாசகமாய் எங்களுக்கு நிருபாதிக புருஷகாரமாய் நின்று, ஸகலாதிசயத்தையும் தரும்படியான திருமந்திரமே, உனது உட்பொருளை உள்ளபடி எங்களுக்குப் பிரகாசிக்கும்படி அநுகரிக்கவேணும்.

"நிரீசுவரவாதிகள் அடியுடனற்றுப்போம்படி, தன்னுடைய ஸ்வரூபம் ஓங்கி யுயர்ந்துவிளங்க இவ்விபூதி யனைத்தையும் தனது திருவடிக்குள்ளாக்கி, நித்தியசூரி நிர்வாஹகனாய் எழுந்தருளியிருக்கும் புருஷோத்தமனே! அநாத்ய வித்யாதமஸ்ஸில் முழுக்கிடக்கும் எங்கள் தூக்கத்தை நிவர்த்திக்க நீ உணர்ந்தருளவேணும்" "ஸ்வசேஷத்வத்திலே பகவத் சேஷத்வம் அந்தர்கதமாம்படி யிருக்கும் பகவதேவனே! உனக்கு பவ்யனான ஶ்ரீகிருஷ்ணனும், அவனுக்கு பவ்யனான நீயும் கிருபைசெய்து பள்ளி யுணர்ந்தருளி கடாக்ஷித்தால், எங்களுடைய முக்கியோத்தேசமான பகவத்கைங்கரியரூப நோன்பு இனிது தலைகட்டும்" என்று பாகவதர்கள் அனைவரும் கூடிப் பிரார்த்திக்கிறார்கள்.

---

௩௩. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

௩௪. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

(கஅ) உந்துமதகளிற்றனோடாததோள்வலியன்
நந்தகோபாலன்மருமகளேநப்பின்னாய்
கந்தங்கமழுங்குழலீகடைதிறவாய்
வந்தெங்குங்கோழியழைத்தனகாண்மாதவிப்
பந்தல்மேல்பல்காற்குயிலினங்கள்கூவினகாண்
பந்தார்விரலியுன்மைத்துனன்பேர்பாடச்
செந்தாமரைக்கையாற்சீரார்வளையொலிப்ப
வந்துதிறவாய்மகிழ்ந்தேலோரெம்பாவாய்.

(பதவுரை.)

உந்து - பெருகுகின்ற
மதம் - மதநீரையுடைய
களிற்றன் - யானைபோன்றவலிமையையுடையராய்
ஓடாத - பின்வாங்காத
தோள்வலியன் - புஜபலத்தையுடையரான
நந்தகோபாலன் - ஸ்ரீநந்தகோபருடைய
மருமகளே - மருமாட்டியே
நப்பின்னாய் - பின்னைப்பிராட்டியே
கந்தங்கமழும்குழலி - பரிமளம்வீசுங் கூந்தலை யுடைய
கடைதிறவாய் - கதவைத்திறவாய்
வந்தெங்கும் - நாற்புறத்திலும் வந்துகொண்டு
கோழி - கோழிகளானவை
அழைத்தனகாண் - கூவாநின்றன
மாதவி - குருக்கத்திக்கொடிகளாகிய
பந்தல்மேல் - பந்தல்மேல் (உறங்குகிற)
பல்கால் - இடைவிடாமல்
குயிலினங்கள் - குயில்கூட்டங்கள்
கூவினகாண் - கூவாநின்றன
பந்தார் - பந்தையுடைய
விரலி - விரல்களையுடையவளே
உன்மைத்துனன் - உனது நாயகனுடைய
பேர்பாட - திருநாமங்களைக் கீர்த்தனஞ்செய்ய
செந்தாமரை - செந்தாமரை மலர்போன்ற
கையால் - கைகளால்
சீர்ஆர்வளை - அழகுமிக்க கடகம்முதலிய தோள்வளைகள்
ஒலிப்ப - சப்திக்கும்படி
வந்து - நடந்துவந்து
திறவாய் - திறக்கவேண்டும்
மகிழ்ந்து - களித்து
ஏல் ஓர் - ஏற்றலைப்பற்ற
எம்பாவாய் - நம்மநோன்பு முடிகிறது.

(பொழிப்புரை.)

மதநீர் பெருகுகின்ற யானைபோன்ற வலிமையையுடையராய், பகைவர் படையைக் கண்டு பின்வாங்காத புஜபலத்தையுடையரான ஸ்ரீநந்தகோபருடைய மருமாட்டுப்பெண்ணாய், பரிமளம் வீசுகின்ற கூந்தலையுடைய நப்பின்னைப்பிராட்டியே! வந்து கதவைத்திறவாய், கோழிகள் நான்குபுறத்திலும் வந்து கூவாநின்றன; அன்றியும், குருக்கத்திக் கொடிப்பந்தல் மேல் சுகமாய் உறங்குகிற குயில்கூட்டங்களும் கூவாநின்றன. பந்தெடுத்துப் பிரியமாய் விளையாடுங் கையையுடையவளே! உனதுநாயகனான ஸ்ரீகிருஷ்ணனுடைய திவ்யநாமங்களை ஸங்கீர்த்தனம் பண்ணவேணுமாதலால், நீ வந்து உன்னுடைய அழகுமிக்க தோள்வளைகள் ஒலிக்கும்படி செந்தாமரை மலர்போன்ற கைகளால் கதவைத்திறவாய், நாமெல்லாரும் சந்தோஷசித்தராய் கண்ணன் திருநாமங்களைப் பாடினோமானால் நம்முடைய நோன்பு இனிது நிறைவேறுகிறது.

(ஸ்வாபதேசம்)—உன்மஸ்தகமான அகங்காரத்தை வெல்லும்படியான ஞானபலத்தையுடைய ஆசார்யனுக்கு மருமகளென்று சொல்லலாம்படியான நப்பின்னைப்பிராட்டியே! ஸர்வேச்வரனை ஆச்ரிதரக்ஷணத்திலே மூட்டி, அவனை யெல்லாரும் கொண்டாடும்படி செய்கிற பிராட்டியே! உங்கள் இருவர் சேர்த்தியை நாங்களனுபவிக்கும்படி எங்கள் அஜ்ஞானத்தை நீ நீக்கியருளவேணும். ஸத்வோத்தர காலமாகையால் பாகவதர்கள் பகவத்கைங்கர்யார்த்தமாய் ஒருவரை யொருவர் எழுப்புகிறார்கள். வேதாந்தங்களிலே, வேதாந்தார்த்தங்களை யநுபவிக்கும் பரமபாகவதர்கள், ஸத்வம் தலையெடுத்தபின்பும் உன்னைக் காணாமையால் பலதடவை கூப்பிடுகிறார்கள் ஒரு கையால் சேதநவர்க்கத்தையும் மற்றொரு கையால் ஈச்வரனையும் அணைத்துக் கொண்டு இருக்கும் திருவே! நிரதிசய பிரேமத் தத்வமுடைய ஞானத்தால் பகவத்ஸம்பந்த ஸூசகமான அநந்த ரஹஸ்யார்த்தங்கள் பிரகாசிக்கும்படி ஸ்வரூபோபாய புருஷார்த்த விரோதி விஷயமான அஜ்ஞானத்தைப் போக்கியருளவேணும்; எங்களுடைய இந்தக் கோரிக்கையின்படி நீ மகிழ்ந்து திருவுளம்பற்றினால் நமது பகவத் கைங்கர்யரூபமான நோன்பு இனிது நிறைவேறுகிறது.

---

௫௫. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

௫௬. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

(கக) குத்துவிளக்கெரியக்கோட்டுக்காறக்கட்டின்மேல்
மெத்தென்றபஞ்சசயனத்தின்மேலேறி
கொத்தலர்பூங்குழல்நப்பின்னைகொங்கைமேல்
வைத்துக்கிடந்தமலர்மார்பாவாய்திறவாய்
மைத்தடங்கண்ணினாய்நீயுன்மணாளனை
எத்தனைபோதுந்துயிலெழவொட்டாய்காண்
எத்தனையேலும்பிரிவாற்றகில்லாயால்
தத்துவமன்றுதகவேலோரெம்பாவாய்.

(பதவுரை:)

குத்துவிளக்குஎரிய - நிலைவிளக்குகள் நாற்பக்கமு மெரிய
கோடுகால் - யானைத்தந்தத்தாற்செய்த கால்களையுடைய
கட்டில்மேல் - கட்டிலின்மேலே
மெத்துஎன்ற - மிருதுவான
பஞ்சசயனத்தின்மேல்ஏறி - ஐவகையான மெத்தைமேலாரூடனாய்
கொத்துஅலர்பூகுழல் - கொத்தாய் அலர்ந்த பூக்கள் சூட்டிய திருக்கூந்தலையுடைய
நப்பின்னைகொங்கைமேல் வைத்துக்கிடந்த - நப்பின்னைப்பிராட்டியினுடைய ஸ்தனங்களை தன்மேலே வைத்துக்கொண்டு திருக்கண் வளர்ந்தருளும்
மலர்மார்பா - அகன்றதிருமார்பை யுடையவனே
வாய்திறவாய் - திருப்பவளத்தால் யாதானும் ஒன்று அருளிச்செய்
மைதடம்கண்ணினாய் - அஞ்சன மெழுதியவிசாலமான கண்களையுடையவளே (பின்னைப்பிராட்டியே)
நீஉன் மணாளனை - நீ உனதுநாயகனான கண்ணபிரானை
எத்தனைபோதும் - ஒருக்ஷணகாலமாவது
துயில்எழவொட்டாய்காண் - தூக்கத்தைவிட்டு எழுந்திருக்க வொட்டுகிறதில்லை
எத்தனையேலும் - ஒருக்ஷணமாவது (கொஞ்சமாவது)
பிரிவு - அவனைப்பிரிந்து
ஆற்றகில்லாயால் - பொறுக்கமாட்டாத நப்பின்னைப்பிராட்டியே
தத்துவம்அன்று - (இப்படிச்செய்வது) உன் ஸ்வரூபத்துக்கு அநுரூபமன்று
தகவு (அன்று) - உன்ஸ்வபாவத்துக்கும் ஒத்ததல்ல
ஏல்ஓர் - தக்கதைப்பற்று
எம்பாவாய் - எம்முடைய நோன்பு இனிது முடிகிறது.

(பொழிப்புரை.)

நிலைவிளக்குகள் நாற்புறமும் எரிந்து கொண்டிருக்க, யானைத்தந்தத்தால் அமைத்த கால்களையுடைத்தான பர்யங்கத்தின்மேலே, இட்டிருக்கும் மிருதுவான இலவம்பஞ்சு முதலிய பஞ்சுகளாலமைத்த ஐவகைப்பட்ட மெத்தையின்மேல் ஆரூடனாய், கொத்துக்கொத்தாய் அலர்கிறமலர்களைச் சூட்டிய திருக்கூந்தல்களையுடைய நப்பின்னைப்பிராட்டியின் ஸ்தநங்களைத்தன் மேலேவைத்துக்கொண்டு, திருக்கண்வளர்ந் தருளுகிறவனாய், விசாலமான வக்ஷஸ்தலத்தையுடைய கண்ணபிரானே! உனது திருப்பவளந்திறந்து ஒருவார்த்தை அருளிச்செய்யாய். மைதீட்டிய விசாலமான கண்களையுடைய நப்பின்னைப்பிராட்டியே! ஒருக்ஷணமாவது அவனைப்பிரிந்து நீ சஹிக்கமாட்டாய் ஆதலால், நீ உனது நாயகனான கண்ணபிரானை ஒருக்ஷணமாவது படுக்கைவிட்டு நீங்கும்படி இடங்கொடுப்பதில்லை. நீ இப்படிச்

செய்வது உனது ஸ்வரூபத்துக்கும் ஸ்வபாவத்துக்கும் ஒத்ததல்ல ஆகையால் அவனை யெழுப்பியெங்களுக்கு நியமித்த பறையைத்தரும்படி செய்தால் எங்களுடைய இந்நோன்பு சுகமாய் நிறைவேறுகிறது.

(ஸ்வாபதேசம்)—ஸர்வஜ்ஞத்வமானது பிரஜ்வலிக்க, அகங்காரகாரியமாகிய நால்வித கர்த்ருத்வங்கள் (அதாவது - சேஷத்வே கர்த்ருத்வம், ஜ்ஞாத்ருத்வே கர்த்ருத்வம், கர்த்ருத்வே கர்த்ருத்வம், போக்த்ருத்வே கர்த்ருத்வம்) ஆகிற நான்கு கால்களையுடைத்தாய், அந்தகர்த்ருத்வ விஷயமான தர்மார்த்தகாம மோக்ஷங்களாகிற பட்டங்களாற் செவ்வையாய் இசைத்துக்கட்டப்பட்டு இருக்கும் லீலாவிபூதியாகிய கட்டில்மேல், மேற்சொன்ன கர்த்ருத்வ ராஹித்யத்தாலே மஹாமிருதுவான அர்த்தபஞ்சக ஜ்ஞானத்தால் திணித்த முமுக்ஷுக்களுடைய ஹ்ருதயமாகிற படுக்கையிலே திருக்கண் வளர்ந்தருளுமவனே! திருவாய்மலர்ந்தருளி ஒருவார்த்தை யாகிலும் தந்தருளவேணும்" என்று பாகவதர்கள் பிரார்த்திக்க, கண்ணபிரான் ஒருவிதபதிலும் சொல்லாம லிருப்பதைக்கண்டு, தங்கள்மனதில், தாம் க்ரமம் தப்பிப்போனதாகத் தெரிந்துகொண்டு, புருஷகாரபூதையான பிராட்டியை முன்னிட்டல்லவா போகவேணுமென்று நிச்சயித்துப் பிராட்டியைநோக்கி "சுத்தஸத்வத்தால் விஸ்ருங்கலமாய் விளங்கும் ஸ்வரூப யாதாத்ம்ய ஜ்ஞானமுடைய பிராட்டியே! நீ கொஞ்சமாவது ஸ்வாமியை விட்டுப்பிரிய சம்மதிக்கிறதேயில்லை; ஏனென்றால் அவனைப்பிரிதலைக் கொஞ்சமும் நீ ஸஹிக்கமாட்டாய் ஆதலால் இது உனக்கு உன் விஷயத்தில் குற்றம் அன்று; ஆகிலும் புருஷகாரபூதையான நீ எம்பெருமானை நம்மோடே சேரவொட்டாமற் பண்ணுகை யுனக்கு ஸ்வரூபமன்று, ஆகையால் அவனை நீ எங்களுடன் சேரும்படி செய்து உபகரித்தருளினால், நம்முடையபகவத்கைங்கரிய ரூபமான நோன்பு இனிது முடிகிறது.

---

௩௭. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

௩௮. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

(௨௰) முப்பத்துமூவரமரர்க்குமுன்சென்று
கப்பந்தவிர்க்குங்கலியேதுயிலெழாய்
செப்பமுடையாய்திறலுடையாய்செற்றார்க்கு
வெப்பங்கொடுக்கும்விமலாதுயிலெழாய்
செப்பன்னமென்முலைச்செவ்வாய்ச்சிறுமருங்குல்
நப்பின்னைநங்காய்திருவேதுயிலெழாய்
உக்கமுந்தட்டொளியுந்தந்துன்மணாளனை
இப்போதேயெம்மைநீராட்டேலோரெம்பாவாய்.

(பதவுரை.)

முப்பத்துமூவர் - முப்பத்துமூன்று வகையரான
அமரர்க்கு - தேவர்களுக்கு
முன்சென்று - துன்பம்வருவதற்கு முன்னமேபோய்
கம்பம்தவிர்க்கும் - அவர்கள் நடுக்கத்தை போக்கத்தக்க
கலியே - மிடுக்குஉடையவனே
துயில்எழாய் - பள்ளியுணரவேணும்
செப்பம் உடையாய் - ருஜுவானநிலைமை யுடையவனே!
திறலுடையாய் - ஆச்ரிதர் விரோதிகளைத்தொலைக்கும் வலியையுடையவனே!
செற்றார்க்கு - அவர்பகைவர்க்கு
வெப்பம் கொடுக்கும் - துன்பத்தை யுண்டாக்கும்
விமலா துயிலெழாய் - பரிசுத்தனே உணர்ந்தருளவேணும்
செப்புஅன்ன - பொற்கலசத்தையொத்த
மென்முலை - மிருதுவான ஸ்தநங்களையும்
செவ்வாய் - பவளம்போற் சிவந்தவாயையும்
சிறுமருங்குல் - நுண்மையான இடையையுமுடைய
நப்பின்னை நங்காய் - நப்பின்னையென்ற பெயரையுடைய சிறந்தவளாய்
திருவே - பெரியபிராட்டியையொத்தவளே
துயில்எழாய் - நித்திரைவிட்டெழுந்து வரவேணும்
உக்கமும் - ஆலவட்டமும்
தட்டொளியும் - கண்ணாடியையும்
தந்துஉன்மணாளனை - கொடுத்து உன்னுடைய நாயகனை கண்ணனையும்
இப்போதே - இப்போதே
எம்மை - எம்மையும்
நீராட்டு - வாசனைத்தடத்திலே முழுக்காட்டவேணும்
ஏல் ஓர் - [illegible]
எம்பாவாய் - எமதுநோன்பு முடிகிறது.

(பொழிப்புரை.)

முப்பத்துமூன்று வகையரான தேவர்களுக்குத் துன்பம் வருவதற்கு முன்னமே அவர்கள் நின்றவிடம் சென்று அவர் நடுக்கத்தைப் போக்கத்தக்க மிடுக்குடைய கண்ணனே! நாங்கள் கண்டுவாழும்படி திருப்பள்ளியுணர்ந்தருளவேணும்; ஆச்ரிதரைக்காக்குமவனாய் அவர்கள் விரோதிகளையடக்கி அவர்களுக்குக் கொடுந்துன்பத்தைக் கொடுக்குமவனான பரிசுத்த ஸ்வரூபனே! பள்ளியெழுந்தருளவேணும், பொற்கலசத்தையொத்த மிருதுவான ஸ்தநங்களையும் பவளம்போற்சிவந்த வாயையும் நுண்ணிதான இடையையுமுடையவளாய், பெரியபிராட்டிபோன்ற நப்பின்னைப்பிராட்டியே! துயிலெழுந்து வரவேணும் ஆலவட்டத்தையும் கண்ணாடியையும் கொடுத்து உன்னுடைய மணவாளனான கண்ணனையும் விரஹத்தால் மெலிந்த சரீரமுடைய எங்களையும் இப்போதே நீராட்டிவைக்கவேண்டும். நீ கிருபைசெய்தருளி இந்த நீராட்டத்துக்கு உதவினால் அதினாலேயே எங்கள் நோன்பு தலைக்கட்டுகிறது.

(ஸ்வாபதேசம்)—அசங்க்யாதராயும், ஞானஸங்கோசரஹிதராயுமுள்ள பாகவதர்களுக்கு பிரகிருதி சம்பந்தத்தால் ஒருக்கால் வரக்கூடிய ஞானசங்கோச பீதியை, முதலிலேயே சென்று போக்கடிக்கும் ஸாமர்த்தியமுள்ள ஸர்வேசுவரனே! நீ பள்ளியுணர்ந்து ஸேவைஸாதித் தருளவேணும். நிஷ்பக்ஷபாதியாயிருக்குமவனே! அநாஸ்ரிதர்க்குக் கிட்டவொண்ணாதவனே! பாகவதர்க்குபயஹேதுவான விரோதிகளுக்கு நடுக்கத்தைக்கொடுக்கும் சக்தியோகத்தை யுடையவனே! உணர்ந்தருளவேணும் என்று பாகவதர்களெல்லாருங்கூடி அழைத்தும், மறுமாற்றம் கொடாதிருந்ததைக்கண்டு, பிராட்டியை எழுப்புகிறார்கள். பகவத்விஷயக்ராஹகமாயும், தத்விஷயவிரஹாஸஹிஷ்ணுவாயும் இருக்கிற பரமபக்தியையும், அவனுக்கு மிகவும் யோக்யமாயிருந்துள்ள ஸௌந்தரியத்தையும், விஷயாந்தர வைராக்கியத்தையும் உடையபுருஷகார பூதையான பெரியபிராட்டியாரே! நீர் பள்ளி யெழுந்தருளவேணும்; கைங்கரியத்தில் எமக்கு அகங்கார மமகார நிவிருத்தியும், யதாவஸ்தித சொரூபஞானமும் உண்டாக்கி இவ்விரண்டையும் முன்னிட்டுக்கொண்டு ஸர்வேசுவரனை ஸ்ரீகிருஷ்ணனை யெழுப்பி யவனை அவனையும் எங்களையும் இப்போது ஸம்சிலேஷியாக்கவேணும்; அப்படி பண்ணியருளினால் எங்களுடைய பகவத்கைங்கரியரூபமான நோன்பு சுகமாய்த் தலைக்கட்டுகிறது.

---

௩௯. [illegible]

௪௦. [illegible]

(உக) ஏற்றகலங்களெதிர்பொங்கிமீதளிப்ப
மாற்றாதேபால்சொரியும்வள்ளற்பெரும்பசுக்கள்
ஆற்றப்படைத்தான்மகனேயறிவுறாய்
ஊற்றமுடையாய்பெரியாயுலகினில்
தோற்றமாய்நின்றசுடரேதுயிலெழாய்
மாற்றாருனக்குவலிதொலைந்துன்வாசற்கண்
ஆற்றாதுவந்துன்னடிபணியுமாபோலே
போற்றியாம்வந்தோம்புகழ்ந்தேலோரெம்பாவாய்.

(பதவுரை.)

ஏற்ற - சுரந்தபாலையேற்ற
கலங்கள் - பாத்திரங்களெல்லாம்
எதிர்பொங்கி - எதிரேபொங்கி
மீதளிப்ப - மேலேவழியும்படியாக
மாற்றாதே - இடைவிடாதே
பால்சொரியும் - பாலைச்சுரக்கும்
வள்ளல்பெரும்பசுக்கள் - சாதுவானபருத்த பசுக்களை
ஆற்ற - எண்ணிறந்தனவாக
படைத்தான் - உடைத்தான ஸ்ரீநந்தகோபருடைய
மகனே - குமாரனே
அறிவுறாய் - திருப்பள்ளியுணரவேணும்
ஊற்றமுடையாய்-வேதப்ரமாணத்தியனாய்
பெரியாய் - வேதத்தாலுமறியமுடியாதபடி பெரியவனாய்
உலகினில் - லோகத்திலே
தோற்றமாய்நின்ற - ஆசிரிதபரதந்தரனாய் விளங்குகிற
சுடரே - தேஜோரூபனானவனே
துயில்எழாய் - திருப்பள்ளியுணரவேணும்
மாற்றார் - சத்ருக்கள்
உனக்கு - உனதுவலிமையைக்கண்டு
வலிதொலைந்து - தங்கள் பலமிழந்து
உன்வாசற்கண் - உன்வாசலிலே
ஆற்றாது வந்து - எதிர்நிற்க மாட்டாமல் வந்து
உன் அடி - தேவரீருடையதிருவடிகளிலே
பணியுமாபோலே - விழுமாப்போலே
போற்றி - மங்களாசாஸனம் பண்ணிக்கொண்டு
யாம் - அடியோம்
வந்தோம் - வந்தாஶ்ரயித்தோம்
புகழ்ந்து - துதித்து
ஏல் ஓர் - தக்க ஒப்பற்ற
எம்பாவாய் - எமதுநோன்பு இனிது முடிகிறது.

(பொழிப்புரை.)

சுரந்தபாலை நிறைந்த பாத்திரங்களெல்லாம் எதிர்த்துப்பொங்கி மேலே வழியும்படியாக, இடைவிடாமல் பாலைச்சொரியா நிற்பனவாய், சிறுவருங்கூட அணையும்படியான சாதுக்களாயுள்ள பருத்த ஆநிரைகளை யதேஷ்டமாயுடைய ஸ்ரீநந்தகோபருடையகுமாரனே! திருப்பள்ளியுணரவேணும். மறைகளாலு மளவிட்டறியமுடியாத அகாதமான ஞானத்தையும், மகிமையையும் உடையவனே! உலகத்தில் ஸ்வாஸ்ரீதரானவர்க்குப் பரதந்திரனாய் விளங்கும் தேஜோரூபியானவனே! திருப்பள்ளியுணரவேணும். சத்ருக்களானபேர்கள் உன் வலிமையைக்கண்டு, அஞ்சி தங்கள் வலிமாண்டுபோய் ஸஹியாது உன்வாசலில் வந்து உனது திருவடிகளிலே விழுமாப்போலே, தாஸபூதரான நாங்களும் உன்னை மங்களாசாஸனம் பண்ணிக்கொண்டு வந்து ஆச்ரயித்து நிற்கிறோம்; நேரில் ஸேவித்து தேவரீரைப் போற்றினால் எங்களுடைய நோன்பு சுகமாய்த் தலைக்கட்டுகிறது.

(ஸ்வாபதேசம்)—ஆசாரியருடைய ரஹஸ்யார்த்தோபதேசத்தால் பரிபூர்ணஞானம் பெற்ற சிஷ்யர்கள், அவருக்கே யுக்த்யுபதேசம் பண்ணத்தக்க சாமர்த்தியமுள்ளவராகவே, அந்தச் சிஷ்யசம்பத்தைக்கண்டு மிகவு மகிழ்ந்து ரஹஸ்யங்களின் மகிமையைக் கொண்டாடும் ஸதாசாரியனுக்குப் புத்ரனைப் போல விதேயனானவனே! தேவரீர் பிரபோதத்தை யடையவேணும். சாப்தப் பிரமாணாதிகளாலே ஸித்தனானவனே! அபரிச்சின்ன ஸ்வரூபரூபகுண விபூதியுடையவனே! இவ்வுலகத்துள்ளா ரனைவரும் கண்ணாரக்கண்டு ஸேவித்துக் களிக்கும்படி அவதரித்தருளின ஒண்சுடர் மற்றையே! எங்களுடைய ரக்ஷண விஷயத்தில் உத்யோகித்தருளவேணும். உலகத்துள் பல பராக்கிரமத்தில் தமக்கு யாரும் ஈடில்லையென்று அகங்காரங் கொண்டிருக்கும் உம்முடைய லௌகிக சத்துருக்கள், உம்முடைய ஒப்பற்ற வலிமையைக்கண்டு மனமடங்கி உனது திருவடியே சரணமென்று பற்றுமாப்போலே, அடியோங்களும் உம்முடைய நிருபாதிக சேஷித்வத்துக்குத் தோற்று, தேஹாத்மாபிமானத்தையும், ஸ்வஸ்வா தந்த்ரியத்தையும், அந்யசேஷத்வத்தையும், ஸ்வாதீன கர்த்ருத்வ போக்த்ருத்வங்களையும், உபாயோபேயாந்தரங்களையும்விட்டு, நீயே ஸமஸ்த பிராப்ய பிராபகங்களுமென்று, உனது திருவடிகளைத் துதித்து மங்களாசாஸம்பண்ணிக்கொண்டு, ஆச்ரயிக்கிறோம். இப்படி சரணாகதரான எங்களை நீர் கிருபைபண்ணி இரக்ஷித்தால் நம்முடைய பகவத் கைங்கர்யரூபமான நோன்பு சுகமாய்த் தலைக்கட்டுகிறது.

---

௪௧. [illegible]

௪௨. [illegible]

(௨௨) அங்கண்மாஞாலத்தரசரபிமான
பங்கமாய்வந்துநின்பள்ளிக்கட்டிற்கீழே
சங்கமிருப்பார்போல்வந்துதலைப்பெய்தோம்
கிங்கிணிவாய்ச்செய்ததாமரைப்பூப்போலே
செங்கண்சிறிச்சிறிதேயெம்மேல்விழியாவோ
திங்களுமாதித்தனுமெழுந்தாற்போல்
அங்கணிரண்டுங்கொண்டெங்கண்மேனோக்குதியேல்
எங்கண்மேற்சாபமிழிந்தேலோரெம்பாவாய்.

(பதவுரை.)

அம்கண் மாஞாலத்து - அழகிதாய் விசாலமாய்ப் பெரிதாயிருக்கும் பூமியை
அரசர் - (ஆண்ட) ராஜாக்களானவர்
அபிமானபங்கமாய் வந்து - கர்வத்தை விட்டு வந்து
நின்பள்ளிக்கட்டிற்கீழே - உனது சிங்காசனத்தண்டை
சங்கம் இருப்பார்போல் - கூட்டங்கூட்டமாயிருக்கும்போல
வந்து - கீழ்ப்பட்ட அவஸ்தையையுடையராய் இருப்படி
தலைப்பெய்தோம் - கூட்டங்கூடினோம்
கிங்கிணீ - சதங்கைபோல
வாய்ச்செய்த - அரைவாசிமலர்ந்த
தாமரைப்பூப் போலே - தாமரைப் புஷ்பத்தைப்போன்ற
செம்கண் - சிவந்திருக்கிற திருக்கண்களை
சிறிச்சிறிதே - கொஞ்சங்கொஞ்சமாக
எம்மேல்விழியாவோ - ஆஸ்ரிதரானவெங்கள் பக்கல் விழிக்கலாகாதோ?
திங்களும் ஆதித்தனும் - சந்திரனும் சூரியனும்
எழுந்தாற்போல் - உதித்தாற்போலே
அம் கண் இரண்டும்கொண்டு - அழகிதான இரண்டு கண்களாலே
எங்கள்மேல் - எங்கள் விஷயத்திலே
நோக்குதியேல் - கடாக்ஷிப்பாயானால்
எங்கள்மேல் - எங்களுடைய (அநுபவித்தே தீரவேண்டிய)
சாபம் - வியஸனம் (வல்வினை)
இழிந்து - கழிந்துபோக
ஏல் ஓர் - தக்க ஒப்பற்ற
எம்பாவாய் - எமது நோன்பு இனிது முடிகிறது.

(பொழிப்புரை.)

ஆயர்குலக்கொழுந்தான கண்ணபிரானே! அழகிதாயும் விசாலமாயும் பெரிதாயுமுள்ள இப்பூமியை ஆண்ட மன்னவர்கள், 'நமக்கு மேற்பட்டவரில்லை' யென்ற அபிமானத்தைவிட்டு வந்து தேவரீருடைய ஸிம்ஹாஸனத்தின் கீழ் திரள்திரளாகக்கூடி ஓலக்கமாக இருக்குமாப்போலவே, நாங்களும் பட்டவர்த்தமெல்லாம் திரும்படிவந்து உன்னை ஆச்ரயித்தோம். எங்கள் மாணிக்கச்சோதியே! கிண்கிணியைப்போல் அரைவாசிமலர்ந்த தாமரைப்பூப்போலே, வாத்ஸல்யத்தால் சிவந்திருக்கிற உன் திருக்கண்கள் கொஞ்சங்கொஞ்சமாக எங்கள் பக்கல் விழிக்கலாகாதோ? சந்திரனும் சூரியனும் உதித்தாற்போல், அழகிதான இரண்டுகண்களாலும் எங்கள் பக்கல் கடாக்ஷிப்பாயாகில் எங்கள் வியஸனம் எல்லாந் தீர்ந்துபோகவே, எம்முடைய நோன்பும் இனிது முடிகிறது.

(ஸ்வாபதேசம்) — இந்தப் பூமண்டலமனைத்தையும் தன்னது தன்னது என்று அபிமானங் கொண்டிருந்த மன்னர் மன்னவர்கள், அனைவரும் சக்தியொடுங்கி அவ்வபிமானத்தை யிழந்து உனது திருப்பள்ளிக்கட்டிற்கீழே கூட்டம்கூட்டமாய் சரணம்புகுந்து இருப்பதுபோலே, நாங்களும் அகங்கார

மகங்காரங்களைவிட்டு, உன்னைவந்து ஆஶ்ரயித்தோம். ஸர்வலோகசரண்யனான ஸ்ரீ கிருஷ்ணனே! எங்கள் அஞ்ஞானத்தைப் போக்கும்படியான உனது கடாக்ஷம் எப்போது பிறக்குமோ! என்றேங்கிக்கிடக்கிற எங்களிடத்தில் கொஞ்சங்கொஞ்சமாயாவது நீர் கடாக்ஷிக்கவேண்டும். பூர்ணகடாக்ஷம் பண்ணைப் பெற்றோமேயானால் எங்களுக்கு தேகாத்மாபிமானம் நீங்கும், சேஷத்வஞானமுண்டாம், அதன்பின் உபாயாந்தரங்களை விடுதல் உண்டாம், பிறகு, ஸ்வவியாபாரத்தில் ஸ்வாதீனகர்த்ருத்வஞானம் நீங்கும், பிறகு, ஸர்வேசுரனை உனது கலியாணகுணங்களை யனுபவிப்பதும் உண்டாம். இப்படிக்கிருபை செய்து உன்னிடத்தில் பரமபக்தி யுண்டாகும்படி பூர்ணகடாக்ஷமும் செய்தருளினால் அவசியாநுபாவ்யமான பகவத்விச்லேஷ வியஸனமானது நீங்கி எங்களுடைய பகவத்கைங்கரிய ரூபமான நோன்பு ஸாங்கமாய் நிறைவேறுகிறது.

௪௩. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

௪௪. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

(௨௩) மாரிமலைமுழைஞ்சின்மன்னிக்கிடந்துறங்கும்
சீரியசிங்கமறிவுற்றுத்தீவிழித்து
வேரிமயிர்பொங்கவெப்பாடும்பேர்ந்துதறி
மூரிநிமிர்ந்துமுழங்கிப்புறப்பட்டுப்
போதருமாபோலேநீபூவைப்பூவண்ணாவுன்
கோயினின்றிங்ஙனேபோந்தருளிக்கோப்புடைய
சீரியசிங்காதனத்திருந்துயாம்வந்த
காரியமாராய்ந்தருளேலோரெம்பாவாய்.

(பதவுரை.)

மாரி - மழைகாலத்தில்
மலைமுழைஞ்சில் - பர்வதகுகையிலே
மன்னி - (ஆணும்பெண்ணும்) ஒட்டிக்கொண்டு
கிடந்து உறங்கும் - படுத்துத்தூங்குகிற
சீரிய சிங்கம் - வீரியமுள்ள சிங்கமானது
அறிவு உற்று - விழித்துக்கொண்டு
தீவிழித்து - நெருப்புப்பொறி சிந்தும்படி கண்களால்பார்த்து
வேரிமயிர் - உளைமயிரானது
பொங்க - சிலும்பும்படி
எப்பாடும் - நாலுபக்கத்திலும்
பேர்ந்து உதறி - சரீரத்தை உதறிக்கொண்டு
மூரிநிமிர்ந்து - சோம்பல் முறித்து
முழங்கி - சப்தித்துக்கொண்டு
புறப்பட்டு - குகையினின்றும் வெளிப்பட்டு
போதருமாபோலே - வருகின்றதுபோல்
நீ பூவைப்பூவண்ணா - காயாம்பூவைப்போன்ற நிறத்தை யுடையவனே நீ
உன் கோயில்நின்று - உனது திருமாளிகையை விட்டு
இங்ஙனே - இந்தமணிமண்டபத்துக்கு
போந்துஅருளி - எழுந்தருளி
கோப்பு உடைய - மகிமைதங்கிய
சீரியசிங்காதனத்து - நினைத்தகாரியம் முடிக்கத்தக்க, சிங்காசனத்திலே
இருந்து - எழுந்தருளியிருந்து
யாம்வந்த - அடியோம் வந்த (உத்தேசியமான)
காரியம் - காரியத்தை
ஆராய்ந்து - விசாரித்து
அருள் - கிருபைசெய்
ஏல் ஓர் - தகுதியான ஒப்பற்ற
எம்பாவாய் எமதுநோன்பு முடிகிறது.

(பொழிப்புரை.)

மழைக்காலத்திலே பர்வதகுகையிலே பேடையுந் தானும் ஒட்டிக்கொண்டு படுக்கையிற்கிடந்து உறங்குகிறதாயும், வீரத்தன்மையாகிற சீர்மையை யுடைத்தான தாயுமுள்ள சிங்கமானது, உணர்ந்துகொண்டு எதிரிகள் பக்கல் சீற்றத்தாலே நெருப்புப்பொறிகள் சிதறும்படி கண்களை விழித்துக்கொண்டும், உளைமயிரானது சிலும்பும்படிக்கு நாலுபக்கத்திலும் பெயர்ந்தும் சரீரத்தை யுதறிக்கொண்டும், நன்றாக நிமிர்ந்துகொண்டும், கர்ஜித்துக்கொண்டு, குகையினின்று புறப்பட்டு வெளியே வருமாப்போலே, காயாம்பூவைப்போன்ற திருநிறத்தை யுடையவனான கண்ணபிரானே! நீ உன்னுடைய கோயில் நின்றும் இந்த மணிமண்டபத்துக் கெழுந்தருளி, வெற்றியையும், நினைத்தகாரியத்தை முடித்துத்தரவல்ல சாமர்த்தியத்தையும் உடைத்தான சிங்காதனத்தில் எழுந்தருளியிருந்து, அநந்யப் பிரயோஜநர்களான நாங்கள் வந்தகாரியத்தை விசாரித்து கிருபைசெய்தருளவே, நாங்கள் குறித்த நோன்பு இனிது தலைக்கட்டுகிறது.

(ஸ்வாபதேசம்)—ஸர்வஸுலபனான ஸ்ரீகிருஷ்ணா! மஹாப்பிரளயம் சேர்ந்தபிறகு உலகங்களெல்லாம் தமோபிபூதமாம்படியாக, நீயொருவனே மிகு

தவனாய், வேதங்களுள் சிரோபூஷணமான உபநிஷத்பாகத்தில் யோகநித்ரை பண்ணிக்கொண்டிருந்து, நீ மறுபடி பிரபஞ்ச சிருஷ்டியுன்முகனாய், உத்யோகிக்கும்போது, காலமுணர்ந்த பிராட்டியும் அனுகவொன்னாதபடி தீக்ஷ்ணமாய் கடாக்ஷித்து, தன்னுடைய திவ்யமங்கள விக்கிரஹத்தில் கந்தம் மயிர்க்கால்வழியே எங்கும்பரிமளிக்கும்படி ஜகத்ஸ்ருஷ்டியிலே யத்நமாய் தன்னோடு அவிபக்த நாமரூபங்களாம்படி பண்ணி, இப்படிப்பட்ட ஸ்வாவயவ விசிஷ்டனான தான் தண்டாகாரமாய் நீண்டு, பிண்டாகாரமாய் நிமிர்ந்து மஹாஸம்பத்துடனே மஹதாதிரூபேண பிருகிருதியில் நின்றும் வேறுபட்டு வருமாப்போலே காயாம்பூவண்ணத்தையுடைய கண்ணனே! உன்னுடைய திவ்யாந்தஃபுரத்தினின்று வெளிப்பட்டு, த்வயமாகிற ஆஸ்தான மண்டபத்திற்கு எழுந்தருளிவந்து, ஏழுலகும்வகுத்துக்காத்து, அவரவர் நினைத்தகாரியம் தலைக்கட்டும்படியான சீர்மையையுடைய ஸிம்ஹாஸநத்திலே எழுந்தருளியிருந்து உனக்கு அநந்ய சேஷபூதரான நாங்கள் வந்தகாரியத்தை விசாரித்துக் கிருபைசெய்தால், எங்கள் ஒப்பற்ற பகவத்கைங்கரிய ரூபநோன்பு இனிது முடிகிறது.

---

௪௫. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

௪௬. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

(உச) அன்றிவ்வுலகமளந்தாயடிபோற்றி
சென்றங்குத்தென்னிலங்கைசெற்றாய்திறல்போற்றி
பொன்றச்சகடமுதைத்தாய்புகழ்போற்றி
கன்றுகுணிலாவெறிந்தாய்கழல்போற்றி
குன்றுகுடையாவெடுத்தாய்குணம்போற்றி
வென்றுபகைகெடுக்கும்நின்கையில்வேல்போற்றி
என்றென்றுன்சேவகமேயேத்திப்பறைகொள்வான்
இன்றியாம்வந்தோமிரங்கேலோரெம்பாவாய்.

(பதவுரை.)

அன்று - தேவர்கள் நொந்து கேட்டுக்கொண்ட வன்று
இவ்வுலகம் அளந்தாய் - இந்தவுலகத்தை இரண்டடியாக அளந்துகொண்ட வுன்னுடைய
அடிபோற்றி - திருவடிகளுக்கு மங்களமுண்டாகக்கடவது
சென்று அங்கு - இலங்காநகரத்துக்குச் சென்று
தென் இலங்கை - அழகிய அவ்வூரில் உள்ள துஷ்டவரக்கரை
செற்றாய் - நிரஸித்த தேவரீருடைய
திறல்போற்றி - தோள்வலிக்கு மங்களமுண்டாகக்கடவது
பொன்ற - உருமாய்ந்து போம்படி
சகடம் உதைத்தாய் - சகடாசுரனை உதைத்து நாசமாக்கின உன்னுடைய
புகழ்போற்றி - புகழுக்கு மங்களம்
கன்றுகுணிலாஎறிந்தாய் - கன்றுவடிவாய்வந்த அசுரனை எறிதடியாகக்கொண்டு எறிந்த உன்னுடைய
கழல்போற்றி - திருவடிகளுக்கு மங்களம்
குன்று - கோவர்த்தனமலையை
குடையாய் எடுத்தாய் - குடையாகத் தூக்கி ரக்ஷித்த வுன்னுடைய
குணம்போற்றி - தன்னளிக்கு மங்களமுண்டாகக்கடவது
வென்று - வெற்றிகொண்டு
பகைகெடுக்கும் - சத்துருநிரஸனம் செய்யும்
நின்கையில் வேல்போற்றி - தேவரீருடைய கையிலுள்ள வேலாயுதத்துக்கு மங்களம்
என்று என்று - இந்தப்பிரகாரமாக
உன்சேவகமே - தேவரீருடைய வீரசரிதத்தையே
ஏத்தி - துதித்து
பறைகொள்வான் - புருஷார்த்தம் பெறுவதற்காக.
இன்றுயாம் - இன்றைக்குயாம்
வந்தோம் - உன்னண்டைவந்தோம்
இரங்கு - நீ கிருபைசெய்தருளு
ஏல் ஓர் - ஒப்பற்ற
எம்பாவாய் - எமதுநோன்பு இனிது முடிகிறது.

(மொழிப்புரை.)

மஹாபலி சக்கிரவர்த்தியால் தேவர்கள் நோவுபட்டவன்று அவனிடத்தில் இவ்வுலகத்தை நீரேற்று இரண்டடியாய் அளந்துகொண்ட உனது திருவடிகளுக்குப் பல்லாண்டு; பிராட்டியைப்பிரிந்த இராவணனுடைய இலங்கை நகருட் புக்கு அங்குள்ள பொல்லா வரக்கரை நிரஸித்த தேவரீருடைய திருத்தோளின் வலிமைக்கு பல்லாண்டு; சகடாசுரனை கட்டுக்குலைந்து உருமாய்ந்து போம்படியாக உதைத்துத் தொலைத்த உன்னுடைய புகழுக்குப் பல்லாண்டு; கன்றுவடிவாய்வந்த தேனுகாசுரனை எறிதடியாகக்கொண்டு விளங்கனி வடிவாய் நின்ற வேறோரசுரன்மேல் எறிந்து அவ் இருவரையும் முடித்த உன்னுடைய குஞ்சிதத் திருவடிகளுக்கு பல்லாண்டு; இந்திரன் கல்மழைபொழிந்தபோது இடையர்க்கும் பசுக்களுக்கும் ஒரு நோவுவராமே கோவர்த்தனமலையைக் குடையாகவெடுத்துக்காத்த வுன்னுடைய தன்னளிக்குப் பல்லாண்டு; பகைவரை வேருடன் அழிக்கத்தக்க தேவரீ

ருடைய திருக்கையிலுள்ள வேலாயுதத்துக்குப் பல்லாண்டு; இந்தப் பிரகாரமாக தேவரீருடைய வீரசரிதத்தையே கொண்டாடிப் புகழ்ந்து பிராப்யத்தை அடைவதற்காகப் பெரியோரனுமதிபெற்று இன்று ஆற்றாமைகொண்டு யாம் உன்னை வந்தடைந்தோம்; நீ எங்கள் மேல் கிருபைசெய்தருளினால் எங்கள் நோன்பு இனிது தலைக்கட்டிவிடும்.

(ஸ்வாபதேசம்)—பாகவதர்கள் வேண்டுகோளின்படி, ஆஶ்ரிதவத்ஸலனான கண்ணபிரான், திருப்பள்ளியறையில் நின்றும் த்வயாஸ்தான மண்டபத்துக் கெழுந்தருள, அவனுடைய திவ்யமங்கள விக்ரஹத்தின் ஸௌந்தர்யாதிகளில் ஆழ்ந்து ஈடுபட்டு பரவசராய் தங்கள் காரியத்தையும் மறந்து மங்களாசாஸனஞ் செய்யத் தொடங்கினர். அதெப்படியென்றால்—அகங்கார மமகாரமாகிய பெருங்கடலில் முழுகிக்கிடக்கும் இந்த வுலகங்களை, முழுகினவன்று, நீ உன்திருவடிகளால் அளந்து, உன்னுடைய ஸ்வாமித்வத்தை நிலைநிறுத்திக் கொண்டவனே! அப்படிப்பட்ட உன்னுடைய திருவடிகளுக்குப்பல்லாண்டு; இந்த அகங்காரத்துக்குப் பிறப்பிடமான பிரகிருதியை தத்ஸம்பவமான சத்வ, ரஜஸ், தமஸ்என்ற முக்குணங்களுடன் அழித்த ஸ்வாமியே! உனது அளவிறந்த வல்லமைக்குப் பல்லாண்டு; வண்டியுருளையைப்போல இடைவிடாமற் சுத்திக்கொண்டுவரும் காமக்குரோதங்களைப் போக்கினவனே! உனது அளவிடமுடியாத புகழுக்குப் பல்லாண்டு; சரீரிகட்குத் தம்மிடத்தில் விசேஷமான அபிருசியை யுண்டுபண்ணும் லோபத்தை அடியுடனழித்த கோவிந்தா! உனது கழற்கமலங்களுக்குப் பல்லாண்டு; ஆஶ்ரிதரக்ஷகனான எம்பிரானே! உனது சிலருணத்துக்குப் பல்லாண்டு; இப்படி உன்னையடுத் தவருடைய பிராப்ய விரோதியான ஸமஸ்த பிரதிபந்தங்களையும் போக்கித் தரும் உனது திருவாழியாழ்வானுக்குப் பல்லாண்டு; இப்படிப்பல்லாண்டு பாடுகையே யாத்திரையாய், உன்னுடைய வீரசரிதத்தைப் புகழ்ந்து, புருஷார்த்தத்தைப் பெறுவதற்காக, ஸத்வந்தலை யெடுத்த இப்போது, உன்னை யெதிர்பார்த்திருக்கு நாங்கள் உன்னண்டைவந்தோம், நீ கிருபைசெய் தருளினால், எங்கள் நோன்பு இனிதுமுடியும்.

---

௪௭. [illegible]

௪௮. [illegible]

(உரு) ஒருத்திமகனாய்ப்பிறந்தோரிரவில்
ஒருத்திமகனாய்ஒளித்துவளரத்
தரிக்கிலானாகித்தான்றீங்குநினைந்த
கருத்தைப்பிழைப்பித்துக்கஞ்சன்வயிற்றில்
நெருப்பென்னநின்றநெடுமாலேயுன்னை
அருத்தித்துவந்தோம்பறைதருதியாகில்
திருத்தக்கசெல்வமும்சேவகமும்யாம்பாடி
வருத்தமுந்தீர்ந்துமகிழ்ந்தேலோரெம்பாவாய்.

(பதவுரை.)

ஒருத்தி - ஒப்பற்றதேவகிப்பிராட்டிக்கு
மகனாய்ப்பிறந்து - பிள்ளையாயவதரித்து
ஓர் இரவில் - ஒப்பற்ற அந்தஇரவிலேதானே
ஒருத்திமகனாய் - யசோதைக்குத்திருமகனாய்
ஒளித்துவளர - மறைந்துவளரும்போது
தரிக்கிலானாகி - பொறுக்காதவனாய்
தான்றீங்குநினைந்த - தனக்குள் கேட்டை எண்ணின
கருத்தை - ஆலோசனையை
பிழைப்பித்து - வியர்த்தமாம்படி செய்து
கஞ்சன் - கம்ஸனுடைய
வயிற்றில் - உதரத்தில்
நெருப்பு என்ன - நெருப்புப்போலே அழலும்படி
நின்ற - பயங்கரமாய்த்தோற்றிய
நெடுமாலே - ஆஸ்ரிதவாத்ஸல்யனான
உன்னை - உன்னிடத்திலே
அருத்தித்து - இரந்து
வந்தோம் - வந்து அடுத்தோம்
பறைதருதியாகில் - எங்களுக்குத்தேச்யத்தைத் தருவதாயிருந்தால்
திருத்தக்க - பிராட்டிகூட ஆசைப்படத்தக்க
செல்வமும் - ஸம்பத்தையும்
சேவகமும் - வீர்யத்தையும்
யாம்பாடி - நாங்கள்மகிழ்ந்துபாடி
வருத்தமும் - உன்னைப்பிரிந்துபடும் வியஸனமும்
தீர்ந்து - விலகி
மகிழ்ந்து - நாங்கள் சந்தோஷத்தையடைய
ஏல் ஓர் - தக்க, ஒப்பற்ற
எம்பாவாய் - எங்கள்நோன்பு இனிது முடிகிறது.

(பொழிப்புரை.)

ஒப்பற்ற தேவகிப்பிராட்டிக்குத் திருமகனாய் அவதரித்து, அன்றிரவிலேயே கோகுலத்திற்குச்சென்று ஸ்ரீ யசோதைப்பிராட்டிக்குப் பிள்ளையாய் ஒருவரு மறியாதபடி வளர்ந்துகொண்டிருக்க அதுகேட்டு, கண்ணன் என்றுவந்து கொன்று விடுகிறானோவென்று கவலையும் பயமும் கொண்டிருந்த கம்ஸன், மனம் பொறுக்காதபடி, எவ்வகையாலாவது இவனைக் கொல்லக்கடவோமென்று மனதில் உறுதிபண்ணி, கெட்ட எண்ணத்தைக்கொண்டிருந்தான். அந்த எண்ணமானது வியர்த்தமாம்படி செய்து அவன் வயிற்றில் நெருப்புப் போல் அழலும்படி அவனுக்குப் பயத்தை யுண்டுபண்ணின ஆஸ்ரித வாத்ஸல்யமுடைய ஸ்ரீ கிருஷ்ணனே! உன்னிடத்தில்வந்து புருஷார்த்தத்தை இரந்து உன்னையடுத்தோம். எங்களுக்கு ஆகத்தக்க புருஷார்த்தத்தைக் கிருபை செய்வாயானால், பிராட்டியும் ஆசைப் படும்படியான உனது செல்வத்தையும் அதைக் காத்தூட்டவல்ல உனது வீர்யத்தையும், அடியோங்கள் உகப்போடேபாடி, உன்னை இவ்வளவுகாலமாய்ப் பிரிந்து படும் வியஸனமும் நீங்கி, மகிழ்ச்சியுற எங்கள் நோன்பு இனிது நிறைவேறிவிடும்.

(ஸ்வாபதேசம்)—ஸர்வேசுவரனைதேவரீர் திருவஷ்டாக்ஷரியாகிய திருமந்திரத்தில் ஸ்பஷ்டமாய் கல்யாணகுணவிக்ரஹவிபூதிவிசிஷ்டனாய்ப் பிரகா

சித்துக்கொண்டிருக்கச் செய்தேயும், வாஸுதேவத்வாதசாக்ஷரி மந்திரங்களில் தேவரீர் விஸ்பஷ்டமாய் விளங்குகிறீர். தேவரீர்க்கு சேஷபூதரான சேதநர் அநவரதம் தேவரீரை மங்களாசாஸனம்பண்ண, அந்த மங்களாசாஸனத்தால் நிர்வஹிக்கப்படும் ஈசுவர ஸத்தையைப் பொறுக்கமாட்டாமல், அநாதியாய் தமஃபிரசுரமான அகங்காரமானது த்வேஷிக்க, அஃதை யடியுடனழித்துத்தொலைத்த பரமோபகாரகனே! உன்னிடத்தில் புருஷார்த்தத்தை அபேக்ஷித்து வந்தோம். அதைத் தந்தருளுவாயானால், பெரிய பிராட்டியாருக்குத் தகுதியான ஸ்வரூபரூபகுண விக்ரஹவிபூதிவிசிஷ்டனாயிருக்கிற உனது செல்வத்தையும் வீரசரிதத்தையும் அநுஸந்தித்து உன்னைப்பிரிந்து பட்ட வியஸனமெல்லாம் நிச்சேஷமாகத் தீர்ந்து, அடியோங்கள் ஸந்தோஷித்தால் எங்கள் உத்தேச்யமான பகவத் கைங்கரிய ரூபமான நோன்பு சுகமாய்த் தலைக் கட்டுகிறது.

---

௪௯. [illegible]

௫௰. [illegible]

(உசு) மாலேமணிவண்ணாமார்கழிநீராடுவான்
மேலையார்செய்வனகள்வேண்டுவனகேட்டியேல்
ஞாலத்தையெல்லாம்நடுங்கமுரல்வன
பாலன்னவண்ணத்துன்பாஞ்சசன்னியமே
போல்வனசங்கங்கள்போய்ப்பாடுடையனவே
சாலப்பெரும்பறையேபல்லாண்டிசைப்பாரே
கோலவிளக்கேகொடியேவிதானமே
ஆலினிலையாயருளேலோரெம்பாவாய்.

(பதவுரை.)

மாலே - ஆஸ்ரிதவியாமோஹனாய்
மணிவண்ணா - நீலரத்நம்போன்ற வடிவையுடையவனே
மார்கழிநீர் ஆடுவான் - மார்கழிநீர் ஆட்டத்துக்கு
மேலையார் - பெரியோர்கள்
செய்வனகள் - அநுஷ்டிக்கப்பட்டவைகள்
வேண்டுவன - (நமக்கு) வேண்டியவைகளை
கேட்டியேல் - கேட்பாயாகில்
ஞாலத்தையெல்லாம் - பூமியெல்லாம்
நடுங்கமுரல்வன - நடுங்கும்படிக்கு சப்தத்தையுடையனவாய்
பால் அன்ன - பாலைப்போன்ற
வண்ணத்து - நிறத்தையுடையனவாய்
உன்பாஞ்சசன்னியமேபோல்வன - உன்பாஞ்சஜன்னியத்தைப்போன்றனவான
சங்கங்கள் - சங்கங்களும்
போய் - பெரிய
பாடு உடையன - இடமுடையனவான
சாலப்பெரும் - மிகவும்பெரிதான
பறையே - வாத்தியங்களும்
பல்லாண்டு இசைப்பாரே - பல்லாண்டு பாடுவார்களும்
கோலவிளக்கே - மங்களதீபங்களும்
கொடியே - துவஜங்களும்
விதானமே - மேற்கட்டிகளும்
ஆலின் இலையாய் - ஆல் இலைமேல் அமர்ந்தவனே
அருள் - நீகிருபைசெய்தருள
ஏல் ஓர் - தக்க ஒப்பற்ற
எம்பாவாய் - எமதுநோன்பு இனிது முடிகிறது.

(பொழிப்புரை.)

ஆஸ்ரிதா விஷயத்தில் வியாமோஹத்தை யுடையவனாய், நீலரத்நம்போன்ற வடிவையுடையவனாய், ஆலிலைமேலமர்ந்தவனே! எங்கள் அபேக்ஷிதத்தைத் தலைக்கட்டவேணும்; அதாவது மார்கழி நீராட்டத்துக்கு ஆவசியகமாய், பெரியோர்களால் அநுஷ்டிக்கப்பட்ட உபகரணங்களின்னவையென்று, நீ திருச்செவி சாத்தியருளினால், விண்ணப்பஞ் செய்கிறோம். அவைகளாவன—பூமியெல்லாம் நடுங்கும்படியான சப்தத்தை யுடையனவாய், பால்போன்ற நிறத்தையுடையனவாய், உன்னுடைய பாஞ்சஜன்னியத்தைப்போன்ற சங்கங்களும், விசாலமாய் மிகப்பெரிதான படகவாத்தியங்களும், பல்லாண்டு பாடுவார்களும், மங்களதீபங்களும், துவஜங்களும், மேற்கட்டிகளும் இவைகளெல்லாம் நீ கிருபைபண்ணி எங்களுக்குத் தந்தருளினால், எங்களுடைய அத்விதீயமான நோன்பு சுகமாய் நிறைவேறுகிறது.

(ஸ்வாபதேசம்)—ஆஸ்ரிதவியாமோஹமேஸ்வரூபமாய் அதிமனோஹரமான விக்ரஹத்தையுடைய எம்பெருமானே! பிரபன்னாதிகாரிகளுக்கு அவசியாநுஷ்டேயமாய்ச் சொல்லப்படுகிறதும் சிஷ்டாசாரமாய் வந்ததுமான, பகவத்கைங்கரியரூபமான நோன்புக்குவேண்டியவைகள் என்னவென்றால், விண்

ணப்பஞ் செய்கிறோம், சாவதானமாய்க் கேட்டருளவேணும்; (க) ஜகத்தினில் பிரஸித்தமாய் கோஷிக்கப்படுகிற ஓங்காரத்தின் பொருளாகிய அநந்யார்ஹ சேஷத்துவஞானமும்; (உ) இந்த ஞானத்துக்கு விரோதியான ஸ்வஸ்வாதந்திரியத்தை நிவர்த்திப்பிக்கும் நம: சப்தார்த்தமான பாரதந்திரிய ஞானமும்; (௩) ஸத்ஸஹவாஸமும்; (௪) எம்பெருமானை உனக்கு அத்யந்த மனோஹரமாயுள்ள பாகவதசேஷத்வஞானமும்; (௫) உபயசேஷத்வ லக்ஷணமான கைங்கரியமும்; (௬) அந்த கைங்கரியத்தில் போக்த்ருத்வநிவ்ருத்தியும்; இவைகளனைத்தையும் எங்களுக்கு உண்டாக்கித் தந்தருளவேணும்; பிரளயத்தில் ஸமஸ்த ஜீவராசிகளையும் தனது திருவுதரத்தில் வைத்துக்கொண்டு ஆலினிலைமேல் பாலனுருவாய்ச் சயனித்துக்கொண்டிருக்கும் ஆஸ்ரிதரக்ஷகனே, தட்டின்றி எங்கள் கோறிக்கையை நிறைவேற்றிக்கொடுத்தா யெனில் யெங்கள் அத்விதீயமான பகவத்கைங்கரிய ரூபமான நோன்பு இனிது தலைக் கட்டுகிறது.

---

௫௧. [illegible]

[illegible]

[illegible]

[illegible]

௫௨. [illegible]

[illegible]

[illegible]

[illegible]

(உஎ) கூடாரைவெல்லுஞ்சீர்க்கோவிந்தாவுன்றன்னைப்
பாடிப்பறைகொண்டுயாம்பெறுசம்மானம்
நாடுபுகழும்பரிசினனன்றாகச்
சூடகமேதோள்வளையேதோடேசெவிப்பூவே
பாடகமேயென்றனையபல்கலனும்யாமணிவோம்
ஆடையுடுப்போமதன்பின்னேபாற்சோறு
மூடநெய்பெய்துமுழங்கைவழிவாரக்
கூடியிருந்துகுளிர்ந்தேலோரெம்பாவாய்.

(பதவுரை.)

கூடாரை - தன்னையாஸ்ரியாதவரை
வெல்லும்சீர் - ஜயிக்குங்குணத்தை யுடையவனே
கோவிந்தா - கோவிந்தனென்னுந் திருநாமத்தையுடையவனே!
உன்றன்னைப்பாடி - உன்னைப்புகழ்ந்துபாடி
பறைகொண்டு - பறைமுதலியன பெற்றுக்கொண்டு (நோன்புக்கு [illegible])
யாம்பெறும் - நாங்கள் உன்னிடத்திலடையத்தக்க
சம்மானம் - ஸம்மானமாய வஸ்து
நாடுபுகழும் - நாட்டோர்புகழத்தக்க
பரிசினால் நன்றாக - [illegible]
சூடகமே - கையிலணியுமாபரணமும்
தோள்வளையே - தோள்வளையமும்
தோடே - காதுக்கிடுந்தோடும்
செவிப்பூவே - கர்ணப்பூவும்
பாடகமே - காலுக்கு இடும்பாடகமும்
என்றனைய - என்று சொல்லப்பட்ட
பல்கலனும் - பலவகையான ஆபரணங்களும்
யாம் அணிவோம் - நாம்தரிக்கவேணும்
ஆடையுடுப்போம் - (நீஉடுத்த) சேலைகளை உடுக்கவேணும்
அதன்பின்னே - அதற்குப்பின்பு
பாற்சோறு - பாற்சோறானது
மூடநெய்பெய்து - மூடும்படியாக நெய் பெய்து
முழங்கை - முழங்கையால்
வழிவார - வழியும்படியாக
கூடியிருந்து - நீயும் நாங்களுமாகக் கூடியிருந்து
குளிர்ந்து - நாமெல்லாம் சுகித்து
ஏல் ஓர் - [illegible]
எம்பாவாய் - நமது நோன்பு முடியவேண்டும்.

(தாத்பர்யவுரை.)

தன்னை ஆஸ்ரயியாதவர்களை ஜயிக்கும் குணத்தையுடைய கண்ணபிரானே! கோபீஜனவல்லபனான உன்னைப்புகழ்ந்துபாடி நாம் அடையத்தக்க பறையை அடைந்ததற்பின், உன்னிடத்தில்யாம் பெறத்தக்க மற்றைச் சம்மானங்கள் என்னவென்றால்,—கேட்டருளவேணும்; நாட்டார் புகழத்தக்க கையிலணியும் ஆபரணமான சூடகமும், தோளுக்கிடுமாபரணமான பாஹுவலயமும், காதுக்கிடு மாபரணங்களானதோடும் கர்ணப்பூவும், காலுக்கிடு மாபரணமான பாடகமும், என்று இவைமுதற்பட்ட பலவகையான ஆபரணங்களும், நீயும் நப்பின்னையுமாக இருந்து பூட்ட, நாங்கள் நன்றாகத்தரிக்கவேணும்; நீ உடுத்துக்களைந்த பீதாம்பரங்களையும் நாங்கள் உடுக்கவேண்டும்; அதற்குமேல், பாற் சோறானது மூடும்படி நெய்பரிமாறி, அந்த நெய்யானது முழங்கைவழியே வழிந்தோடும்படி, உன்னைப்பிரிந்துபட்ட வியஸனமெல்லாந்தீர நீயுநாங்களுங்கூடியிருந்து திருப்தியாய் சாப்பிட்டுச் சுகிக்கவேணும்; எங்களுடைய இந்தக் கோறிக்கையை நீ நிறைவேற்றி வைப்பாயானால் இதுவே எங்கள் நோன்பின் பயனாய் முடிகிறது.

(ஸ்வாபதேசம்) — சேதனர்க்குக் கரணகளேபரங்களையுங் கொடுத்துச் சாஸ்திரப்பிரதானமும் பண்ணினவிடத்தும், "நாம் உன்னைவணங்குவதில்லை"

'உனக்குச்சேஷபூதருமல்லேம்' என்று இருக்குமவரையுங்கூடத் தனது சௌர்ய சீலாதி குணங்களாலேதிருத்தி வெல்லும்படியான ஸர்வஸுலபனான ஸ்வாமியே! ஸர்வஸ்மாத்பரனான உன்னை பிரீதிக்குப்போக்குவீடாகப் புகழ்ந்து, திவ்யநாமஸங்கீர்த்தனங்களைப்பண்ணி, புருஷார்த்தங்களை யடைந்து, அதன்மேல் உன்னிடத்தில் பெறத்தக்க ஸம்மானமென்னவென்றால், சாவதானமாய்க் கேட்டருளும். விஷ்ணுபாதா கிருதியாய்ப் பாவிக்கப்பட்ட-திருமண்காப்பும்; உனக்கு அநந்யார்ஹ சேஷபூதரென்று காட்டித்தரும் திருவிலச்சினையும்; ஆத்மஸ்வரூப யாதாத்மிய ஞானத்தைத் தரத்தக்க திருமந்திரமும்; பக்தியைக்கொடுக்கும் துவயமும்; உபாயாந்தர நிவிருத்திரூபமான வைராக்கியத்தைத்தரத்தக்க சரமசுலோகமும்; இவைகள் எல்லாம் ஸ்வரூபஜ்ஞனாய் முமுக்ஷுவான அதிகாரிக்கு அவசியாபேக்ஷிதங்களாகையால் அடியோமுக்குக்கொடுத்து ரக்ஷித்தருளவேணும். அன்றியும், அப்படிப்பட்ட ஞானபக்தி வைராக்கியங்களாலே, சேஷத்வ ஞானம்பிறந்து, அதன்பின்பு யாம் உனக்குச்செய்யும் கைங்கரியத்தை, எம்முடைய பாரதந்த்ரிய ஞானமானது ஆற்றலாதமாய்க் கரைபுரண்டு உள்ளபடி மேலிடும்படியாம் செய்துகொண்டுவர வேண்டும். போக்தாவான வுன்னோடு போக்யரான நாங்கள் இப்போது ஸம்பந்தித்துக்கொண்டு இருப்பதால், விச்லேஷ வியஸனமெல்லாம் தீர்ந்துகளித்தோம். இன்றல்லவா உன்னிடத்தில் பெறத்தக்க புருஷார்த்தங்களையும் மேற்சொன்ன ஸம்மானங்களையும் பெற்று எங்கள் ஒப்பற்ற பகவத்கைங்கரிய ரூபமான நோன்பு சாங்கமாகியும் சுகமாகியும் தலைக்கட்டுகிறது.

---

௫௩. [illegible]
[illegible]
[illegible]
[illegible]॥

௫௪. [illegible]
[illegible]।
[illegible]
[illegible]॥

(உஅ) கறவைகள்பின்சென்றுகானஞ்சேர்ந்துண்போம்
அறிவொன்றுமில்லாதவாய்க்குலத்துன்றன்னைப்
பிறவிபெறுந்தனைப்புண்ணியம்யாமுடையோம்
குறைவொன்றுமில்லாதகோவிந்தாவுன்றன்னோ
டுறவேனமக்கிங்கொழிக்கவொழியா
தறியாதபிள்ளைகளோமன்பினாலுன்றன்னைச்
சிறுபேரழைத்தனவும்சீறியருளாதே
இறைவாநீதாராய்பறையேலோரெம்பாவாய்.

(பதவுரை.)

கறவைகள் - பசுக்களின்
பின்சென்று - பின்னேபோய்
கானம் - காட்டிலே
சேர்ந்து - பொருந்திவர்த்தித்து
உண்போம் - சரீரத்தைப்போஷித்துத் திரியுமவர்களாய்
அறிவு ஒன்றும் இல்லாத - சற்றேதுமறிவில்லாத
ஆய்க்குலத்தில் - கோபகுலத்திற்பிறந்த
உன்றன்னை - உன்னை
பிறவிபெறுந்தனை - ஸஜாதீயனாகப் பெறத்தக்க
புண்ணியம் - புண்ணியத்தை
யாம் உடையோம் - நாங்கள் உடையவர்களாயிருக்கிறோம்
குறைவு ஒன்றும்இல்லாத - ஒருவகைக்குறையுமில்லாத
கோவிந்தா - கோவிந்தனே
உன்றன்னோடு - உன்னோடு எங்களுக்கு உண்டான
உறவு ஏல் - சம்பந்தமோ
நமக்கு - எங்களுக்கு
இங்கு - ஒருவிதமாயும்
ஒழிக்கஒழியாது - உன்னால் ஒழிக்கக்கூடாது
அறியாத பிள்ளைகளோம் - லோகமர்யாதையொன்றுமறியாத சிறுமியரானநாங்கள்
அன்பினால் - பக்தியாலே
உன்றன்னை - உன்னை
சிறுபேர் அழைத்தனவும் - சிறிய பேராலே அழைத்தவற்றைக்குறித்து
சீறியருளாது ஏ - கோபித்தருளாமல்
இறைவா - ஸர்வஸ்வாமியானவனே
நீதாராய் - நீதந்தருளவேணும்
பறை - எங்கள் அபேக்ஷிதத்தை
ஏல்ஓர் - தகுந்தஒப்பற்ற
எம்பாவாய் - எமதுநோன்பு இனிது முடிகிறது.

(பொழிப்புரை.)

புல்லுள்ள இடந்தேடி மேய்ப்பதற்காகப் பசுக்களின் பின்னேபோய்க் காட்டிலே எல்லாரும் ஒன்றாய்க்கூடி சரீரபோஷணத்தைப்பண்ணித் திரிந்தவர்களாய், சற்றேனும் அறிவில்லாத கோபகுலத்திலே நாங்கள் உன்னை ஸஜாதீயனாகப் பெறத்தக்க புண்ணியத்தை யுடைத்தானவர்களா யிருக்கிறோம்; ஆதலால், ஒருவகைக்குறையு மில்லாதவனாய், கோவிந்தன் என்னும் பெயரையுடைய ஸர்வஸ்வாமியான கண்ணனே! உன்னோடு எங்களுக்குண்டான சம்பந்தம் இங்கு நமக்கு உன்னால் ஒழிக்கக்கூடாது. லோகமரியாதையொன்றுமறியாத பாலர்களான நாங்கள், உன்னையன்பாலே சிறியபேர்கொண்டு அழைத்தவற்றைக்குறித்துக் கோபித்தருளாமல் எங்கள் அபேக்ஷிதத்தைத் தந்தருளினால், எங்கள் தகுந்த ஒப்பற்ற நோன்பு இனிது நிறைவேறுகிறது.

(ஸ்வாபதேசம்) — ஸர்வஸ்மாத்பரனான ஸ்வாமீ! ஞானஹீனரான ஸம்ஸாரிகளை யநுவர்த்தித்து அநித்யமான ஸம்ஸாரத்தைப் பிராப்பியமாகக்கைக்

கொண்டு தேகபோஷணையையே முக்கியமாய் எண்ணிக்கொண்டு அஜ்ஞானிகளாயலைந்து காலங்கழித்தோம். ஞானபக்தி வைராக்கியங்கள் எங்களிடத்தில் கொஞ்சமு மில்லாவிடினும், உபாயாந்தரத்தைப் பற்றுதலாகிற தோஷத்தினின்று நீங்கிய ஸத்குலத்தில் பிறந்திருக்கிறோம். ஸ்ரீயப்பதியான நீ மனிதப்பிறப்பிற் பிறந்து தாழ்ந்தாரான எங்களுக்கு, முகங்கொடுக்கைக்காக மனுஷ்ய ஸஜாதீயனாகவே, உன் உத்தமபதவியையும் நினையாதே, உன்னைத் தாழவிட்டுக்கொண்டு நம்மகுலத்திலேயே அவதரித்தாய்; அப்படி எம்முடன்கலந்து பரிமாறி எங்கள் ஜன்மங்களை ஸபலமாகும்படி நீ கிருபைசெய்தது எமது பெரியபுண்ணியமே. அவாப்தஸமஸ்தகாமனான ஸ்ரீ கோவிந்தா ! எவ்வுலகத்தும் உனக்கு அடையத்தக்கதுமில்லை, அடையப்படாததுமில்லை, அசரண்யசரண்யனானவுன்றன்னோடு, அநந்ய சரணரான எங்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஸ்வஸ்வாமி பாவஸம்பந்தமானது, நன்றாய் ஆராய்ந்து பார்த்தால், நம்மிருவருடையவும் ஸ்வரூபமா யிருக்கிறபடியாலே, இந்த நித்யஸம்பந்தம் ஸர்வசத்தனான வுன்னாலும், பிராகிருதரான எம்மாலும் நீக்கிப்போக்கவொண்ணாது; ஸர்வஸ்வாமியே ! உனது மகிமையை யறியாதபோது, அஜ்ஞானத்தாலும், அறிந்த விப்போது பிரேமாதிசயத்தாலும் யாம் உன்னை ஏகவசநமாய்ப் பேரையிட்டுக் கூப்பிட்டு உனது மாட்சிமைக்குக் குறைவுவரும்படி செய்யும் இக்குற்றங்களையெல்லாம் க்ஷமித்துக் கோபங் கொள்ளாமற் கிருபைசெய்து அடியோம் கேட்டுக்கொண்ட புருஷார்த்தங்களைத் தந்தருளவேணும்.

---

௫௫. [illegible]

௫௬. [illegible]

(௨௯) சிற்றஞ்சிறுகாலேவந்துன்னைச்சேவித்துன்
பொற்றாமரையடியேபோற்றும்பொருள்கேளாய்
பெற்றம்மேய்த்துண்ணுங்குலத்திற்பிறந்தநீ
குற்றேவலெங்களைக்கொள்ளாமற்போகா
திற்றைப்பறைகொள்வானன்றுகாண்கோவிந்தா
எற்றைக்குமேழேழுபிறவிக்குமுன்றன்னோ
டுற்றோமேயாவோமுனக்கேநாமாட்செய்வோம்
மற்றைநங்காமங்கண்மாற்றேலோரெம்பாவாய்.

(பதவுரை.)

சிற்றஞ்சிறுகாலே - வெட்டவிடிவோறே
வந்து - நாங்களேவந்து
உன்னைசேவித்து - உன்னைஸேவித்து
உன்பொன்தாமரை - தேவரீருடைய அழகிய தாமரைமலர்போன்ற
அடியே - திருவடிகளையே
போற்றும்பொருள்கேளாய் - மங்களாசாஸனம்பண்ணுவதற்குப் ப்ரயோஜனத்தைக்கேட்டருளவேணும்
பெற்றம் - ஆநிரைகளை
மேய்த்து - வயிறாரமேய்த்து
உண்ணும் - பின்புதாங்கள்உண்ணுகிற
குலத்தில் - இடைக்குலத்திலே
பிறந்தநீ - திருவவதரித்ததேவரீர்
குற்றேவல் - அந்தரங்ககைங்கரியங்களை
எங்களை - எங்களாலே
கொள்ளாமல் - திருவுள்ளம்பற்றி யருளாமல்
போகாது - போகக்கூடாது
இற்றை - இன்றைக்குமட்டும்
பறை கொள்வான் - ஒருப்ரயோஜனத்தைய டையும் பொருட்டுமாத்திரம்
அன்றுகாண் - வந்தோமல்லோம்
கோவிந்தா - ஸ்ரீகிருஷ்ணனே!
எற்றைக்கும் - காலமுள்ளதனையும்
ஏழேழுபிறவிக்கும் - இருபத்தொரு ஜன்மங்களிலும்
உன்தன்னோடு - உன்னோடு
உற்றோமே ஆவோம் - அநந்யார்ஹரா யிருக்க வேணும்
உனக்கே - தேவரீருக்கே
நாம் - அடியோம்
ஆள்செய்வோம் - அடிமைசெய்யவேணும்
மற்றை - இதையொழிந்தமற்ற
நம்காமங்கள் - எமதுஅபிப்பிராயங்களை
மாற்று - தவிர்த்தருளவேணும்
ஏல்லோர் - தக்க ஒப்பற்ற
எம்பாவாய் - நமதுநோன்பு இனிது முடிகிறது.

(பொழிப்புரை.)

வெட்ட விடிவோறே நாங்கள் எழுந்துவந்து உன்னைச் சேவித்து, தேவரீருடைய அழகிய தாமரைமலர்போன்ற திருவடிகளை மங்களாசாஸனம்பண்ணும் பிரயோஜனம் என்னவென்றால் கேட்டருளவேணும்;—பசுக்களை வயிறாரமேய்த்துத் தாங்களதன் பின்னுண்ணுகிற இடைக்குலத்தில் அவதரித்த தேவரீர், எங்களாலே அந்தரங்க கைங்கரியங்களைத் திருவுள்ளம்பற்றி யருளாமல் விடக்கூடாது. கோவிந்தா! இன்றைக்கு உம்மிடத்தில் வந்து ஓர் பிரயோஜநத்தை யபேக்ஷித்துப் பெற்றுக்கொண்டு பின்னகன்று போகிறவரல்லோம். ஏழேழு இருபத்தொரு ஜன்மங்களிலும் அல்லது காலதத்துவமுள்ளதனையும் தேவரீரோடேகூட அநந்யார்ஹராயிருக்கக்கடவோம்; உனக்கே நாங்கள் அடிமைசெய்யக்கடவோம். இவற்றையொழிந்த மற்றை யெம்மபிப்பிராயங்களனைத்தையும் தவிர்த்தருளவேணும், இதுவே எங்கள் நோன்பின் முக்கியோத்தேசியம்.

(ஸ்வாபதேசம) — ஸர்வசக்தனும் [illegible] காலத்தில் ஞானம்பிறந்து உன்னை [illegible] சேவித்து, ஸ்பிருஹணீயமாயும், [illegible] பரமபோக்யமான உன்திருவடியையே, [illegible] ப்ரயோஜனம் என்னவென்றால் அதை [illegible], [illegible] தானமாய்க் கேட்டருளவேணும். ஸ்வாதந்த்ர்ய [illegible] ஜந்மவிசிஷ்டனாய் அவதரித்த நீ, [illegible] மிருக்கவொண்ணாது. இன்று [illegible] காண்டோமென்றெண்ணி நாங்கள் அபேக்ஷித்து [illegible] கொடுத்து அனுப்பிவிடலாமென்று [illegible]; [illegible] அப்படிப்பட்ட அற்பமான எண்ணம் [illegible]; ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் உன்னோடே [illegible] சம்பந்தித்திருக்கக்கடவோம். அப்படி [illegible] க்கும் உறுப்பாகாமலும், அல்லது [illegible] க்கும் உறுப்பாகாமலும், ஆனால் உன் [illegible] ப்பாய் மங்களாசாஸநம் ஆகிற கைங்கர்யம் [illegible] வோம். நாங்கள் ஒருக்கால் ரஜஸ்தமஸ் [illegible] திருஷ்டபலங்களை அபேக்ஷித்தாலும், [illegible] ம், கொடுக்கவும்வேண்டாம். இ [illegible] உத்தேசித்த ஒப்பற்ற [illegible] கையப்பம்.

௫௭. [illegible]

௫௮. [illegible]

(௩௦) வங்கக்கடல்கடைந்தமாதவனைக்கேசவனைத்
திங்கட்டிருமுகத்துச்சேயிழையார்சென்றிறைஞ்சி
அங்கப்பறைகொண்டவாற்றையணிபுதுவைப்
பைங்கமலத்தண்டெரியற்பட்டர்பிரான்கோதைசொன்ன
சங்கத்தமிழ்மாலைமுப்பதுந்தப்பாமே
இங்கிப்பரிசுரைப்பாரீரிரண்டுமால்வரைத்தோட்
செங்கட்டிருமுகத்துச்செல்வத்திருமாலால்
எங்குந்திருவருள்பெற்றின்புறுவரெம்பாவாய்.

(பதவுரை.)

வங்கம் - மரக்கலங்களையுடைத்தான
கடல் - திருப்பாற்கடலை
கடைந்த - கடைந்தமுதந்தந்தருளின
மாதவனை - ஸ்ரீயப்பதியாய்
கேசவனை - (பிரமருத்திரர்களுக்கு) தலைவனானவனை
திங்கள் - பூரணசந்திரனையொத்த
திருமுகத்து - அழகியமுகத்தையுடையராய்
சேஇழையார் - செவ்விதான ஆபரணங்களையுடைய ஆய்ச்சியர்
சென்று இறைஞ்சி - போய்மங்களாசாஸனம் பண்ணி
அங்கு - திருவாய்ப்பாடியிலே
அப்பறைகொண்டவாற்றை - பறையென்ற வியாஜத்தையிட்டு அடிமை கொண்ட பிரகாரத்தை
அணிபுதுவை - அழகியஸ்ரீவில்லிபுத்தூர்
பைங்கமலத்தண்டெரியல் - பசுமையானகுளிர்ந்த தாமரைமணிகளாலாகிய மாலையையுடையவராய்
பட்டர்பிரான் - கவிச்ரேஷ்டரான பெரியாழ்வார் திருமகளாரான
கோதைசொன்ன - ஆண்டாள் அருளிச்செய்ததாய்
சங்கத்தமிழ்மாலை - சங்கப்புலவர்களும்மெச்சும்படியான தமிழ்மாலைரூபமான
முப்பதும் - முப்பதுபாட்டுக்களையும்
தப்பாமே - தப்பாமல்
இங்கு - இந்தஸம்ஸாரத்திலே
இப்பரிசு - இந்தப்பாசுரமாத்ரத்தை
உரைப்பார் - சொல்லுமவர்கள்
ஈர்இரண்டு - நான்கு
மால்வரை - பெரியமலையையொத்த
தோள் - திருத்தோள்களையும்
செங்கண் - சிவந்ததிருக்கண்களையும்
திருமுகத்து - அழகியதிருமுகத்தையும்உடையவருமாய்
செல்வம் - நித்யவிபூதியும்லீலாவிபூதியுமான ஐசுவர்யத்தையுடையவருமாய்
திருமாலால் - ஸ்ரீயப்பதியானநாராயணனாலே
எங்கும் - ஸர்வப்ரதேசங்களிலும்
திருஅருள் - ஒப்பற்றகிருபையை
பெற்று - அடைந்து
இன்புஉறுவர் - பரமானந்தயுக்தராயிருக்கப் பெறுவர்
எம்பாவாய் - பெரியபிராட்டியார் இன்புற்றாற்போலே.

(பொழிப்புரை.)

மரக்கலங்களை யுடைத்தான திருப்பாற்கடலைக்கடைந்து தேவர்களுக்கு அமிருதம் தந்தருளி, பிராட்டியை லபித்த ஸ்ரீயப்பதியாய், பிரமாவுக்கும் உருத்திரனுக்கும் தலைவனாயிருக்கும் ஸ்ரீகிருஷ்ணனை, பூரணசந்திரனையொத்த அழகிய முகத்தையுடையராய் செவ்விதான ஆபரணங்களணிந்த கோபஸ்திரீகள் அவனிடஞ்சென்று மங்களாசாஸனம்பண்ணி திருவாய்ப்பாடியிலே ஒருமுறை பறைகொள்ளுதல் என்ற வியாஜத்தையிட்டு அடிமைகொண்டார்கள்; அந்தப் பிரகாரத்தை, இவ்வுலகுக்கு ஆபரணமாகிய ஸ்ரீவில்லிபுத்தூரில் திருவவதரித்தவராய், பசுமையான குளிர்ந்த தாமரைமணிகளாலாகிய திருமாலையை யணிந்தவராய், புலவரிற்றலைமைபூண்ட பெரியாழ்வாருக்குத் திருமகளாரான ஆண்டாள் அருளிச்செ

ய்ததாய், சங்கப்புலவர்களும் மெச்சிக்கொள்ளத்தக்க செந்தமிழால் ஆகிய இம்மாலைபோன்ற முப்பது பாட்டுக்களையும், இந்த ஸம்ஸாரத்தில் முழுகியிருக்குமவர்கள் இப்பாசுர மாத்திரத்தை அநுஸந்திப்பார்களேயாகிலும், அவர்கள் பெரியமலையையொத்த திண்ணிய நான்கு தோள்களையும், ஆஸ்ரிதர்பக்கல் வாதஸ்லயத்தாலே சிவந்த திருக்கண்களையும் அழகிய திருமுகத்தையுமுடையவனாய், நித்யவிபூதியும் லீலாவிபூதியுமான ஐசுவரியத்தையு முடையவனாய் ஸ்ரீயபதியான நாராயணனாலே, எங்கெங்கும் ஒப்பற்ற திருவருளைப்பெற்று பெரிய பிராட்டியார் இன்புற்றுப்போலே பிரமாநந்த யுக்தராயிருக்கப் பெறுவர்கள்.

(ஸ்வாபதேசம்)—சேதநர் பரிக்ரஹித்திருக்கும் சரீரமாகிய கப்பலுக்கு ஒருவாட்டமும் வாராதே, ஸம்ஸாரமாகிற சமுத்திரத்தை ஸர்வலோகசரணியனான ஸ்ரீகிர்ஷ்ணன், தன் ஸங்கற்பமாகிற மந்தரபர்வதத்தை நாட்டி, கிருபையாகிற கயிற்றாலேசுற்றி, கடாக்ஷமாகிற கைகளாலே கடைந்து, பிராட்டியைக் காட்டிலும் பிரேமாஸ்பதமான ஆத்மவஸ்துவை, ஸ்வரூபஸத்தாயுக்தனாய்ச்செய்து தனக்குச் சேஷபூதனாய்ப் பண்ணிக்கொண்டான்; அன்றியும், இப்படிப்பட்ட சேதநனுக்கு அநுபவ விரோதிகளான போக்தருத் வாதிகளையும் நிவாரணஞ் செய்தருளினான்; இப்படிப் பரமோபகாரகனான ஸ்ரீயப்பதியை, ஆஹ்லாதகரமான திருமுகமண்டலத்தை யுடையராய், ததேகவிஷயமான ஞானபக்தி வைராக்யபூஷிதராய், அநந்யார்ஹரான பாகவதர்கள், அவனிருக்குமிடத்தே ஆற்றாமையாற் சென்று, பூஜித்து, நாட்டார்க்குப் பறையென்று வியாஜமாத்திரமாய்ப் பிரகடனம் பண்ணிக்காட்டி, அந்தரங்கத்தில் பகவத் கைங்கரியத்தை பரிக்ரஹித்தார்கள்; அப்பிரகாரத்தைப் பெரியாழ்வார் திருமகளாரான சூடிக்கொடுத்த நாய்ச்சியார் செந்தமிழாலருளிச்செய்த திருப்பாவையாகிற சிலாக்கியமான இப்பிரபந்தத்தை ஒருபாசுரமும் விடாமல் அநுஸந்திக்குமவர்கள், பெரிய மலைபோற் பணைத்த நான்கு திருத்தோள்களையும், வாற்சலியத்தாலே சிவந்திருக்கிற திருக்கண்களையும், விகஸிதமான திருமுகமண்டலத்தையும் உடையவனாய், உபயவிபூதி ஸம்பன்னனான ஸ்ரீயப்பதியாலே, எஞ்ஞான்றும் விச்சேதம் வாராதபடி கிருபையை அடைந்து, பெரிய பிராட்டியாரைப்போல பிரமாநந்த நிர்ப்பரராயிருக்கப் பெறுவார்கள்.

---

௨௯. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

௩௦. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

நித்யாநுஸந்தானம்.

ஐந்தாம் பிரிவு.

[illegible]

[illegible]

[illegible]

கண்ணிநுண் சிறுத்தாம்பு.

[illegible]

[illegible] அருளிச்செய்த

[illegible]

[illegible] வியாக்கியானமும்

[illegible]

[illegible]

திருக்குடந்தை ஸ்ரீ [illegible] ஆசாரியராலும்,

[illegible]

[illegible] வேங்கடாசாரியராலும்,

[illegible]

[illegible] பரிசோதிக்கப்பட்டு,

[illegible]

[illegible] ஸ்ரீ [illegible]

[illegible]

[illegible]

[illegible] கம்பெனியாரது

[illegible]

[illegible]

1901.

[illegible]

விலை அணா 2

ஸ்ரீ.

மதுரகவியாழ்வார் பிரபாவச்சுருக்கம்.

பாண்டியநாட்டில் செல்வமல்கிய தென்திருக்கோளூரில் துவாபரயுகத்தில் 863879-வது வருஷமான ஈசுவரஸு சித்திரைமீ சுக்லபக்ஷம் சதுர்த்தசி வெள்ளிக்கிழமை கூடின சித்திரை நக்ஷத்திரத்தில் வைநதேயாம்சரான மதுரகவியாழ்வார் அவதரித்தருளினார். சாமசாகையை அத்தியயனம் செய்கிற பூர்வசிகையுள்ளபிராமணகுலத்தில் அவதரிக்கையாலே இவ்வாழ்வாருக்கு தத்தத்காலங்களிலே திருத்தகப்பனார் சவுளோபநயனாதிகளைச்செய்து, கிரமப்படி வேதங்கள் நான்கும், அங்கங்கள் 6-ம், பூர்வோத்தரமான மீமாம்ஸைகள் 2-ம், புராணம் தர்மசாஸ்திரம் 2-ம், ஆகபதினான்கு வித்தைகளிலும் பாரங்கதராகும்படி செய்வித்தார். அவரும் கொஞ்சம்வயது சென்றதும், மிகவிரக்தராய் வகுளபூஷணரான நம்மாழ்வாராகிற பாஸ்கரோதயத்துக்கு அருணோதயம்போலே முன்னே அவதரித்தருளினவராகையாலே, நம்மாழ்வார் இந்நிலத்தில் திருவவதாரஞ்செய்கையை எதிர்பார்த்தவராய் திருவயோத்தி முதலான திவ்யதேசங்களைச் சேவித்து வரலாமென்று உத்தரதிக்குக்கு எழுந்தருளினார். அங்கே வெகுநாள் இருந்தபின், திருவயோத்தியிலே ஒருநாளிரவில் தற்செயலாய் வெளியே புறப்பட்டார். அப்பொழுது தென்றிசையில் ஒரு அப்பிராகிருதமான திவ்யதேஜஸ்ஸு காணப்பட்டது. ஆழ்வார் அதைக் கண்டு இது என் என்று திகைத்து நின்று, பதேஜும் கிராம நகரங்கள் வேகறதோ? காட்டுத்தீயோ? என்று தம்முளே விசாரித்துத் திராமல் அன்றைக்குக் கண்வளர்ந்தருளினார்! பின்னையும் இரண்டு மூன்றுநாள் இப்படியேகண்டு, இது பிராகிருத தேஜஸ்ஸு அன்று, அப்பிராகிருத திவ்யதேஜஸ்ஸாயிருக்கவேணும். இக்காரணத்தை நாம் பரீக்ஷிப்போமென்று பகலெல்லாம் கண்வளர்ந்தருளி ராத்திரி அந்ததேஜஸ்ஸேகுறியாக அதித்வரையுடனே மீண்டு, தெற்குக்கெழுந்தருளி புண்யக்ஷேத்திரங்கள் ஒன்று தவறாமல் சேவித்துக்கொண்டு வருகையில் கடைசியாய் திருக்குருகூரிற் சென்று அவ்வூரினின்று பார்க்கும்போது அதற்கப்பாற் றோற்றாமையாலே இது இவ்வூரிலேயே யிருக்கவேணுமென்று நினைத்து உறங்காத திருப்புளியாழ்வாரடியிலே, ஸம்பூர்ண கலாபூர்ணராய், முகுளிதநயனராய், பதினாறு வயதினவராய், பதினாறுகலையும் நிறைந்த முழுமதியைப்போலே பத்மாஸனத்தில் உட்கார்ந்து பரதத்வத்தை யறிவிக்கும் முத்திரையுடன்கூடி, எழுந்தருளியிருக்கும் பரமாசாரியரான ஸ்ரீ பராங்குசரைப்பார்த்து, இவர்க்குச் சைதந்யமுண்டோ? செவிகேட்குமோ? இல்லையோ வென்று அறியவேண்டும் என ஒரு குண்டுக்கல்லை அவர்முன்பே திடீரென்று எடுத்துப்போட, நம்மாழ்வாரும் அதுகேட்டு திருக்கண்களை மலரவிழித்துப் பார்த்தருளினார். இதைக் கண்டு மதுரகவிகள் இவர்க்கு சேதநமுண்டா? இல்லையா? என்றறிவதற்காக,

"செத்தத்தின் வயிற்றிற்சிறியது பிறந்தால் எத்தைத் தின்றெங்கே கிடக்கும்" * என்று வினவ, "அத்தைத்தின்று அங்கேகிடக்கும்" என்ன, மதுரகவிகள் கேட்டருளி இவர் ஸர்வஜ்ஞர். இவரையே நாம் அநுவர்த்தித்து உஜ்ஜீவிக்கவேணுமென்று நினைத்து, மகா சந்தோஷத்துடன் ஆழ்வார் திருவடிகளிலே தானும் தடக்கையுங்கூப்பி சாஷ்டாங்கமாக ஸேவித்து திரிவிதகரணங்களாலும் ஆழ்வார் திருவடி தியானமும் நாமஸங்கீர்த்தனமும் அநவரதஞ் செய்துகொண்டு எழுந்தருளி யிருந்தார். இப்படி பரபக்திபரஞான பரமபக்தியுடன் கூடியிருந்த மதுரகவியாழ்வார் பிரபிருதிகளான அனைவரும் கற்றுவல்லராம்படி "மயர்வற மதிநலமருள்" ப்பெற்ற நம்மாழ்வார் நான்கு வேதங்களையும், திருவிருத்தம் திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி, என்கிற நான்குபிரபந்தங்களாலே வெளியிட்டருளினார். அவையெல்லாமறிந்ததற்பின் திருக்குருகூர் நகர் நம்பிக்கு பிரதம சிஷியரானஇவர், தம் ஸ்வாசாரிய வைபவத்தைக் 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்கிற திவ்யப் பிரபந்தத்தாலே யருளிச்செய்து சரயார்த்தமான பஞ்சமோபாய நிட்டரான முமுக்ஷுக்களுக்கு உபகரித்தருளினார். அப்பால் அர்ச்சாவதாரரூபமான ஆழ்வார் விக்ரஹத்தை ஏறி யருளப்பண்ணி நித்திய, பக்ஷ, மாஸாயநஸம்வத்ஸரோத்ஸவங்களை யெல்லாம் தாழ்வறநடத்தி ஸ்வாசாரியன் வைபவத்தை எல்லாரு மறியும்படி பிரகாசிப்பித்துக்கொண்டு சிலகாலம் லீலாவிபூதியி லெழுந்தருளி யிருந்து லோகத்தை வாழ்வித்தருளினார்.

---

* செத்ததின்வயற்றிற் சிறியது பிறக்கையாவது.—"செத்தது" என்று அசித்து. அது எங்ஙனே என்னில் அப்ராணிமத்தாய் ஜடமாயிருக்கையாலே அசித்தைச் சொல்லுகிறது. அதின் வயிற்றில் சிறியது பிறக்கையாவது, சரீரத்தோடே ஆத்மாவுக்குண்டான சம்பந்தம். சிறியது—அணுபரிமாணமாயிருக்கிற 'ஆத்மா.' சரீரத்தோடே ஆத்மாவுக்கு சம்பந்தம் உண்டானால் அதற்கு போக்யமும் அசித்தினிடமுள்ள இன்ப துன்பங்கள். "அதைத்தின்று அங்கே கிடக்கை" யாவது—சரீரத்திலுள்ள சுகதுக்கங்களை யநுபவித்துக் [illegible] சரீரத்தையே [illegible] கொண்டிருக்கை.

கண்ணிநுண்சிறுத்தாம்பு

முகவுரை.

'நித்தியாநு ஸந்தானத்தின் ஐந்தாம் பிரிவுக்கு கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்று பெயர். இது இப்பிரபந்தத்தின் முதற்பாட்டின் முதற்குறிப்பால் வந்தது. இதை யருளிச்செய்தவர் மதுரகவியாழ்வார். இன்கவிபாடும் ஆசாரியனைப் புகழப்பெற்றமையால் தன்னை மதுரகவியென்கிறார். இதிலுள்ள பதினொரு பாட்டாலும் ஆசாரியநிட்டைக் கூறப்பட்டுளது.

முமுக்ஷுக்களுக்கு ஆதரணீயமா யிருக்குமவர்கள் நாலுவியக்திகள்:— அதாவது சேதநனுக்கு அகாரணசுஹ்ருத்தாய் பிராப்யபூதனாய் எழுந்தருளி யிருக்கும் ஸர்வேசுவரன்.

(2) சேதநனிடத்தில் நிருபாதிகவத்ஸலையாய் புருஷகார பூதையான பிராட்டி.

(3) பகவத்விஷயத்தையும் பிராட்டி வைபவத்தையும் உபதேசித்து, தன்னுடைய அநுஷ்டாநத்தாலே சிஷ்யனை நல்வழியே கொண்டுபோய், இவன் குற்றம் பார்த்தவளவிலும் கைவிடாமல், இவனோடே ஸஜாதீயனாய், சுலபனாய், நன்றியறிவாய் செய்யுமடிமையை இங்கே கைக்கொள்ளுமவனாய் தன்காரியத்தை மறந்தாகிலும் இவன்காரியமே பார்த்துப் போகிறவனான ஆசாரியன்.

(4) முமுக்ஷுவானவனுக்கு உசாத்துணையாய், பிரகிருதி வசத்தால் சிலஸ்காலித்தியங்கள் பிறந்தாலும் அவற்றைத் தெளியப்பண்ண வல்லவர்களான ஸ்ரீவைஷ்ணவர்கள்.

இந்நால்வரில் ஆசாரியனையே ஸர்வோத்கிருஷ்டமாய் ஆச்ரயிக்கத்தக்கதா யிருக்கிறது. ஏனெனில் ஆசாரியன் இந்த சேதநனுடைய ஆத்மாவைப் பேணவேண்டி, ஸர்வரக்ஷகனான ஈசுவரனுக்கு ஆளாகத் தகாதகாலத்திலும், தானடிமை கொள்பவன். அன்றியும் தேகத்துடன் வெகுநாள் பழகியும் தேஹியானவன் தன்சரீர லக்ஷணத்தையும இப்போது வந்திருக்கும் நீங்கா நோயையும் அதன் சிகித்ஸையையும் இன்னதென்று கண்டறியாத ரோகியைப்போலே, சித்அசித் ஈசுவரதத்வ பாவங்களை ஒன்றுமறியாதே அநாதி மாயையினால் தூங்கிக்கிடக்கும் சிஷ்யனுக்கு ஸ்வரூபஞானத்தைப் பிறப்பித்து புருஷகாரபூதனாய் நின்று பகவத்ஸமாச்ரயணத்தைச் செய்விக்கிறான். ஆனால் சுருதிஸ்மிருதீதிஹாஸ புராணங்களிருக்கச்செய்தே, அவைகள் முகத்தால் ஞானம்பிறக்க லாகாதோ; ஆசாரியன் ஏதுக்கு? என்றால். சர்க்கரை என்ற சப்தத்தை காதால்கேட்டாற் போதுமோ, வாசித்தாற் போதுமா! போதாது.

நாவினில் புகட்டு அதன்ருசியை யநுபவித்தால் அதன் குணங்கள் விளங்கும் அதுபோல ஆசாரியன் தான் நேரில் நின்று சிச்சனுக்கு இவ்வித ஸ்வரூபாநுபவத்தைச் செய்துவைப்பவன்.

"வேதத்தினுட்பொருள் நிற்கப்பாடி யென்னெஞ்சுள் நிறுத்தினன்."

மதுரகவிகள்.

சுருதிமுதலிய பிரமாணத்தாலும் ஆசாரியன் ஆச்ரயணீயன் என்று நிச்சயிக்கப்படுகிறது.

(ஶ்ரு) ஸ குருமேவாபிகச்சேத் ஸமித்பாணி꞉
ஶ்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம். நைஷா த
ர்க்கேண மதிராபநேயா ப்ரோக்தாந்யே
நைவ ஸுஜ்ஞாநாய ப்ரேஷ்ட.

(இ-ள்.) ஆசாரியனையபேக்ஷிக்கும் முமுக்ஷுவானவன் கையில் சமித்துக்கொண்டு வேதபாரகனான பிரமநிஷ்டனையடையவேண்டும். ஸ்வரூப ஞானமானது தர்க்கவிசாரங்களால் அடையமுடியாது, தெளிந்த ஞானம் பிறக்க வேண்டுமானால் ஆசாரியனாலேயே உபதேசமாகவேண்டும்.

(ஶ்ரு) உத்திஷ்டத ஜாக்ரத ப்ராப்ய வராந்நிபோதத. III. 14.

(இ-ள்.) அஞ்ஞானமாயையில் வீழ்ந்து தூங்கும் நீங்கள் எழுந்து கண்விழித்து ஆசாரியனை யாச்ரயித்து தத்துவத்தை யறியுங்கள்.

(ஶ்ரு) மாத்ருதேவோ பவ. பித்ருதேவோ பவ. ஆசார்யதேவோ பவ.
அதிதிதேவோ பவ. தை. I. 11-2.

(ஶ்ரு) யதா தேவே ததா குரௌ. ஶ்வே. VI. 23.

(இ-ள்.) ஸ்பஷ்டம்.

ஶ்லோ॥ தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரஶ்நேந ஸேவயா।
உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ்தத்த்வதர்ஶிந꞉॥ ஸ. தா. VI. 34.

(இ-ள்.) ஸ்வரூபமறிந்த ஞானிகளைகால்கட்டி காத்துநின்று பலமுறைகேட்டு அறியவேண்டியது ஞானத்தை, அவர் உபதேசிப்பார்கள்.

ஶ்லோ॥ அத்ர பரத்ர சாபி நித்யம் யதீயசரணௌ ஶரணம் மதீயம்।

(ஆளவந்தார் ஸ்தோத்திரம்.)

(இ-ள்.) இம்மை மறுமை யிரண்டிலும் எனக்குத்தஞ்சமாய் நிற்கும் திருவடிகள் உள்ள ஆசாரியனான நாதமுனிகள்.

ஶ்லோ॥ "கோ தர்ம꞉ ஸர்வதர்மாணாம் பவத꞉ பரமோ மத꞉." பாரதம்.

என்று அநுபவசாலியாந பீஷ்மரைப்பார்த்து தாயபுத்திரர் கேட்கிறார்.

ஆசாரியன் சிஷ்யனுக்குப் பரமோபகாரி யென்பதில் சந்தேகமில்லை. அவன்செய்த உபகார ஸ்மிருதியாலே அவனைக் கொண்டாடவேணுமே யொழிய அடையத்தக்க பேற்றைக்குறித்துப் பேசுமிடத்தில் ஈசுவரனிடத்தில்

பெறுதற்குச் சமமாயாவது அதிகமாயாவது இவனிடத்தில் கைகூடுவதென்று கூறல்தகுமோ? என்றவிஷயம் இப்பிரபந்தம் கற்பார்க்குச்சந்தேகம். அப்படியிப்பிரபந்தத்திற் கூறியிருக்கின்றனரோ? வென்றால், கூறியிருக்கின்றனர். அடியில் வருமாறு.

(சமமாய்.)

(1) இன்பம் எய்தினேன் (2-ம். பா.)—பகுவித ஆநந்தத்தை யடைந்தேன்.

(2) மெய்ம்மையே (2-ம். பா.)—ஆழ்வார் திருவடிகளையே இம்மை மறுமை யிரண்டிற்கும் தஞ்சமாகப் பொருந்தினேன்.

(3) தேவுமற்றறியேன் (2-ம். பா.)—ஆழ்வார் திருவடிகளையன்றி மற்றை ப்ராப்யப்ராபகமுமான வஸ்து வேறுண்டென்று நினைக்கமாட்டேன்.

(அதிகமாய்.)

1. சநிர்த்தேன்—பேற்றையடைந்தேன்.-இனிவேண்டுவதொன்றில்லை. ஈசுவரன் க்ருபையை யெதிர்பார்த்திருக்குமவர்க்கு சமாதிபங்கமும் நழுவுதலு முண்டாம்.

ஶ்ரோ॥ தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே அத ஸம்பத்ஸ்யே।

ஸ-தா. VI. 14.

(2) "இன்றே—ஆசாரியருளைப்பெற்றவிப்பொழுதே. ஈசுவரன் விஷயத்தில், ஈசுவரனை யண்டைகொண்டு ஆரப்தசரீரம் விழுமளவுங்காத்து பின்னையும் வாஸனாருசியுண்டானால் மண்பற்று விடாதே விரஜையளவும் போகவேண்டியிருந்தது.

ஆகையால் இவ்வாறுகூறியிருப்பது புகழ்ப்பற்றியோ! அல்லது உண்மையோ? என்று சற்று விசாரிப்போம்.

ஆழ்வார் தமது ஆசாரியரான நம்மாழ்வார் விஷயமாக வருளிச்செய்திருப்பது புகழ்பற்றியன்று. உண்மையாகவே. ஆசாரிய சேஷத்வமாகிற இவ்வர்த்தத்தை தாமனுஷ்டித்தது மாத்திரமேயல்லாமல், உலகத்தாருமுய்யும்பொருட்டு அவ்வநுபவத்தை வெளியிட்டருளுகிறார். அதன் பிரகாரம் பின்னிட்ட ஆசாரியர்கள் விஷயமான சிஷ்யர் அநுட்டானத்திலும் காணப்படுகிறது.

ஆத்மாக்கள் தன்னை யுபாஸித்து பிறவிப் பெருங்கடனீங்கி கரைமரம் சேரவேணுமென்று முக்யோத் தேகியமாய் ஈசுவரன் ஸர்வஜீவாத்மாக்களுடைய இதயகமலத்துள் சமயம்பார்த்து எழுந்தருளியிருப்பினும், இவ்வாத்மாவானவன் அதையறியாமல், அநாதிகாலமாய் யான் எனதென்ற உட்பற்று புறப்பற்றுக்களை விடாமலே பிரகிருதியில் போக்யபுத்திபண்ணித் தன்னைப்படைத்துக் காத்தளித்துத் தன்கண் முகப்பேறிற்கும் ஈசுவரனைத் தெரியாமல் நினையாமல் ஸம்ஸரிக்கிறான். அதனால் ஈசுவரன், ஈசுவரனாய் மாத்திர

மிருக்குமளவும் தான் நினைத்தகாரியம் கைகூடுவதேயில்லை, எனத்தானே ஆசரியனுமாய் நேரில்வந்து இரஹஸ்யார்த்தத்தை நாட்டா ரறியாமையாலே அவர்க்கு அறிவிக்கிறான்.

𑌶𑍍𑌲𑍋॥ 𑌇𑌮𑌂 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌤𑍇 𑌯𑍋𑌗𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑌹𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍।

....

𑌸 𑌏𑌵𑌾𑌯𑌂 𑌮𑌯𑌾 𑌤𑍇𑌽𑌦𑍍𑌯 𑌯𑍋𑌗𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃 𑌪𑍁𑌰𑌾𑌤𑌨𑌃।

.... 𑌗𑍀. IV. 1.

(இ-ள்.) இந்த ஞானயோகத்தை முதலிற் சூரியனுக்குச் சொன்னேன்; அப்பால் ஆசாரிய சிஷ்யபரம்பரையாய் நெடுநாள்வந்து பிறகு இது நஷ்டமாயிற்று; அப்படிப்பட்டதையே யுனக்கிப்போது உரைக்கின்றேன்.

(𑌶𑍍𑌰𑍁) 𑌯𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌂 𑌵𑌿𑌦𑌧𑌾𑌤𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂
𑌯𑍋 𑌵𑍈 𑌵𑍇𑌦𑌾𑌂𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌹𑌿𑌣𑍋𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑍈।

𑌶𑍍𑌵𑍇. VI. 18.

(இ-ள்.) யார் நான்முகனை முதலிற்படைத்து, அவனுக்கு நான்மறைகளையும் பயிற்றுவித்தனரோ; அப்படிப்பட்ட பரமாத்மாவையான் சரணமடைகிறேன்.

𑌶𑍍𑌲𑍋॥ 𑌇𑌦𑌂 𑌮𑌹𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌾𑌭𑌿𑌪𑌙𑍍𑌕𑌜𑍇।
𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌯 𑌸𑍍𑌵𑌹𑌿𑌤𑌾𑌯 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌾𑌚𑍍𑌚 𑌸𑌂𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌿𑌤𑌮𑍍॥

(𑌸𑌾𑌤𑍍𑌵𑌤𑌂)

(இ-ள்.) இவ்வர்த்தத்தை தன் நாபிகமலத்தில் அவதரித்த நான்முகற்கு, நாராயணன் நல்லருளால் வெளியிட்டருளினான்.

(𑌶𑍍𑌰𑍁) 𑌅𑌸𑍍𑌯 𑌮𑌹𑌤𑍋 𑌭𑍂𑌤𑌸𑍍𑌯 𑌨𑌿𑌶𑍍𑌵𑌸𑌿𑌤𑌮𑍇𑌤𑌦𑍍𑌯𑌦𑍃𑌗𑍍𑌵𑍇𑌦𑍋 𑌯𑌜𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌃
𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑍋𑌽𑌥𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌿𑌰𑌸𑌃 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌾𑌨𑌿
𑌨𑌿𑌶𑍍𑌵𑌸𑌿𑌤𑌾𑌨𑌿 ... ... 𑌬𑍃. 𑌆𑌰𑌣𑍍𑌯𑌕𑍇. VI. 4-10

(இ-ள்.) ஸ்ரீமந்நாராயண னிடத்தினின்று வேதசாஸ்திர புராணங்கள் எல்லாம் வெளிப்பட்டன.

𑌶𑍍𑌲𑍋॥ 𑌤𑍇𑌨𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌹𑍃𑌦𑌾 𑌯 𑌆𑌦𑌿𑌕𑌵𑌯𑍇... 𑌭𑌾𑌗𑌵𑌤𑍇. I. 1-1.

(இ-ள்.) பிரமனுக்கு வேதப்பொருளை விரித்துரைத்தான்.

(பா.) பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகிவந்து. (திருமொழி V. 2-8.)

(பா.) அகன்ஞாலத்தவரறிய நெறியெல்லாமெடுத்துரைத்த நிறைஞானத் தொருமூர்த்தி (திருவாய்மொழி IV. 8-6.)

(பா.) அறியாதன வறிவித்தவத்தா ஷை II. 3. 2.)

(பா.) நெறியுள்ளி யுரைத்தவம்பகவன் ஷை

(பா.) திருவருள் செய்பவர்போல வென்னுள்புகுந்து உருவமுமா ருயிருமுடனே யுண்டான் (ஷை IX. 6-5.)

ஆகையால் - 'ஸாக்ஷீ நாராயணஸ்வரூபம்' என்கிறபடி ஸ்ரீய:பதியான எம்பெருமானே தானே ஸாக்ஷாத்தாயும் தன் நியமனத்தையும் போதனையையும் பெற்ற ('ஜ்ஞாநீத்வாத்மைவ மே மதம்' என்றபடி தனக்கு சமானமான) பிரதிநிதிகளாலேயும் ஆசாரியராய் நின்று உலகத்துக்கு அறியாதனவறிவித்து அநாதியாய் மூடிக்கிடக்குங் கண்களைத்திறந்து சாஸ்திரஸத்தியமும் ஈசுவரஸத்தியமும் நிலைநிற்கும்படி நல்வழி காட்டிக்கொடுக்கிறான்.

ஆனதுபற்றி ஆசாரிய ஸ்வரூபத்தில் ஆசாரியத்துவமும் ஈசுவரத்வமிரண்டும் அடங்கி நிற்கையால் ஆசாரியனே உய்விக்குமுபகார குணாதிசயங்களால் உத்கிருஷ்டன். ஆசாரியனை யடைந்தபோதே ஈசுவரனையும் அடைந்ததாயிற்று. இதற்கு சரமபர்வ நிஷ்டையென்று கூறுவர்கள்.

கிரந்தத்தின் அடிவரவு.

1. கண்ணி	4. நன்மையால்	7. கண்டு	10. பயன்
2. நாவு	5. நம்பினேன்	8. அருள்	11. அன்பன்
3. திரிதந்து	6. இன்றுதொட்டு	9. மிக்க	

முற்றிற்று.

இந்த நித்தியாநுஸந்தான புஸ்தகத்தின் பிரிவுகளுக்கு அடியில் குறித்தபடி தணிந்தவிலை ஏற்பட்டிருக்கிறது.

1.	திருப்பல்லாண்டு	0—3—0
2.	டை இங்கிலீஷ் மொழிபெயர்ப்புடன்	0—4—0
3.	திருப்பள்ளியெழுச்சி	0—3—0
4.	டை இங்கிலீஷ் மொழிபெயர்ப்புடன்	0—4—0
5.	திருப்பாவை (ஸ்வாபதேசார்த்துடன்)	1—0—0
6.	டை இங்கிலீஷ் மொழிபெயர்ப்புடன்	1—8—0
7.	அமலனாதிபிரான்	0—2—0
8.	டை இங்கிலீஷ் மொழிபெயர்ப்புடன் .. — .	0—3—0
9.	கண்ணிநுண் சிறுத்தாம்பு	0—2—0
10.	டை இங்கிலீஷ் மொழிபெயர்ப்புடன்	0—3—0

தயாராய்க் கொண்டு வருபவை: மூன்றாவது பிரிவிற்கண்ட மற்றைய பிரிவுகள் 28-ரூ. வரையில்

1.	விசிஷ்டாத்வைதபாஸ்கரம்	0—8—0
2.	டை இங்கிலீஷ் மொழிபெயர்ப்புடன் ..	1—8—0

மேற்கண்ட புஸ்தகங்கள் வேண்டியவர்கள் அடியிற் கையொப்பம் வைத்தவரிடத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

டி. பி. ஸ்ரீநிவாஸய்யங்கார். எம். ஏ.

டிரான்ஸ்லேட்டர்.

பசவன்குடி பங்களூர் சிட்டி.

ஸ்ரீமதுரகவியாழ்வார் அருளிச்செய்த

ஆசாரியநிட்டையான

கண்ணிநுண் சிறுத்தாம்பு.

திருமலைநம்பி யருளிச்செய்த தனியன்.

𑌶𑍍𑌲𑍋॥ 𑌅𑌵𑌿𑌦𑌿𑌤𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌶𑍍𑌶𑌠𑌾𑌰𑍇𑌰𑍁𑌪𑌨𑌿𑌷𑌦𑌾𑌮𑍁𑌪𑌗𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌰𑌭𑍋𑌗𑌃।
𑌅𑌪𑌿𑌚𑌗𑍁𑌣𑌵𑌶𑌾𑌤𑍍𑌤𑌦𑍇𑌕𑌶𑍇𑌷𑍀 𑌮𑌧𑍁𑌰𑌕𑌵𑌿𑌰𑍍𑌹𑍃𑌦𑌯𑍇𑌮𑌮𑌾𑌵𑌿𑌰𑌸𑍍𑌤𑍁॥

ஶ்லோ॥ அவிதிதவிஷயாந்தரச்சடாரேருபநிஷதாமுபகாநமாத்ரபோக:।
அபிசகுணவசாத்ததேகசேஷீ மதுரகவிர்ஹ்ருதயேமமாவிரஸ்து॥

(பதவுரை.)

அவிதிதவிஷயாந்தர: - (ஆழ்வாரையொழிந்த விஷயங்களிலே வியுத்பத்தி யற்றவராய்

சடாரே: - நம்மாழ்வாரை யன்றி அல்லது ஆழ்வாருடைய

உபநிஷதாம் - யாழினிசைவேதத்தின்

உபகாநமாத்ரபோக: - இன்னிசை பாடுவதே யாத்திரையாய்

அபி ச - மற்றும்

குணவசாத் - வாத்ஸல்யாதிகுணத்தினால்

தத்தேகசேஷீ - ஆழ்வாருக்கே அடிமைபூண்டிருக்கும்

மதுரகவி: - ஆசாரியரான ஸ்ரீமதுரகவியாழ்வார்

ஹ்ருதயே மம - என்னுடைய நெஞ்சிலிருந்து

ஆவிரஸ்து - நித்திய ஸந்நிதி பண்ணக்கடவர்

அந்வயம்:— அவிதிதவிஷயாந்தர:, சடாரே:, உபநிஷதாம், உபகாநமாத்ரபோக:, அபிச, குணவசாத், ததேகசேஷீ, மதுரகவி:, மம ஹ்ருதயே, ஆவிரஸ்து.

(பொழிப்புரை.) ஸமஸ்த ஸாம்ஸாரிக விஷய சுகங்களும் சடகோபாசாரியரென்று நிறுதியிட்டு அவருடைய திருவாய்மொழிப்பாவின் இன்னிசை பாடுவதே யாத்திரையாய் சிந்தைமற்றொன்றின் திறத்தில் புகாமல் விஷயாந்திரங்களாகிற பரவியூஹ விபவ அர்ச்சாவதாரங்களிலுங்கூட மனம்புகாமல் ஆசாரிய நிட்டையிலே இழிந்து அவருடைய வாத்ஸல்யாதி குணங்களாலே அவர்க்கு நீங்காவடிமைபூண்டவராய், ஆழ்வாருடைய பாசுரங்களின் இனிய கானத்தைப் பாடுவதினால் மாதுரியத்தையுடையவரான மதுரகவியாழ்வார் தாம் பட்டோலைகொண்ட நிலையோடே என்மனதில் நித்தியஸந்நிதி பண்ணக்கடவர்.

1. அவிதிதவிஷயாந்தர: = "அன்னையாய் அத்தனாய் என்னையாண்டிடும் தன்மையான்" என்கிறபடி இம்மை மறுமைக்கும் ஆசார்யனை உபாயோபேயங்களாகப் பற்றுகையாலே.

2. விஷயாந்தரங்கள் = (1.) முக்தர்களின் பாட்டுக்கேட்குமிடமான பரம். (2.) ஆர்த்தருடைய கூப்பீடுகேட்குமிடமான வ்யூஹம். (3.) அவதரித்து ரக்ஷகனாய் குதித்தவிடமான விபவம். (4.) அகிலசேதநரையுங் கைங்கரியங்கொள்ள வளைத்தவிடமான அர்ச்சாவதாரம்.

3. அவிதித: = "மற்றொன்றினைக்காணாவே" என்று திருப்பாணாழ்வார் கூறியபடியும் "[illegible]" என்கிறபடியும் காலாழ்ந்து மற்றோர் விஷயத்தில் செல்லுவதில்லை.

4. சடாரே: = சட + அரி = சடகோபன் என்பதுவுமொருபொருள். சடம் = மாயம், அறியாமை, மயக்கு, சோம்பல் எனப்பொருள்; அரி = இவைகளை வென்றவர்.

5. குணவசாத் = 'குணைர்தாஸ்யமுபாகத:' என்கிறபடியே ஆழ்வாருடைய வாத்ஸல்யாதி நற்குணங்களுக்கு ஈடுபட்டு அடிமை பூண்டார்.

நேரிசைவெண்பா.

வேறொன்றுநானறியேன்வேதந்தமிழ்செய்த
மாறன்சடகோபன்வண்குருகூர்—ஏறெங்கள்
வாழ்வாமென்றேத்தும்மதுரகவியாரெம்மை
யாள்வாரவரேயரண்.

(பதவுரை.)

வேறொன்றும் - ஆழ்வாரையன்றி மற்றோர் விஷயத்தையும்
நான் - அடியேன்
அறியேன் - தெரியமாட்டேன்
வேதம் - அநந்தமறைகளை
தமிழ்செய்த - திருவாய்மொழியாய்ப்பாடி யருளின
மாறன்சடகோபன் - காரிமாறனுமவதரித்த நம்மாழ்வார்
வண்குருகூர்ஏறு - வளப்பொருந்திய திருநகரிக்கு நிர்வாஹகரான
எங்கள் - அடியேங்களுடைய
வாழ்வாம் - அடிமைகொள்ளத்தக்க ஸ்வாமி
என்றுஏத்தும் - என்றுபத்துப்பாசுரங்களால் ஸ்துதிபண்ணும்
மதுரகவியார் - இனியசெந்தமிழ்பாடும் ஆழ்வார்
எம்மையாள்வார் - அடியேங்களை ஆண்டுகொண்டவர்
அவரே - அம்மதுரகவியாழ்வாரே
அரண் - நமதுரக்ஷை.

அந்வயம்.

வேறொன்றும், நானறியேன், வேதந்தமிழ்செய்த, மாறன், சடகோபன், வண்குருகூர் ஏறு எங்கள் வாழ்வாம், என்று ஏத்தும் மதுரகவியார், எம்மை ஆள்வார், அவரே, அரண்.

(பொ - ரை.) அடியேனுடைய ஆசாரியரான சடகோபனையன்றி மற்றோர் தெய்வத்தையும் நானறியமாட்டேன். அநந்தமான அருமறைகளையும் அந்தாதியாய் பாலேய்தமிழர் இசைகாரர் பத்தர்களும் பரவும்படியான செவிக்கினிய செந்தமிழ்ச் சொற்களிற்கூட்டித் திருவாய்மொழியாய்ப்பாடி திருக்குருகூரதனுளவதரித்த ஆழ்வாரெமது ஸ்வாமி என்று பாசுரங்கொண்டு துதிக்கும் மதுரகவியாழ்வார் சேஷபூதனான அடியேனை யாட்கொண்டு ஆளத்தக்க நாதன். அவரே நமக்கு பரமரக்ஷ.

இத்தனியன் முழுமையும், மதுரகவியாழ்வார் அருளிச்செயலை யநுவதித்துக்கூறியது.

1. வேறொன்றும் நானறியேன் = மேவுமற்றறியேன் என்றுகூறினர்.

2. வேதந்தமிழ்செய்தமாறன் = காரிமாறப்பிரான் என்றுகூறினர்.

3. எங்கள்வாழ்வாம் = என்னையாண்டிடும் தன்மையான்.

4. அரண் = ரக்ஷை.

மதுரகவிகளுக்கு எல்லாம் ஆழ்வாரேயானாப்போலே, நமக்கு எல்லாம் மதுரகவிகள் என்கிறது.

குருகூர்நம்பிவிஷயம்.

கலிவிருத்தம்.

(க) கண்ணிநுண்சிறுத்தாம்பினாற்கட்டுண்ணப்
பண்ணியபெருமாயனென்னப்பனில்
நண்ணித்தென்குருகூர்நம்பியென்றக்கா
லண்ணிக்குமமுதூறுமென்னாவுக்கே.

கண்ணி - முடிகளையுடைத்தாய்
நுண் - நேரியதாய்
சிறு - சிறியதான
தாம்பினால் - கயிற்றினால்
கட்டுண்ணப்பண்ணிய - தன்னை கட்டுப்பட யோக்கியமாய்ப்பண்ணின
பெருமாயன் - நிரதிசயஆச்சரியயுக்தனுடைய
என்னப்பனில் - எனக்குஸ்வாமியானவனைவிட ஈசுவரனிற்காட்டில்

நண்ணி - ப்ரீதிபூர்வகமாக ஆசிரயித்து
தென் - தெற்குதிக்கிலுள்ள
குருகூர் - திருநகரிக்கு
நம்பியென்றக்கால்-நிர்வாஹகரான ஆழ்வார் திருநாமத்தைச்சொன்னாலும்
அண்ணிக்கும் - தித்திக்கும்
அமுதூறும் - அமுதூற்றுமாறாதே நிற்கும்
என்னாவுக்கு - என்னுடைய நாக்குக்கு
ஏ - அசை.

அந்வயம். கண்ணி, நுண், சிறு, தாம்பினால், கட்டுண்ணப்பண்ணிய, பெருமாயன், என்னப்பனில், நண்ணி, தென், குருகூர், நம்பியென்றக்கால், என்னாவுக்கே, அண்ணிக்கும், அமுதூறும்.

(பொ-ரை.) யசோதைப் பிராட்டியானவள் தனதுதாய் இனிச்செய்வதென், எனத்தடுமாறுகிறபடியைக்கண்டு இரங்கிச் சுலபனாய், தனது திருமேனியி லுறுத்தும்படியான முடிச்சுக்களையுடைய ஒழுங்கான சிறுகயிற்றால் தன்னை எளிதாய்க் கட்டும்படி யுடன்பட்டருளின நிரதிசய ஆச்சரியகுண சேஷ்டிதனான ஸ்ரீகண்ணபிரான் விஷயத்தைக்காட்டிலும், தெற்குதிக்கிலுள்ள திருநகரிக்கு நிர்வாஹகரான ஆழ்வார் விஷயத்தில் ப்ரீதிபூர்வகமாக ஆச்ரயித்து, அவர் திருநாமத்தை ஒருகால் உச்சரித்தால், அநாதிகாலம் விஷயாந்தரத்தில் ரஸித்துப்போந்த அடியேனுடைய நாக்குக்கு அப்போதே தித்திக்கும், அமுதூற்று மாறாதே சுரக்கும்.

1. கண்ணித்தாம்பு = பலபல விடங்களில் பலவாக முடிச்சுக்களையுடைத்தான உறுப்பில்லாதகயிறு - அதாவது அநந்யார்ஹசேஷத்வம் அவனை [illegible] கட்டிக்கொள்வது.

2. (கட்டுண்ண.) உய்யப்போ முணர்வினார்கட் கொருவனாம் [illegible] பிள்ளையை யப்பாடுறுத்துத் தோன்றுமழகன். திருமாலை. 15.

3. பண்ணிய = உடன்பட்ட ஈசுவரன் சவுலப்யத்தைக் குறிக்கிறது.

4. என்னப்பனில் = என்று ப்ரதமாவதியான பகவத்விஷயத்தைக் கைவிட்டுவிட்டு, புருஷார்த்தத்தில் சரமாவதியான ததீயசேஷத்வத்தைப் பிடிக்கவுருமையமென்றபடியின இவ்வாழ்வார் 'பெருமாயன்' என்று பகவத்விஷய ப்ரஸ்தாவம் பண்ணுவானேனெனில்—ஆழ்வாருடைய முகமலர்த்திக்காகவும் அவருடைய ப்ரேமாதிசயத் தோற்றுகைக்காகவும், "உரலினோடிணைந் திருந்தேங்கியவெளிவு" என்று அவருக்குந்தம் பகவத்விஷய மாகையாலும் அதைக் குறித்துப் பேசுகிறார்.

தஸ்யாஹம்ஸுலப: - பார்த்த. XIII. 14.

அவனுக்கு நான்கட்டுப்படுவேன்,

பக்த்யாஹமேகயாக்ராஹ்ய: - 'ஈசுவரன் பக்திக்குக்கட்டுப்படுகிறான்'

பக்த்யாமாமபிஜாநாதியாவாந்யஶ்சாஸ்மிதத்த்வத: - ம். XVIII. 55.

பக்தி என்பது 1-ருசி, 2-ஸங்கம், 3-பக்தி, 4-பரபக்தி, 5-பரஜ்ஞானம், 6-பரமபக்தி, என முறையே வரவரப் பெருகத்தகுந்தது.

(உ) நாவினால்நவிற்றின்பமெய்தினேன்
மேவினேனவன்பொன்னடிமெய்ம்மையே
தேவுமற்றறியேன்குருகூர்நம்பி
பாவினின்னிசைபாடித்திரிவனே.

நாவினால் - நாவைக்கொண்டு
நவிற்று - உச்சரித்து
இன்பம் - நிரதிசயானந்தத்தை
எய்தினேன் - பெற்றேன்
மேவினேன் - பொருந்தினேன்
அவன்பொன்அடி - ஆழ்வாருடைய ஸ்பிருஹணீயமான திருவடிகளை
மெய்ம்மையே - உண்மையாகவே
தேவுமற்று - ஆழ்வாரைத்தவிர வேறொரு தெய்வத்தை
அறியேன் - அறிகிலேன்
குருகூர்நம்பி - திருக்குருகூர் நகர்க்கு நிர்வாஹகரான ஆழ்வாருடைய
பாவின் - திருவாய்மொழியோடுகூடிய
இன்இசை - இனியகானத்தை
பாடி - பாடிக்கொண்டு
திரிவனே - திரியாநிற்பன்.

அந்வயம். நவிற்று - நாவினால், இன்பம், எய்தினேன், அவன் பொன்அடி, மேவினேன், மெய்ம்மையே, மற்று, தேவு, அறியேன், குருகூர் நம்பிபாவின், இன்இசை, பாடி, திரிவன்.

(பொ - ரை.) பகவத்விஷயத்தில் உபகாரகரான ஆசாரியரை ஸ்தோத்திரம்பண்ணவல்ல நாவினுச்சாரணத்தினாலேயே நிரதிசயானந்தத்தைப் பெற்றேன். ஆழ்வாருடைய ஸ்பிருஹணீயமான திருவடிகளை உண்மையாய் (அவைகளையே பிராப்ய ப்ராபகமாகவுங்கொண்டு) ஐஹிகாமுஷ்மிகங்களிரண்டிலும் பிராப்யமாகப் பெற்றேன். ஆழ்வாரையன்றி மற்றோர்தெய்வத்தை யறிகிலேன்; திருநகரிக்கு நிர்வாஹகரான ஆழ்வாருடைய திருவாய்மொழியோடு கூடிய இனியகானத்தை ப்ரீதிப்ரேரிதனாய் இதுவேதாரகமாகப் பாடிக்கொண்டு சஞ்சரியாநிற்பன்.

---

1. எய்தினேன் = அடைந்துவிட்டேன், பகவத்விஷயத்தைப் பற்றினோர்க்கு, ஆநந்தம் காலாந்தரபாவி; குருகூர்நம்பியென்று ஒருகால் ஆவர்த்தி ஆதரத்துடன் உச்சரித்த இப்பொழுதே ஆநந்தம் கைகூடிற்று.

2. நவிற்றுநாவினால் = மனதில் ஸந்தோஷமின்றிக்கே - அவசமாய் நாமோச்சாரணமாத்திரத்தினால்; பகவத்விஷயத்திலாமெனில்.

(ஶ்ரு) "ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய:, ஶ்ரோதவ்யோ, மந்தவ்யோ, நிதித்யாஸிதவ்ய:" என்று அநவரதம், பாவநைசெய்தும், கேட்டும், சிந்தித்தும், தெளிந்தநுபவித்தும் ஆநந்த முண்டாக வேண்டுமிறு.

3. மேவினேன் = இனிமேல் ஒருபடிப்பட்டு இருக்கைக்கு இடமில்லாதபடி பொருந்திவிட்டேன். ஆளவந்தாரும் இதையே அநுஸரித்து ஸ்வாசாரிய விஷயத்தில்.

(ஸ்தோ) [illegible] நித்யம் யதீய சரணௌ சரணம் மதீயம் ।
என்றபடி ஆசாரியன் திருவடிகளை இகபரமிரண்டிலும் உபாய உபேயங்களெனப் பற்றினர்.

4. குருகூர்நம்பிஇன்னிசை - இவர் திருவாய்மொழியைப் பாடித்திரிவது பகவத்பிரதிபாதகமென்று அன்று, ஆழ்வாரருளிச்செய்ததென்று, பாடித்திரிவனென்கிறார்.

5. பாடித்திரிவனே, பரமபதத்துள் சென்றவரல்லவோ, "[illegible]" என்றபடி - பாடித்திரிவர், இவ்வாழ்வாரோ என்றால், இந்நிலத்திலேயே பாடுவதே எனக்கு காலயாத்ரை, ஆகையால் ஆழ்வாரே அடியேனுக்கு சுகப்ரதரும், சாதநப்ரதரும், ஸ்வாமியும், காலக்ஷேபவிஷயமும் ஆகிறார் என்பர்.

(௫) திரிதந்தாகிலுந்தேவபிரானுடைக்
கரியகோலத்திருவுருக்காண்பனான்
பெரியவண்குருகூர்நகர்நம்பிக்கா
ளுரியனாயடியேன்பெற்றநன்மையே.

திரிதந்தாகிலும் - மீண்டாகிலும் (அலைந்தாகிலும்)
தேவபிரானுடை - நித்யசூரி நிர்வாஹகனான ஈசுவரனுடைய
கரிய - நீலமேகம்போன்ற
கோலம் - சுந்தரமாய்
திரு - பிராட்டியோடேகூடி யிருக்கிற
உரு - திருமேனியை
காண்பன்நான் - அடியேன் ஸேவிப்பேன் (ஸாக்ஷாத்கரிப்பேன்)
பெரியவண் - மஹோதாரராய்
குருகூர்நகர் - திருக்குருகூரிலே எழுந்தருளியிருக்கிற
நம்பிக்கு - ஆழ்வாருக்கு
ஆள்உரியனாய் - உரியஅடியனாய்
அடியேன் - அடியேன்
பெற்ற - அடைந்த
நன்மை - நல்லாபம்
ஏ - ஈற்றசை.

அந்வயம். திரிதந்தாகிலும், தேவபிரானுடைய, கரியகோலம், திரு, உரு, நான் காண்டன், பெரியவண், குருகூர்நகர், நம்பிக்கு, ஆளுரியனாய், அடியேன், பெற்ற நன்மை.

(பொ - ரை.) அடியேன் தேவுமற்றறியேன், என்று பிரதிஜ்ஞை பண்ணினபடி பகவத்விஷயத்தோடொட்டற்றுத் திரியாநிற்கச் செய்தேயும், ஆழ்வாருகந்த விஷயமிதுவென்று மிவ்வழியாலே மீண்டும் நித்யசூரி நிர்வாஹகனான ஈசுவரனுடைய நீருண்ட மேகம்போன்று இருண்ட வடிவுக்கு மின் போன்று அலங்காரமாய் பிராட்டியோடே கூடியிருக்கிற திருமேனியையுடைய பரமபதநிலயனை ஸாக்ஷாத்கரிக்கும் பேறின்பம் பெற்றேன். அதுவும் மஹோதாரராய் திருநகரியிலே திருவவதரித்தருளிய ஆழ்வாருக்குச் சேஷபூதனான காரணத்தினாலல்லவா பெறும்படியாயிற்று.

1. தேவபிரானுடை—'மையமில் தேவுமற்றறியேன்' என்று மதுரகவிகளார் பகவத் விஷயத்தில் ஒட்டற்றிருக்கச்செய்தேயும், அவர் திருவுள்ளத்தில் ஈசுவரன் தானே வந்து, "நித்யசூரிகளைக்காட்டிலும் நல்லவர்கள் இவர் நம்மாழ்வார்க்கு அன்பர்" என்று உவந்து தன் கோலவடிவை பிரகாசிக்கச்செய்து அநுபவிப்பித்தருளுகிறார்.

2. கரியகோலம் = காளமேக நிபசியாமமாய், அழகுதான் ஒரு வடிவுகொண்டதோ என்றிருப்பது. ஆழ்வார் பலமுறை "கோலமே! தாமரைக்கண்ணதோர் அஞ்சனநீலமே! என்றேத்தக் கேட்டிருப்பவராதலால், தாமும் அதைப் பேசுகிறார். வெறுத்து அரங்கையைத் தீர்ப்பதற்காகவந்த அவசரமின்றிக்கே தம்மை ஆழ்வார் அநுபவிக்கவேண்டி ஆபரணம் பூண்டிருக்குமவன்றான்.

3. திரு உரு = கழற்ற வொண்ணாதிருப்பதோர் ஆபரணம் - பிராட்டி அவனிருண்ட வடிவுக்கு மின்போலே பிரகாசகையாயிருக்குமவளாதலால் பிராட்டியைக் கண்டால் அவன் வடிவையுங் கண்டதாயிற்று. 'திருக்கண்டேன் பொன்மேனிகண்டேன்' பிராட்டிதான் ஸ்வரூபத்துக்கு ஸ்வரூபத்தாலே பிரகாசகையாயும், வடிவுக்கு வடிவத்தாலே பிரகாசகையாயுமிருப்பவள்.

4. பெரிய=ஔதார்யம்; ஸர்வேசுவரனுடைய ஔதார்யம் ஜீவியாதகாலத்திலே தன் ஔதாரியத்தினால் வாசியை யறிவித்தது.

5. வண்குருகூர் = "புவியுமிருவிசும்பு நின்னகத்த நீயென் செவியின்வழிபுகுந்து என்னுள்ளாய்" என்றபடி விபூதிகளையும் விபூதிமானையும் தமக்குள்ளே யடக்கியிருக்கிற ஆழ்வாரைத் தனக்குள்ளே யடங்கும்படியான பெரியதேசம்.

6. பெற்ற = அடைந்த இவர்க்கு இனிப்பெறவேண்டு நன்மையொன்றுமில்லை - நம்மாழ்வார்க்கு உளது என்னவெனில் 'அடியார்கள் குழாங்களையுடன் கூடுவதென்றுகொலோ' என் திருமாலினை வந்தெய்துமாறறியேன்" என்று பெறவேண்டுவதுண்டு.

(ச) நன்மையான்மிக்கநான்மறையாளர்கள்
புன்மையாகக்கருதுவராதலில்
அன்னையாயத்தனுயென்னையாண்டிடுந்
தன்மையான்சடகோபனென்னம்பியே.

நன்மையால் - உபகாரத்தால்
மிக்க - மிகுந்த
நால் - நான்குவகைப்பட்ட
மறை - வேதங்களும்
ஆளர்கள் - வல்லவர்கள்
புன்மைஆக - பொல்லாங்காக
கருதுவர் - நினைப்பார்
ஆதலில் - ஆதலால்
அன்னையாய் - தாயுமாய்
அத்தனுய் - தந்தையுமாய்
என்னை - அடியேனை
ஆண்டிடும் - நியமித்துப்போருகிற
தன்மையான்-ஸ்வபாவத்தை யுடையருமான
சடகோபன் - நம்மாழ்வார்
என்நம்பியே - என்குறைதீர்க்கவல்ல பூர்த்தி யுடையவர்.

அந்வயம். நன்மையால், மிக்க, நால், மறை, ஆளர்கள், புன்மையாக, கருதுவர், ஆதலில், அன்னையாய், அத்தனுய், என்னை ஆண்டிடும், தன்மையான, சடகோபன், என்நம்பி.

(பொ - ரை.) ஆத்மகுணங்களால் பிரசுரராய், ஆ ஸ்ரீ தோத்தாரகராய், நலங்களான நான்கு நற்கலைகளையும் பயின்று அதன்படியே அநுஷ்டிக்க வல்லவர்களான வேதநிர்வாஹகர்கள், என்னுடைய தோஷாதிசயத்தாலே என்னை அநாதரிப்பார்கள். ஆகையால் இப்படியெல்லாருங் கைவிட்டாலும் தாம் கைக்கொள்ளவேணுமென்று முதலில் அன்னைபோன்று பிரியபரராய் அப்பால் தந்தைபோன்று ஹிதபரராய், ஸத்வநிஷ்டர்களுக்கு பஹிஷ்டனுன வென்னைத் தாம் அங்கீகரித்தும், அப்பிரியங்களிலும் அஹிதங்களிலும் கைவளர்ந்துபோந்த அடியேனை ப்ரிய ஹிதங்களிலே மூட்டியும், நாயேனைக் கைங்கரியங்கொண்டு ரக்ஷித்தவர் ஆழ்வாரன்றே! என்று விஸ்மிதராகிறார்.

1. புன்மையாக — புன்மையாவது, துக்கம், பொல்லாங்கு, விடைபார்தாட் பிராவண்யம், துர்பாரம் : என்றும்பொருள். இதின் அர்த்தம் அந்த்தபாட்டில் விவரிக்கிறா. புன்மை-பண்பாகுபெயர் : அல்லது. பண்பு பண்பியென்ற வேறுபாடின்றிக்கே, புன்மைதானே இம்மதுரகவியாழ்வாராய் ஒருவடிவு கொண்டதென்று அமைதிட்டார்கள், எனட்பொருள்.

2. கருதுவர் — தம்முடைய புன்மையன்றிக்கே அவர்களுடைய அநாதரம் இவரை வருத்துகிறது.

ஸ்ரீ பரதாழ்வானுங்கூட

(ச்லோ) ஹதோ உபேக்ஷியஹீனோவைவ ஹதவாநஸ்மீந்யசாமாயா.

(இ - ள்.) "தேவரீருங்கூட அடியேனை அப்படிநினைத்துவிட்டால், நான் ஒழிந்தேன், கெட்டேன்."

ஸ்ரீ அக்ரூரரும்

(ச்லோ) யிமஸ்தஜ்ஜநயதாயஸ்வஹிஷ்க்ருதம்வஸ்யாசு.॥

(இ - ள்.) பிறருடைய குற்றங்காண மாட்டாத பெரியோராலேயும் அநாதரிக்கப்பட்டால் அந்த ஜந்மத்தைச்சுடு.

3. ஆதலில் — இவனுக்கு காகாசுரனைப்போலே புறம்பே ஒரு பற்றுசுமில்லை, ஆனது பற்றி, நாமே கைக்கொள்ளவேணும், என்று தாய்தந்தைபோன்று பிரியபரராயும், இதபரராயுமாயினர்.

4. சடகோபன் — என் சாட்டியத்தை அதாவது தோஷத்தைப்போக்கினவர்.

5. நம்பி — பூர்த்தியுடையவர் - தாய்செய்வது தமப்பன் செய்யமாட்டான், தமப்பன் செய்வது தாய் செய்யமாட்டாள், ஆசார்யன் செய்யுமது இருவருஞ் செய்யமாட்டார்கள். நாயன்செய்யுமது அடியான் செய்யமாட்டான், இவ்வாழ்வாரோ வென்றால் எல்லாம் செய்ய ... ர்த்தியுடையவர்.

(ரு) நம்பினேன்பிறர்நன்பொருள்தன்னையும்
நம்பினேன்மடவாரையுமுன்னெலாம்
செம்பொன்மாடத்திருக்குருகூர்நம்பிக்
கன்பனாயடியேன்சதிர்த்தேனின்றே.

நம்பினேன் - ஆசைப்பட்டுக் காலங்கழித்தேன்
பிறர் - ஈசுவரனுடைய
நன்பொருள் தன்னையும் - விலக்ஷணமான ஆத்மவஸ்துவையும்
நம்பினேன் - ஆசைப்பட்டுப்போந்தேன்
மடவாரையும் - பரஸ்திரீகளையும்
முன்னெலாம் - அநாதிகாலமெல்லாம்
செம் - செம்மையான
பொன் - பொன்னாலே செய்யப்பட்ட
மாடம் - மாடங்களையுடைய
திருக்குருகூர் - திருநகரியிலே எழுந்தருளியிருக்கிற
நம்பிக்கு - பூரணரான ஆழ்வாருக்கு
அன்பனாய் - ப்ரீதனாய்
அடியேன் - அடியேன்
சதிர்த்தேன் - சதுரன் ஆனேன்
இன்றே - ஆழ்வார்க்குச் சேஷமான இச்சமயத்திலே.

அந்வயம். முன்னெலாம், பிறர், நன்பொருள் தன்னையும், நம்பினேன், மடவாரையும், நம்பினேன், செம்பொன், மாடம், திருக்குருகூர் நம்பிக்கு, அன்பனாய், அடியேன், இன்று, சதிர்த்தேன்.

(பொ - ரை.) அநாதிகாலமாய் அகங்காரார்த்த பரவசனாய் பகவதேக சேஷமான ஆத்மவஸ்துவை சுவதந்திர புத்திபண்ணிக்கொண்டும் (உடம்புக்கு உடம்பே போக்யமாகையாலே) பரஸ்திரீ சரீரங்களே போக்யமென்று ஆசைப்பட்டும் விஷயப் பிரவணனாய்ப்போந்தேன். ஆழ்வார் ஸன்னிதி மாஹாத்மியத்தை யடைந்தவின்று, காணலும் கிட்டலும் ஸ்பிருஹணீயமாயுள்ள மாற்றுயர்ந்த பொன்னாலே சமைத்த மாடங்கள் விளங்கிய திருநகரியிலே எழுந்தருளியிருக்கிற ஆழ்வாருடைய வைபவத்தை யநுபவித்து அதற்குத்தோற்று அவரிடம் போக்யபுத்திபண்ணி அவர்க்கடிமைசெய்யும் படியான சதிராயுடையனாயுய்ந்தேன்.

1. பிறர் = என்றது ஸர்வேசுவரனை, ஈசுவரன் சித் அசித்துக்களோடே கூடியிருக்கச் செய்தேயும் அவற்றுக்கு உண்டான பரிணாம, அஜ்ஞத்வ, துக்கித்வங்கள் அவன் பக்கலிலே ஏறிப்பாயாமலிருக்கையாலே அந்யவியாவர்த்தி (வேற்றுமை) தோற்ற பிறர் என்றார். சித் அசித்தைக்காட்டிலும் விலக்ஷணனாய் அவற்றின் காரியங்களில் கூட்டப்படாமல் அந்தர்யாமியாய் அப்ராக்ருத திவ்ய குணங்களுடன் எழுந்தருளியிருக்கிற அரசன்.

(ப்ர[illegible]) [illegible]
[illegible] ஹ. கீ. XV. 17.

(இ - ள்.) இவ் வுலகங்களனைத்தையும் அந்தர்யாமியாய்க் கரந்துபரந்துநின்று தாங்கும் ஸர்வேசுவரனுடைய புருஷோத்தமன் சித் அசித்துக்களைவிட பிறன்; அவனையே பரமாத்மாவென்று பறைகூறுவது.

(ப்ர) [illegible] ஸ்ரீகீதா. 5. 1.

(இ - ள். சித் அசித் ஆத்மகமான ப்ரபஞ்சத்தை யாளுகிறவனான ஈசுவரன் அவற்றைக் காட்டிலும் விலக்ஷணன்.

2. நன்பொருள் = ஈசுவரன் மார்பிலேவைத்து மகநம்பண்ணும்படியான அவனது விபூதிமாத்திரமாயிருக்கும் கவுஸ்துபமணியை (ஆத்மவஸ்துவை) நான் களவுகொண்டேன்.

(ப்ரமா) [illegible]
[illegible] விஷ்ணு பு. 2.

(இ - ள்.) திருப்பள்ளியெழுச்சி முகவுரை பக்கத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

3. நன் = நன்று என்று ஆத்மவஸ்துவின் வைலக்ஷண்யம் கூறுகிறார். எங்ஙனேயெனில்—(மறுபக்கத்திற்காண்க.)

(மறுபக்கத்திற்காண்க.)

(சு) இன்றுதொட்டுமெழுமையுமெம்பிரான்
நின்றுதன்புகழேத்தவருளினான்
குன்றமாடத்திருக்குருகூர்நம்பி
என்றுமென்னையிகழ்விலன்காண்மினே.

இன்றுதொட்டும் - இன்றுமுதல்
எழுமையும் - மேலுள்ளகாலமெல்லாம்
எம்பிரான் - எனக்கு ஸ்வாமியானவர்
நின்று - அத்யவஸாயத்தோடுநின்று
தன் - தம்முடைய
புகழ் - கலியாணகுணங்களை
ஏத்த - துதிக்கும்படி
அருளினார் - கிருபைபண்ணினார்
குன்றம் - மலைகளையொத்த
மாடம் - மந்திரங்களையுடைய
திருக்குருகூர்நம்பி - திருநகரியிலேஎழுந்தருளியிருக்கிற வாழ்வார்
என்றும் - எக்காலத்திலும்
என்னை - நாயேனை
இகழ்விலன் - அநாதரிக்கமாட்டான்
காண்மின் - காணுங்கள்.

அந்வயம். இன்று தொட்டும், எழுமையும் எம்பிரான், நின்று, தன்புகழ், ஏத்த அருளினான், குன்றம், மாடம், திருக்குருகூர்நம்பி, என்றும் என்னை, இகழ்விலன், காண்மின்.

(பொ - ரை.) அடியேனுக்கு பரமோபகாரரான வாழ்வார் தாம் விஷயீகரித்த இன்றுமுதல் காலதத்துவமுள்ளதனையும், தம்முடைய பெருமையை (பகவல்லாபங்கை கூடினும் மாறுதேநின்று) துதிக்கும்படி நிர்ஹேதுகமாக கிருபைசெய்தருளினார். பர்வதசிகரங்களைக் கொண்டுவந்து வைத்தாப்போலே யிருக்கிற மாடங்களையுடைத்தான திருநகரியிலே வர்த்திருக்கிற பூர்ணரான வாழ்வார் அடியேனை காலதத்துவமுள்ளவளவும் புறம்பே யொருவிஷயத்திலும் போகவிட்டுக் கொடார்.

(ஶ்லோ) [illegible]|
தஸ்ய ஸ்வாபஹாரேண தோஷஸ்யாந்தோ ந வித்யதே ||

(இ - ள்.) விலைமதிக்கமுடியாத இந்த ஆத்ம வஸ்துவையுடையவன் புருஷோத்தமன். ஆகையால் அவன் சொத்தை அபகரித்த பாபத்துக்கு ஒழிவில்லை.

4. இன்றே = ஸம்ஸாரத்தில், ஈசுவரனை யண்டைகொள்ளும் ஆரப்தசரீரபாதஸமயம் பார்த்து இருந்து, பின்னையும் வாசனைருசிகளாகில் மண்டிற்றுவிடாமல் விரஜைஅளவும்போக வேண்டும்படி காத்திராமல், இப்பொழுதே ஸவாஸநமாகவிட்டு உய்ந்தேன்.

---

1. இன்றுதொட்டும் = பகவத் சமாச்ரயணம்போலே ஆச்ரியிட்டது ஒருகாலமும் பலிப்பதொருகாலமுமின்றிக்கே, ஆழ்வார் விஷயீகார திவஸமேதொடங்கி, அநுபவிக்கும் படியாயிருக்கை.

2. எழுமையும் = ஏழுபிறப்பும் என்பது உபலக்ஷணம்; காலமெல்லாம் எனப்பொருள்.

3. நின்று = பகவல்லாபம் கிட்டும்வரையில் ஆழ்வாரை யநுபவித்து பின்பு கிட்டினவாறே தோள்மாறுகையின்றிக்கே. (2) மனசுசலியாமல் என்னும் பொருள்படும்.

4. புகழ் = சத்குண ஸங்கீர்த்தனம்.

5. என்றுமென்னை யிகழ்விலன் = எனக்கு தோஷம் மேலிட்டபோதிலும் குணம் மேலிட்டபோதிலும் வாசியின்றி என்னை அநாதரவு செய்யமாட்டார்.

(எ) கண்டுகொண்டென்னைக்காரிமாறப்பிரான்
பண்டைவல்வினைப்பாற்றியருளினான்
எண்டிசையுமறியவியம்புகேன்
ஒண்டமிழ்ச்சடகோபனருளையே.

(பதவுரை)

கண்டுகொண்டு - என் தோஷத்தை நினையாதே பிரதம கடாக்ஷத்தைப் பண்ணிக் கொண்டு

என்னை - தம்முடைய பெருமையறியாத அடியேனை

காரிமாறப்பிரான் - காரி குலத்தில் அவதரித்து அடியேன் பிறவியைப் போக்கின உபகாரகர்

பண்டை - அநாதிஸித்தமாய்

வல்வினை - பிரபலமான பாபத்தை

பாற்றி - உருமாய்ந்துபோகும்படி செய்து

அருளினான் - தம்மைப்புகழும்படி அருளினான்

எண்டிசையும் - எட்டுத்திக்கிலுமுள்ளாரும்

அறிய - அறியும்படி

இயம்புகேன் - சொல்லுகிறேன்

ஒண் - அழகிய

தமிழ் - தமிழ்ப்பிரபந்தத்தை யருளிச்செய்து ஸம்ஸாரிகளுடைய அறியாமையைப் போக்கிய

சடகோபன் - ஆழ்வாருடைய

அருளையே - கிருபையையே.

அந்வயம். என்னை, கண்டுகொண்டு, காரிமாறப்பிரான், பண்டை, வல்வினை, பாற்றி, அருளினான், ஒண்தமிழ், சடகோபன், அருளையே, எண்டிசையும், அறிய, இயம்புகேன்.

(பொ-ரை.) காரியின் திருவயிற்றில் அவதரித்தவராய், தம்முடைய நிர்ஹேதுக விஷயீகாரத்தை அறிந்துகொள்ளமுடியாத அடியேனை யெனது தோஷத்தையும் பாராமே, திருவுளப்பற்றைக்கொண்டு எனது பிறவியை யறுத்த மஹோபகாரகரானவர் ஆகிய அவர் அநாதிகாலம் ஸஞ்சிதமாய் விஷயாந்தர ப்ராவண்ய ஹேதுவான என் பாவமனைத்தையும் உருமாய்ந்துபோம்படிசெய்து தம்மையே வாய்புலக்கும்படி பண்ணினார். தவிர பாலேய் தமிழர் பரவும்படியான அழகிய திருவாய்மொழியைப்பாடி என்னை விஷயீகரித்தார். அப்படிப்பட்ட ஆழ்வாருடைய ஒப்பற்ற அருளை நாடும் நகரமும் நன்றாயறியும்படி சொல்லுகிறேன், (கேளீர் [illegible] எல்லாரும்.)

1. பண்டை வல்வினை — அநாதியாயிருப்பதாய் அநுபவித்தல்லது [illegible] என்கிற சக்தியையுடைய பாபம்.

2. வல்வினை — பிராயச்சித்த ஸாத்தியமுமன்றிக்கே அநுபவவிநாச்யமுமின்றிக்கே இருக்கை.

3. பாற்றி — “[illegible]” என்கிறபடியே நான் அறியாமல் விலக்கிப்பேன் என்று கூறமுடியாதபடி [illegible] முதலியவையை நீக்க.

4. இயம்புகேன் — ஆழ்வாருடைய கிருபாப்ரபாவத்தையும் அது தம்பக்கலிலே பலித்தபடியையும், தம்முடைய பாபம்போனபடியையும், தமக்கு அபிமதலாபமுண்டானபடியையும் சொல்லுகிறேன், என்கிறார்.

5. அருளை - கண்ணன்கழலிணை [illegible] லவிடங்களிலும் ஸம்ஸாரி சேதநருடைய துக்கத்தைக்கண்டு பொறுக்கமாட்டாமே ஆழ்வார் உபதேசித்தருளின கிருபையாகையாலே, அந்த க்ருபாபிரபாவத்தை யநுஸந்தித்து, அதை யெல்லாருமறியும்படி வெளியிடக்கடவேன் என்கிறார்.

(அ) அருள்கொண்டாடுமடியவரின்புற
வருளினானவ்வருமறையின்பொருள்
அருள்கொண்டாயிரமின்றமிழ்ப்பாடினான்
அருள்கண்டீரிவ்வுலகினில்மிக்கதே.

(பதவுரை)

அருள் - கிருபையை
கொண்டாடும் - கொண்டாடும்படி
அடியவர் - சேஷபூதர்
இன்புற - ஆநந்திக்கிறவர்களாய்
அருளினான் - பிரஸாதித்தருளினான்
அவ் அருமறையின் பொருள் - மறைக்கப்பட்ட அரும்பொருள்
அருள்கொண்டு - ஈசுவரகிருபையை அவலம்பித்து

ஆயிரம் - ஆயிரம் [illegible]
இன்தமிழ் - இனிய இசையுள்ள திராவிட பாஷையை
பாடினான் - அருளிச்செய்தார் [illegible]
அருள்கண்டீர் - அருளன்றோ
இவ்வுலகினில் - இந்தலோகத்திலே
மிக்கது - அதிசயமானது.

அந்வயம். அடியவர், இன்புற, அருள்கொண்டாடும், அவ்வருமறையின் பொருள், அருளினான், அருள்கொண்டு, ஆயிரம், இன்தமிழ், பாடினான், அருள்கண்டீர். இவ் உலகினில், மிக்கது.

(பொ - ரை.) 'நின்னருளே புரிந்திருந்தேன்' என்று மனதினில் அத்யவஸித்திருக்கும் சேஷபூதர்களானவர்கள் ஆநந்தநிர்ப்பரராய் ஸ்ரீயப்பதியின் அருளையே உயர்த்திக் கொண்டாடும்படி மறையின் [illegible] பொருளை (நம்மாழ்வார்) உலகோர்க்கு எடுத்துரைத்து உபகரித்தருளினார். அதாவது எம்பெருமான் [illegible], தம்முடைய [illegible], [illegible] சொற்களால் ஆயிரம் பாசுரங்களைச் [illegible] செய்தருளினார். அப்படிப்பட்ட நம்மாழ்வாருடைய அருளே [illegible] கொண்டாடப் [illegible] பெற்றது.

1. அருள்கொண்டாடும் [illegible]

2. அவ் அருமறைப்பொருள் [illegible]
"அடியையடைந்துள்ளம் [illegible]

3. அருள்கொண்டு — '[illegible] தம்முடைய [illegible]' ஆழ்வார்தாமே யருளிச்செய்தார்.

4. இவ்வுலகினின்மிக்கது — [illegible] பார்த்தால் அதிலும் விஞ்சியிருப்பது இவ்வாழ்வாரருளன்றோ.

5. அருள் = கண்ணுடைமை.

(கூ) மிக்கவேதியர் வேதத்தினுட்பொருள்
நிற்கப்பாடியென்னெஞ்சுள்நிறுத்தினான்
தக்கசீர்ச்சடகோபனென்னம்பிக்காட்
புக்ககாதலடிமைப்பயனன்றே.

(பதவுரை)

[illegible]

[illegible]

(அவதாரிகை) [illegible]

1. [illegible]

2. [illegible] திருவாய்மொழி [illegible]

[illegible] அதிசயித்து [illegible]

1. [illegible] ஆழ்வாருக்கு [illegible] பகவத் [illegible] பொருளான [illegible] ஆழ்வார் திருவடிகளிலே சேஷ [illegible] கைங்கர்யத்திலே இழிகிறார்.

(க0) பயனன்றாகிலும்பாங்கலராகிலும்
செயனன்றாகத்திருத்திப்பணிகொள்வான்
குயினின்றார்பொழில்சூழ் குருகூர்நம்பி
முயல்கின்றேனுன்றன்மொய்கழற்கன்பையே.

([illegible])

பயனன்றாகிலும் - பிரயோஜனமில்லாதே போனாலும்

பாங்கு அலராகி - பாங்கற்றவர்களானாலும்

செயல் - தம்செயலாலே

நன்றாக - அநுஷ்டான பர்யந்தமாக

திருத்தி - [illegible]த்துக் கற்பித்து

பணிகொள்வான் - பகவத்பாகவதகைங்கர்யத்தில் [illegible]ட்டத்தினைக் கொள்வாராய்,

குயில்நின்று - தேவ[illegible]னிஸாரத்திலேயிருக்கிறகுயில்களுக்கு

ஆல் - [illegible]

[illegible] திருக்குருகூர்க்கு [illegible]

[illegible]

[illegible]

[illegible] நிருவக

ஞர்க்கு

[illegible] அடியேன் [illegible].

அந்வயம். பயனன்றாகிலும், பாங்கலராகிலும், செயல், நன்றாக, திருத்தி, [illegible] கொள்வான், குயில்நின்று, ஆல், பொழில்சூழ், குருகூர் [illegible], அன்பையே, முயல் கின்றேன்.

(பொ - ரை.) தமக்கொரு பிரயோஜனமில்லாமலிருந்தாலும், [illegible] கூறினுங்கேட்க ஆசையற்ற அநதிகாரிகளான சேதனர்களை [illegible] செயலாலே எல்லாம் நன்றாம்படி பண்ணி அவர்களுடைய [illegible] க்கியவரை பகவத்பாகவத கைங்கர்யத்திலே நியமிப்பவர், [illegible] குயில் முதலிய பக்ஷிஜாதங்களும்கூட தேவகானம் [illegible] திருந்த திருவாய்மொழியைத் தாமும் பாடி [illegible] ப்பட்ட திருக்குருகூர்நகரிக்கு நிர்வாஹகரான [illegible] காரத்துக்குப் பிரத்யுபகாரம்செய்ய [illegible] உம்முடைய பரமபோக்யமான திருவடிகளிலுண்டான [illegible] பிரதியுபகாரம்தேடி யத்னம்பண்ணாநின்றேன்.

---

1. பயனன்றாகிலும் = நாட்டில் [illegible] காப்பதில்லை, பயன்படுவதாகவே [illegible] கடையைப் படைத்துக்கொண்டு அகத்துக்குள் [illegible] றிக்கொண்டால் அதைப்பார்க்கும் வழிப்போக்கர்கள் தங்களுக்கு [illegible] கேயும், உள்ளேகிடந்தவன் அபேக்ஷியாமலும் தமக்குத்தாமே ([illegible] மாய்க்கொண்டு) அத்தீயைத்தணிக்க விரைந்து நிற்கிறார்கள். அது[illegible] வாரும் சேதநர்கள்பக்கல் அநர்த்தம் பொறுக்கமாட்டாமல் பணிகொள்வாரென்கிறார்.

2. செயல்நன்றாக=அநுஷ்டான பர்யந்தமாக [illegible] திருத்தி[illegible].

3. குயில்—ஆல். அசேதநங்களான பக்ஷிகள் திருந்தி திருவாய்மொழியைப் பாடுமிடமாயில் சேதநனை, நான் திருத்தச்சொல்லவேணுமோ.

(௧௧) அன்பன்றன்னை யடைந்தவர்கட்கெலா
மன்பன்றென் குருகூர்நகர் நம்பிக்
கன்பனாய் மதுரகவி சொன்னசொல்
நம்புவார் பதி வைகுந்தங் காண்மினே.

(தவுரை)

அன்பன் [illegible] - தாஸபூதராய்
மதுரகவி - ஸ்ரீமதுரகவியாழ்வார்
சொன்ன - அருளிச்செய்த
சொல் - இப்பத்துப் பாசுரங்களை
நம்புவார் - தங்களுக்குத் தஞ்சமாக நினைத்திருப்பவர்களுக்கு
பதி - வாஸஸ்தானம்
வைகுந்தம் [illegible]
காண்மின் - அறியுங்கள்

[illegible]

([illegible]) [illegible] ஸர்வேச்வரனுடைய திருவடிகளையே [illegible] ஸம்ஸாரிகளும் மற்றும் [illegible] நம்மாழ்வார்க்கு தாஸபூதராய் ஸ்ரீமதுரகவிகள் அருளிச்செய்த [illegible] இப்பிரபந்தத்தை [illegible] செய்து ஆழ்வாருடைய பிர[illegible] ஆசைப் [illegible] இடம், ஸ்ரீவைகுந்த [illegible]

[illegible] தாதே, [illegible]

[illegible] த்வத்தைக் [illegible], அடைவன. [illegible]

[illegible] நம்மாழ்வார் திருவுள்ளக் [illegible] - என்றனெ வெளில் —

"[illegible] எம்மையாளும் பரமர்".
"[illegible] குறிக்கொண்மின்".

[illegible] ஆறோளாகிலும் மணிவண்ணற் காளென் [illegible] அடிகள்".

[illegible] திருநகரிபே பிராப்யஸ்தலமா யிருந்ததாகிலும் அவர்களைக் [illegible] அங்கும் ஆழ்வாரை யநுபவிக்கப் பெறுவார்கள்.

ஸ்ரீமதுரகவியாழ்வார் திருவடிகளே சரணம்

[illegible]

வாழித்திருநாமம்.

சித்திரையிற் சித்திரைநாள் செகத்தில்வந்தான் வாழியே
திருக்கோளூ ரவதரித்த செல்வன்மிக வாழியே
உத்தரகங்கா தீரத் துயர் தவத்தோன் வாழியே
ஒளிகதிரோன் தெற்குதிக்க உகந்துவந்தான் வாழியே
பத்தியொடு பதினொன்றும் பாடினான் வாழியே.
பராங்குசனே பரனென்று பற்றினான் வாழியே
மத்திமமாம் பதப்பொருளை வாழ்வித்தான் வாழியே
மதுரகவி திருவடிக்கள் மனமலர்கள் வாழியே.